தமிழ்த்தாய் வாழ்க.

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய

# ஐங்குறுநூறு மூலமும்

சேயாறு போர்டு உயர் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்
எழுதிய

## விளக்கவுரையும்;

முதலாவது மருதம்.

திருவத்திபுரம், கிரிதரன்பேட்டை
ஔவைத் தமிழக மாணவர்
திரு. கா. கோவிந்தன் அவர்களால்

திருவத்திபுரம்
ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸில் பதிப்பிக்கப்பெற்றன.

1938.

[உரிமை உரையாசிரியரது]

[விலை ரூ 1-4-0.

# உள்ளுறை.


I பதிப்புரை பக்கம் I

II முன்னுரை ,, III

III ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும்

கடவுள் வாழ்த்து.

1. வேட்கைப்பத்து ,, 7
2. வேழப்பத்து ,, 33
3. கள்வன்பத்து ,, 65
4. தோழிக்குரைத்தபத்து ,, 94
5. புலவிப்பத்து ,, 115
6. தோழிக்கூற்றுப்பத்து ,, 147
7. கிழத்திக்கூற்றுப்பத்து ,, 175
8. புனலாட்டுப்பத்து ,, 203
9. புலவிவிராயபத்து ,, 227
10. எருமைப்பத்து ,, 251

தமிழ்த்தாய் வாழ்க.

# பதிப்புரை.

யாங்கள் சேயாறு போர்டு உயர்கலாசாலையிற் கல்வி பயின்று வரும்போது ஆசிரியர். திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் இவ்விளக்கவுரையினை எழுதிவரக் கண்டோம். அவர்கள், எங்களுக்குத் திருக்குறளும், தொல்காப்பியச் சேனாவரையமும் கற்பித்து வருகையில், இடையிடையே இந்நூற்செய்யுள்களின் பொருணலங்களை எடுத்துக்கூறுவர். யாங்களும் கேட்டுப் பெருமகிழ்வுகொள்வோம் மேலும், யாங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷைக்குப் படிக்க விரும்பியகாலத்தில், அப்பரீக்ஷைக்காக வரையறுக்கப்பெற்ற மருதப்பகுதியின் உரையினைப் படிக்க நேர்ந்தபோது, இவ்வுரை எங்கட்குப் பேரின்பம் பயந்தது. இன்னோரன்ன நலங்களால் பேரூக்கம் கொளுத்தப் பெற்ற யாங்கள் இதனை வெளியிடுவது தக்கதெனத் துணிந்து இவ்வெளியீட்டுச் செயலை மேற்கொள்ளத் தொடங்கினோம்.

நாங்கள் ஆசிரியர்பால் தமிழ் பயில்வதை விடுத்து வாழ்க்கைத்துறையில் இறங்கிய பின்னரும், எங்கட்கு இவ்வேட்கை குறையாதாயிற்று. எங்களால் இயன்ற பொருளுதவி கொண்டு இதைத் தொடங்குவது நலமென்றுணர்ந்து, வடார்க்காடு ஜில்லா போர்டு தலைவர் அவர்களின் 1-12-34 பிறந்த D. Dis. No. 2462 of 1934 என்னுள்ள அனுமதி ஆசிரியர் மூலம் பெற்று, அச்சிடத் தொடங்கினோம். செல்வர் பலர் வேண்டும் உதவியினைச் செய்தனர்.

இக்காலநிலையில் நம் பல்கலைக் கழகங்கள் இன்னோரன்ன முயற்சிகளில் பொருளுதவிபுரிவது கண்டு நம் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் தமிழ்நாட்டு மடாதிபதிகளுக்கும் இத் துறையில் வேண்டும் உதவி புரியுமாறு விண்ணப்பித்தோம். உண்மையுழைப்பினைக் கண்டு ஊக்கும் நன்மாண்பு இக் காலத்திற்கு இல்லை என்பது காட்டுவதுபோல எம் முயற்சிகள் பயன் தாராவாயின.

இனியேனும், அறிஞர் உலகம் கண்டு இப் பணி முற்றுப் பெறுதற்கென வேண்டும் உதவியினைச் செய்யும் என்னும் துணிபு கொண்டு, இம் முதற் பகுதியினை வெளியிடத் துணிந்தோம். ஒரு வகை யூதியமும் கருதாது, தமிழ்ப் பணியொன்றையே பொருளாகக் கொண்டு முயலும் எமது முயற்சியினை ஆதரிக்குமாறு தமிழுலகத்தை வேண்டுகின்றோம்.

இங்ஙன்,

கா. கோவிந்தன்,
மா. கந்தசாமி.

திருவத்திபுரம்,
22—6—38.

தமிழ்த்தாய் வாழ்க.

# முன்னுரை.

உலகெலாம் அருளிய உமையொரு பாகத்(து)
உலைவில்சீர் நிலவிடும் ஒருவன்
திருவடி பரவுதும் செந்தமிழ் குறித்தே.

பண்டைத் தமிழ் நூல்களுள், சங்க இலக்கியங்கள் எனப்படுவன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற மூன்று தொகுதிகளுமாகும். இவற்றுள், நடுவணதாய எட்டுத் தொகையுள் எண்வகைத் தொகை நூல்கள் அடங்கியிருக்கின்றன. அவை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாகும். இது,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறம் என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை"

என்ற வெண்பாவினால் இனிதுணரப்படும்.

இந்நூல், திணையொன்றுக்கு நூறு பாட்டுக்களாக, ஐந்து திணைக்கும் சேர ஐந்நூறு பாக்களையுடையது. இதன் கண், திணைகள், மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை யென்ற முறையில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கலித் தொகையுரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியார், "இனிச், சொல்லிய முறையாற் சொல்லவும் படும், (பொ. 3) என்ற வழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென்று பொருள் கொண்டு, அதுபற்றிப் பாலை, குறிஞ்சி, மருதம்,

முல்லை, நெய்தல் எனவும் கோத்தார். ஐங்குறுநூற்றினும பிறவற்றினும் வேறுபடக்கோத்தார்" என்றனர்.

இந்நூற்கண் உள்ள பாக்கள் கடவுள் வாழ்த்துச்செய்யுள் உட்பட ஐந்நூற்றொன்றாகும். இவை மூன்றடிச்சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையு முடையவாம். ஆசிரியர். டாக்டர். உ.வே. சாமிநாதையரவர்கள், "நற்றிணை முதலியவற்றிலுள்ள பாக்களைக் காட்டிலும், அடிவரையறையிற் குறைந்த நூறு நூறு பாக்களால் மருதம் முதலிய ஐந்திணை யொழுக்கங்களைத் தனித்தனியே விளக்குகின்றமையின் இந்நூல் ஐங்குறு நூறு என்று பெயர் பெற்றது" என்பர்.

இவ்வரிய நூலை முதன்முதலில் அச்சேற்றிய பெருமை நம் தமிழன்னையின் தவப்புதல்வராய், தமிழராகிய நாம் நம் முன்னோர் ஈட்டி நமக்கென வைத்த செந்தமிழ்ச் செல்வம் என வீறுகொண்டு பேசுதற்குரிய பெருந்துணை புரிந்தவராய் இதுபோழும் பண்டைச் செந்தமிழ்ப் பெருநூல் பலவற்றையும் அச்சிட்டுதவிய பெருந்தகையாய் விளங்கும் டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கட்குரியதாகும். அவர்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டுச் செய்தருளியுள்ள தொண்டுகளை உண்மைத் தமிழ்மக்கள் ஒருபோதும் மறப்பதும் நினையார். அத்தகைய பெருமகனார், நாடிய செல்வமும், நீடியநாளும், கூடிய புகழும் உடையராய்த் தமிழன்னையின் சிறப்புடைய் மகனெனத் திகழுமாறு பரமன் திருவருள் பெருகுகவென அவன் திருவடிப் போதுகளை மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

இந்நூற்குப் பழையவுரை யொன்றுண்டு. அதுபற்றித் திரு. ஐயரவர்கள் கூறியதனையே இம்முன்னுரைக்கட் கூற லுறுகின்றேன்: "இந் நூலின் பழையவுரை பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று; அகத்திணை நூல்களுக்கேயுரிய உள்ளுறையுவமம், இறைச்சிப் பொருள் முதலியவற்றைப் பெரும்பாலும் நலமுற விளக்கிச் சிலசில இடத்து மட்டும் திரிசொற்

களின் பொருளைப் புலப்படுத்திச் சிறுபான்மை இலக்கணக் குறிப்பையும், பொருள் முடிபுகளையும் பெற்றுள்ளது. ௪௯௧ஆம் பாடலுக்கு மேலுள்ளவற்றிற்குக் கையெழுத்துப் பிரதியில் இவ்வுரை காணப்படவில்லை. இடையிடையே சிலசில பாடல்களுக்குமில்லை. ஆனாலும் கிடைத்தவரையிற் பாடல்களின் பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கு இவ்வுரை மிகச் சிறந்த கருவியாகவுள்ளது. இந்நூல்போலவே, நடையாலும் பொருள் நுணுக்கத்தாலும் இவ்வுரையும் மிகப் பாராட்டற்பாலது. இவ்வுரையில்லையாயின், இந்நூற்பாக்களிலுள்ள உள்ளுறையுவமம் முதலியனவும் மற்ற அருமை பெருமைகளும் நன்கு புலப்படா. இவ்வுரையாசிரியர் இன்னாரென்பது ஒருவாற்றானும் விளங்கவில்லை. ஆனாலும், நடையை உற்றுநோக்கின், இவர் பேராசிரியர், நச்சினார்க்கினியார், பரிமேலழகர் முதலியவர்களுள் ஒருவரோவென்று ஊகிக்கப்படுகிறார்".

சென்ற பத்து ஆண்டுகளாக இந் நூற்கண் கருத்தைச் செலுத்தி, இதன் செய்யுள் நலங்களைச் சுவைத்துக்கொண்டே வந்த யான், என்பால் தமிழ் பயின்றோர்க்கும் பிறர்க்கும் ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு பாட்டின் நலத்தைக் கூறுவதுண்டு. அதனைக் கேட்குந்தோறும், அவர்கள் இதற்கோர் விளக்கவுரை யெழுதவேண்டுமென என்னை வற்புறுத்தினர். அதற்கு, "பழையவுரை பில்லாத செய்யுட்களுக்கு உள்ளுறையுவமம் முதலியவற்றைப் புலப்படுத்தி ஏதோ ஒருவகையாக உரையெழுதி இதனுடன் பதிப்பிக்கலாம் என்ற விருப்பம் சிலசமயம் எனக்கு நிகழ்ந்ததுண்டு; நிகழ்ந்தும், இந்நூலையும் இவ்வுரையையும் உற்றுநோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிட்டது" எனத் திரு. ஐயரவர்களே கூறுவாராயின், எல்லாவகையினும் மிக்க குறைபாடு நிரம்பிய யான் எழுதுவதென்பது கூடாத செயல் என்றே எண்ணி யமைந்து ஒழிந்தேன். பின்பு, ஒருகால், இயன்ற அளவு உரைகாண்பதே நலம் என்னும் எண்ணம் பிறந்தது

என்பால் தமிழ் பயின்ற மாணவர் திரு. கா. கோவிந்த முதலியார் என்பவர் யான் எழுதிவைத்த விளக்கவுரையினைக் கண்டு, இருநூறு வெண்பொற்காசுகள் தந்து அச்சிடவேண்டுமென நயந்தனர்.

சிலபக்கங்கள் அச்சாகியதும், தமிழறிஞர் பலர்க்கு அனுப்பி அவர்தம் மனக்குறிப் பறியத் தொடங்கினேன். அவருட்பலர், அவ்வுரையைச் சுருக்குதலும் பெருக்குதலுமின்றிச் சென்றாங்குவிடுவது நலம் எனக் கூறித் தெருட்டினர்.

இந் நூல் முற்றும் அச்சாகியபின் வெளியிடுவதாயின் காலம் நீட்டிக்கும் என்றுகருதி, ஒவ்வொரு பகுதியாக வெளியிடுவது தக்கது என அன்பர் பலர் விரும்பினர். அவ்வண்ணமே முதற்பகுதியாகிய மருதம் மட்டில் இப்போது வெளியிடப் பெறுகின்றது.

உரைக்குறிப்பு, ஆசிரியர் வரலாறு, ஆராய்ச்சிக் குறிப்பு அரும்பத வகராதி முதலியவை இறுதிப் பகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பெறும்.

இன்னோரன்ன நூல் வெளியீடும் உரை வெளியீடும் பெரும் பொருளும், பேரறிவும் படைத்த பெருமக்களே செய்தற்குரியராக, பொருளின்மையும் சிற்றறிவும் உடைய யான் செய்யத்துணிவதும் செய்வதும் பலராற் பெரிதும் நகையாடற்குரியவேயாம்; ஆயினும், நல்லறிவும், நாளும் நம் தமிழ்மொழியின் முன்னேற்றங்கருதும் மனநலமும் உடைய நண்பர்பலர் என்பணியினையும் ஊக்கி இயன்றவளவு வேண்டும் உதவிபுரிந்தது, அப்பலரது பெருநகையினையும் யான் மறக்குமாறு செய்தது.

இத்துறைக்கண் பெரும்பொருளுதவி, நல்லது புரிந்த தமிழ்ப்பெருஞ் செல்வர்களான திரு K. கோவிந்த முதலியாரின் தந்தையார் உயர்திரு. காங்க முதலியார் அவர்கட்கும்

அழுக்காற்றுள்ளமும், சுயநலச் செருக்கும், தமிழ் வளர்ச்சிக்கண் பொறாமைக் குறிப்பும் நிலவும் காலக்கேட்டால், ஆதரிப்போர் அருகியுள்ள இந்நாளில், எனக்குற்றன யாவும் தமக்குற்றனவாகக்கருதி, தம் உடன்பிறந்தான்போலக் கொண்டு என் உயிரோம்பும் வள்ளல் ஆர்க்காடு ஸ்ரீ கண்ணன் திருச்சபைத் தலைவர் சைவத்திரு. வரதராசலு செட்டியார் அவர்கட்கும் பரமன் பலநலமும் ஒருங்கு நிலவ அருளுமாறு வேண்டுகின்றேன். என்னை இப்பணியில் தளர்வின்றி ஒழுகுமாறு உதவிபுரிந்த செல்வர் சிலர்க்கும் என் மனங்கெழுமிய நன்றியினை இதனால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தமிழ் நலத்தின் செம்மையுணராது, வீண்நெறியில் அமிழ்ந்து அலமந்து கிடந்த என்னையும் ஒரு தமிழ்மகனாக்கி, தமிழன்னைக்குத் தொண்டுபுரியத்தக்க மனவமைதியும், தமிழறிவும் ஊட்டி, என்னையும் என்போன்ற பலரையும் நல்லாற்றுப்படுத்த பெருந்தமிழ் நிலையமாகிய எங்கள் கரந்தைத் தமிழ் சங்கத்தின் தலைமைதாங்கிப் பெருநலம் புரியும் பெருந்தமிழ் வள்ளல் ராவ்சாகிப், செந்தமிழ்ப்புரவலர், தமிழ்வேள், உயர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கட்கும், தமிழ்ப்பெரு நூல்களின் நுண்மாண் நயங்களை ஒருங்குகூடித் தேர்வாரைப்போல உடன் இருத்தி உடனாய்ந்து தமிழறிவுகொளுத்திய எங்கள் ஆசிரியப் பெருமகனாரான கரந்தைக் கவியரசு, உயர்திரு. ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கட்கும் என் தமிழ்ப்பணியின் நலம்முற்றும் உரிமை செய்வதொன்று தவிர வேறு செய்வதற்குரிய கைம்மாறு யாதுமில்லேன்.

எங்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்த்தொண்டின்பால் தமக்குள்ள பெருநயப்பால், அதன் வெள்ளிவிழாக் காலத்தே அதன் நினைவுக்குறியாக வெளியிடவேண்டுமென்ற கருத்துடன் பெருமுயற்சி செய்தும், அம் முயற்சி முற்றாமைக்குப் பெரிதும் வருந்தியும், இந் நூல் வெளியீட்டின்பால் பேரூக்கங்கொண்டு அழகுறப் பதிப்பித்துச் சிறப்பித்த

நண்பரும், இவ்வூர் ஸ்ரீ இலக்குமி பதிப்பகத் தலைவருமான உயர்திரு. மா. வேதபுரி முதலியார் அவர்கட்கு என் உளம் கெழுமிய நன்றியினை இதனால் அன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்ப்புலவரும், செல்வருமாகிய சிலர் இடையூறுகள் செய்து இத்துறையினின்றும் யான் விலகிக்கொள்ளத் தகுவனபலசெய்யவும், இப்பணியினின்றும் விலகாவாறு என் உள்ளிருந்து ஊக்கம் கிளர்வித்து, மேலேகூறிய பெருந்தகைகளின் நல்லுறவும் காண்பித்துப் பேரருள் புரியும் பிறையணி செஞ்சடைப் பெருமான், உமையமர்ந்து விளங்கும் ஒருவன் திருவடியினை மனமொழிமெய்களால் வணங்குகின்றேன்.

> "தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
> அன்பன் சேவடியடைந்தனம் அல்லலொன்றிலமே"
> —ஞானசம்மந்தர்.

திருவோத்தூர்,
22—6—38.

ஔவை சு. துரைசாமி.

பரமன் துணை.

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய

# ஐங்குறுநூறு

மூலமும் விளக்கவுரையும்.

## ஆசிரியர். பாரதம் பாடிய பெருந்தேவனார்

பாடிய

### கடவுள் வாழ்த்து.

உலகெலாம் பரவி நிலவும் உயர்மொழியினும் உயர் தனிச்செம்மொழி யெனயாம் பரவும் தமிழ்மொழிக்கண், சங்க மருவிய நூல்களுள் எட்டுத்தொகை யெனத் தொகுக்கப் பெறுவனவற்றுள் ஒன்றெனத் திகழும் இவ் வைங்குறுநூறு, நின்று நிலவவும், ஆன்றோர்யாப்பு இயல்பினைக் காட்டவும், ஏனை நூல்களுட் செய்தாங்கு, ஆசிரியர் பாரதம் பாடிய பெருந்தேவனார், முறைமுறையே தோன்றி நிலவும் திருவடிகளையுடைய சிவபரம்

பொருளை வணங்குகின்றார், ஐவகைச் சிறப்பின்மையும் இது செய்து உய்தற்பொருட்டு.

நேரிசை யாசிரியப்பா.

நீல மேனி வாலிழை பாகத்(து)
ஒருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே.

இது வாழ்த்துக் கூறியது; வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்தல் என்ற வாழ்த்துவகை மூன்றனுள், பொருளியல்புரைத்தல்:

உரை:—நீலநிறமான திருமேனியினையும், வாலிய இழையினையுமுடைய உமைநங்கையைத் தன் கூறாகவுடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடிநீழற்கீழ் மூவகை யுலகும் முறையே தோன்றி நிலவுவவாயின. ஆகலின், யாமும் அவ் வுலகருள் முதல்வனை வணங்கி அவனது தாணிழல் வாழ்க்கையைப் பெறுவேமாக என்றவாறு.

உம்மை, முற்றும்மை. வாலிழை, அன்மொழித் தொகை. வாலிழை, வாலியஇழை; இது முத்துமாலையுமாம். நீலமேனிக்கட் கிடந்து ஒளிசெய்யும் பேரணிகல னாகலின், வாலிழை எனப்பட்டது. மூவகை யுலகுமாவன: விண், மண், பாதலம் என்பன. உலகுகள் நாற்பெருகு கோடியின் மேற்பட விரிந்தனவாயினும், மேல், கீழ், நடு என வகையால் மூன்று ளடங்குதலின், மூவகை யுலகும் என்றார். முகிழ்த்தல், தோன்றுதல். முறையாவது: பாதலத்து வாழும் உயிர்கள் தாம் செய்த நல்வினைப்பயன் நுகர்தற்கு மண்ணுலகும், மண்ணுலகத் துயிர்கள் அது செய்தற்கு விண்ணுலகும் தோன்றிய முறையென்ப. அதற்கில் "தாவில் தாணிழல் தவிர்க்கென்று ஓரிகே" என்புழித் தங்குதல் கூறினமையின், ஈண்டுத் தோற்றப்பொருண்மை தோன்ற

முகிழ்த்தல் கூறினர். இனி, "பரம்பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனினின்றும் காற்றுத் தோன்றி, அதனினின்றும் தீத் தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி, அதனினின்றும் நிலந் தோன்றிற்று என வேதங் கூறிற்று" என்பார் சிலர். இவர்க்கு; "நீரின்றி நிலம்படைத்தனை, நெருப்பின்றி நீர்பயந்தனை, வளியின்றிக் காற்றெழுவினை, ஒளி காட்டி வெளிகாட்டினை" (தொல். பொ. 458. பேரா. மேற்) என்பது ஆதாரமாகும். இதுவே "மூவகை யுலகும் முகிழ்த்த முறை" யென்ப. இனி, திராவிட மாபாடியப் பேராசிரியரான சிவஞான யோகியார், இவ்வாறு பவுட்கரமும், சைத்திரீயம் முதலிய உபநிடதங்கள் கூறினவாயினும், அவை தம்முள் மாறுபடுவனபோலக் கூறுகின்றமையின் இம்முறை ஒருசார்மதம் என்றும், இது காரணகாரிய இயல்பாராய்ச்சியிற் பொருந்துமாறில்லை யென்றும், இவ் வேதாகம வாக்கியங்கள் முரணுவனபோலத் தோன்றினும் அவற்றின் வன்மை மென்மை நோக்கித் தாற்பரியங் கோடல் வேண்டும் என்றுங் கூறுவர். அன்றியும், அவர், "ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும், அப்புவினின்று புடவியும் தோன்றும் என்பார்க்கு, காரியத்தின் குணம் காரணத்தினும் உண்டென்பது நியமமாகலின், புடவிக்குரிய ஐந்துகுணமும் காரணமென்ற புனலுக்கும் உளவாதல் வேண்டும்; வேண்டவே, அம்முறைபற்றித் தேயு வாயு வாகாயங்களும் ஐந்துகுணம் உடையவாதல் வேண்டும்; அஃதின்மையான், அவர் மதம் போலி யென்றொழிக," என்பர். எனவே, இம்முறை தோற்றமுறை யன்றென்பது பெறப்படும். மற்று, இம்முறைப்படி தோன்றிய வுலகு ஒடுங்குதற்குரியது என்பது, "இருநிலனது புனலிடைமடி தரஎரிபுக எரியதுமிகு பெருவளியினில் அவிதரவளி கெடவியனிடை முழுவதுகெட, இருவர்களுடல் பொறையொடுதிரி யெழிலுருவுடை யவன்" (திருஞா. திருவிராகம். 7) எனத் திருஞான சம்பந்த சுவாமிகள் கூறிய

வாற்றான் அறியப்படும். ஆசிரியர் பேராசிரியர்க்கும் இதுவே கருத்தென்பது, "நிலந்தீ நீர்வளி" (தொல். பொ. 614) என்ற சூத்திரத்து உரைவிளக்கத்தின்கண் எழுப்பும் கடா விடைகளால் உணரப்படும். இக் கூறியவாற்றால் உயிர்கள் செய்யும் வினைக்கீடாக இன்பதுன்பங்களை வரைந்து கொடுப்பான், பரமன், மூவகை யுலகும் தன் திருவடிநீழற்கண் முறையே முகிழ்வித்தான் என்பது முடிபாம்.

"பெண்ணுரு வொருதிற னாகின்று" என்று புறத்திற் கூறினா ராகலின், அவ் வுருவினை விளக்கக் கூறுவார், ஈண்டு, மேனியும் இறையும் விதந்து, "நீலமேனி வாலிழை பாகத்து" என்றார். எனினும், இருவே றுருவின னல்லன் என்றற்கு "ஒருவன்" என்றுங் கூறினார். அவ் வொருவன் தாணிழல் மூவகையுலகும் முகிழ்த்தற்கு இடமா மெனவே, அவன் உலகருள் முதல்வன் என்பது கூறினாராயிற்று. "சேர்ந்தோ ளுமையே" என அகத்துக் கூறினமையின் உமை நங்கை என்பது வருவித் துரைக்கப்பட்டது.

உயர்ந்தோர் அருள்பெற்று வாழ்வாரை, "தாணிழல் வாழ்க்கையர்" என்றலின், அவ்வுயர்ந்தோர் உயர்வினை அவர் தாண்மேலேற்றிக் கூறுதலும் சான்றோர் மரபாகலின், "இருதாள் நிழற்கீழ், மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" என்றார். "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (முருகு-4) என்று நக்கீரனார் கூறுமாற்றானு முணர்க.

மூவகை யுலகும் முறைமையிற் றிரிதலும், கெடுதலு மின்றி, முகிழ்த்தல் கருதி மலைமகளைப் பரமன் மணந்து அவள் கூறாயினமையின், "நீலமேனி வாலிழை பாகத் தொருவன்" என விசேடித்தார். "மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" என அவற்றின் வினைபாற் கூறினாரேனும், முளைத்தற்றொழில் வித்தின்கண்ண தாயினும் அதற் காரண மாகிய ருளிற்கு

னில், இவ்வழிப் பயன்படாதவாறுபோல, மூவகையுலகும் ஆதாரமாகிய இறைவன் சத்தியை இன்றியமையா என்றற்கு, “இருதாள் நிழற் கீழ்” என்றார். “சிவன்றாள் பல்பல சீவனு மாகும்” (திருமந். 1622) எனச் சான்றோரும் இக் கருத்துத் தோன்றக் கூறியது காண்க. — அற்றேல், ஆதாரமாகிய இறைவன் சத்தியைத் திருவடியாகக் கூறுது, “தாணிழற்கீழ்” என [illegible] கூறியதென்னை யெனின், உலகு முகிழ்த்தற்கு நிலைக்களன் மாயை என்பதும்; அதுதானும் தனக்கு ஆதாரமாகிய இறைவன் சத்தியின்கண் ஒடுங்குவதென்பதும் உணர்த்துதற்கென வுணர்க. ‘முகிழ்த்தன’ எனத் தலைமைபற்றிக் கூறினமையின், ஏனை நிலைபேறும், ஒடுக்கமும் அத் தாணிழற்கீழென வென்று கொள்க.

இத்துணையுங் கூறியவாற்றாற் பயன், இம் மூவகை யுலகின்கண்ணும் வாழ்வார்க்கு, அத்தாள்கள் நீழல்செய்து வீட்டின்பம் பயத்தல் என்க. எனவே, இது, பொருளியல் புரைத்தலாய், பாடாண்டிணைக்கண் பிறர்க்குப் பயன் பட வாழ்த்தியதாம் என்க.

எனவே, உயிர்கள் வணங்கிப் பெறுவ தோர் ஆக்கம் உணர்த்தப்பட்டமையான், அதன்பாலாக வியப்பு என்னும் மெய்ப்பாடு தோன்றினமையும் பெற்றாம். “புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே” (தொல். பொ 255) என்பது விதி. இவ் வாக்கமுந் தன்கட் டோன்றியதும், பிறபொருளின்கட் டோன்றியதும் என இருவகைத்தாகலின், இது பெரும்பான்மையும் பிறபொருளின்கட் டோன்றிய ஆக்கம்பற்றிப் பிறந்த வியப்பு எனக் கொள்க. பயன்: வாழ்த்து.

இனி, இஃது ஈற்றயலடி முச்சீரினையுடையதாய், மூவடிகளா லியன்ற நேரிசை யாசிரியப்பா என்க. “ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின், தோற்ற முச்சீர்த் தாகு மென்ப”

வாற்றானு மறியப்படும். ஆசிரியர் பேராசிரியர்க்கும் இதுவே கருத்தென்பது, "நிலத்தீ நீர்வளி" (தொல். பொ. 644) என்ற சூத்திரத்து உரைவிளக்கத்தின்கண் எழூஉம் கடாவிடைகளால் உணரப்படும். இக் கூறியவாற்றால், உயிர்கள் செய்யும் வினைக்கீடாக இன்பதுன்பங்களை வரைந்து கொடுப்பான், பரமன், மூவகை யுலகும் தன் திருவடிக்கீழ்க்கண் முறையே முகிழ்வித்தான் என்பது முடிபாம்.

"பெண்ணுரு வொருதிற னாகின்று" என்று புறத்திற் கூறினாராகலின், அவ்வுருவினை விளக்கக் கூறுவார், ஈண்டு, மேனியும் இறையும் விதந்து, "நீலமேனி வாலிழை பாகத்து" என்றார். எனினும், இருவே றுருவின னல்லன் என்றற்கு "ஒருவன்" என்றும் கூறினார். அவ்வொருவன் தாணிழல் மூவகையுலகும் முகிழ்த்தற்கு இடமா மெனவே, அவன் உலகருள் முதல்வன் என்பது கூறினாராயிற்று. "சேர்ந்தோ ரன்மையே" என அகத்துக் கூறினமையின் உடைமை நன்மை என்பது வருவித் துரைக்கப்பட்டது.

உயர்ந்தோர் அருள்பெற்று வாழ்வோரை, "தாணிழல் வாழ்க்கையர்" என்றனர், அவ்வுயர்ந்தோர் உயர்வினை அவர் தாண்மே லேற்றிக் கூறுதலுஞ் சான்றோர் மரபாகலின், "இருதாள் நிழற்கீழ், மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" என்றார். "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (முருகு-4) என்று நக்கீரனார் கூறுமாற்றானு முணர்க.

மூவகை யுலகும் முறைமையிற் றிரிதலும், கெடுதலு மின்றி, முகிழ்த்தல் கருதி அவைகளைப் பரமன் மனத்து அவன் கூறாயினமையின், "நீலமேனி வாலிழை பாகத் தொருவன்" எனவிசேடித்தார். "மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" என அவற்றின் வினைபாற் கூறினரேனும், முளைத்தற்றொழில் வித்தின்கண்ண தாயினும் அதற் காதாரமாகிய குளிர்த்த

நிலம் இவ்வழிப் பயன்படாதவாறுபோல, மூவகையுலகும் ஆதாரமாகிய இறைவன் சக்தியை இன்றியமையா என்றற்கு, "இருதாள் நிழற் கீழ்" என்றார். "சிவன்றாள் பலபல சீவனு மாகும்" (திருமந்.1622) எனச் சான்றோரும் இக் கருத்துத் தோன்றக் கூறியது காண்க. அன்றேல், ஆதாரமாகிய இறைவன் சக்தியை நிலைக்களனாகக் கூறாது, "தாணிழற்கீழ்" என ~~[illegible] கூறியதென்னை~~ யெனின், உலகு முகிழ்த்தற்கு நிலைக்களன் தாளை என்பதூஉம்; அதுதானும் தனக்கு ஆதாரமாகிய இறைவன் சக்தியின்கண் ஒடுங்குவதென்பதூஉம் உணர்த்துதற்கென வுணர்க. 'முகிழ்த்தன' எனத் தலைமைபற்றிக் கூறினாராயின், ஏனை நிலைபேறும், ஒடுக்கமும் அத் தாணிழற்கீழென வென்று கொள்க.

இத்துணையும் கூறியவாற்றாற் பயன், இம் மூவகையுலகின்கண்ணும் வாழ்வார்க்கு, அத்தாள்கள் நிழல்செய்து வீட்டின்பம் பயத்தல் என்க. எனவே, இது, பொருளியல் புரைத்தலாய், பட்டாங்கைப் பாவற்கள் பிறர்க்குப் பயன் படவொழுக்கியதாம் என்க.

எனவே, உயிர்கள் வணங்கப் பெறுவதோர் ஆக்கம் உணர்த்தப்பட்டமையும், அதன்பட்டுத் வியப்பு என்னும் மெய்ப்பாடு தோன்றினமையும் பெற்றாம். "புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" (தொல். பொ 255) என்பது விதி. இவ் வாக்கமுந் தன்கட் டோன்றியதும், பிறபொருளின்கட் டோன்றியதும் என இருவகைத்தாகலின், இது பெரும்பான்மையும் பிறபொருளின்கட் டோன்றிய ஆக்கம்பற்றிப் பிறந்த வியப்பு எனக் கொள்க. பயன்: வாழ்த்து.

இனி, இந்நூல் ஈற்றயலடி முச்சீரினையுடையதாய், மூவடிகளா லியன்ற நேரிசை யாசிரியப்பா என்க. "ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின், தோற்ற முச்சீர்த் தாகு மென்ப"

(தொல். பொ. 38) என்றும், "ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை, ஆயிர மாகும் இழிபுமூன் றடியே" (தொல்காப். பொ. 158) என்றும் வருவன இலக்கணம் என்க.

இனி, "மாஅமேனி" யென்றும், "மாமலர் மேனி" யென்றும் பாடமுண்டு. இவற்றிற்கு முறையே கரிய மேனி யென்றும், கரிய குவளைமலர் போலும் மேனி யென்றும் உரைக்க.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

பரமன் துணை

# ஐங்குறுநூறு

## மூலமும் விளக்கவுரையும்.

முதலாவது

## ஆசிரியர் ஓரம்போகியார் பாடிய

## மருதம்.

### 1. வேட்கைப்பத்து.

செந்தமிழ் நிலத்துக் குரிய அகப்பொருள் நெறியிற் கூறப்படும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கத்திலும் ஒழுகிப் போந்த தலைமகன், தான் அவ்வொழுக்கத்திற் பிரிந்துறைந்த ஞான்று, தலைமகளும் தோழியும் ஒழுகிய திறம் வேட்டு, தோழியோடு சொல்லாடி வினவியவழித் தோழி தலைமகளின் வேட்கைத்திறமும் தன் வேட்கைத்திறமும் கூறுதற் பொருளாக வரும் பாட்டுக்களின் தொகுதி யாகலின், இஃது இப்பெயர் பெறுவதாயிற்று. இவற்றுள், முதல் ஐந்து பாட்டுக்கள் கற்பினும், ஏனையைந்தும் களவினும் நிகழ்ந்தனவாம்.

வேட்கையாவது, பொருள்கண்மேற் செல்லுகின்ற பற்றுள்ளம். ஈண்டு, அஃது அப்பற்றுள்ளத்தால் நிகழ்ந்த ஒழுக்கத்தின் மேற்று.

ஈண்டுக் கூற்றுநிகழ்த்துவோள் அகம்புகல் மரபினை யுடைய வாயில்களுள் தலையாயவளாகிய தோழி யாகலின், அவ்வாயில்கள் கூறுதற்குரிய தலைமகள்மாண்புகளைக் கூறுகின்றாள் என அறிக. மாண்புகளாவன, "கற்புங் காமமும் நற்பாலொழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின், விருந்துபுறந் தருதலும் சுற்ற மோம்பலும், பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்," (தொல். பொ. 152) என வருதலா னறிக. "பிறவுமன்ன" என்றதனால், அரசர்க்கு வெற்றியும், உலகுயிர்கட்கு மழையும் அறமும் போல்வன விழைதலும் கொள்ளப்படும்.

வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே; யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க வெனவேட் டேமே.

புறத்தொழுக்கத்திலே நெடுநாளொழுகி, "இது தகாது," எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைவியோடு கூடி யொழுகாநின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி "யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்ததிறம் யாது?" என்றாற்கு அவள் சொல்லியது.

பழைய உரை:— "காவலாம்பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற்பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற்பொருட்டுப் பொன் மிகவுண்டாகுக" என யாய் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்;

அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நின்க்கும், நின்னொழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்கு வருமென்று அஞ்சி, "யாணர் ஊரன் வாழ்க| பாணனும் வாழ்க" என விரும்பினேம் யாங்கள் என்றவாறு.

தலைவியை யாய் என்றது புலத்தற்குக் காரணமாயின உளவாகவும்| அவை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி. தோழி யாங்கள் என உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கியெனக்கொள்க. பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது| தலைமகளிரைப்போலப் பொதுமகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவான் என்பதாம். ஆதனவினி, என்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைமகன்.

புதிய உரை:— ஆதன் வாழ்க; அவன் குடியிற் பிறந்த அவினி வாழ்க; நெல் மிக்கு விளைக; பொன் மிகவுண்டாகுக என்று தலைவி இல்லறமே நினைந்தொழுகினளாக, யாங்கள், பூக்களை நிறையவுடைய காஞ்சியும், சினைகளையுடைய சிறுமீன்களுமுடைய ஊரன் வாழ்க; அவற்கு வாயிலாகும் பாண்மகனும் வாழ்க என்று விரும்பியுறைந்தேம். எ. று.

அவினி யென்பான் சேரமான்களில் ஒருவன். ஆதன் என்பது சேரமன்னருட் சிலருடைய குடிப்பெயர். "எறிவிடத் துலைபாச் செறிசுரை வெள்வேல், ஆதன் எழினி" (அகம். 216) என்றும், "அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்" (புறம். 71) என்றும் வருவன காண்க. பலபொலிக என்புழிப் பன்மை மிகுதிப்பொருட்டு. [redacted]. ஏகாரங்களுள் யாமே என்புழிப் பிரிநிலையும், பாயே என்புழித் தேற்றமும் வினையவிடத்து அசைநிலையுமாம். நனைய, சினைய என நின்று குறிப்புப்பெயரெச்சங்கள் முறையே காஞ்சியும் மீனும் கொண்டன. யாணர், புதுமை. பாணனும் என்புழி உம்மை இறந்தது தழீஇயிற்று. இனி, ஊரன் என்பதனை அன்மையினி.

யர்க்கி, நீ யென்னும் எழுவாய் வருவித் துரைத்தலு மொன்று. அதனாற் சொற்கிடக்கைமுறைக் கேற்பப் பொருள்நலம் சிறவாமையறிக.

தலைமகன் புறத்தொழுக்கம் பூண்டொழுகுவதால், தலைமகள் புலத்தற்குரிய காரணம் பல வுளவாகவும்; அவன் சோர்பு காக்கும் கடப்பாட்டினால் அவற்றை மனங்கொள்ளாத சிறப்புக் கருதித் தலைமகளை, யாய் என்றாள். யாமே எனப் பன்மைவாய்பாட்டாற் கூறியது, ஆயத்தாரையும் உளப்படுத்தி என வறிக.

அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், அரசர் முதலாயினாரை இன்னவாறு ஒழுக என்னக் கணவன் முதலாயினார் கற்பித்தவாற்றால், வழிபடுதல் கற்பாகலின், வாழி ஆதன் வாழி அவினி யென்றும், இல்லிருந்து நல்லறம் புரிவார்க்கு விருந்தோம்பல் தலையாய அறமாகலின், அது செய்தற்கு, நெற்பல பொலிக என்றும், தங்கண் வந்து இரந்தார்க்குப் பொன் முதலாயின கொடுத்து இசைநடுதல் இல்வாழ்வின் பயனாதல் குறித்து, பொன் பெரிது சிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள். "அருந்திற லரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" (சிலப். 28: 207-8) என்றும், "மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித், தன்னகர் விழையக் கூடி, னின்னுறல்" (கலி. 8) என்றும் சான்றோர் கூறுமாற்றால் இவற்றை வேட்டலும் தலைமகட்கு அறமாதலறிக. இது புரையறந்தெளிதல்.

இனி, யாமே என்பது முதலாகத் தோழி கூற்று. இல்லறமே நினைந்தொழுகும் தலைமகளின் வேறுபட்டுப் பரத்தையராகிய பொதுமகளிரையும் அவளோடொப்பக் கொண்டு புறத்தே யொழுகும் தலைமகன் அவளைப் பிரியேனெனக் கூறிய சூளுறவு பொய்த்தலால் வரும் ஏதம் ஆய்ந்து, அஃதுண்டாகாவாறு யாண்டூரன் வாழ்க என்றும், அவ்வாறு பொய்த்தற்கு வாயிலாய் நிற்கும் பாணனும் பொய்யனாதற்கு இரங்கி, பாணனும் வாழ்க என்றும் வேட்டேம் என்றாள். பன்முறைய வுரை

காருக்கும் இதுவே கருத்தாதல் அறிக. இது தெய்வமஞ்சலின் பாற்படும். இம் மெய்ப்பாடு தலைமகட்கே யுரித்தாயினும், "ஒன்றித் தோன்றும் தோழி மேன" (தொல்காப். பொ. 39.) என்னும் விதியினால் சிறுபான்மை தோழியிடத்தும் தோன்றும் என்ப. மேலே, தோழி கூற்றுக்களுள் மெய்ப்பாடு தோன்ற வருவனவற்றிற்கும் இதுவே இலக்கணமாகக் கொள்க. இது தோழியிடைத் தோன்றிய முன்னிலைப் புறமொழி. "முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும், பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்" (தொல்காப். பொ. 167) என்பது இலக்கணம். இது, "பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின்" (தொல். பொ. 150) என்ற சூத்திரத்து, "பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய, மரபுடையெதிரும் உளப்படப் பிறவும்" என்புழிப் "பிறவும்" என்றதனால், பிரிந்து ஒழுகிப் போந்த தலைமகற்குத் தோழி முன்பு நிகழ்ந்தது கூறும் பொருளாதலின், தலைமகன் மாண்புகளையும், தன் செயல்களையும் வகுத்துக் கூறினாள். கூறியிடத்துத் தலைமகனை வாழ்த்துதல் வழுவாயினும், ஏதமஞ்சி மங்கல மொழியால் வாழ்க என்றது, "மங்கல மொழியும் வைஇய மொழியும், மாறி லாண்மையிற் சொல்லிய மொழியும், கூறியன் மருங்கிற் கொள்ளு மென்ப" (தொல். பொ. 244) என்பதனாலமையும் என வறிக.

தலைமகளையும் பொதுமகளிரையும் தலைமகன் ஒப்பக் கருதி யொழுகுகின்றா னென்பதனை உள்ளுறையாற் கூறினமையின் வெளிப்படக் கூறிற்றிலள். காஞ்சியின் பூவும், மீனின் சினையும் ஒப்ப வினையும் ஊரன் என்றதனால் குலமகளிரையும் பொதுமகளிரையும் ஒப்பக் கருதுகின்றான் என உள்ளுறை யுவமம் கொள்ளப்படும்.

உள்ளுறை யுவமமாவது, ஏனை வெளிப்படையுவமம் போலாது, உணர்தற்கரிதாய், களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளின் கண்ணும், வினை, பயன், மெய், உரு, பிறப்பென்னும் ஐவகை நிலைக்கள னுடைத்தாய், தெய்வ மொழிந்த

கருப்பொருளைபற்றிச் சான்றோர் செய்யுட்கண் வரும் உவம வகை. "பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி, முன்னை மரபிற் கூறுங் காலைத், துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே" (தொல். பொ. 208) என்றும், "தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின், வினையினும் பயத்தினும் உறுப் பினும் உருவினும், பிறப்பினும் வரூஉந் திறத்திய லென்ப" (தொல். பொ. 300) என்றும் வருவனவற்றால் இவ்வியல்பினை யறிந்து கொள்க. அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டு நகை சிறப்பெனக், கெடலரு மரபின் உள்ளுறை யைந்தே" (தொல். பொ. 242) என்பதனால், இஃது ஐவகைப்படு மென் பதும், "இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும், உவம மருங்கிற் றோன்று மென்ப" (தொல். பொ. 303) என்றத னால் இஃது இன்பமும் துன்பமும் தோன்றச் சொல்லப்படு மென்பதும் பிறவும் கூறுப. ஈண்டுக் காஞ்சியின் நனையும், மீனின் சினையும் தன்னிலமாகிய மருதநிலக் கருப்பொருள் களாதலால், அவற்றைக் கொண்டு, இவற்றை யொப்பவுடைய ஊரனுகவே, குலமகளிரையும் பொதுமகளிரையும் ஒப்பக் கொண் டொழுகுகின்ற னெனத் துனியுறுகிளவி தோன்றச் சிறப்பு என்னும் வகையால் தோழி கூறினுள் என்றுணர்க. இனி வருமிடங்களில் இவ்வகையினை ஓர்ந்து கொள்க.

இதனுள், ஆதனவினியை வாழ்த்தியது கற்பும், நெல் லும் பொன்னும் வேட்டது நற்பாலொழுக்கமும் என்ற மாண்புகள் என வறிக. பழியொடு வாராத நற்செயல் புரிந் தமையால், மெய்ப்பாடு: தன்கண் தோன்றிய இசைமை பொருளாகப் பிறந்த பெருமிதம். "கல்வி தறுகண் இசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே" (தொல். பொ. 257) என்பது விதி. இதனாற் பயன்: ஆற்றி யிருந்தமை கூறல். (க)

2\. வாழி யாதன் வாழி யவினி
விளைக வயலே வருக விரவலர்
எனவேட் டோளே யாயே; யாமே

பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்குந்
தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்கவெனவேட் டேமே.

இதுவுமது.

ப.-ரை:— தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினாள்; யாங்கள் நின்காதல் அவள்மேற் சுருங்குகின்ற திறம் நோக்கி, "நின் கேண்மை வழிவழிச் சிறக்க" என விரும்பினேம் எ. று.

சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்த்த ஊரன் என்றது, தலைமகளிருடனே பொதுமகளிர் இகலும் ஊரன். எ. று

பு.-ரை:— ஆதனவினி வாழ்க என்றும், வயல் மிக்கு விளைக என்றும், இரவலர் பலரும் வருக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு வேண்டுவனவே நினைந்து ஒழுகினளே யன்றி, பிறிதொன்றும் நினைத்திலள்; யாங்கள், பலவாகிய இதழ்களையுடைய கருங்குவளையுடன் நெய்தல்கள் ஒப்ப மலரும் தண்ணிய துறையினையுடைய ஊரனது நட்புப் பிறப்புத் தோறும் இடையறாது சிறக்குமாக என விரும்பியொழுகினேம். எ. று.

என வென்பது முன்னும் கூட்டப்பட்டது. "என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி, ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே" (தொல். சொல். 294) என்பது விதி. நெய்தல்கள் நெய்தற் றிணைக்கே யுரிய வாயினும், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்" (தொல். பொ. 19) என்றதனால் மருதத்துக்கும் உரியவாயின. பல்லிதழ் என்றவிடத்து, பல வென்பது இதழ் எனப் பிறந்து வந்தமையின், அகரங் கெட்டு, "குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்" (தொல். எழுத்து. 160) என்றதனால் லகரம் இரட்டித்து, பல்.

விதழ் எனமுடிந்தது. "தொடர்இறுதி தம்முற் றும்வரின், லகரம் றகரவொற் றாதலு முரித்தே" (தொல். எழுத். 214) என்புழி, அருத்தாபத்தி முகத்தால் அகரம் கெடுமென்பது கொள்ளப்படும். நீலமொடு என்புழி, ஒடு, அதனொ டியைந்த வேறுவினைக் கிளவி. கேண்மை, கேளாய் ஒழுகுந் தன்மை. வழிவழிச் சிறக்க என ஒற்றுமிகுதல் இலக்கணமாயினும் ஒற்றின்றியும் பாடம் வருதலும் உண்டு. "பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து" (தொல். பொ. 422) என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதனானு மறிக.

அறமும் இன்பமும் எய்துதற்குரிய பொருள் வருவாயாகலின், விளைகவயலே என்றும், புகழ்வளர்ச்சிக் குரிய ஈகைக் கிடமாதலின், வருக இரவலர் என்றும் வேட்டாள். இது விருந்து புறந்தருதலும் சுற்றந் தழாலும் இசை வளர்த்தலும் கூறிற்று.

தலைமகன் புறத்தொழுக்க முடையனாகலின், அவன் காதல் பொதுமகளிர்பாற் செல்லுமுகத்தால் தலைமகள்பால் சுருங்குதல் கண்டு, அது நிகழாமை குறித்து, ஊரன் கேண்மை வழிவழிச் சிறக்க எனத் தோழி வேட்டாள். "உறுகண் ஓம்பல் தன்னியல்பாகலின்" (தொல். பொ. 239) என்பதனால், தோழி உடனுடையளாய் அவன் கேண்மை சிறக்க வேண்டுதல் அமையும் என்க.

பல்வரிய இதழ்களாற் சிறப்புடைய நீலத்தோடு நெய்தல் நிகர்க்கு மூரன் என்றதனால், குலமகளிரோடு பொது மகளிர் நிகர்க்கு முகத்தால் இகலி யொழுகுவர் என உள்ளுறை கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (உ)

வாழி யாதன் வாழி யவினி
பால்பல வூறுக பகடுபல சிறக்க
எனவேட் டோளே யாயே; யாமே

வித்திய வுழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞ லூரன் றன்மனை
வாழ்க்கை பொலிக வென்வேட் டேமே.

இதுவுமது

ப.-ரை:— தலைவி இல்லறமே நினைந் தொழுகினள்; அவன் பொதுமனையில் வாழ்க்கை யொழிந்து தன்மனையிலே வாழ்வானாக எனவேட்டேம் யாங்கள். எ.று. மேல் விளைதற்கு வித்திய வுழவர் முன்பு விளைந்த செறுவின் நெல்லொடு பெயரு மென்றது பின்வரும் பரத்தையர்க்கு வருவாய் பண்ணி அக் காலத்து உளராகிய பரத்தையரோடு இன்ப நுகர்வா னென் பதாம்.

பு.-ரை:— ஆதனவினி வாழ்க என்றும், ஆனிரைகள் பால்வளம் சுரக்க என்றும், எருமைகள் பல மிகுக என்றும் தலைவி இல்லறமே நினைந்து ஒழுகுவாளாக, யாங்கள் பின் விளைவு வேண்டி விதைத்தலைச் செய்த உழவர் முன்னே விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக் கொண்டு போதரும் பூக்கள் நிறைந்த வூரன், புறத்தொழுக்கம் தவிர்ந்து, தன்மனையிலே இருந்து விளங்குவானாக என விரும்பி யொழுகிவந்தேம், எ. று.

சிறிதாகிய நீரைச் சின்னீர் என்பது போல, "பால் பல" எனப்பட்டது. பகடு, எருமை. எருதிற்கும் யானைக்கு மாம். வித்திய என்றும், பெயரும் என்றும் வந்த எச்ச வினைகட் கேற்புடைய சொற்கள் வருவிக்கப்பட்டன. கஞலு தல், நிறைதல். உழவர் பெயரும் ஊரன், பூக்கஞலூரன் என இயைக்க. வித்திய சென்ற உழவர் நெல்லொடு பெயர்வர் என்னும் இக்கருத்து, "அரிகான் மாறிய வங்க ணகன்வயல், மறுகா லுழுத வீரச் செறுவின், வித்தொடு சென்ற வட்டி பற்பல, மீனொடு பெயரும் யாண ரூர" (நற். 210) என்பத னோடு ஒத்துநிற்றல் காண்க.

பொருளும் உழவுத்தொழிலும் மேம்படுதற்கு, பாலும் பகடும் வேண்டினாள். பாலின் பெருக்கம் விருந்தோம்பற்கும், பகடு அழிவில் செல்வத் தாக்கத்திற்கும் என்க.

பகடு என்பதற்கு யானை பொருளாயின், ஈட்டிய வொண்பொருளால் இரவலர்க் கீந்து இசைநடுதற்பொருட்டுப் பகடு வேண்டப்பட்ட தென்றுமாம். எனவே, விருந்தோம்பற்குப் பால் வேட்டதுபோல, கொடைக்கடன் இறுத்தற்குப் பகடு வேட்டா ளென்க. உள்ளுறையால், தலைமகனது புறத்தொழுக்கத்தால் வருங் குற்றம் தலைவி யொழுக்கத்தால் மறையினும் மனைவாழ்க்கை பொலிதலின்மையின், அவ்வா றுகாமை வேண்டி, ஊரன் தன்மனை வாழ்க்கை பொலிக என்று வேட்டேம் எனத் தோழி கூறினாள். "அன்பும் அறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனு மது" (குறள். 45) என்புழிக் கூறும் பயன் தலைவி வேட்டலால் ஒருவாற்றா னெய்தினும், புறத்தொழுக்கத்தால் பண்பாகிய அன்பு குறையின், அவ் வறம் கடைபோகா தென்ப துட்கொண்டு கூறினாளுமாம். "பெறற்கரும் பெரும் பொருள்" (தொல். பொ. 150) என்ற சூத்திரத்துட் கூறும், "தீத்த கிழவனை நிகழுமாறு படீஇக், காத்த தன்மையிற் கண்ணின்று" பெயர்க்கும் கடப்பாடுடைய ளாகலின், தோழி இது கூறினா ளென அறிக.

விளைவு கருதி வித்திய உழவர் விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக் கொண்டு பெயரும் ஊரன் என்றதனால், பின்வரும் பரத்தையர்க்கு வேண்டுவன புரிந்து, அக்காலத்து நுகர்ச்சிக்குச் சமைந்துள்ள பரத்தையரைக்கூடி யொழுகுகின்றான் என உள்ளுறை காண்க. இனி, விளைவு வேண்டி விதைத்த உழவர், அவ்வாறே விளைந்த நெல்லைக் கொண்டு பெயரும் ஊரனாயினும், இல்லறப் பயனை வேண்டி இவளை மணந்த பின், அது பெறுமை ஒழுகிய தென்னை என இறைச்சி தோற்றியவாறுங் கொள்க. "இறைச்சி தானே பொருட் புறத் ததுவே" (தொல். பொ. 229) என்பது விதி. இல்

லறப்பயன், "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவ னும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல்" (தொல். பொ. 192) என்ப. நெல்லொடு பேரும் என்றும் பாடம். வியர்த்தல், வேர்த்தல் என வருதல்போல, பெயர்தல், பேர்தல்எனவும் வரும். மெய்ப்பாடும் பயனும் அவை. (ரு)

வாழி யாதன் வாழி யவினி
பகைவர் புல்லார்க பார்ப்பா ரோதுக
எனவேட் டோளே யாயே; யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
கழனி யூரன் மார்பு
பழன மாகற்க வெனவேட் டேமே.

இதுவுமது.

ப.-ரை :— இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள்; அவன் மார்பு ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய பழனம் போலாது இவட்கே யுரித்தாக என விரும்பினேம் யாங்கள். எ. று. பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன் படும் நெல்லினையுமுடைய ஊர னென்றது நன்று பயன்படாப் பொதுமகளிரையும், மகப்பயந்து பயன்படும் தலைமகளிரையும் ஒப்பர்னைப்பான். எ. று.

பு.-ரை :— ஆதனவினி வாழ்க என்றும், பகைவர் தம் பெருமித மிழந்து புல்லரிசிச் சோறுண்க என்றும், பார்ப் பார் மறை ஓதுக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு வேண்டு வனவே நினைந்து ஒழுகினளாக, யாங்கள், பூத்து விளங்கும் கரும்பும், விளைந்து கிடக்கும் நெல்லுமுடைய கழனியூரனது மார்பு எல்லார்க்கும் உரித்தாகிய பழன மாகா தொழிக என வேட்டொழுகினேம். எ. று.

புல், புல்லரிசி. இக் கருத்தேகொண்டு சேனாவரைய ரும் "புற்றின்றல் உயர்திணைக்கு இயையின் றெனப்படாது".

(சொல். 173. உரை) என்றார். பார்ப்பார், வேதியர்: இவர், நன்றும் தீதும் ஆராய்ந்து நோக்கி உறுதி கூறுவார் என்பர் பேராசிரியர். (தொல். பொ. 501 உரை.) "அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக" என்றார் மதிவாணனார். (சிலப். அடி. மேற்.) "தாறுபடுநெல்" என்றாற்போலக் காய்த்த நெல் என்றார் என்பது *நச்சினார்க்கினியம். கழனி, வயல். பழனம், ஊரவர்க் கெல்லாம் பொதுவாகிய நிலம். ஆகற்க என்பது வியங்கோ ளெதிர்மறை. எண்ணும்மை தொக்கது. இன், உருபுகொக நின்ற சாரியை.

உலகு புரக்கும் வேந்தனை வாழ்த்தும் விருப்பினோர், அவன் பகைவர்கேடும் ஒருவாற்றான் அவற்கு ஆக்கமாம் என்று கருதுபவாகலின், பகைவர் புல்லார்க என்று கூறப்பட்டது. "குணமுதற் றோன்றிய வாரிருள் மதியின், தேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்" (மதுரை. 195–6) என்று பிறரும் கூறுதல் காண்க. அவ்வாறு பெற்ற ஆக்கம் நிலைத்தற்கும், வேதமோதுதலால் வேள்விநடப்ப, வானம் பொய்யாது மாமழை பொழிய, வினைபொருள் மிகுதலால் இல்லறம் சிறத்தற்கும் பார்ப்பா ரோதுக என வேட்டுகின்றாளாம். இனி, பார்ப்பாரோதி வேட்பித்தலால் அரசன் வாழ்நாள் பெருகுதல் கருதி, பார்ப்பார் ஓதுக என்றாள் என்றுமாம். "வேந்தன் வேள்வியின் யாண்டுபல வாழ்க" என்றார் மதிவாணனார். பகைவர் புல்லார்க எனவே, நட்டோர், கிளைஞர் முதலாயினார் அழுதுண்க எனச் சுற்றந்தழாலும் விருந்தோம்பலு மாகிய மாண்புகள் கூறியவாறும். தலைமகள் தான் கூடியின்புறும் தலைவன் மார்பினைப் பரத்தையர் நோக்கினும், பொறாது புலக்கும் பான்மையளாகலினாலும், உள்ளுறையால் தலைமகனது புறத்தொழுக்கத்தைக் கூறுகின்றாளாகலினாலும், ஊரன்மார்பு பழன மாகற்க எனவேட்டேம் என்றாள். "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர், நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள். 1311) என்றதனால்,

* சீவகசிந்தாமணி. செய்யுள் 53 உரை பார்க்க

தலைமகளின் புலவிப்பான்மை யுணர்க. உள்ளுறையால் பரத்தையின் பாடின்மை கூறலின், இதுவும் முன்னையது போல, "நீத்தகிழவனை நிகழுமாறு படீஇக், காத்த தன்மையிற் கண்ணின்று" (தொல். பொ. 150) பெயர்த்துக் கூறியது.

இனி, பூத்துப் பயன்படாக் கரும்பினையும், காய்த்துப் பயன்படும் நெல்லினையுமுடைய ஊரன் என்றது, மகப் பயந்து பயன்படும் குலமகளிரையும், அஃதில்லாத பொதுமகளிரையும் ஒப்பக் கருதி யொழுகுவான் என்றவாம். பொது மகளிர் ஈன்று பயன்படா வியல்பினர் என்பதனை, "அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து, நன்றி சான்ற கற்போ(டு), எம்பா டாதல் அதனினு மரிதே" (நற். 330) என வரும் சான்றோர் கூற்றா னறிக. மெய்ப்பாடும் பயனும் அவை. (௪)

௫. வாழி யாதன் வாழி யவினி
பசியில் லாகுக பிணிசே ணீங்குக
எனவேட் டோளே யாயே; யாமே
முதலைப் போத்து முழுமீ னாருந்
தண்டுறை யூரன் றேரெம்
முன்கடை நிற்க வெனவேட் டேமே.

இதுவுமது.

ப.-ரை :—இவள் இல்லறமே விரும்பி யொழுகினாள்; யாங்கள் அவன் தேர் பிறமகளிர் முன்கடை நிற்றலொழிந்து எம் முன்கடை நிற்க என விரும்பினோம். எ று. முதலைப் போத்து........ஊரன் என்றது, ஒருங்கு வாழ்வாரைப் பழைமை நோக்காது உயிர்கவர்வான் என்பதாம்.

பு.-உரை :— ஆதனவினி வாழ்க என்றும், பசி இல்லையாகுக என்றும், பிணி நெடிது நீங்குக என்றும் தலைமகள்

இல்லறத்திற் குரியனவே நினைந் தொழுகின்றாளாக, யாங்கள், முதலைப் போத்துத் தன்னொடு வாழும் முதிர்ந்த மீன்களை யுண்ணும் குளிர்ந்த துறையினையுடைய ஊரனது தேர் பிற மகளிரின் முன்கடை நிற்றலொழிந்து எம்முடைய முற்றத்தே நிற்க என விரும்பினேம். எ. று.

பசியின் உண்மையும், இன்மையும் காரணம்பற்றித் தோன்றுவன வாகலின் ஆக்கங் கூறினார். சேண், சேய்மையிடம். முதலைப் போத்து, முதலையினது போத்து. போத்து, இளமை சுட்டிய மரபுப் பெயர். "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" (தொல். பொ. 579) என்புழிக் "கொள்ளவும்" என்ற உம்மையை எச்சப்படுத்தி ஓரறிவுயிர்க்கேயன்றி ஏனையவற்றிற்கும் கொள்ப * வாகலின், முதலைக்கும் கொள்ளப்பட்டது. முழுமீன், இனி வளர்ச்சி யில்லையாமாறு முற்ற முதிர்ந்த மீன். பிறமகளிர் முன்கடை என்பது முதலாயின குறிப்பெச்சம்.

பசியும் பிணியும் நல்வாழ்வின் சீர்குலைப்பன வாயினும், பிணிக்குரிய காரணங்களுட் பசி சிறந்தமையின், பசியில்லாகுக என்றும், பசியின்றியும் சிறுபான்மை பிணியுண்டாதலுண்மையின், பிணி சேண் நீங்குக என்றும் வேட்டாள். பிணி போலாது, எல்லா நன்மையும் கெடுக்கும் இயல்பிற்றாகலின் பசியை முற்கூறினாள் என்க. தலைமகன் புறத்தொழுக்கத்தால் தலைமகள் மேனிநலம் கெடுதலின், அவன் தேர் தன் மனைக்கட் சென்று நில்லா தாயினும் பரத்தையர் மனைக்கண் நின்றவழித் தலைமகள் ஆற்றாளாயின்மையின், ஊரன்தேர் எம் முன்கடை நிற்க என வேட்டேம் என்றாள். தம்மனைக்

* "ஓரறிவுயிர்க்குக் கொள்ளவு மமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிறவுழியுங் கொள்ளப்படும்" என்று கூறி, "புலிப்போத் தன்ன புல்லணற் காளை" (பெரும். 138) எனவும், 'பருவாய் வராஅற் பல்வரி யிரும் போத்து, (அகம். 36) எனவும் இவையும் இளமைக்குறிப்பின" என்பர் பேராசிரியர்.

கண் நிற்றலால் தலைமகன் தம்பாற் காதலன் எனக் காட்டித் தலைமகள் முன் தருக்கித் திரியும் பரத்தையர் கண்டு, தம் தலைமடங்குவாராகலின் முன்கடை என இடம் சுட்டினாள் என அறிக.

துறைக்கண் வாழும் முதலைப்போத்து உடனுறையும் முழுமீன்களின் முதுமை கருதாது உண்டொழுகும் ஊரன் என்றதனால், தலைமகன் தன்மனைக்கண் தன்னோடு உடனுறையும் தலைமகளின் தலைமை கருதாது அவள் நலம் கெடுக்கின்றான் எனத் துனியுறு கிளவி தோன்ற உள்ளுறுத் துரைத்தவாறு. மெய்ப்பாடும் பயனும் அவை. இவை யைந்தும் கற்பின்கண் நிகழ்ந்தது கூறின. (௫)

6. வாழி யாதன் வாழி யவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே ; யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் வரைக
எந்தையுங் கொடுக்க வெனவேட் டேமே.

களவினிற் பலநா ளொழுகிவந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, "யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?" என்றாற்கு அவள் சொல்லியது.

ப.—ரை :— நின்னை யெதிர்ப்பட்ட வன்றே வரைந்தா யெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்; யாங்கள், அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையையுடைய வூரனாதலால் அத் தண்டுறையூரன் மனைக்கு அணியாம் வண்ணம் இவளை வரைவானாக; எந்தையும் கொடுப்பானாக என விரும்பினேம். எ-று. ஈண்டுத் தலைவியை யாய் என்றது எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டொழுகுகின்ற சிறப்பைநோக்கி.

கண் நிற்றலால் தலைமகன் தம்பாற் காதலனெனக் காட்டித் தலைமகள்முன் தருக்கித் திரியும் பரத்தையர் கண்டு, தம் தலை மடங்குவாகலின் முன்கடை என இடம் சுட்டினாள் என அறிக.

துறைக்கண் வாழும் முதலைப்போத்து உடனுறையும் முழுமீன்களின் முதுமை கருதாது உண்டொழுகும் ஊரன் என்றதனால், தலைமகன் தன்மனைக்கண் தன்னோடு உடனுறையும் தலைமகளின் தலைமை கருதாது அவள் நலம் கெடுக்கின்றான் எனத் துனியுறு கிளவி தோன்ற உள்ளுறுத் துரைத்தவாறு. மெய்ப்பாடும் பயனும் அவை. இவை யைந்தும் கற்பின்கண் நிகழ்ந்தது கூறின. (௫)

6. வாழி யாதன் வாழி யவினி
வேந்துபகைதணிகயாண்டுபலநந்துக
எனவேட் டோளே யாயே ; யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் வரைக
எந்தையுங் கொடுக்க வெனவேட் டேமே.

களவினிற் பலநா ளொழுகிவந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, “யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?” என்றாற்கு அவள் சொல்லியது.

ப.—ரை :— நின்னை யெதிர்ப்பட்ட வன்றே வரைந்தா யெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்; யாங்கள், அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையையுடையவூரனாதலால் அத் தண்டுறையூரன் மனைக்கு அணியாம் வண்ணம் இவளை வரைவானாக; எந்தையும் கொடுப்பானாக என விரும்பினேம். எ. று. ஈண்டுத் தலைவியை யாய் என்றது எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டொழுகின்ற சிறப்பைநோக்கி.

பு.—ரை :— எம்முடைய யாய் நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே நீ வரைந்தாய் என வுட்கொண்டு, ஆதனவினி வாழ்க என்றும், வேந்தன் பகைமை யொழிக என்றும், அவன் பல யாண்டுகள் வாழ்க என்றும் தனக்குரிய அறநெறியே வேண்டி யொழுகினாள்; அகன்ற பொய்கைக்கண் முகைகள் கொண்ட தாமரையினையுடைய வூரன் இவளை விரைய வரைவானாக என்றும், அவன் அது வேண்டிய விடத்து எந்தையும் மறாது கொடுப்பானாக என்றும் யாங்கள் விரும்பி யொழுகினேம். எ. று.

“நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்” (தொல். பொ. 43) என்பதனால் இவை கற்புக்காலத்து நினைக்கப்பட்டன. பகைதணிதலாவது, பகைமேற் சென்ற வினை யொழிதல். பகை தணிக என்பன எழுவாயும் பயனிலையுமா யிணைந்து ஒரு சொல்லாய் வேந்து என்றதற்கு முடிபாயின. வேந்து, உயர்திணைப் பொருண்மைக்கண் வந்த அஃறிணைச் சொல். “உயர்திணை மருங்கின் நிலையின வாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்” (தொல். சொல். 56) என்பது விதி. “மலர்ந்த மார்பு” என்றாற்போல மலர்தல் விரிதல் மேற்று. முகைந்த என்பது முகை யென்னும் பெயரடியாகப் பிறந்த பெயரெச்சவினை. நின்னை யெதிர்ப்பட்ட என்பது முதலாயின குறிப்பெச்சம். “சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொ ளியற்கைப், புல்லிய கிளவி யெச்ச மாகும்” (தொல். பொ. 518) என்ப. எந்தையும் என்புழி உம்மையால், தந்தை மறாது மகட்கொடை நேர்தல் பெய்துரைக்கப்பட்டது.

தலைமகனை எதிர்ப்பட்ட ஞான்றே அவன் வரைந்தானென வுட்கொண்டு, ஆண்டுச் செய்தற்குரிய நல்லறமே விரும்பி யொழுகிய தலைமையுடைமையின், தலைமகளை யாய் என்றாள். வேந்து பகைதணியாவழி, பிணம்படு செருவேட்டெழுதலல்லது, மணம்புகு வைகல் நாளை யாயினும், அதனை மனங்கொளா மறமுடைமை யாகலின், வேந்து பகைதணிக

என்றும், காதலனைப் பிரிந்து ஒரு கருமம் முடிப்பதனின் மிக்க ஆள்வினை யில்லை யென்னும் கருத்துடையையாய்ப் பகைதணிவினை மேற்கொண்டவழி, அதன்கண் நீ இனிது முற்றி மீள்வாயாக எனவும், அவ்வண்ணம் மீண்டவழிக் கூட்டம் இன்பம் மிகுவித்தலின், யாண்டுபல நந்துக என்றும் வேட்டாள் என்றாள். "வேந்து பகைதணிக" எனவே, "தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மை" (தொல். பொ. 41) கருதித் தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்தானாதல் அறிக. இவ்வாறு எதிர்ந்த ஞான்றே வரைந்தானெனக் கற்புக்கடம் பூண்டாள், புகழ்விரிந்த நின் மனைக்கண் விளக்கெனத் திகழ்ந்து அதனைச் சிறப்பிப்பாளாகலின், வரைக என்றும், இவள் கற்புநிலையும் நின் மறநிலையு முணராது எந்தை கொடானாயின் வரும் ஏதத்திற் கஞ்சி, எந்தையும் கொடுக்க என்றும் வேட்டேம் என்றாள். "ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல, மனைக்குவிளக் காயினள் மன்ற" (ஐங். 405) என்றும், "விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியல், சுணங்கணி வனமுலை யவளொடு நாளை, மணம்புகு வைகல் வாகுக வென்றே, ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின், நீளிலை யெஃக மறுத்தவுடம்பொடு, வாராவுலகப் புகுதலொன்றெனப் படைதொட் டனனே" (புறம். 341) என்றும் வருவன முறையே தலைமகள் மனைக்கு விளக்கெனத் திகழ்தலும், மகட்கொடை மறுப்புழி எய்தும் ஏதமும் உணர்த்துவனவாம். "தண்டுறையூரன் வரைக" என்றதனால், தலைமகள் ஒருதலை யுரிமைவேண்டி நிற்றலும், "எந்தையும் கொடுக்க" என்று கூறவே, "அம்பலு மலரும் களவுவெளிப்படுக்குமென்று" அஞ்சுதல் முதலியனவும் ஏதுவாகத் தலைமகள் வரைதல் வேட்கையுடையளாயினமை தோன்றத் தோழி கூறினாளாம்.

இனி, அகன்ற பொய்கைக்கண் தாமரை முகைந்தாற் போல, அகன்ற இவ்வூர்க்கண் அலரெழுந்தமையின், இவள தாற்றாமை கண்டு வரைக என்றும், கொண்டுதலைக்கழிதல், மகட்கொடை யுடம்படல் என்பவற்றிற் கிடையீடாகிய

இற்செறிப்பும், வேற்று வரைவு வருதலும் பிறவும் நிகழ்ந்தமையின், எந்தையும் கொடுக்க என வேட்டேம் என்றாள் எனினுமாம்.

"வேந்து பகைதணிக" என்றமையின், தலைமகன் களவின்கண் வரை விடைவைத்துப் பிரிந்தவழித் தன்வயின் உரிமையும், அவன்வயிற் பரத்தைமையும் கூறற்பாலளாயினும், "வாளாண் எதிரும் பிரிவு" தலைமகற்குத் தலைமையெனப் பாட்டிகொண்டு நின்ற அவளது பொறையுடைமை சிறப்பித்தவாறு.

இனி, "பெறற்கரும் பெரும்பொருள்" (தொல். பொ. 150) என்ற சூத்திரத்து "அற்றமில்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக்கடத்தினும்" என்பதனைக் கிழவோற் சுட்டிய எனப் பாடங்கொண்டு, ஆங்கு நிகழும் கூற்றுக்கு உதாரணமாக்குவர் இளம்பூரணர். நச்சினார்க்கினியரும் இதனை யுடம்பட்டுரைப்பர். மெய்ப்பாடும் பயனும் அவை. (சூ)

7. வாழி யாதன் வாழி யவினி
அறநனி சிறக்க அல்லது கெடுக
எனவேட் டோளே யாயே; யாமே
உளைப்பூ மருதத்துக்கிளைக்குருகிருக்கும்
தண்டுறை யூரன் றன்னூர்க்
கொண்டனன் செல்க வெனவேட்டேமே.

இதுவுமது.

ப.—ரை:— நின்னை எதிர்ப்பட்டஞான்றே நீ வரைந்தாயெனக் கொண்டு, ஆதனவினி வாழ்க என்றும், அறவினை மிகவோங்குக என்றும், அல்லதாகிய பாவம் முற்றவும் கெடுக என்றும் தலைமகள் இல்லறமே வேண்டியொழுகினாளாக, யாங்கள் உளை பொருந்திய பூக்களையுடைய மருதமரத்தில் குருகுகள் தம் கிளையொடு விருக்கும் குளிர்ந்த துறை

வினையுடைய ஊரன் இவளைத் தன்னுடன் கொண்டு செல்வா னாக என வேண்டி யொழுகினேம் எ. று.

அறம், அறவினை. "அறம் நனிசிறக்க" எனவே, அல்லது முற்றவும் கெடுதல் கொள்ளப்படுவ தாயிற்று. உளைப்பூ, மேலே துய்யினையுடைய பூ; "உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டி" (முருகு. 28) என்பதன் உரை காண்க. குருகு, பறவை. ஈண்டுக் கிளிகள் மேற்று. "கிளிவளர் பூமருது" (சீவக. 65) என்றார் தேவரும். இனி, இது நெய் தல் நிலத்துக் குரித்தாகக் கூறப்படும் ஒரு பறவை யென்றும், "இதனைக் கொக்கென்பாரும் நாரை யென்பாரும் அன்ன மென்பாரு முளர்; இப்பெயர் நீர்வாழ்பறவைக் கெல்லாம் பொதுவாய் வருமாயினும், கொக்கினங்காள், குருகினங்காள் என வேறுவேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்றென் றும், கருங்கால் கூறப்படுதலின் நாரையும் அன்னமும் அன்றென்றும் துணியலாகும்" என்றும், "இது வெண் ணிற முடைமையால் வெள்ளாங்குரு கென்றும் வழங்கும்" என்றும், இ. வை. அனந்தராமையர் கூறுவர். அது கருத் தாயின், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்" (தொல்காப். பொ. 19) என்பதனால் ஈண்டு அமைத்துக்கொள்க. கிளைக்குரு கிருக்கும் என்பதற்குக் கிளைக்கண் குருகுகள் தங்கி யிருக்கும் என்றல் பொருட் சிறப் பெய்தாமை யறிக. கொண்டனன் செல்க என்புழிக் கொண்டனன் என்பது முற்றெச்சம்.

எதிர்ப்பட்ட பொழுதே வரைந்தாயென வுட்கொண்டு கற்புநெறி நின்றாள், தான் நுகர்தற்குரிய இன்பம் அறத்தான் அன்றி யெய்தா தென்பதனை யுணர்ந்துளாள் என்பாள், அறம் நனி சிறக்க என்றும், அறவினையே செய்தொழுகு வாரைப் பாவம் பற்றா தாயினும், பற்றுமாறு பிறர் பழி மொழி கூறினும் அஃது அவரைச் சாராதாகலின், நனி சிறக்க என்றும் வேட்டாள் என்றாள். "அறத்தான் வருவதே இன்பம்" (குறள். 39) என்றும், "அறனறிந் தொழுகும் அங்கணாளனைத் திறனிலா ரெடுத்த தீமொழி யெல்லாம், நல்

யிணையுடைய வூரன் இவளைத் தன்னுடன் கொண்டு செல்வா னாக என வேண்டி யொழுகினேம் எ. று.

அறம், அறவினை. "அறம் நனிசிறக்க" எனவே, அல்லது முற்றவும் கெடுதல் கொள்ளப்படுவ தாயிற்று. உளைப்பூ, மேலே துய்யினையுடைய பூ; "உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டி" (முருகு. 28) என்பதன் உரை காண்க. குருகு, பறவை. ஈண்டுக் கிளிகள் மேற்று. "கிளிவளர் பூமருது" (சீவக. 65) என்றார் தேவரும். இனி, இது நெய் தல் நிலத்துக் குரித்தாகக் கூறப்படும் ஒரு பறவை யென்றும், "இதனைக் கொக்கென்பாரும் நாரை யென்பாரும் அன்ன மென்பாரு முளர்; இப்பெயர் நீர்வாழ்பறவைக் கெல்லாம் பொதுவாய் வருமாயினும், கொக்கினங்காள், குருகினங்காள் என வேறுவேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்றென் றும், கருங்கால் கூறப்படுதலின் நாரையும் அன்னமும் அன்றென்றும் துணியலாகும்" என்றும், "இது வெண் ணிற முடைமையால் வெள்ளாங்குரு கென்றும் வழங்கும்" என்றும், இ. வை. அனந்தராமையர் கூறுவர். அது கருத் தாயின், "எங்கில மருங்கிற் பூவும் புள்ளும்" (தொல்காப். பொ. 19) என்பதனால் ஈண்டு அமைத்துக்கொள்க. கிளைக்குரு கிருக்கும் என்பதற்குக் கிளைக்கண் குருகுகள் தங்கி யிருக்கும் என்றல் பொருட் சிறப் பெய்தாமை யறிக. கொண்டனன் செல்க என்புழிக் கொண்டனன் என்பது முற்றெச்சம்.

எதிர்ப்பட்ட பொழுதே வரைந்தாயென வுட்கொண்டு கற்புநெறி நின்றாள், தான் நுகர்தற்குரிய இன்பம் அறத்தான் அன்றி யெய்தா தென்பதனை யுணர்ந்துளாள் என்பாள், அறம் நனி சிறக்க என்றும், அறவினையே செய்தொழுகு வாரைப் பாவம் பற்று தாயினும், பற்றுமாறு பிறர் பழி மொழி கூறினும் அஃது அவரைச் சாரா தாகலின், நனி சிறக்க என்றும் வேட்டாள் என்றாள். "அறத்தான் வருவதே இன்பம்" (குறள். 39) என்றும், "அறனறிந் தொழுகும் அங்கணாளனைத் திறனிலா ரெடுத்த தீமொழி யெல்லாம், நல்

வையுட்படக் கெட்டாங்கு" (கலி. 144) என்றும் சான்றோர் கூறுதல் காண்க. அறவினை செய்யார்க்கும் அல்லது செய்யாமை நன்மை பயந்து அறமாய் முடிதலின், அல்லது கெடுக என வேட்டாள் என்றாள். "நல்லது செய்த லாற்றீ ராயினும், அல்லது செய்த லோம்புமின் அதுதான், எல்லாரு முவப்ப தன்றியும், நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே" (புறம். 195) என்றார் சான்றோரும். "அறன்வாழ்த்த நற் காண்ட, விறன்மாந்தரன் விறன்மருக" (பதிற். 90) எனப் பிறரும் கூறுமாறறிக. இது புரையறந்தெளிதல். இனி, இல் லிருந்து நல்லின்பம் நுகர்வார்க்குரிய பொருளின்பங்கட்கு அறம் ஏதுவாகலினாலும், அறந்தெரி திகிரியினை யுடைய அரசர்க்கும், அல்லது வழியடையாகும் தீது என்ப வாகலி னானும், அறம் நனி சிறக்க என்பதும், அல்லது கெடுக என்ப தும் வேண்டப்பட்டன என்றலும் ஒன்று. இனி, களவின் கண் வரைவிடைவைத்துப் பிரிந்துழியும், தலைவி தன்வயி னுரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் தோன்ற, உயிராக் காலத்து உயிர்க்கும் இயல்பின ளாயினும், இவள் சீலமல்லன நினைந்திலள் என்றற்கு இது கூறினாள் என்றும் கூறுவர். இஃது அவளது நற்பாலொழுக்கம் கூறிற்று.

நின்னை யெதிர்ப்பட்டஞான்றே வரைந்தாயென வுட் கொண்டு, இல்லறத்தின்மேற் சென்ற வேட்கை மிகவுடைய ளாய், ஆள்வினைக் குறிப்பால் நீ பிரிவை யெனவும், களவு புறத்தார்க்குப் புலனாயின் அம்பலு மலருமாம் என்று அஞ்சி யும், தமரறிவுற்றுக் காப்பு மிகுவிப்பரென் றஞ்சியும், பிறவகை யான் எய்தற்பாலவாகிய இடையூறு நினைந்தும் வேறுபட்ட மையின், யாங்கள் அஞ்சி, ஊரன் தன்னூர்க் கொண்டனன் செல்க என வேட்டேம் என்று கூறினாள். "ஒருதலை யுரிமை வேண்டினு மகடூஉப், பிரிதலச்ச முண்மை யானும், அம்பலு மலரும் களவுவெளிப் படுக்குமென், றஞ்ச வந்த வாங்கிரு வகையினும், நோக்கொடு வந்த விடையூறு பொருளினும், போக்கும் வரைவும் மனைவிக்கட் டோன்றும்" (தொல்காப். பொ. 225) என ஆசிரியர் கூறினர். "ஒன்றித் தோன்றும்

தோழி மேன" (தொல். பொ. 39) என்பதனால், தோழி கூறலும் அமையும் என வறிக.

மருதமாம் குருகு தங்கியிருத்தற்கு ஆதாரமானாற் போல, இவள் உயிர்வாழ்தற்கு நீ இன்றியமையாய் என்பது உள்ளுறை. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" (குறுந். 135) என்றார் சான்றோரும். மெய்ப்பாடும் பயனு மவை. (எ)

8. வாழி யாதன் வாழி யவினி
அரசுமுறை செய்க களவில் லாகுக
எனவேட் டோளே யாயே ; யாமே
அலங்குசினை மாஅத் தணிமயி லிருக்கும்
பூக்கஞு ஊரன் சூளிவண்
வாய்ப்ப தாக வெனவேட் டேமே.

இதுவுமது.

பு.-ரை :— நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே தலைமகள் கற்புக்கடம்பூண்டு, அதற்கு வேண்டுவன நினைந்து, ஆதனவினி வாழ்க என்றும், அரசன் முறையினைச்செய்க என்றும், களவு முதலிய குற்றங்கள் நிகழாதொழிக என்றும் வேட்டொழுகினாளாக, அசைகின்ற தளிர்களையுடைய மாமரத்தின்கண் அழகிய மயில் தங்கியிருக்கும் பூக்கள்நிறைந்த வூரன், தலைப்பெய்த பொழுது செய்த சூளுறவு இப்பொழுது பொய்யாதொழிக என விரும்பி யொழுகினேம் எ. று.

முறை செய்தலை "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்(து) யார்மாட்டும், தேர்ந்துசெய் வஃதே முறை" (குறள். 541) என்பதனாலறிக. அரசு என்பதற்கு, "வேந்து பகைதணிக" என்புழி வேந்தென்பதற் குரைத்ததனை யுரைத்துக் கொள்க. களவு, பிறர்க்குரிய தொன்றனை வஞ்சத்தாற் கொள்ளக் கருதுதல். மாமரக் கிளவி, "குறியதன் முன்னரு மோரெழுத்து

மொழிக்கு மறியத் தோன்றும் அகரக் கிளவி" (தொல்காப். எழுத். 226) என்றதனால் அகரம்பெற்று, "அத்தி னகரம் அகரமுனை யில்லை" (தொல். எழுத். 126) என்றதனால் அகரம் கெட்டு, "மாஅத்து" என நின்றது. சினை, ஈண்டுத் தளிர் மேற்று. "அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப், பொதும்பு" (நற். 243) என்றார் பிறரும். சூள், வன்புறை யால் தெய்வத்தை முன்னிறுத்து ஆணையிட்டுக்கூறல்: "நாடன், அணங்குடை யருஞ்சூள் தருகுவன்" (நற். 386) என்றும், "கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக், கடுஞ் சூள் தருகுவன்" (அகம். 110) என்றும் வருவன காண்க. "நிற்றுறந் தமைகுவ னாயின் எற்றுறந்(து), இரவலர் வாரா வைகல், பலவா குகயான் செலவுறுதகவே" (குறுந். 137) என்பது போல்வனவும் அச்சூளுறவின் பாற்படும்.

"அருந்திற லரசர் முறைசெயி னல்லது, பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது"(சிலப். 28 : 207-8) ஆகலின், அரசுமுறை செய்க என்றும், முறை செய்தற்குரிய ஒள்ளிய அறிவு, களவினால் மழுங்கி, பொய் கொலைகட்கு ஏதுவாய்த் தீமை பயத்தலின், களவில் லாகுக என்றும் வேட் டாள் என்றாள். "களவென்னும் காரறி வாண்மை" (குறள். 287) என்பதனால், அறிவு அறியாமையாதல் காண்க. இனி, களவு உளதாயவழி, பொய்யும் கொலையும் மிக்கு அரசு முறை கோடுதற்கு ஏதுவாமாகலின், "களவில் லாகுக" என வேட்டாள் எனினுமாம். "அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்" (பெரும் பாண். 39-41) எனக் களவின்மை நாட்டுக்கு அணியாகக் கூறப்படுமாறு காண்க. களவில்லாகுக எனப் பொதுப்படக் கூறினமையின், அன்பினைந்திணைக் களவும் பலவகையான இடையீடுகளால் அழிவில் கூட்டத்து இன்பநுகர்ச்சியின்றித் தலைமக்கட்கு அசைவு பிறப்பித்தலின், அஃதுமுட்படக் கூறி னாள் என்றும் கூறுவர். களவின்கண் நிகழும் இடையீடுகள் தலைமக்களிடை எழும் இன்பத்துக்கு ஆக்கமாவன வாகலினு

லும், "கற்பெனப் படுவது களவின் வழித்தே" (இறை. அ. பொ. 15) என்புழி, இஃது "உலகக் களவன்று" என்றும், நன்மை பயக்கும் களவென்றும் நக்கீரனார் கூறுமாற்றாலும் அது பொருளன்மை யறிக. அரசுமுறை செய்க எனவே, "ஆள்பவர் கலக்குற அலைபெற்று" (கலி. 5) முறை தப்பிய நாட்டினை, அது பிறழாமைக் காத்தற்குத் தலைவன் பிரிந்தமை கொள்க. "இழைத்தது பிழையாதாகல் வேண்டியும், இழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே" (தொல். பொ. 28) என்பர் ஆசிரியர். களவின்கண், நீ பிரிந்தொழுகிய ஞான்றெல்லாம், யாம் குறிப்பினாலும் வெளிப்படையாலும் வரைவுகடாவியும் நீ அக்களவே விரும்பித் தாழ்த்தவிடத்து, தலைமகள் எய்திய வேறுபாடு கண்டு, நீ செய்த சூளுறவினை மறந்தனைகொல்லோவென அஞ்சினேமாகலின், சூளிவண் வாய்ப்பதாக வென வேட்டேம் என்றாள். மெய்ப்பாடும் பயனு மவை. (அ)

9\. வாழி யாதன் வாழி யவினி
நன்றுபெரிது சிறக்க தீதில் லாகுக
எனவேட் டோளே யாயே; யாமே
கயலார் நாரை போர்விற் சேக்கும்
தண்டுறை யூரன் கேண்மை
அம்பலா கற்க வெனவேட் டேமே.

இதுவுமது.

ப.—ரை :— இன்பம் நுகர்ந்தவன் செல்வமனைக் கண்ணே வைத்த வண்ணம், வரையுந் துணையும், அவன் கேண்மை அம்பலாகாதொழிக என விரும்பினேம் யாங்கள் என்பது.

பு.—ரை :— நின்னை யெதிர்ந்தபொழுதே வரைந்தா யெனக்கொண்டு தலைமகள் இல்லறமே நினைந்து, ஆதனவினி வாழ்க என்றும், நன்று மிகவும் பெருகுக என்றும், தீது இல்லையாகுக என்றும் வேட்டொழுகினாள்; கயல்மீனை யுண்ட

நாரை நெற்போர்வின்கண் தங்கும் தண்ணிய துறையினை யுடைய வூரன் நட்பு அம்பலாகா தொழிக என வேட்டேம் யாங்கள் எ. று.

நன்று, இன்பம் பயக்கும் நல்வினை. தீது, துன்பம் பயக்கும் வினை. போர்வு, வைக்கோற்போர். "கயலார் நாரை போர்விற் சேக்கும்" (புறம். 24) என்றும், "பொய்கை நாரை போர்விற் சேக்கும் நெய்தலங் கழனி" (புறம். 209) என்றும் பிறரும் கூறுவர். கேண்மை, கேளாந்தன்மை. அம்பல், "சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வது" என்பர் நக்கீரர். *

வாழ்க்கையின் பயன் இன்பநுகர்ச்சியன்றிப் பிறிதின்மையின், நன்று பெரிது சிறக்க எனவும், தீதுளதாய வழிப் பாவமும் பழியும் எய்தி இருமையும் கெடுத்தலின், தீதில்லாகுக எனவும் வேட்டாள் என்றாள். "தீதுசேணிகந்து நன்றுமிகப் புரிந்து" (பதிற். 22) என்றார் பிறரும். தம்மனத்து ஒரு கோட்டமுடையார் அப்பெற்றியே கருதுவது உலகத்துத் தன்மை யாகலின், வேறுநின்று தம் கருமம் உசாவுவாரைத் தன் கருமம் உணர்வாராக வுணர்ந்து இவ்வொழுக்கம் இடையீடுபடுமெனை அஞ்சினாளாயினும் வரைவு நீட்டித்துக் களவு வெளிப்படுத்தற்குரிய நிமித்தமாகிய தலைவனாகலின், அம்பலாகற்க என வேட்டேம் என்றாள். "அம்பலுமலரும் களவு வெளிப்படுத்தலின், அங்கதன் முதல்வன் கிழவனாகும்" (தொல். பொ. 139) என்பது களவியல்.

---

* "அம்ப லென்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வதாயிற்று; இன்னதின்கண்ண தென்பது அயல் அறியலாகா தென்பது. அலரென்பது இன்னானோடு இன்னாளிடை அதுபோலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலரென்பது அப் பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை என வேற்றுமை சொல்லப்பட்டதாம்"—(இ. அ. பொ. 22. உரை.)

இஃது ஒருவாற்ருன் ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணும் பகுதியாமெனவுணர்க. வேறன்மையின், தோழியிடைத்தோன்றிற்று.

தலைவியின் நலனுண்டு அவளை யுடனே வரைந்துகொள்ள நினையாது வரை விடைவைத்துப் பிரிந்து தன்மனைக் கண்ணே தங்கினுனெனத் தான் அக்காலத்துக் கருதியது தோன்ற, "கயலார் நாரை போர்விற் சேக்கும்" என உள்ளுறுத் துரைத்தாள். மெய்ப்பாடும் பயனு மவை. (௯)

10. வாழி யாதன் வாழி யவினி
மாரி வாய்க்க வளநனி சிறக்க
எனவேட் டோளே யாயே; யாமே
பூத்த மாஅத்துப் புலாலஞ் சிறுமீன்
தண்டுறை யூரன் றன்னொடு
கொண்டனன் செல்க வெனவேட் டேமே.

இதுவுமது.

ப.—ரை :—இவள் நின்னை எதிர்ப்பட்டவன்றே வரைந்தாயெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகினுள்; யாங்கள் அவன் வரைந்துகொள்ள நினையானுயின், பூத்த மாவினையும் புலாலஞ்சிறுமீனையுமுடைய ஊரனுதலால், அதற்கேற்ப, எம்மூர்க்கண் அறத்தொடுநிலை வகையால் கற்புடைமையும், எதிர்ப்பாட்டினுல் அலரும் கிளைப்ப வாயினும் உடன்கொண்டு செல்வானுக என விரும்பினேம் என்பது.

பு.—ரை :— இவள் நின்னை யெதிர்ப்பட்டஞான்றே வரைந்தாய் எனவுட்கொண்டு ஆதனவினி வாழ்கவென்றும், மழை தப்பாது பொழிக என்றும், வளங்கள் மிகவுண்டாகுக என்றும் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி யொழுகினளாக, யாம் பூத்துமணங்கமழும் மாவினையும் புலால்நாறும் மீனினையுமுடைய குளிர்ந்த துறையினையுடைய வூரன் இவளைக்

தன்னுடன் கொண்டு செல்வானாக என வேட்டொழுகினேம் எ. று.

மாஅத்து என்புழி அத்து அல்வழிக்கண் வந்தது. புலால் நாறும் மீன்கூறவே, மா மணங்கமழ்தல் கூறப்பட்டது, வளம், செல்வம்; "பெற்ற பெருவளம் பெறுஅர்க்கறிவுறீச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" (தொல். பொ. 91) என்புழிப்போல.

அறமுதல் மூன்றும் பயக்கும் சிறப்புடைமையின், மாரி வாய்க்க என்றும், அது வாய்த்தவழி இடையீடின்றிப் பெருகி இன்பம் பெருக்குமுகத்தால் இல்லறத்திற்கு ஏற்றம் பயத்தலின், வளம் நனிசிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள். இவனை வரைந்துகொள்ள நினையாது நீ களவே விரும்பி யொழுகினமையின், அறத்தொடுநிலையால் கற்புடைமையும், எதிர்ப்பாட்டினால் அலரும் கிளைத்து வருத்தமுறுவிப்பினும் உறுக எனத் துணிந்தேம் என்பாள், தன்னொடு கொண்டனன் செல்க என வேட்டேம் என்றாள். இஃது அக்காலத்துத் தலைவரு விழும நிலையெடுத் துரைத்தலாம். அறத்தொடுநிலை யாவது, "அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லி நிற்றல். அல்லதூஉம், பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின்றலை நிற்றல் என்பதூஉமாம்" என்பர் நக்கீரனார். (இ. அ. பொ. 29. உரை.)

தலைமகன், வரைவு நினையாமையால், காப்புமிகுதி முதலியன நிகழ்தல் கண்டு தலைமகள் மேனி வேறு பட்டாளாகத் தோழி அறத்தொடு நிற்பள். "காப்புக்கை மிக்குக் காமம் பெருகினும், நொதுமலர் வரையும் பருவ மாயினும், வரைவெதிர் கொள்ளார் தமரவண் மறுப்பினும், அவனூறஞ்சுங் காலமாயினும், அந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ, அறத்தொடு நிற்றல் தோழிக் குரித்தே" (இ. அ. பொ. 29.) என்ப இறையனார். மெய்ப்பாடும் பயனு மவை. (ய)

## 2. வேழப்பத்து.

இது, மருதநிலத்துச் சிறப்புடைக் கருப்பொருளாய், வரும்பாட்டுக்கள் பத்திலும் பயின்றுவருதலின், இப்பெயரை யுடையதாயிற்று.

வேழம், வேழக்கரும்பு என்றும், கொறுக் கச்சி யென்றும் வழங்கும். "வேழப் பழனத்து நூழிலாட் டோதை" எனவரும் மதுரைக்காஞ்சி யடிக்கு (257), ஆசிரியர், நச்சினார்க்கினியரும் வேழம் என்பதற்குக் "கொறுக் கச்சி" யென்றே உரைகூறினர். இக்காலத்து இதனைக் கோறுக்கந்தட்டு என வழங்குவர். "இலையே முறியே" (தொல். பொ. 642) என்னும் மரபியற் சூத்திரவுரையுள், ஆசிரியர், பேராசிரியர், "புறக்கா லாம்பல் முதலியனவும் புல் லெனப்பட்டு, அடங்கி, அவற்றின் பெயர்பெறும்" என்றலினும், "தூம்புடைத் திரள்கா லாம்பல்" (குறுந். 178) என்றாற்போல, "ஒங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்" (ஐங். 16) என்று[*] இந்நூற்கண் வழங்கப்படுதலினும், இதுவும் புல் என்னும் வகையில் அடங்கும் என அறிக.

இப்புல்வகை மிகப் பரந்துபட்ட தாவரவகை; இதன் இயல்பினை விரித்துக்கூறின், இந்நூல் விரிவதற்கஞ்சி, மேனாட்டறிஞர் கூறிய இரண்டொரு கருத்துக்களை ஈண்டுக் கூறுதும்.

கரும்பும் மூங்கிலும் புல் வகையில் அடங்கும்; வேழ மும் புல்லே என்று தாவரநூலார் கூறுவர். புல்வகையுள் மூவாயிரம், நாலாயிரம் வகைகள் உண்டு எனவும், பிரிட்டிஷ் தீவுகளில்மட்டும் நூறுவகைப் புல்லும், அமரிக்காவில் என் ணூறுவகைப் புல்லும் உள எனவும் தாவர நூல்வல்லார்

[*] European Bamboo Reed. *Arundo donax.*

கூறுப. அமரிக்கநாட்டுப் புலவரொருவர் புல்வகை இயற்கையன்னை யருளும் அருள்வகை என்றும், உலகில் காடுகளும், விளையுளும், நறுமலரும், பிறவும் அழியவும், இப் புல்வகை மட்டில் அழியா என்றும், இவையே நாகரிகவளர்ச்சிக்குத் துணைபுரிவன என்றும் கூறினர்*.

இனி, "கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்" என்றும், "பரியுடை நன்மான் பொங்குளை யன்ன, அடைகரை வேழம் வெண்பூப் பகரும்" என்றும், "புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ, விசும்பாடு குருகிற் றோன்றும்" என்றும் இந்நூல் கூறுதலால், வேழத்தின்பூ வெண்ணிறத்தது

---

* "Bamboos and Sugar Cane belong to the great family of grass." "Some of the reeds (வேழம், விடுகு etc) belong to this family." "The grass form a big family, for there are between three and four thousand different species and more than a hundred of these grow wild in the British Isles and eight hundred or more are found in the United States of America."

"The grasses are a gracious race, the true friend of man; and they have been great agents in the spread of civilization, for they have enabled man to grow large quantity of food for the support of centralised population such as are found in big cities and towns and they provide pastures for his flocks and herds. From the earliest times, grass has been the basis of live-stock production, but it has been more than a useful friend to man; it has clothed the earth with beauty and has been a symbol of peace and quiet restfulness." "An American writer has well said, 'Grass is the forgiveness of Nature—her constant benediction........ Forests decay, harvests perish, flowers vanish, but grass is immortal." —*Book of Knowledge.*

என்பதும், கரும்பின்து பூவை நிகர்க்கும் என்பதும், உய ரத்தே விரிந்து தோன்றும் இப் பூவின்தோற்றம் குதிரையின் உளைமயிரினையும் விசும்பூடு பறக்கும் குருகினையும் போன்று விளங்கும் என்பதும் பெறப்படும். பிற்காலச் சான்றோர், இந் நெறியேபற்றித் தம் புலமைநலம் தோன்றக் கவியோவியம் தீட்டுவர். தணிகைப் புராணம் பாடிய ஆசிரியர் கச்சியப்ப முனிவர், "காலிரு மருங்கு நீண்ட கரைக்கலித் தெழுந்த வேழம், வாலிய பூத்து நிற்கும் வன்னம்செங் களத்துப் போர்வேட், டாலிய மன்னர் சேனை யணிவகுத் தூடற்ற வேந் தும், வேலிருங் கூட்ட மென்ன விளங்குவ இடங்கள் தோறும்" (திருநாடு. 77) என்றனர்.

இனி, இது, "காம்புகண் டன்ன தூம்புடை வேழம்" எனப்படுதலின், தூம்புடைமைபற்றி, இதன்புழையில் உழு வர்மகளிர் அஞ்சனம் பெய்துவைப்ப ரென்றும், மூங்கில் போல இவையும் வீடுகட்டு வரிச்சறற்பிடித்தற்குப் பயன்படு மென்றும் சான்றோர் கூறுவர். இதனை, "ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்காற், சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய் யும், பூக்கஞ ஊரன்" (ஐங். 16) என்றும், "வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத், தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை" (பெரும்பாண். 263-5.) என்றும் வரு வன காண்க. "புனலாடு மகளிர்க்குப் புணர்துணை யுதவும் வேழம்" என்று இந்நூல் கூறுதல் போல, ஆசிரியர், பரண ரும், "வேழ வெண்புணை தழீஇ...............நெருந லாடினை புனலே" (அகம். 6) என்று கூறினர். இதனால், நீராடுவார்க்கு, வேழம், புணையமைத்துக் கோடற்குப் பயன்படு மென்ப தறிக.

11. மனைநடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே ;
அல்ல னென்னுமென் றடமென் றோளே.

பாணன் முதலாயினோர்க்குத் தலைமகனது கொடுமை கூறி, வாயின்மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள் கூறியது. "தலைவன் எவ்வாறு தப்பியொழுகினும் அவன் கொடுமை நின்னாற் புலப்படுதல்தகாது," என்று கழறிய பாங்கிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

ப.—ரை :— *மனைக்கண் வயலை, புறத்துவேழம் சுற்று மூரன் என்றது, மனைமனைக்கண்ணே வைதனாயினும் பரத்தையர்திறமே சூழ்வா னென்பதாம்.*

பு.—ரை :— *மனைக்கண் நட்ட வயலைக்கொடி சென்று வேழத்தைச் சுற்றிவளரும் துறைபொருந்திய ஊரனது கொடுமைக்கு நாணி, நாம் அவனை நல்லன் என்று கூறினேமாயினும், என்னுடைய பெரியவாகிய மெல்லிய தோள்கள், ஆற்றாது, தம் மெலிவால் அவன் நல்லனல்லன் எனக் காட்டி நின்றன, காண் எ. று.*

*வயலை, ஒருவகைக்கொடி. இதனைப் பசலைக்கொடியென்றும், இதன் தழையை வசலைக்கீரை யென்றும் கூறுப. இது, வீடுகளில் நட்டு, அமைக்கப்பெற்ற பந்தரில் ஏறிப் படருமாறு விடப்பெறும்; மனைப்புறத்து நிற்கும் மரங்களிற் சென்று படருமாறு விடப்பெறுதலு முண்டு. மனைநடு வயலை மானிவர் கொழுங்கொடி (அகம். 176) என்றும், இல்லெழு வயலை (நற். 179) என்றும், "குடையடை நீரின் மடையினனெடுத்த, பந்தர் வயலைப் பந்தெறிந் தாடி" (அகம். 275) என்றும் சான்றோர் கூறுமாற்றாலறிக. மேலும், இதன் கொடி செந்நிறத்த தாதல்பற்றி, "வயலைச் செங்கொடி" "வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச், செவ்விரல் சிவந்த" என இந்நூலுள்ளும் (ஐங். 25, 52) பிறண்டும் கூறப்படும். வயலைக்கொடி மாலை தொடுத்தற்கும் பயன்படும் என்பது இக்காட்டியவாற்றானும், "வயலையம் பிணையல் வார்ந்த கவாஅற், றிதலை யல்குற் குறுமகள்" (அகம். 189) என்பதனாலும் உணரப்படும். அன்றியும், இக்கொடியை மகளிரே பேணி*

வளர்ப்பர் என்பது, "தெற்றி யுலறினும் வயலை வாடினும், நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும், நின்னினு மடவள் நனிநின் னயந்த அன்னை" (அகம். 259) எனவும்; "வரியணி பந்தும் வாடிய வயலையும், மயிலடி யன்ன மாக்குரல் நொச்சியும்" (நற். 305) எனவும், "வயலை! நாடொறும், ............... ஆரநீ ரூட்டிப் புரப்போர், யார்மற்றுப் பெருகுவை யளியை நீயே" (அகம். 383) எனவும் உடன்போக்கின்கண் தோழியரும் தாயரும் புலம்பிக் கூறுவனவற்றால் நன்கு தெளியப்படும். கொடுமை, ஈண்டுக் கோடுந்தன்மை; கோடியகோல் கொடுங்கோல் எனப்படுதல் போல. உயிரோரன்ன தலைமகட்கே தன் தலையளி யுரித்தென்று கருதிச் செய்யும் செந்நெறியினின்றும் நீங்கி, பரத்தையர்க்குச் செய்து புறத்தொழுகுதல் கோடியநெறி யாதலின், அந்நெறியிற் செய்வதனைக் கொடுமை என்றார் எனவுணர்க. பிறுண்டும் இதுவே உரைத்துக் கொள்க. கொடுமை யென்புழிப் பொருட்டுப்பொருளதாகிய குவ்வுருபு தொக்கது. என்றும், பன்மைத் தன்மை வினைமுற்று. ஆயினும் என்பது எஞ்சி நின்றது. யாம் - என்றது தோழியையும் உளப்படுத்திற்று. என்னும், படர்க்கை வினைமுற்று. தோளைப் பிரித்து நிறுத்திக் கூறலின், ஏகாரம் பிரிநிலை. சொல்லா மரபினவாகிய தோள்களைச் சொல்லின வென்றல், "அவையல பிறவும் நுதலிய நெறியால், சொல்லுந போலவும் கேட்குந போலவும், சொல்லியாங்கமையு மென்மனார் புலவர்" (தொல். பொ. 513) என்பதனா லமையும். மகளிர்க்குத் தோள் பெருத்தல் இலக்கணமாதலின், "தடமென்றோள்" எனப்பட்டது. "அகலல்குல் தோள் கண்ணென மூவழிப் பெருகி" (கலி. 108) என்று பிறரும் கூறுப.

புறத்தொழுக்கத்தின்கண் தலைமகள், பரத்தையர் என்ற இவரிடத்து ஊடல்தோன்றின், தலைமகன், வாயில் வேண்டிவிடுதலும், அவர் வாயில்நேர்தலும், மறுத்தலும் மருதத்துக்கே பெரும்பான்மையும் உரிய. "பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே, நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்" (தொல். பொ. 224) என ஆசிரியர் கூறுதல் காண்க.

தலைமகனது ஒழுக்கத்தில் தவறு நிகழ்ந்துழி, அதனை மறைக்கும் கடப்பாடு தலைமகட்கு உரித்தாதலாலும், அதனை மறந்து, அவர்தாமே தலைவரை எள்ளுவா ராயின், அஃது அவர்க்கே இளிவரவைப் பயக்குமாதலாலும், ஊரன்கொடுமை நாணி, நல்லனென்றும் யாமே என்று கூறினாள். "அவன் சோர்பு காத்தல் கடன்" (தொல். பொ. 174) என்றும், "எள்ளி னிளிவாமென் றெண்ணி அவர்திறம், உள்ளு முயிர்க்காத னெஞ்சு" (குறள். 1298) என்றும் ஆசிரியன்மார் கூறுதல் காண்க. யாமே என்றது ஆற்றலால் தலைமகனது கொடுமைமிகுதி யுணர நின்றது. அக்கொடுமையால் தான் எய்தும் வேறுபாடு கண்டு ஆற்றாராய்த் தோழியர் அவனது சோர்பு கூறி எள்ளினும், அக்குற்றம் தன்னையே சாரும் சார்ச்சிநெறி கண்டு, நல்லன் என்றும் யாமே என உளப்படுத்தாள் என அறிக. தடமென்றோள் என்றது, பெருமைய வாயினும் அவன் கொடுமையை யாற்றியிருக்கும் வன்மைய வல்ல என்னும் ஏதுவை யுட்கொண்டது. தொடிநெகிழ் தோள் என்னாது, பண்டைவனப்பே சுட்டித் தடமென் றோள் என்றமையின், தொடி நெகிழ்தற் கேதுவாகிய அவன் கொடுமைக்கு நாணி, அதனை யறவேமறந்து, அவனது நன்மைப்பண்பே நெஞ்சில் நிலவப்பண்ணிய அவளது பெண்மைச்சிறப்புக் கூறியவாறெனை அறிக. "அடங்கா வொழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை, யடங்கக் காட்டுதற்" (தொல். பொ. 150) பொருட்கண் நெருங்கிக் கூறியார்க்கு அவர் அது கூறுதற்குரிய குற்றம் தோள்மேலதாம் என்பாள், அல்ல னேன்னுமேன் தடமென் றோளே என்று கூறினாள்.

மனைக்கண் நட்ட வயலை, புறத்தேநிற்கும் வேழத்தைச் சுற்றும் ஊரன் என்றதனால், தலைமகன் மனைமனைவைகியஞான்றும் பரத்தையர்திறமே சூழ்வான் என உள்ளுறுத் துரைத்தமையின், கொடுமைத்திறத்தை வெளிப்படக் கூறாது கொடுமை நாணி எனச் சுருங்கிய வாய்பாட்டாற் கூறினாள். கொடுமை அவற்கு மனைமனைக்கண்ணேயே

தோன்றிற்றென்பதனை யறிந்துவைத்து, பின்னர் அதுகாரண மாக வேறுபடுதல் அறிந்தார் செயலன்மையின், நாணி என்றாள். எனவே, தான் நாணியவாறே தோள்களும் நாணி யமையாது தொடி நெகிழ்ந்து மெலிந்தன என்பதனைக் குறிப்பு வாய்பாட்டாற் கூறினாள். இஃது அழிவில் கூட்டத் தவன்பிரி வாற்றாமை. ஏனை மெய்ப்பாடு: மருட்கை. பயன்; வாயில் நேர்தல். இவ்வுரை, துறையிரண்டற்கும் ஒக்கும்.

மனைநேடு வயலை என்பது பாடமாயின், மனையில் வளரும் நீண்ட வயலைக்கொடி எனவுரைக்க. அதனால் உள்ளுறைப்பொருள் சிறவாமையறிக.

இனி, இதன்கண் மருதமாகிய முதற்பொருளும், வேழமும் வயலையுமாகிய கருப்பொருளும், வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகள் வாயில்நேருங் கருத்தினளாய்க் கூறும் உரிப்பொருளுமாகிய மூன்றும் கண்டு, ஆசிரியர் நச்சினார்க் கினியர், "இதனுள், முதல், கரு, உரி என்ற மூன்றும் கூறலின், நாடகவழக்கும்*, தலைமகனைத் தலைவி கொடுமை கூறல் உலகியலாகலின், உலகியல்வழக்கும் உடன்கூறிற்று" (தொல். பொ. 53. உரை.) என்பர். "அவனறி வாற்ற வறியு மாகலின்," (தொல். பொ. 145.) என்றசூத்திரத்து, "கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்" என்பதற்கு உதாரணமாகக் கூறுவர் ஆசிரியர் இளம்பூரணர். மற்று, இப்பாட்டு, அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண் நிகழும் கூற்றாகாது, தலைமகன் கொடுமைக்கு அமைதி யுணர்ந்து ஒருமருங்கு அமைதலும், அவன்பிரிவாற்றாமையைத் தோள்மே லேற்றி அமையா மைக்கு ஏதுகாட்டுதலும் சுட்டிநிற்றலின், அவர்கூறுவது

---

* நாடகவழக்காவது, "உலகத் தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக்கருதி அந்நல்லோர்க்குள்ளவற்றிற் சிறிது இல்லனவும் (பெய்து புனைந்துரைவகையால் சான்றோர்) கூறுதல்." நச்சி னார்க்கினியம் (தொல். பொ. 53. உரை.)

பாணன் முதலாயினோர்க்குத் தலைமகனது கொடுமை கூறி, வாயின்மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள் கூறியது. "தலைவன் எவ்வாறு தப்பியொழுகினும் அவன் கொடுமை நின்னாற் புலப்படுதல்தகாது," என்று கழறிய பாங்கிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

ப.-ரை:— *மனைக்கண் வயலை, புறத்துவேழம் சுற்று மூரன் என்றது, மனைமனைக்கண்ணே வைதலானன்றும் பரத்தையர்திறமே சூழ்வானென்பதாம்.*

பு.-ரை:— *மனைக்கண் நட்ட வயலைக்கொடி சென்று வேழத்தைச் சுற்றிவளரும் துறைபொருந்திய ஊரனது கொடுமைக்கு நாணி, நாம் அவனை நல்லன் என்று கூறினேமாயினும், என்னுடைய பெரியவாகிய மெல்லிய தோள்கள், ஆற்றாது, தம் மெலிவால் அவன் நல்லனல்லன் எனக் காட்டி நின்றன, காண் எ. று.*

வயலை, ஒருவகைக்கொடி. இதனைப் பசலைக்கொடியென்றும், இதன் தழையை வசலைக்கீரையென்றும் கூறுப. இது, வீடுகளில் நட்டு, அமைக்கப்பெற்ற பந்தரில் ஏறிப் படருமாறு விடப்பெறும்; மனைப்புறத்து நிற்கும் மரங்களிற் சென்று படருமாறு விடப்பெறுதலு முண்டு. மனைநடு வயலை மரனிவர் கொழுங்கொடி (அகம். 176) என்றும், இல்லெழு வயலை (நற். 179) என்றும், "குடையடை நீரின் மடையினெடுத்த, பந்தர் வயலைப் பந்தெறிந் தாடி" (அகம். 275) என்றும் சான்றோர் கூறுமாற்றாலறிக. மேலும், இதன் கொடி செந்நிறத்த தாதல்பற்றி, "வயலைச் செங்கொடி" "வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச், செவ்விரல் சிவந்த" என இந்நூலுள்ளும் (ஐங். 25, 52) பிறாண்டும் கூறப்படும். வயலைக்கொடி மாலை தொடுத்தற்கும் பயன்படும் என்பது இக் காட்டியவாற்றானும், "வயலையம் பிணையல் வார்ந்த கவாஅற், றிதலை யல்குற் குறுமகள்" (அகம். 189) என்பதனானும் உணரப்படும். அன்றியும், இக்கொடியை மகளிரே பேணி

வளர்ப்பர் என்பது, "தெற்றி யுலறினும் வயலை வாடினும், நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும், நின்னின்று மடவள் நனிநின் னயந்த அன்னை" (அகம். 259) எனவும், "வரியணி பந்தும் வாடிய வயலையும், மயிலடி யன்ன மாக்குரல் நொச்சியும்" (நற். 305) எனவும், "வயலை! நாடொறும், ................ ஆர்நீ ரூட்டிப் புரப்போர், யார்மற்றுப் பெருகுவை யளியை நீயே" (அகம். 383) எனவும் உடன்போக்கின்கண் தோழியரும் தாயரும் புலம்பிக் கூறுவனவற்றால் நன்கு தெளியப்படும். கொடுமை, ஈண்டுக் கோடுந்தன்மை; கோடியகோல் கொடுங்கோல் எனப்படுதல் போல. உயிரோரன்ன தலைமகட்கே தன் தலையளி யுரித்தென்று கருதிச் செய்யும் செந்நெறியினின்றும் நீங்கி, பரத்தையர்க்குச் செய்து புறத்தொழுகுதல் கோடியநெறி யாதலின், அந்நெறியிற் செய்வதனைக் கொடுமை என்றார் எனவுணர்க. பிறாண்டும் இதுவே உரைத்துக்கொள்க. கொடுமை யென்புழிப் பொருட்டுப்பொருளதாகிய குவ்வுருபு தொக்கது. என்றும், பன்மைத் தன்மை வினைமுற்று. ஆயினும் என்பது எஞ்சி நின்றது. யாம்-என்றது தோழியையும் உளப்படுத்திற்று. என்னும், படர்க்கை வினைமுற்று. தோளைப் பிரித்து நிறுத்திக் கூறலின், ஏகாரம் பிரிநிலை. சொல்லா மரபினவாகிய தோள்களைச் சொல்லின வென்றல், "அவையல பிறவும் நுதலிய நெறியால், சொல்லுந போலவும் கேட்குந போலவும், சொல்லியாங்கமையு மென்மனார் புலவர்" (தொல். பொ. 513) என்பதனா லமையும். மகளிர்க்குத் தோள் பெருத்தல் இலக்கணமாதலின், "தடமென்றோள்" எனப்பட்டது. "அகலல்குல் தோள் கண்ணென மூவழிப் பெருகி" (கலி. 108) என்று பிறரும் கூறுப.

புறத்தொழுக்கத்தின்கண் தலைமகள், பரத்தையர் என்ற இவரிடத்து ஊடல்தோன்றின், தலைமகன், வாயில் வேண்டிவிடுதலும், அவர் வாயில்நேர்தலும், மறுத்தலும் மருதத்துக்கே பெரும்பான்மையும் உரிய. "பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே, நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்" (தொல். பொ. 224) என ஆசிரியர் கூறுதல் காண்க.

தலைமகனது ஒழுக்கத்தில் தவறு நிகழ்ந்துழி, அதனை மறைக்கும் கடப்பாடு தலைமகட்கு உரித்தாதலாலும், அதனை மறந்து, அவர்தாமே தலைவரை எள்ளுவா ராயின், அஃது அவர்க்கே இளிவரவைப் பயக்குமாதலாலும், ஊரன்கொடுமை நாணி, நல்லனென்றும் யாமே என்று கூறினாள். "அவன் சோர்பு காத்தல் கடன்" (தொல். பொ. 174) என்றும், "எள்ளி னிளிவாமென் றெண்ணி அவர்திறம், உள்ளு முயிர்க்காத னெஞ்சு" (குறள். 1298) என்றும் ஆசிரியன்மார் கூறுதல் காண்க. யாமே என்றது ஆற்றலால் தலைமகனது கொடுமைமிகுதி யுணர நின்றது. அக்கொடுமையால் தான் எய்தும் வேறுபாடு கண்டு ஆற்றாராய்த் தோழியர் அவனது சோர்பு கூறி எள்ளினும், அக்குற்றம் தன்னையே சாரும் சார்ச்சிநெறி கண்டு, நல்லன் என்றும் யாமே என உளப்படுத்தாள் என அறிக. தடமென்றோள் என்றது, பெருமைய வாயினும் அவன் கொடுமையை யாற்றியிருக்கும் வன்மைய வல்ல என்னும் ஏதுவை யுட்கொண்டது. தொடிநெகிழ் தோள் என்னாது, பண்டைவனப்பே சுட்டித் தடமென் றோள் என்றமையின், தொடி நெகிழ்தற் கேதுவாகிய அவன் கொடுமைக்கு நாணி, அதனை யறவேமறந்து, அவனது நன்மைப்பண்பே நெஞ்சில் நிலவப்பண்ணிய அவளது பெண்மைச்சிறப்புக் கூறியவாறெனை அறிக. "அடங்கா வொழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை, யடங்கக் காட்டுதற்" (தொல். பொ. 150) பொருட்கண் நெருங்கிக் கூறியார்க்கு அவர் அது கூறுதற்குரிய குற்றம் தோள்மேலதாம் என்பாள், அல்ல னேன்னுமென் தடமென் றோளே என்று கூறினாள்.

மனைக்கண் நட்ட வயலை, புறத்தோகிற்கும் வேழத்தைச் சுற்றும் ஊரன் என்றதனால், தலைமகன் மணமனை வைகியஞான்றும் பரத்தையர்திறமே சூழ்வான் என உள்ளுறுத் துரைத்தமையின், கொடுமைத்திறத்தை வெளிப்படக் கூறாது கொடுமை நாணி எனச் சுருங்கிய வாய்பாட்டாற் கூறினாள். கொடுமை அவற்கு மணமனைக்கண்ணேயே

தோன்றிற்றென்பதனை யறிந்துவைத்து, பின்னர் அதுகாரண மாக வேறுபடுதல் அறிந்தார் செயலன்மையின், நாணி என்றாள். எனவே, தான் நாணியவாறே தோள்களும் நாணி யமையாது தொடி நெகிழ்ந்து மெலிந்தன என்பதனைக் குறிப்பு வாய்பாட்டாற் கூறினாள். இந்த அழிவில் கூட்டத் தவன்பிரி வாற்றாமை. ஏனை மெய்ப்பாடு: மருட்கை. பயன்; வாயில் நேர்தல். இவ்வுரை, துறையிரண்டற்கும் ஒக்கும்.

மனைநெடு வயலை என்பது பாடமாயின், மனையில் வளரும் நீண்ட வயலைக்கொடி எனவுரைக்க. அதனால் உள் ளுறைப்பொருள் சிறவாமையறிக.

இனி, இதன்கண் மருதமாகிய முதற்பொருளும், வேழமும் வயலையுமாகிய கருப்பொருளும், வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகள் வாயில்நேருங் கருத்தினளாய்க் கூறும் உரிப்பொருளுமாகிய மூன்றும் கண்டு, ஆசிரியர் நச்சினார்க் கினியர், "இதனுள், முதல், கரு, உரி என்ற மூன்றும் கூறலின், நாடகவழக்கும்*, தலைமகனைத் தலைவி கொடுமை கூறல் உலகியலாகலின், உலகியல்வழக்கும் உடன்கூறிற்று" (தொல். பொ. 53. உரை.) என்பர். "அவனறி வாற்ற வறியு மாகலின்," (தொல். பொ. 145.) என்ற சூத்திரத்து, "கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்" என்பதற்கு உதாரணமாகக் கூறுவர் ஆசிரியர் இளம்பூரணர். மற்று, இப்பாட்டு, அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண் நிகழும் கூற்றாகாது, தலைமகன் கொடுமைக்கு அமைதி யுணர்ந்து ஒருமருங்கு அமைதலும், அவன்பிரிவாற்றாமையைத் தோள்மேலேற்றி அமையா மைக்கு ஏதுகாட்டுதலும் சுட்டிநிற்றலின், அவர்கூறுவது

---

* நாடகவழக்காவது, "உலகத் தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக்கருதி அந்நல்லோர்க்குள்ளவற்றிற் சிறிது இல்லனவும் (பொய்யு புனைந்துரைவகையால் சான்றோர்) கூறுதல்." நச்சி னார்க்கினியம் (தொல். பொ. 53. உரை.)

பொருந்தாமையறிக. அமைதற்கட் கூறிய வினைமுதலே அமையாமைக்குக் கூறப்படாமையின், அலமரலின்மையு மறிக. அமைதி, கழறிக் கூறும் பான்மையளாகிய பாங்கன் தலைமகனது காமநிலையுரைத்து நெருங்கியவழி, நல்ல னென்றும் யாமே என வாயில் நேர்தல். அமையாமை, அவனது பரத்தைமை மறுத்து, அல்ல னென்னும் என் தடமென் றோளே என உறுப்பின்மேல் வைத்துக் கூறுதல். "காமநிலை யுரைத்தலும்" (தொல். பொ. 177.) என்ற சூத்திரத்தால் பார்ப்பார்க் குரியவெனக் கூறியன, ஒப்பின்முடித்தல் என்பத னால் பாங்கற்கும் ஏற்பன கொள்ளப்படும் என்பவாகலின், காமநிலையுரைத்தல் பாங்கற்கும் அமையும் என அறிக. (கக)

12. கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகே ழூரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே ;
தோற்க தில்லவென் றடமென் றோளே.

உழையர் நெருங்கிக் கூறியதிறமும் தனது ஆற்றாமை யும் நினைந்து வாயில்நேரக் கருதிய தலைமகள், பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறு ளாய்க் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

ப.-ரை:— கரைமருங்கு நிற்கும் வேழம், வயலகத்து விளைக்கும் தீங்கரும்பு போலப் பொலியு மூரன் என்றது, பொது மகளிர்க்குக் குலமகளிரைப் போலச் சிறப்புச் செய்கிற்பான் எ. று.

பு.-ரை:— கரைக்கண் நின்ற வேழம் வயலகத்துக் கரும்பு போலப் பூக்கும் துறை பொருந்திய வூரனது கொடுமையினை யாம் பெரிதும் ஆற்றியிருப்பேமாக ; என் னுடைய பெருமையும் மென்மையுமுடைய தோள்கள் ஆற்று வாய் மெலிக ; தோலாவழி, எம்மைப் போல் ஆற்றியிராது வேறுபாடு மெய்க்கண் நிறுத்தித் துயர்செய்யும் எ. று.

முன்னர்த் துறை கூறுகின்றாராகலின், அதன் கரைக கண் நற்கும் வேழத்தைக் கரைசேர் வேழம் என்றார். வைய லகத் தென்பது அவாய்நிலை. இன்னுருபு, ஒப்புப்பொருட்டு. கெழுவென்னும் சாரியை "லனஎனவரும் புள்ளியிறுதிமுன்" (எழுத்து. இளம். 481.) வருமாயினும், அச்சூத்திரத்தின் கண், "அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி" என் புழி "மொழியிடைத் தோன்றி" என்ற மிகையால், பிற ஈற்றுமுன்னும் இச்சாரியை வருமென்றும், "அன்னமரபின்" என்றதனால், "சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுத லும், அதுகாரணமாக நிலைமொழியீறு திரிதலும், சாரியையது உகரக்கேடும், எகரநீட்சியும் கொள்க" என்றும் கூறுப வாக லின், ஐகாரவீற்றுத் துறையென்னும் பெயர்முன், வேற் றுமை குறித்த பொருண்மைக்கண், கெழுவென்சாரியை, கேழ் எனச் "செய்யுட் டொடர்வயின் மெய்பெறநின்று" கேழ் ஊரன் என முடிந்தவாறறிக. "திண்பெரும் பொய்கைத் துறைகேழூரன்" (அகம். 336) எனப் பிறரும் கூறுதல் காண்க. இனி, ஆசிரியர் அடியார்க்குநல்லார், "சாரியை யாவது சொல் தொடர்ந்துசெல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிதுபொருள் பயந்ததும், பய வாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிதுபொருள் பயப்ப நிற்பது; பொருந்துதல் என்னும் பொருண்மை சாரும்" (சிலப். பதிக. 61. உரை.) என்பர். எனவே, துறைகேழூரன் என்பது துறை பொருந்திய ஊரன் என்னும் பொருண்மைத் தென்பதாம். இனி வருமிடங்களிலும் இதுவே உரைத்துக் கொள்க. "நன்று பெரிதாகும்" (தொல். சொல். 343). இல் லென்னும் இடைச்சொல், "பிறிதவண் நிலையலும்" (தொல். சொல். 251.) என்பதனுல் இல்ல எனநின்றது. ஆற்றாமை பயக்கும் வருத்தத்தினை ஆற்றுதல் அதனை வேறலாகலின், ஆற்றுவாகிய தோள்களைத் தோற்கதில்ல என்றார். ஆற்றாமை யால் ஆற்றுமாறு விழைகின்று ளாகலின், ஆற்றகதில்ல என்புழித் தில்லைச்சொல் விழைவின்கண் வந்ததாயிற்று. "விழைவின் தில்லைத் தன்னிடத் தியலும்" (சொல். 260)

என்பது விதி. தோலாவழி என்பது முதலாயின ஒழிந்து நின்றமையின், தோற்கதில் என்புழித் இல்லைச்சொல் ஒழியிசைக்கண் வந்ததாம்.

தலைமகனது புறத்தொழுக்கத்தால் வேறுபட்டு ஆற்றுளாகிய தலைமகள் உழையர் ஆற்றுந்திறமாவன கூறத் தேறியிருந்தாள், பின்னும் புறத்தொழுக்கமே விரும்பி, பரத்தையர்க்குச் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறாது கழியவும் ஆற்றாளாயினமையின், நன்றுமாற்றுகதில் என்றும், ஆற்றுமிடத்தும் தோள்கள் ஆற்றாது, ஆற்றற்குத் துணியும் நெஞ்சொடு மாறுபட்டு மெலிதலின், தோற்கதில் என்றும் கூறினாள். தலைமகனைப் பிரியாவாறு பிணிக்கும் பெருமையுடையவாயினும் இதுபோது பிணித்தல் செய்யாது, தொடி நெகிழ்பு மெலியும் சிறப்பின்மை முடித்தற்குத் தடமென்றோள் என்றும் கூறினாள். இஃது உடம்புநனிசுருங்கல். "கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப், பகுதியி னீங்கிய தகுதிக் கண்ணும்" (தொல். பொ. இளம். 145.) என்பதனால், தலைமகள் அறத்தை விரும்பி ஆற்றுவாளாயினை ளென்பது, ஊரன் கொடுமை நன்றும் ஆற்றுகதில்ல யாமே என்பதனால் அறிக. தோற்க தில்லவென் தடமென்றோளே என்றதனால், "கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண்" (தொல். பொ. நச்சி. 147.) உறுப்பினை வேறுபடுத்துக் கூறினாளாம். ஆற்றற்கட் சென்ற நெஞ்சத்துள், அலமரல் தோன்றி, தோளை வேறுபிரித்துச் சிவந்துகூறுவித்தல் அறிக. "நாளும் நயந்தோர்ப் பிணித்தல் தேற்றா, வயங்குவினை வாளே ரெல்வளை நெகிழ்த்த, தோளே தோழி தவறுடையவ்வே" (அகம். 267) எனப் பிறண்டும் தலைவி தன்தோளை வேறு நிறுத்திச் சிவந்து கூறுமாறு காண்க.

கரைமருங்கு நின்ற வேழம் கரும்புபோலப் பூக்கும் என்றது, பொதுமகளிரும் குலமகளிர்போலச் சிறப்புப் பெறு

னின்றுனெனக் கருத்தழிந்து கூறியதற்குக் காரணம் குறித்த வாறு. இதனால் தலைமகள்பால் பொறாமை என்னும் மெய்ப் பாடு தோன்றிற்று. ஏனைமெய்ப்பாடு: இளிவாலைச் சார்ந்த பெருமிதம். பயன் : வாயில் நேர்தல்.

இனி, பேராசிரியர், பயவுவமப் போலிக்கு இதனை உதாரணமாகக் காட்டி, "இதனுள் தலைமகன் கொடுமை கூறியதல்லது அக்கொடுமைக் கேதுவாகிய தொன்றுவிளங்கக் கூறியதில வாயினும், இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்கும் எனவே, அவற்றிற்கும் இழிபு உயர்வாம் என்ப தொன்றில்லை; எல்லாரும் இன்பம் கோடற்குரியர் தலை மகற்கு என்றமையின், யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்த னம் என்றமையின் அவை கூறினு ளென்பது," (தொல்காப். பொ. 300. உரை.) என்பர்.

கொடுமை நாணி என்றும் பாடம் உண்டு. இஃது ஏடெழுதினோரால் முன்பாட்டை (ஐங். 11.) யெழுதிய நினை வினால் நேர்ந்த பிழையாகும் போலும். பேராசிரியர் உரைப் பதிப்பின்கண்ணும் இப்பாடமே காணப்பெறுகின்றமையின் இப்பிழை அவர்காலத்துக்கு முன்பே தோன்றிய தொன்மை யுடைமை யறிக. இனி, பிழையின்மை கருதாயின் ஊரன் கொடுமைக்கு நாணி யாம் ஆற்றுவேமாக; தோள்கள் ஆற் றாது மெலிக என்றுரைக்க. (உ)

13. பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரு
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே.

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், "அவன்பெண் டிர் நள்ளென்னும் யாமத்தும் துயிலார்; அவர் அறியாமல் அவன் வருந்திறம் யாது ?" எனச்சொல்லி வாயின்மறுத்தது.

ப.-ரை :—பரியுடை நன்மான் தலைக்கணிந்த வெண் கவரிபோல வேழம் வெண்பூவைக் கொள்வாரைத் தறித்துக்

பொருந்தாமையறிக. அமைதற்கட் கூறிய வினைமுதலே அமையாமைக்குக் கூறப்படாமையின், அலமரலின்மையு மறிக. அமைதி, கழறிக் கூறும் பான்மையனாகிய பாங்கன் தலைமகனது காமநிலையுரைத்து நெருங்கியவழி, நல்ல னென்றும் யாமே என வாயில் நேர்தல். அமையாமை, அவனது பரத்தைமை மறுத்து, அல்ல னென்னும் என் தடமென் றோளே என உறுப்பின்மேல் வைத்துக் கூறுதல். "காமநிலை யுரைத்தலும்" (தொல். பொ. 177.) என்ற சூத்திரத்தால் பார்ப்பார்க் குரியவெனக் கூறியன, ஒப்பின்முடித்தல் என்பதனால் பாங்கற்கும் ஏற்பன கொள்ளப்படும் என்பவாகலின், காமநிலையுரைத்தல் பாங்கற்கும் அமையும் என அறிக. (கக)

12. கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகே ழூரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே ;
தோற்க தில்லவென் றடமென் றோளே.

உழையர் நெருங்கிக் கூறியதிறமும் தனது ஆற்றாமை யும் நினைந்து வாயில்நேரக் கருதிய தலைமகள், பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறு ளாய்க் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

ப.-ரை:— கரைமருங்கு நிற்கும் வேழம், வயலகத்து விளைக்கும் தீங்கரும்பு போலப் பொலியு மூரன் என்றது, பொது மகளிர்க்குத் தலைமகளிரைப் போலச் சிறப்புச் செய்கிற்பான் எ. று.

பு.-ரை:— கரைக்கண் நின்ற வேழம் வயலகத்துக் கரும்பு போலப் பூக்கும் துறை பொருந்திய வூரனது கொடுமையினை யாம் பெரிதும் ஆற்றியிருப்பேமாக; என் னுடைய பெருமையும் மென்மையுமுடைய தோள்கள் ஆற்று வாய் மெலிக; தோலாவழி, எம்மைப் போல் ஆற்றியிராது வேறுபாடு மெய்க்கண் நிறுத்தித் துயர்செய்யும் எ. று.

முன்னர்த் துறை கூறுகின்றாராகலின், அதன் கரைக்கண் நிற்கும் வேழத்தைக் கரைசேர் வேழம் என்றார். வயலகத் தென்பது அவாய்நிலை. இன்னுருபு, ஒப்புப்பொருட்டு. கெழுவென்னும் சாரியை "வனஎனவரும் புள்ளியிறுதிமுன்" (எழுத்து. இளம். 481.) வருமாயினும், அச்சூத்திரத்தின்கண், "அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி" என்புழி "மொழியிடைத் தோன்றி" என்ற மிகையால், பிறவீற்றுமுன்னும் இச்சாரியை வருமென்றும், "அன்னமரபின்" என்றதனால், "சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அதுகாரணமாக நிலைமொழியீறு திரிதலும், சாரியையது உகரக்கேடும், எகரநீட்சியும் கொள்க" என்றும் கூறுபவராகலின், ஐகாரவீற்றுத் துறையென்னும் பெயர்முன், வேற்றுமை குறித்த பொருண்மைக்கண், கெழுவென்சாரியை, கேழ் எனச் "செய்யுட் டொடர்வயின் மெய்பெறநின்று" கேழ் ஊரன் என முடிந்தவாறறிக. "தீம்பெரும் பொய்கைத் துறைகேழூரன்" (அகம். 336) எனப் பிறரும் கூறுதல் காண்க. இனி, ஆசிரியர் அடியார்க்குநல்லார், "சாரியையாவது சொல் தொடர்ந்துசெல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிதுபொருள் பயந்ததும், பயவாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிதுபொருள் பயப்ப நிற்பது; பொருந்துதல் என்னும் பொருண்மை சாரும்" (சிலப். பதிக. 61. உரை.) என்பர். எனவே, துறைகேழூரன் என்பது துறை பொருந்திய ஊரன் என்னும் பொருண்மைத்தென்பதாம். இனி வருமிடங்களிலும் இதுவே உரைத்துக் கொள்க. "நன்று பெரிதாகும்" (தொல். சொல். 343). இல்லென்னும் இடைச்சொல், "பிறிதவண் நிலையலும்" (தொல். சொல். 251.) என்பதனால் இல்ல எனநின்றது. ஆற்றாமை பயக்கும் வருத்தத்தினை ஆற்றுதல் அதனை வேறலாகலின், ஆற்றுவாகிய தோள்களைத் தோற்கதில்ல என்றார். ஆற்றாமையால் ஆற்றுமாறு விழைகின்றாளாகலின், ஆற்றுகதில்ல என்புழித் தில்லைச்சொல் விழைவின்கண் வந்ததாயிற்று. "விழைவின் தில்லை தன்னிடத் தியலும்" (சொல். 260)

என்பது விதி. தோலாவழி என்பது முதலாயின ஒழிந்து நின்றமையின், தோற்கதில் என்புழித் தில்லைச்சொல் ஒழியிசைக்கண் வந்ததாம்.

தலைமகனது புறத்தொழுக்கத்தால் வேறுபட்டு ஆற்றாளாகிய தலைமகள் உழையர் ஆற்றுந்திறமாவன கூறத் தேறியிருந்தாள், பின்னும் புறத்தொழுக்கமே விரும்பி, பரத்தையர்க்குச் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறுது கழியவும் ஆற்றுளாயினமையின், நன்றுமாற்றுகதில் என்றும், ஆற்றுமிடத்தும் தோள்கள் ஆற்றுது, ஆற்றற்குத் துணியும் நெஞ்சொடு மாறுபட்டு மெலிதலின், தோற்கதில் என்றும் கூறினுள். தலைமகனைப் பிரியாவாறு பிணிக்கும் பெருமையுடையவாயினும் இதுபோது பிணித்தல் செய்யாது, தொடி நெகிழ்பு மெலியும் சிறப்பின்மை முடித்தற்குத் தடமென்றோள் என்றும் கூறினுள். இஃது உடம்புநனிசுருங்கல். "கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப், பகுதியி னீங்கிய தகுதிக் கண்ணும்" (தொல். பொ. இளம். 145.) என்பதனுல், தலைமகள் அறத்தை விரும்பி ஆற்றுவாளாயினு ளென்பது, ஊரன் கொடுமை நன்றும் ஆற்றுகதில்ல யாமே என்பதனுல் அறிக. தோற்க தில்லவேன் தடமென்றோளே என்றதனுல், "கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண்" (தொல். பொ. நச்சி. 147.) உறுப்பினை வேறுபடுத்துக் கூறினுளாம். ஆற்றற்கட் சென்ற நெஞ்சத்துள், அலமரல் தோன்றி, தோளை வேறுபிரித்துச் சிவந்துகூறுவித்தல் அறிக. "நாளும் நயந்தோர்ப் பிணித்தல் தேற்று, வயங்குவினை வாளே ரெல்வளை நெகிழ்த்த, தோளே தோழி தவறுடையவ்வே" (அகம். 267) எனப் பிறண்டும் தலைவி தன்தோளை வேறு நிறுத்திச் சிவந்து கூறுமாறு காண்க.

களைமருங்கு நின்ற வேழம் கரும்புபோலப் பூக்கும் என்றது, பொதுமகளிரும் குலமகளிர்போலச் சிறப்புப் பெறு

இன்றாரெனக் கருத்தழிந்து கூறியதற்குக் காரணம் குறித்த வாறு. இதனால் தலைமகள்பால் பொறாமை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. ஏனைமெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்: வாயில் நேர்தல்.

இனி, பேராசிரியர், பயவுவமப் போலிக்கு இதனை உதாரணமாகக் காட்டி, "இதனுள் தலைமகன் கொடுமை கூறியதல்லது அக்கொடுமைக் கேதுவாகிய தொன்றுவிளங்கக் கூறியதில னாயினும், இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்கும் எனவே, அவற்றிற்கும் இழிபு உயர்வாம் என்ப தோன்றிற்றிலை; எல்லாரும் இன்பம் கோடற்குரியர் தலைமகற்கு என்றமையின், யாழும் பரத்தையரும் அவற்கு ஒத்தனம் என்றமையின் அவை கூறினாளென்பது," (தொல்காப். பொ. 300. உரை.) என்பர்.

கொடுமை நாணி என்றும் பாடம் உண்டு. இஃது ஏடெழுதினோரால் முன்பாட்டை (ஐங். 11.) யெழுதிய நினைவினால் நேர்ந்த பிழையாகும் போலும். பேராசிரியர் உரைப் பதிப்பின்கண்ணும் இப்பாடமே காணப்பெறுகின்றமையின் இப்பிழை அவர்காலத்துக்கு முன்பே தோன்றிய தொன்மையுடைமை யறிக. இனி, பிழையின்மை கருத்தாயின் ஊரன் கொடுமைக்கு நாணி யாம் ஆற்றுவேமாக; தோள்கள் ஆற்றாது மெலிக என்றுரைக்க. (உ)

13. பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகருந்
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே.

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், "அவன்பெண்டிர் நள்ளென்னும் யாமத்தும் துயிலார்; அவர் அறியாமல் அவன் வருந்திறம் யாது?" எனச்சொல்லி வாயின்மறுத்தது.

ப.—ரை:—பரியுடை நன்மான் தலைக்கணிந்த வெண்கவரிபோல வேழம் வெண்பூவைக் கொள்வாரைக் குறித்துக்

கொடுக்தும் ஊரன் என்றது, நன்றுபோலக் காட்டித் தம் நலத்தினை விற்பார் வாழும் ஊரன் எ-று.

பு.—ரை:— செலவினை யுடைய நல்ல குதிரையின் தலையிலணிந்த உயர்ந்த சாமரை போலக் கரைக்கண் வளர்ந்த வேழம் வெள்ளிய பூக்களைக் கொடுக்கும் குளிர்ந்த துறையினை யுடைய வூரன் பெண்டிர், ஊரார் கண்துயிலும் யாமத்திலும், தாம் துயிலுதலை யறியா ராகலின், அவன் அவரை யறியாமல் வருந்திறம் யாது? எ-று.

பரி, செலவு; அஃதாவது குதிரையின் நடைவிசேடம். மா, குதிரை. "னகர மொற்று மாவு மாவும்" (தொல். எழுத்து. 231) என்றதனால் மான் எனநின்றது. உளை, குதிரையின் தலையில் அணியும் சாமரை; நெற்றியில் நான்றுகிடந்தலையும் உளைமயிருமாம். இதனைத் தலையாட்ட மென்றும் கூறுப. "விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்" (அகம். 125) எனப் பிறரும் கூறுவர். அடைகரை யென்புழி, அடையும் கரையே யாகலினாலும், அடையாகிய கரையென ஒன்றையொன்று விசேடித்து நிற்பதனாலும், இஃது இருபெயரொட்டுப்பண்புத்தொகையாம். "திணிமண லடைகரை யலவனாட்டி" (அகம். 280) எனப் பிறாண்டும் வருதல் காண்க. இனி, வருமிடங்களிலும் இதுவே யுரைத்துக் கொள்க. "கடற்கரை யென்பாருமுளர்" எனச் சிலப்பதிகார வுரைகாரர் கூறுவர். ஈண்டு, அப்பொருள் சிறவாமை யறிக. பூப்பகர்தல், பூக்களைச் சொரிதல். "குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி, அசையா நாற்றம் அசைவளி பகா" (அகம். 272) என்புழிப் போலப் பரப்புதல் என்றுமாம். பெண்டிர் என்றது ஈண்டுப் பரத்தையரை. துஞ்சூர், வரையறையின்மையின், பின்முன்னாகத்தொக்கது; "மாண்வினைக் கலிமா, துஞ்சூர் யாமத்துத் தெவிட்ட லோம்பி" (அகம். 360) என்றார் பிறரும். துஞ்சூர்யாமம், ஊர்துஞ்சுயாமம்; அஃதாவது இடையாமம். உம்மை, சிறப்பு. ஆகலின் அவன் என்பது முதலியன கூற்றெச்சம்; "சொல்லொடுங்

குறிப்பொடு முடிவுகொ ளியற்கைப், புல்லிய கிளவி யெச்ச மாகும்" (தொல். பொ. 518) என்பது விதி.

"இனிப் பிரியேன்" எனத் தன்னைத் தெளிவித்துக் கூடிய தலைமகன், பின்பு பிரிந்து சென்று, பெண்டிரைக் கூடினு னாகலின், அப்பெற்றியே தம்மிற் பிரிதலையஞ்சான் எனக் கருதி, அவர்கள் துயிற்றற்குரிய காலத்தும் துயிற லின்றிக் காத்துவருகின்றன ரென்பாள், ஊரன்பெண்டிர் துஞ்சூர் யாமத்தும் துயிலறியலரே என்றாள். துயிலார் என் னாது துயிலறியலர் என்றது, தலைமகனொடு கூடாமுன்பு, அவன் கூட்டம் நினைந்தும், கூடியபின்பு, மேனிகழும் பிரிவு நினைந்தும் துயிலெய்தாமையின், இருவழியும் துயிலுதலை யறி யாராயினர் எனத் தான் கருதிய இழிபு முடித்தற்கென்க. எனவே, பகலினும் இரவினும் வரும்பரிசு இல்லானை, உடை யான்போல வருவன் எனக்கூறி வாயில்வேண்டுவ தென்னை யென வாயின்மறுத்த வாறும். ஆகவே, இஃது "அவனறி வாற்ற வறியு மாகலின்" (தொல். பொ. 147) என்ற சூத் திரத்து, "வாயிலின் வரூஉம் வகை" யென்பதனால் அமைதல் காண்க.

பரியுடை நன்மானின் உளைபோல அடைகரையில் நின்ற வேழம் மலரும் என்றதனால், கற்புச் சிறப்பினையுடைய குலமகளிரைப் போல, பரத்தையரும், தாம் நலம்சிறந்தார் போலக்காட்டி நயப்பித்து, அந்நயந்தார்க்கு அதனை நல்குவர் என்றாளாம். வேழ வெண்பூவிற்கு உளை நிறத்தாலும் வடி வாலும் உவமையாயிற்று. உள்ளுறையுவமம், "வினையினும் பயத்தினும் உறுப்பினு முருவினும், பிறப்பினும் வரூஉம்" (தொல். பொ. 300) என்பது மேலே கூறினும். பரியுடை நன்மான் என்றது, குலமகளிரின் கற்புச்சிறப்புணர நின்றது. இஃது ஏனையுவமம் போல்வதாயினும், திணையுணர்தற்கண் பயன்படுதலின் தள்ளப்படாதாயிற்று. "உள்ளுறையுவமம் ஏனையுவம மெனத், தள்ளாதாகுந் திணையுணர் வகையே" (தொல். பொ. 46.) என்றார் ஆசிரியரும். ஏனையிடங்களினும்

இப்பொருண்மை யுணர்ந்து இதுவே இலக்கணமாக உரைக்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல்.

புரிவுடை நன்மான், புரிவுடை நன்மான் என்றும், துஞ்சும் யாமத்தும் என்றும் பாடங்கள் உண்டு. இவை சொற்பொருள் நெறியால், செய்யுள்நலம் சிறவாமை யுணர்ந்து கொள்க. (ங)

14. கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே.

தலைமகள் புணர்ச்சிவேட்கையைக் குறிப்பாலுணர்ந்த தோழி, "அவன்கொடுமை நினையாது அவன்மார்பை நினைந்து ஆற்றுயாகின்ற தென்னை?" என்றாளாகத் தலைவி, "அவன் கொடியனே யாயினும் அவன்மார்பு குளிர்ந்த துயிலைச்செய்யும் இனிய சாயலை யுடைத்து; ஆதலால், காண்" என்று சொல்லியது.

ப.-ரை:—நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுதலான் வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கு மென்றது, பரத்தையரால் தனக்கு உளவாகிய மெலிவு கூறியவாறு.

பு.-ரை:—ஒழுகிய பூக்களையுடைய வேழம் தீண்டுதலால் அயலவாகிய வடுநிறைந்த மாமரங்களின் வளவிய தளிர்கள் அசையும் மணிபோலத் தெளிந்த நீர்நிறைந்த துறையினையுடைய ஊரன் கொடியனே யாயினும், அவனது மார்பொன்றே, குளிர்ந்த துயிலினைச் செய்யும் இனிய சாயலை யுடையதா மாகலின், யான் அதுநினைந்தன்றே ஆற்றேனாயினேன், காண் எ. று.

கொடி, ஒழுங்கு. தீண்டி யென்னும் செய்தெனெச்சம் காரணப் பொருட்டு. வடு, மாவின் முற்றாதகாய் (பிஞ்சு).

மணி, ஆகுபெயரால், அந்நிறப்பண்பினையுடைய நீர்மேற்று. "மணிகண் டன்ன துணிகயந் துளங்க" (அகம். 56) என்றார் பிறரும். இனி, மணித்துறை யென்பதற்கு மணிகள் நிறைந்த நீர்த்துறை யெனினுமாம். அம்மணிகள், நீராடினோர் அணிகலன்களினின்றும் உக்கன; "துகில்சேர் மலர்போல் மணிநீர் நிறைந்தன்று" (பரி. 12: 93) என்பதற்குப் பரிமேலழகர் கூறும் உரை காண்க. சாயல், மென்மை. (தொல். சொல். நச்சி. 325.) சாயலென்னும் உரிச்சொல் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐந்துபொறியானும் நுகரப்படும் மென்மையினை யுணர்த்துமென ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். ஈண்டு இஃது ஊற்றாற் பிறக்கும் மென்மை மேற்று; "அறலென நெறிந்த கூந்தல், உறலின் சாயலோ டொன்றுதல் மறந்தே" (அகம். 213.) என்பதனுளும் இஃது ஊற்றாற் பிறக்கும் மென்மையைச் சுட்டிநிற்றல் காண்க. கொடியனே யென்பது முதலாயின குறிப்பெச்சம். அவனது பொதுத்தன்மையினை விலக்கி, மார்பின்சாயலை விசேடித்தலின், ஏகாரம் பிறிதின் இயைபு நீக்கிய பிரிநிலை யெனவறிக; சாயற்றே யென்புழி அசைநிலை.

தலைமகனது இயற்பழிப்பதுபோலக் கொடுமைகூறி விலக்கிய தோழிக்கு, அவன்கொடுமை யுடன்பட்டு, அவன் பிரிவினைத் தான் ஆற்றாமைக்கு ஏது கூறுகின்றாளாகலின், தலைமகள், ஊரன்மார்பே, பனித்துயில் செய்யும் இன் சாயற்றே யென்று கூறினாள். எனவே, அப்பிரிவாற்றாமையால் அவட்கு உறக்கமின்மையும், அவன்மார்பிற் புல்லிக் கிடக்கும் முயக்கத்தின்மேற் சென்ற வேட்கைமிகுதியும் தோன்றக் கூறியவாறும். உறக்கமின்றி வெதும்பிக் கிடப்பார்க்கு அவ்வுறக்கம் குளிர்ச்சியும் இன்பமும் பயத்தலின் அதனைப் பனித்துயில் என்றும், அவையும் அவன்மார்பினது ஊற்றாற் பிறந்த மென்மை யேதுவாகப் பிறத்தலின், அதன் வினைப்படுத்து, "பனித்துயில் செய்யும் இன்சாயற்று" என்றும், குளிர்ச்சியோடு இன்பமும் ஒருங்கு பயத்தல்பற்றி, இன்சாயற்று என்றும் கூறினாள். "குளிரும் பருவத்தே-

யாயினுந் தென்றல், வளியெறியின் மெய்யிற் கினிதாம்-ஒளி யிழாய், ஊடி யிருப்பினும் ஊரன் நறுமேனி, கூடல் இனி தாம் எனக்கு" (ஐந்தி. 30) என்வரும் மாறன்பொறையனார் பாட்டும், "இனித்தன், சாயன்மார்பிற் பாயல் மாற்றிக், கைதையம் படுசினைக் கடுந்தேர் விலங்கச், செலவரி தென்னும் என்பது" (அகம். 210) என்பதும் இக்கருத்தினை வலியுறுத் தல்காண்க. இனி, முயங்குந்தோறும் விரிந்துநின்று அய்யா வின்பம் அருளும் அழகுடைமையின், "இன்சாயற்று" என் றுள் என்றுமாம். "யாம், முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்துகொண், டடக்குவ மன்னோ தோழி............ சாரனுடன் சாயன் மார்பே" (அகம். 328) என்றார் பிற ரும். சாயல், அழகு என்னும் பொருட்டாதல், "கண்ணு ரும் சாயற் கழி" (பரி. 11 : 54) என்பதன் உரையால் அறியப்படும்.

நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுதலால், மாவின் வளவிய தளிர் நுடங்கும் என்றதனால், அவன்மார்பினைப் பரத்தையர் தீண்டுதலால் பொறாது, தான் ஆற்று வாயினமை யுணர்த்தினாளாம். மெய்ப்பாடு: இளிவரல். பயன்: ஆற் றுமை கூறுதல்.

பணித்துயில் என்னும் பாடத்தால் சிறப்புடைய பொருட்பேறின்மை யறிக.

இனி, "அவனறி வாற்ற வறியு மாகலின்," (தொல். பொ. 147) என்ற சூத்திரத்துக் "காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்" என்புழி இஃது உவத்தல் என்பர் நச்சினார்க்கினியர். (ச)

15. மணலாடு மலிர்நிறை விரும்பிய வொண்டழைப்
புனலாடு மகளிர்க்குப் புணர்துணை யுதவும்
வேழ மூதா ரூரன்
ஊரனா யினு மூரனல் லன்னே.

சேணிடைப் பிரிந்துவந்து உடனுறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்க முள்தாகின்றதென்று குறிப்பினா லுணர்ந்து தலைமகள் வேறுபட்டாளாக, தோழி, அதனை யறியாது, "அவன் உடனுறையவும் வேறுபடுகின்ற தென்னை?" என்றாட்கு அவள் சொல்லியது.

ப.-ரை;—புனலாடு மகளிர்க்குப் புணர்ந்த துணையை உதவுகின்ற வேழத்தையுடைய ஊர னாதலால், புனலாடும் பரத்தையர்க்கு வேழம் செய்வனவெல்லாம் செய்வா னென்பதாம்.

பு.-ரை:—மணலை யலைத்துக்கொண்டு போதரும் நீர்ப் பெருக்கின்கண், விரும்பிய வொள்ளிய தழையினை யுடுத்துப் புனலாடும் மகளிர்க்குப் புணர்துணையினைச் செய்யும் வேழம் நிறைந்த மூதூரினை யுடைய வூரன் உடனுறைதலால், நம்மூரினனே யாயினும், புறத்தொழுகுதலால், அல்ல னாயினான், காண் எ-று.

என்றது, ஊரனாயினும் ஊரனல்லனாய் ஒழுகுதலாற் றான், யான், ஆற்றாது மேனிவேறுபடுவே னாயினேன் எ-று.

மணலடு மலிர்நிறை யென்பது மணலாடு மலிர்நிறை யென நின்றது. மலிர்நிறை, நீர்ப்பெருக்கு, வினைத்தொகை. மலிர்தல், நிறைதலுமாம்; "இருங்கழி யோதம் இல்லிறந்து மலிர" (நற். 117) என்புழிப்போல. உடுத்தென்பது சொல்லெச்சம்*. "சொல்லெ னெச்சம் முன்னும் பின்னும், சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே" (தொல். சொல். 441.)

---

* "பொருளுணர்ந்தன்றிச் சொல் வருவித்தல் கூடாது, பொருளுணர்ந்த பின்னர்ச் சொல் வருவித்தலாற் பெறப்படுவ தோர் பயனில்லை; ஆதலாற் சொல்லெச்சம் வருவித்தல் வேண்டாவாம், பிற எனின்:- சொற்றொட ருணர்ச்சி சொல்லா னன்றிப் பெறப்படாமையின், ஒருதலையான் வேண்டும் என்க" என்பர் ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் (தொல். சூ-விருத்தி).

என்றார் ஆசிரியரும். புணர்துணை, பற்றியாடுதற்குத் துணையாதல்; புணையாய்ப் பயன்படுதலுமாம். "நட்புக், கொழுங்கோல் வேழத்துப் புணைதுணை யாகப், புனலாடு கேண்மை யனைத்தே" (அகம். 186.) என்பதனாலும் இது துணியப்படும். புணர்துணை என்றதற்குப் புணர்ந்த துணை யெனப் பழைய வுரைகாரர் கூறியது காண்க. காதலன்பாற் பிணிப்புண்டமைந் தரும் மகளிரும்கூடி நீராடு மிடத்து ஏனைத் துணைவரின் நீக்கி, இவர் துணைமையைச் சிறப்பித்துப் புணர்துணை யென்ப. ஈண்டுத் தலைமகன் புணர்துணை யாதலைச் சிறப்பித்ததுபோல, "புனலாடு புணர்துணை யாயினளெமக்கே" (ஐங். 72) எனத் தலைமகளைச் சிறப்பித்திருத்தல் அறிக. ஊரனாதற்கும், ஆகாமைக்கு முரிய காரணங்கள் வருவிக்கப்பட்டன. உம்மை, எதிர்மறையெச்சமாய் எதிர்மறைமுடிபு கொண்டது; "எதிர் மறை யெச்சம் எதிர்மறை முடிபின" (தொல். சொல். 435) என்பது விதி.

உள்ளுறையால் அவன் புறத்தொழுக்க முடையன் என்பதனைக் குறிக்கின்றா ளாகலின், வாளாது ஊரனல்லன்னே யென்றாள். ஊரனாயினும் என்றது தோழி கூறியதனைக் கொண்டுகூறியது. ஆயினும் என்றதனால், ஊரனாகாமையே தலைமகளது உட்கோளாம். இதனாற்பயன், ஒரூர்க்கண் உறையினும் நம்மனைக்கண், வாரான்; ஒரோவழிவரினும், நெஞ்சம் புறத்தொழுக்கத்தின் மேற்றாகலின், இன்பஞ்சிறக்கும் முயக்கமும் செய்யான், ஆகலின், யாம், வேறுபடுவதல்லது பிறிதில்லை என்பதாம். "ஒரூர் வாழினும் சேரி வாரார், சேரி வரினு மார முயங்கார், ஏதிலாளர் சுடலை போலக், காணக் கழிப மன்னே" (குறுந். 231) என்று பிறண்டு நிகழும் தலைவிகூற்றாலும் இப்பொருண்மை துணிக. இஃது உள்ளதுவர்த்தல். "அவனறிவாற்ற வறியுமாகலின்" (தொல். பொ. 147) என்ற சூத்திரத்துக் "கொடுமை யொழுக்கம் தோழிக் குரியவை, வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக், காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும், ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்" என்பதனுள், இது, காய்தலின் பாற்படும்.

வேழம் புனலாடு மகளிர்க்கு உதவிபுரிதல் போலத் தலைமகனும் பரத்தையர்க்கு அவர் வேண்டுவன புரிந்தொழுகு கின்றான் என்பது உள்ளுறை. வேண்டுவன: புனலாட்டு முதலிய விளையாட் டயர்தல், விழாவயர்தல், பிரிவின்றிக் கூடி யிருத்தல் முதலியன. மெய்ப்பாடும் பயனும் அவை.

மலர்நிறை யென்றும், வெண்டழை யென்றும் பாட முண்டு. "காவிரி மலிர்நிறை" (ஐங். 42), "மலரார் மலிர் நிறை" (ஐங். 72) என இந்நூலுள்ளும், "கோடுதோய் மலிர் நிறை" (அகம். 166) எனவும், "மலிர்புனல்" (பரி. 6 : 3) எனவும் "கண்பனி மலிர் நிறைதாங்கி" (பதிற். 26), "உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறை" (பதிற். 28), "செங்குணக் கொழுகுங்கலுழி மலிர்நிறைக், காவிரியன்றியும்" (பதிற். 50) எனவும் பிறநூலுள்ளும் பயில வழங்குமாற்றானும், மலர் நிறை யென்பது நீர்ப்பெருக்கு என்னும் பொருளதாகா தாகலினாலும், அது பாடமன்மை யறிக. தழையாவது, இளைய மகளிர் அணியும் உடைவிசேடம். இஃது ஆம்பல், நெய்தல், செயலை, ஞாழல் முதலியவற்றின் மலராலும், தழை யாலும் தொடுக்கப்படுவது என்பதை, "வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழை" (ஐங். 72), "கொடுங்கழை நிவந்த நெடுங்கால் நெய்தல், அம்பகை நெறித்தழை," (நற். 96), "கொன்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர், சிறுமா ணெய்தல் ஆம்பலொடு கட்கும்" (புறம். 61), "செயலையம் பகைத்தழை" (ஐங். 211), "ஞாழன் மலரின் மகளிர் ஒண்டழை யயருந் துறைவன்" (ஐங். 147), "தழையோர் கொய்குழை யரும்பிய குமரிஞாழல்" (நற். 54), "தண்ணறுங் காவி யம்பகை நெறித்தழை" (நற். 123) என்பனவும் பிறவும் உணர்த்தும். இவை பலவேறு வண்ணமுடைய வாதல் பற்றிப் "பகைத்தழை" யென வழங்கப்படுதலின், அவற் றுள் ஒன்றனை வரைந்து கொண்டு அதனால் விசேடித்தல் நெறி யன்மையானும், அவ்வாறு சான்றோர் செய்யுளுள் யாண்டும் வழங்கப்படாமையானும் வெண்டழை யென்பதும் பாடமன் றென வுணர்க. (ரு)

16. ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்காற்
சிறுதொழு மகளி ரஞ்சனம் பெய்யும்
பூக்கஞ் ஞூரனை யுள்ளிப்
பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே.

வாயிலாய்ப்புகுந்தார்க்குத் தோழி, "அவன் வரவையே நினைந்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது என்னை?" எனச் சொல்லி வாயின் மறுத்தது.

ப.-ரை :—*ஓங்குபூ..................பூக்கஞ் ஞூரன் என்றது, இழிந்தார்க்குப் பயன்படு மூரன் எ. று.*

பு.-ரை :— *உயர்ந்த பூவினையுடைய வேழத்தின் புழை பொருந்திய திரண்ட தண்டின்கண் சிறுத்த வாழ்க்கையினை யுடைய மகளிர் அஞ்சனத்தைப் பெய்துவைக்கும், பூக்கள் நிறைந்த ஊரனை நினைத்தலால், தலைமகளின் பூப்போன்ற மையுண்ட கண்கள் பொன்னிறப் பசலை பூத்தன; ஆகலின், இனி, தலைமகன் போந்து பெறுவ தென்னை? எ. று.*

*ஓங்குதலை வேழத்துக் கேற்றுக. தூம்பு, மூங்கிலைப் போல உள்ளிற் புழையுடையது; "கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்" (அகம். 176) என்பதனு லறிக. சிறுமை, செல்வநிறை வின்மை; உலகவழக்கு; இக்காலத்தும் முன்பு செல்வமுடையாராய்ப் பின்னர் வறுமைநிலை யெய்தினரைச்* சிறுத்துப்போனர் என்ப. *தொழு,* இல்வாழ்க்கை; "*தொழுவிற் றேன்றிய தோமறு கேவலக் கிழவன்*" (சீவக. 856) *என்பதன் உரைகாண்க.* இனி, *சிறுதொழு மகளிர் என்றது, தொழுவறைகளில் தொழில்புரியும் கடையர்மகளிரை எனவும், தொழுதுண்டு வாழும் பணிப்பெண்க ளெனவும் கூறினுமாம். குறிஞ்சிநிலமகளிர் மூங்கிற்குழாய்களில் தேன் பெய்துவைப்பது போல மருதநிலத்துச் சிறுதொழுமகளிர் அஞ்சனத்தை வேழத்தின் தண்டிற் பெய்துவைத்தல் அக்கால வழக்குப் போலும். "வாங்கமை பழுனிய நறவுண்டு" (நற். 276) என்றும், "அம்பணை விளைந்த தேக்கட் டேறல்,*

வண்டுபடு கண்ணியர் மகிழுஞ் சீறூர்" (அகம். 368) என்றும், "நீடமை விளைந்த தேக்கட் டேறல்" (முருகு. 195) என்றும் வருவனவற்றால் குறமக்கள் இயல்பு அறிந்துகொள்க. உள்ளி யென்னும் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. பொன் போறலின், பசலையைப் பொன் னென்றும், போர்த்தது போலப் படர்தலின், போர்த்தன வென்றும் கூறினார். "பொன்னேர் பசலைக் குதவா மாறே" (நற். 47) என்றும், "பல்லிதழ் மழைக்கட் பாலை மாய்ப்ப, பொன்னேர் பசலை யூர்தர" "நெய்தல், மணியேர் மாலை மொரீஇப், பொன் னேர் வண்ணங் கொண்டவென் கண்ணே" (அகம். 229, 290.) என்றும் பிற சான்றோரும் கூறுப.

தலைமகன்வரவு கருதி யிருந்தாட்கு, அஃது ஒருகாலைக் கொருகாலை அணித்தாய்த் தோன்றுதலின், உள்ளி யென்றும், உள்ளியவழி, அவன் வாராது போய்த்தமையின், மேனி வேறு பட்டுக் கண் பசப்பெய்துதலின், பூப்போ லுண்கண் பொன் போர்த்தனவே என்றும் கூறினாள். பசலை பாய்தலால், மேனி வேறுபடுமாறு ஒருபுடை நிற்க, கண்ணின் வனப்புக் கிரங்குவாள், பூப்போ லுண்கண் எனவிசேடித்தாள். "மணி மருண் மேனி பொன்னிறங் கொளலே" (அகம். 156) என் றதனால் மேனி வேறுபடுதலும், "பூப்போ லுண்கண் புது நலம் சிதைய" (நற். 325) என்றதனால், கண்ணின் பொலி வழிவு கருதி யிரங்குதலும் சான்றோர் சுட்டி யுணர்த்துமா றறிக.

"பாணர் கூத்தர் விறலியர் என்றிவர், பேணிச் சொல் லிய குறைவினை யெதிரும்" (தொல். பொ. 150) என்ப வாயி னும், வாயிலாய் வந்தார் எனப் பொதுப்படக் கூறியவழி இவர் அனைவரும் அடங்குதலின், இவர்க்குத் தோழி வாயின் மறுத்தலும், மறுத்தாள்போல நேர்தலும் பிறவும் இதன்கண் அடங்கும் என்க.

சிறுகொழுமகளிர் தம் அஞ்சனம் கெடாதவாறு பெய்துவைத்தற்கு வேழம் பயன்படுமாறு போல, பரத்தையர்

தம் நலம் கெடாதவாறு கூடியிருந்து பயன்படுகின்றா னென உள்ளுறை கொள்க. கொள்ளவே, இதனால், தலைமகள் எய்திய பசப்பிற்குரிய அவனது வாராமைக்கு, ஏது கூறியவாறா யிற்று. தலைமகன் பரத்தையர்க்கு அவர் இயைந்தவாறு ஒழுகுதல், "அவனணங்கு மாதர், பணியிகவான் சாலப் பணிந்து" (திணைமா. 135) என ஆசிரியர் கணிமேதாவியார் கூறுமாற் றானு மறியப்படும். மெய்ப்பாடு : வெகுளி. பயன் : வாயின் மறுத்தல். (சு)

17\. புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்
புதுவோர் மேவல னாகலின்
வறிதா கின்றென் மடங்கெழு நெஞ்சே.

தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி, "இவ்வாறொழுகுதலும் ஆடவர்க் கியல்பன்றே; நீ இதற்கு நெஞ்சழிகின்ற தென்னை?" என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

ப.-ரை :— புறத்தொழுக்கம் உளதாகிய துணையே யன்றி, நாடோறும் கனவில் வந்து வருத்துதலு முடைய னாதலால், என் நெஞ்சு பெருமை யிழந்து மெலிகின்ற தென்பதாம். புதன்மிசையே நுடங்கும் வேழவெண்பூக் கரிதான விசும்பின் கண்ணே பறக்கும் நாரைபோலத் தோன்றும் ஊரன் என்றது, தன்மை தோன்றாது ஒழுகுவாரை யுடையான் எ. று.

பு.-ரை :—புதலின் மேற்பட நின்று அசையும் வேழத்தின் வெள்ளிய பூ விசும்பின்கட் பறக்கும் வெண்குருகு போலத் தோன்றும் ஊரன் புதியராயினார்மாட்டு நசையுடைய னாகலின், அதனை யறியாது என் மடங்கெழு நெஞ்சம் அவனை நினைந்து மெலிவ தாயிற்று எ. று.

வெண்பூவேழம் என வரற்பாலதாகிய வண்ணச்சினைச் சொல், ஈண்டு உவமப்பொருண்மை குறித்துப் பிறழ்ந்து நின்

றது. நுடங்கும்பூ என இயையும். பூக்கள் செறிந்த புதலி னிடையே ஓங்கிநின்று, மலர்ந்து, அதற்கு அணிசெய்தலின், "புதல்மிசை நுடங்கும் வேழவெண்பூ" என எடுத்துக் கூறி னார். "வளரா வாடை யுளர்புநனி தீண்டலின், வேழ வெண்பூ விரிவன பலவுடன், வேந்துவீசு கவரியிற் பூம்புத லணிய" (நற். 241) எனப் பிறரும் கூறுமாற்றா லறிக. புது வோர், நலம் புதியராய இளைய பரத்தையர்; "வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய, பரிவொடு வரூஉம் பாணன்" (அகம். 56) என்புழிப்போல. மேவல், நசை. "நம்பு மேவு நசையா கும்மே" (தொல். சொல். 329) என்பர் ஆசிரி யர். நெஞ்சு வறிதாதல், நினைந்த பயன் பெறுமையால் அழி தல்; "வறிதுகு நெஞ்சினள்" (நற். 368) என்றாற்போல. "செய்யா கூறிக் கிளத்தல், எய்யா தாகின்(று)எம் சிறுசெந் நாவே" (புறம். 148) என்புழிப்போல, ஆகின்று என்பது இறந்தகால முற்றுவினை. மடங்கெழுநெஞ்சு, மடமை பொருந்திய நெஞ்சம். கொளுத்தக் கோடலும், கொண்டது விடாமையும் நெஞ்சின் செயலாதலின், அச்செயன்மை தோன்ற "மடங்கெழு நெஞ்சு" என்றார். "அச்சமும் நாணு மடனுமுந் துறுத்த, நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" (தொல். பொ. 99) என்ப.

புதுவது காணுந்தோறும் அதனைப் புகன்று (விரும்பி) ஒழுகுதல் மக்கள் மனப்பான்மை யாகலின், தலைமகன், புது வோர் மேவலன் எனப்பட்டான்; "புதுவோர்ப் புணர்தல் வெய்யன்" (கலி. 75) என்றும், "புகன்ற வுள்ளமொடு புது வோர் சாயற், ககன்ற கிழவனை" (தொல். பொ. 147) என் றும் சான்றோர் கூறுவர். இவ்வாறு புதுவோர்மேற் புகன்ற வுள்ளத்தனாய் ஒழுகுபவனுக்கு, நலம் பழையளாய தான், கரும்பின் கோதுபோல விரும்பப்படுமா றின்மையின், புது வோர் மேவல னாகலின் என்றாள். "கருங்கயத் தாங்கட் கழுமிய நீலம், பெரும்புற வாளைப் பெடைகதூஉ மூரன், விரும்புநாட் போலான் வியனல முண்டான், கரும்பின்கோ தாயினேம் யாம்" (திணைமொழி. 39) எனப் பிறரும்,

தலைவி இனைந்து கூறுதல் காண்க. "எம் இளமை சென்று தவத் தொல்லஃதே" (அகம். 6) என்றதனால், தலைவி தான் இளமைப் புதுநலங் கழிந்து பழையளாயினமை கூறுமா றறிக. இவ்வாறு புதுவோரை மேவிக் கூடுதலும், பழை யோரைக் கைவிட்டுப் பிரிதலும் அவற் கியல்பென்பதனை யறி யாது நினைந்து, நினைந்த பயன் பெறாதொழிந்து நெஞ்சழிந்து நிற்கின்றேனென்பாள், வறிதாகின் றேன் மடங்கெழு நெஞ்சு என்றாள். "வருவரென் றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம், ஐயந் தெளியரோ நீயே" (அகம். 303) என்பதனாலும் இக் கருத்து வலியுறுதல் அறிக. செம்புலப் பெய்ந்நீர் போல, இருவர் நெஞ்சமும் கலந்து ஒன்றாய காலத்தும், அவர்நெஞ் சின் பான்மை அறியாது கழிந்தமை கருதி நெஞ்சினை, மடங் கெழு நெஞ்சு என்று கூறினாள். தலைமகளைக் கூடியிருந்த தலைமகன், பிரிவின்கண் தன்னாற்றாமையை அவட்கு அறி வியா தொழிந்தமை சுட்டி, தன் நெஞ்சினை, "உடம்பாண் டொழிந்தமை யல்லதை, மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே" (அகம். 29) என்று கூறுமாற்றானு மறிக. இஃது அழிவில்கூட்டத் தவன் பிரிவாற்றாமை.

இது, "காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்ட லும்," (தொல். பொ. 147) என்புழிப் பிரித்தலின் பாற்படும். ஆசிரியர் நச்சினார்க்கினியரும் இதுவே கூறினர்.

புதன்மிசை நுடங்கும் வேழத்தின் வெண்பூ விசும் பின்கட் பறக்கும் குருகுபோலத் தோன்றும் என்றது, சிறப் பில்லாப் பரத்தைய ராயினும் புதுமை நலத்தால் உயர்ந்த குல மகளிர்போலத் தோன்றுவர் என்றவாறு. மெய்ப்பாடு: தன்கட் டோன்றிய வருத்தம் பற்றிப் பிறந்த இளிவரல். பயன்: மெலிவுரைத்தல். (எ)

இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழங்
கரும்பி னலமருங் கழனி யூரன்

பொருந்துமல ரன்னவென் கண்ணழப்
பிரிந்தன னல்லனோ பிரியலெ னென்றே.

பரத்தையிற் பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலை மகற்குப் பின் அவ்வொழுக்கம் உளதாயவழி அவன் வரவிடுத்த வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது.

ப.-ரை:— *செருந்திப்பூவோடு வேழம் கரும்புபோல அலமரு மூரன் என்றது, தம் சேடியரோடு பொதுமகளிர் தலை மகளிரைப் போலத் தருக்கி யொழுகு மூரன் எ. று.*

பு.-ரை:—*கருங்கோரையை யொத்த செருந்தியுடன் வேழம் கரும்பு போலக் காற்றினால் சுழன்று அசையும் கழனி களை யுடைய வூரன் முன்னர்ப் போந்து கூடிய ஞான்று, இனிப் பிரியேன் என்று கூறி, பின்னர் அழகிய மலர்போலும் என் கண்கள் கலுழுமாறு பிரிந்தானாகலின், அவன்பொருட்டு, நீயிர் போந்து வாயில்வேண்டுவ தென்னை? எ. று.*

*சாய், கோரை. செருந்தி, ஒருவகைக் கோரை; நெட்டிக்கோரை, வாட்கோரை யென்றும் கூறுப. "கழனி மாய் செருந்தி கண்பமன் ஊர்தர"* (மதுரை. 172) என்பதன் உரைகாண்க. ஏனை வருமிடங்களினும் இதுவே யுரைத்துக் கொள்க. இப்பெயரிய தொரு மரமும் உண்டு. அது நெய்த னிலத்துக் குரித்து. அதனியல்பினை, "*பாசிலைச் செருந்தி தாய விருங்கழி*" (ஐங். 112) என்புழிக் கூறுவாம். அலமரல், சுழற்சி. காற்றினால் என்பது அவாய்நிலை. அல்லனோ என் புழி ஓகாரம் எதிர்மறை. பிரியலேன் என்றது முன்பு பரத் தையிற் பிரிந்து வந்து கூடிய தலைமகன் தன்னைத் தெளித்துக் கூறியதனைத் தலைவி கொண்டுகூறியது. ஆகலின் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

*பரத்தையிற் பிரிந்திருந்து போந்தான், கூட்டங்கருதி, இனிப் பிரியாமையைத் தெளித்தவிடத்துக் கூறியது நீங்காது நெஞ்சில் நின்று நிலவுதலின், 'பிரியலேன் என்றே என்றும்,*

தன்னை மறந்தா ளாயினும், தன்னைத் தெளிவிப்பான் கூறிய சொல்லை மறந்து பொய்த்தொழுகுதல் கூடா தென்று கருது கின்றா ளாகலின், பிரிந்தனனல்லனே என்றும், வாயில்கள் கூறுவது தனக்கு ஒக்குமாயினும், தன் கண்கள் அதனை வலாது அழுதல்மேயின எனத் தன்னுறுப்பின்மேல் ஆற்ரு மையை யேற்றிப் "பொருந்துமலரன்னவேன் கண்ணழ" என்றும் கூறினாள். தன்னாற்ருமையை உறுப்பின்மேல் வைத் துக் கூறல் வழுவாயினும், "வண்ணம் பசந்து புலம்புறுகாலை, உணர்ந்தபோல உறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே" (தொல். பொ. 202) என்றதனால் அமையும் என்க. "பிரிந்தனனல்லனே" என்றதனால், வாயில்கள், அவள் புலந்தவழித் தலைமகன் அன்புடைமை முத லியவற்றைக் கூறுவதல்லது கொடுமை கூறல் இலக்கண மன் மையின், அவ்வன்புடைமை முதலாயவற்றைக் கூறினரென் றும், அவள், அவர்களை மறுத்து, அவன் பிரிந்தமையே அவன தன்பின்மை புணர்த்துமென்று கூறினாள் என்றும் கொள்க. "மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை, தம் முள வாதல் வாயில்கட் கில்லை" (தொல். பொ. 165) என்பத னால் வாயில்கள் தலைவன் குணங் கூறுவதல்லது கொடுமை கூறார் என்ப தறிக. இஃது அழிவில் கூட்டத் தவன் பிரி வாற்ருமை.

வேழம் செருந்தியொடு கூடிக் கரும்புபோலக் காற்றி னால் அலமரும் என்றதனால், பரத்தையரும் தம்தோழியருடன் கூடித் தமக்குத் தலைமகன் செய்யும் தலையளியால் தருக்கி யொழுகுகின்றனர் என வுள்ளுறுத் துரைத்தவாறு. இதனாற் பயன், "குலமகளிராகிய எம்பாற் பெறுவதனை, பரத்தையர் பாலும் பெறுதலின், நீயிர் அவற்கு வாயில்வேண்டுவ தென்னை?" என வாயின்மறுத்தவாறும். இவ்வுள்ளுறைக் கட் கூறிய கருப்பொருளாகிய கோரை மகளிர் தம் முன் கையில் வளைபோல அணிந்து விளையாட்டயர்தற்குப் பயன் படுவ தாகலின், அவளறிகிளவியென அறிக; "கிழவி சொல் லின் அவளறி கிளவி" (தொல். பொ. 301) என்பர் ஆசிரியர்.

"சாயும் நெய்தலு மோம்புமதி யெம்மின், மாயிருங் கூந்தன் மடந்தை, ஆய்வளைக் கூட்டும் அணியுமா ரவையே" (நற். 60) எனச் சான்றோர் கூறுதலால், கோரை பயன்படுமா றறிக. மெய்ப்பாடு: வெகுளி, பயன்: வாயின்மறுத்தல். (அ)

19. எக்கர் மா அத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழுந் தண்பொழில்
வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்
ஊர னாகலிற் கலங்கி
மாரி மலரிற் கண்பனி யுகுமே.

"பண்டெல்லாம் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளை யாகிய நீ, சின்னாள், அவன் புறத்தொழுகுகின்ற இதற்கு ஆற்றா யாகின்ற தென்னை?" என்ற தோழிக்கு, "எதிர்ப்பாடின்றி ஒரூர்க்கண்ணே உறைகையினுலே ஆற்றேனாகின்றேன்" எனத் தலைமகள் சொல்லியது. வாயிலாய்ப் புகுந்தார் கேட்டு நெருங்காது மாறுதல் கருத்து.

ப.—ரை:—மரங்கொம்பு பூத்து வதுவைமகளிர் மெய்ம் மணங்கமழக் கடவபொழிலை அம்மலர் அரும்பாகிய பருவத்தே வேழங்களின்பூத்துடைக்கு மூரன் என்றது, சேணிடைப் பிரிந்து வந்து தன்னுடனுய் நிகழ்கின்ற பருவத்து இன்பங்கள் நுகராமல் இடையே விலக்குகின்ற பரத்தையர்களை யுடையான் எ. று.

பு.—ரை:—எக்கரிடத்து நின்ற மாமரத்தின் புதியவாய் அரும்பி மலர்ந்த பூக்களையுடைய பெரிய கொம்பு, வதுவையிற் கூடியவர் மெய்ம்மணம் கமழும் தண்ணிய பொழிலின்கண், வேழவெண்பூவின் இதழாகிய உளை அப்பூக்களைத் துடைத் தழிக்கு மூரனாகலின், என் கண்கள் கலக்கமுற்று, மழை யால் நனைந்த குவளைமலர் போல நீர்சொரியாநின்றன, காண் எ. று.

எக்கர், நீரால் கொணரப்பட்ட மணல் பரந்த விடம்; இக்கருத்தே கொண்டு ஆசிரியர் நச்சினார்க்கினியரும் "கடு வாற் கலுழிக் கட்கின் சேயாற்று, வடுவா ழெக்கர் மணலினும் பலரே" (மலைபடு. 556-7) என்புழி எக்கர் என்பதற்கு இடு மணல் என்றே உரை கூறினார். சினை, மணங்கமழும் பொழில் என இயைக்க. செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மெய்ம்மணம், மெய்யின்கண் ணெழும் மணம். சினை கமழும் மணம், புணர்ந்தோர் மெய்கமழும் மணம் போலுதலின், சினை புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழும் என்றார். வதுவைக் கோலங் கொள்வார் பலவகை மலரும், விரையும், சுண்ணமும் புனைதலால் எழும் மணம் நறிதாதலின், புணர்ந்தோர் மெய்ம் மணம் என விசேடித்தார்; "தண்கய நண்ணிய பொழிற் றொறுங் காஞ்சிப், பைந்தா தணிந்த போதுமலி யெக்கர், வதுவை நாற்றம் புதுவது கஞல" (அகம். 25.) என்றார் பிறரும். வேழப்பூவின் இதழ் உளை போறலின், வெள்ளுளை எனப் பிரித்தோதினார். மேலே, "பரியுடை நன்மான் பொங்குளை யன்ன" (ஐங். 13) என்புழி வேழப்பூ குதிரையின் உளைமயிர் போல்வதென உவமித்ததனை நினைவுகூர்க. சீத்தல், கெடுத்தல். இஃது இப்பொருட்டாதல், "ஈண்டுநீர் மிசைத்தோன்றி இருள் சீக்கும் சுடரேபோல்" (கலி. 100) என வருதலா லறிக. மாரிமலர், மாரிக்காலத்து மழையால் நனைந்த மலர். மாரிமலர் அசையுந்தோறும், அதன்கண் நின்ற நீர் துளிப்பது போல, கண் ணிமைக்குந்தோறும் கலுழ்ந்து நின்ற நீர் துளிக்கு மென்றமையின், இது தொழி லுவமம். மலரெனப் பொதுப்படக் கூறினமையின், ஈண்டு உவமையாதற்குச் சிறப்புடைய குவளைமலர் வருவிக்கப் பட்டது. "தண்கயம் பயந்த வெண்காற் குவளை, மாரி மாமலர் பெயற்கேற் றன்ன, நீரொடு நிறைந்த பேரமர் மழைக் கண், பனிவா ரெவ்வந் தீர" (அகம். 395.) என்றார் பிறரும்.

இவ்வாற்றால் தலைமகன், தன்னொடு கூடி நுகர்தற் குரிய இன்பங்களை நுகராவாறு விலக்கும் பரத்தையரை யுடையன் என்கின்றா ளாகலின், ஊரனாகலின் என்றும், ஒருக்

கண் உறையினும், அவ்வாறு விலக்குண்டலால் வாராதொழிந்தான்பொருட்டுத் தான் செயற்பாலது பிறிதின்மையின், கலங்கி என்றும், கலங்கியவழிக் கண்கலுழ்ந்து நீர்மிக்குச் சொரிதலின், மாரிமலரிற் கண்பனியுகும் என்றும் தலைமகள் கூறினாள். இதனுட் கலங்கி யென்றதனால், தலைவி மாட்டு உயிர்ப்பு என்னும் மெய்ப்பாடும், "மாரி மலரிற் கண் பனி யுகுமே" யென்றதனால் அவன் பிரிவாற்றாமை யென்னும் மெய்ப்பாடும் தோன்றின.

ஊரூர்க்கண் உறையினும் தலைமகனை எதிர்ப்படாவாறு தனிப்பதனால் எய்தும் இடும்பையால், தலைவி கூறுகின்றமையின், இஃது "அவனறி வாற்ற வறியு மாகலின்" (தொல். பொ. 147) என்ற சூத்திரத்து, "இன்பமும் இடும்பையுமாகிய விடத்தும்" என்புழி இடும்பை யென்பதன்கண் அடங்குமெனவறிக.

மாவின் பெருஞ்சினை பூத்து மணங்கமழும் பொழிற்கண், வேழப்பூவின் வெள்ளூளை விரிந்து அப்பூக்களை யழிக்கும் என்றதனால், தலைமகன் சேணிடைப் பிரிந்தொழுகிப் போந்து எமக்கு இன்பந்தரச் சமைந்தானை, பரத்தையர் விலக்கி, அது செய்யாவாறு கெடுக்கின்றார் என்று உள்ளுறுத் துரைத்தாளாம். இது, தன் னாற்றாமைக்குரிய காரணமாகிய பரத்தையரை வேழப்பூவின் வெள்ளூளைமேல் வைத்துக் கூறுதலின் சுட்டு என்னும் உள்ளுறையா மெனவுணர்க. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: அயர்வுயிர்த்தல்.

இனி, புதுப்பூம் பெருஞ்சினைப் புணர்ந்தோர் எனவும், வெள்ளூளை சீய்க்கும் என்றும் பாடமுண்டு. "சினைப்புணர்ந்தோர்", என்புழிச் சினையினை ஆகுபெயரால் நிழலிடமாக்கி, ஆண்டுப் புணர்ந்தோர் என்றுரைக்க. அதனாற் பொருட்சிறவாமை யுணர்ந்து கொள்க. சித்தல் என்பது சீய்த்தல் என வருமாறு வழக்கினுள் இன்மையானும், "நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்" (ஐங். 20) என்புழி, அன்ன

தொரு பாடமின்மையானும் அது பாடமன்றெனக. "இருள் சீக்கும் சுடரேபோல்" என்புழியும் சீய்க்கு மென்பதொரு பிரதிபேதம் உண்டென, இ. வை. அனந்தராமையர் காட்டியதும் இதனால் பொருந்தாமை யறிக. (௧௯)

20. அறுசில் கால வஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்குங்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி யூரனை யுள்ளியென்
இறையே ரெல்வளை நெகிழ்போ டும்மே.

தலைமகளை வாயில் நேர்வித்தற்பொருட்டாக, "காதலர் கொடுமை செய்தா ராயினும் அவர்திறம் மறவாதொழியல் வேண்டும்," என்று முகம்புகுகின்ற * தோழிக்கு, "என் கைவளை நில்லாதாகின்றது அவரை நினைந்ததன் பயனன்றே; இனி அமையும்," எனத் தலைமகள் சொல்லியது.

ப.—ரை :— தாமரைப் பூவகத் துளதாகிய தும்பிச் சினையை வேழம் சீக்கும் என்றது, தன்மாட்டு அன்புதல்லவன் உறைதலையும் விலக்குவாராகிய பொதுமகளிரை யுடையான் எ. று.

சினைச்சேக்கும் என்று பாடமோதுவர் தும்பிச்சினை வருந்த வேழந் தங்குமென்று பொருளுரைப்ப.

பு.—ரை :—ஆறாகியசில கால்களையும், அழகிய சிறையினையு முடைய தும்பி, நூறாகியபல இதழ்களை யுடைய தாமரைப் பூவின்கண் ஈன்றுள்ள சினைகளை யழிக்கும், மூங்கில் போல் உள்ளிற் புழையினையுடைய வேழம் செறிந்த துறையினை யருகிலேயுடைய வூரனை நினைந்ததனால், இறையும், அழ

* முகம்புகுதலாவது, தான் கூறுவதனைத் தன்முகநோக்கி நின்று கேட்குமாறு, ஒருவர் மற்றொருவர்பால், முன்னுரையாக, வேண்டுவனசில, கூறிச்சேறல்.

கும், ஒளியு முடைய என்வளைகள், நில்லாது நெகிழ்ந்து, ஓடா நின்றன எ. று.

பூவின்கண் தும்பி யின்ற சினையைச் சிக்கும் வேழம், தும்புடை வேழம் என இயையும். சததளம் என்னும் வட சொல், தாமரைக்கு விசேடணமாய் வழங்கப்பெறும் இயைபு கருதி, யதனை மொழிபெயர்த்து, "நூற்றிதழ்த் தாமரைப்பூ" எனவிசேடித்தார். சதம் என்றது பன்மைப்பொருட்டு. அதனை நோக்க ஆறு, சின்மைப் பொருட்டாதலின், அறுசில் கால என்றார். "சதம் என்றது நூற்றிலும் பலவிலும் செல் லும்" என்பர் தக்கயாகப்பரணி யுரைகாரர் (தா. 3. உரை). கால வென்னும் பெயரெச்சக் குறிப்பு, தும்பி யெனும் பெயர் கொண்டது. பூச்சினை, பூவின்கண்ணுள்ள சினை. சினை, முட்டை. நணி, அணிமை; "துறைநணி யிருந்த பாக்க மும்" (நற். 101) என்புழிப்போல. உள்ளி, காரணப்பொருட் டாய வினையெச்சகிளவி. இறை, சந்து.

உளளுறையாற பரத்தையர் தலைவனைப் பிரியாதவாறு பிணித்திருக்கும் கொடுமை கூறி, அதனை நினையுந்தோறும், நெஞ்சு நெகிழ்ந்து இனி யவனை யெதிர்ப்படல் அரிது என வெண்ணி வருந்துகின்று ளாகலின், உள்ளி யென்றும், பண் டெல்லாம் அவன் நினைவே பற்றுக்கோடாக நெகிழாது நின்ற வளைகள், இதுபோது அவ் வியல்பு மாறின என்பாள், இறையே ரெல்வளை நெகிழ்போடும்மே என்றும் தலைமகள் கூறினள். இஃது உடம்புநனி சுருங்கல். பண்டென்றது, களவின்கண் ஒருவழித் தணப்பு, வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவு முதலாயினவும், கற்பின்கண், ஓதல், பகை, பொருள் முதலிய காரணமாகப் பிரிதல் என்ற இவை/ நிகழ்ந்த காலம்.

தாமரைப்பூவகத் துளவாகிய தும்பியின் சினையை வேழத்தின்பூச் சிதைக்கும் என்றது, தலைமகன்பால் தங்கின தன்மகனைப் பரத்தையர் விலக்குவர் என வுள்ளுறுத் துரைத்த

வாறு. கற்பின்கண், தலைமக்கட்குப் புதல்வரும் ஒருவாற்றான் வாயிலாத லுண்மையின், வாயின்மறுத்தலை அறமாகக் கொண்ட அகப்பொருணெறிக்குப் புதல்வரை விலக்குதலும் அமையும் என்க. "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தை யுள்ளிய வழியும், தன்வயிற் சிறைப்பினும், அவன்வயிற் பிரிப்பினும்" (தொல். பொ. 147) என்புழிச் சிறுபான்மை, பரத்தை தன் புதல்வனை அவன்வயிற் பிரித்தா ளாகக் கூறலும் கொள்ளப்படுமென்க. மெய்ப்பாடும் பயனு மவை.

என் நிறையே போல்வனை நெகிழ்போடும்மே என்பது பாடமாயின், நிறுப்ப நில்லாது அவன்பால் நெகிழ்ந்து மெலி யும் என் நிறைபோல, செறுப்பச் செறியாது நெகிழ்ந்தோடுவ வாயின என்வளைகள் என்றாள் என்க. துறைநணி யூரன் என்ற பாடத்தாற் பொருள்சிறவாமை யறிக. (ம)

## 3. கள்வன்பத்து.

மருதநிலக் கருப்பொருள்களுள் ஒன்றாகிய இது, பின்வரும் பாட்டுக்கள் பத்தினும் சிறப்பாய்ப் பயின்று வருதலின், இப்பத்து இதனாற் பெயர் பெறுவதாயிற்று.

கள்வன் என்பது நண்டு (Crab). இது களவன் எனவும் வழங்கும். "புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம் போல்" (கலி. 88) எனவும், "அலவ னள்ளி குளிர்ஞெண் டார்மதி, களவனென்றிவை கற்கடப் பெயரே" எனத் திவாகரத்தும் சான்றோர் கூறுதல் காண்க. ஐங்குறுநூற்று அச்சுப்பிரதியினும் களவன் எனப் "பிரதிபேதம்" காட்டப் பெற்றுளது. அகநானூற்று அச்சுப்பிரதியும், "கள்வன் மண்ணளைச் செறிய" (அகம். 235) என்ற பாடங்கொண்டு களவன் என்பதனைப் பிரதிபேதமாகக் காட்டிற்று.

தமிழிலக்கண முறைப்படி, இது நான்கறிவுடைய வுயிர்வகையைச் சேர்ந்தது. "நண்டுந் தும்பியு நான்கறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" (தொல். பொ. 586.) என்ப. இனிப் பேராசிரியர், "மெய்யுடைமையின் ஊற்றுணர்வும், இரைகோடலின் நாவுணர்வும், நாற்றங் கோடலின் மூக்குணர்வும், கண்ணுடைமையின் கண்ணுணர்வுமுடைய வாயின; நண்டிற்கு மூக்குண்டோவெனின் அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது" என்றனர்.

அலவன், குளிர்ந்த நீர்சூழ்ந்த நிலப்பகுதிகளில், மாஞ்செடிகளின் வேரினும், வயல்களின் வரம்பினும், நீர்நிலைகளின் கரைகளினும் அளைவகுத்துக்கொண்டு வாழும். அதனால், "நீர்மலிமண்ணளை" (அகம். 176), "இருஞ்சேற்றீரளை" "தாழை வேரளை" (அகம். 350, 380), "கண்டல் வேரளை" "சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி" (குறுந். 117, 328)

"தண்ணக மண்ணளை" (ஐங். 27, 30) என்று சான்றோர் மிக்கெடுத்துக் கூறுப.

நண்டின் உடலிற் புள்ளியும் வரியும் பொருந்தி மேனி நலம் செய்ய, சில பொன்னிறமும் கொண்டு உலவும். அதன் கால்கள் வளைந்து நுனி கூரியவாய் இருத்தலின், அது செல்வ தனு லுண்டாகும் சுவடு, நிலத்தில் கோலம் எழுதியதுபோல விளங்குதல்கண்டு, வரித்தல் என்னும் வாய்பாட்டால் வழங்கினர். இதனுடைய கண்கள் உடலிற் சிறி துயர்ந்து, வேம்பு, நொச்சி முதலியவற்றின் அரும்புகளைப்போறலின், "நொச்சி மாவரும் பன்னகண்ண, எக்கர் ஞெண்டு" (நற். 267), "வேப்பு நனை யன்ன நெடுங்கணீர் ஞெண்டு" (அகம். 176), "வேப்பு நனை யன்ன நெடுங்கட் கள்வன்" (ஐங். 30) என்று சிறப்பிப்பர். "புள்ளிக்கள்வன்" (ஐங். 21, 22, 24) "வரியலவன்" (நற். 106) "பொன்வரி யலவன்" (குறுந். 303) "பொறிமா ணலவன்" (சிலப். 10: 91) என்பனவும், "கொடுந்தா ளலவ" (ஐங். ஐம். 42) "கொடுந்தா ளளைவா ழலவன்" (குறுந் 351), என்பனவும், "அளைவாழலவன் கூருகிர் வரித்த" (குறு. 351), "எக்கர் ஞெண்டின் இருங்கிளைத் தொழுதி, இலங்கெயிற் றேஎ ரின்னகை மகளிர், உணங்குதினை துழவுங் கைபோல் ஞாழல், மணங்கமழ் நறுவீ வரிக்கும் துறைவன்" (நற். 267), "இருஞ்சேற்றள்ளல் திதலையின் வரிப்பவோடி" (அகம். 176), "அலவன் கூருகிர் வரித்த வீர்மணல்" (குறுந். 351) எனப னவும் பிறவும் போதிய எடுத்துக்காட்டுக்களாம்.

கூரிய உகிருடைமையால், வயலில் முற்றிச்சாய்ந்து கிடக்கும் நெற்கதிர்களையும், வித்திய ஞான்று முளைத்த முளை களையும் அறுத்து நெற்பயிர் முதலியவற்றுக்கு இடையூறு செய்வதும் நண்டிற்கு இயல்பு. மேலும், மெல்லிய நீர்க் கொடிகளைத் துண்டித்துத் தான் செல்லும் வழியைச் செம்மை செய்துகொள்ளும் சீர்மையு முடையது. "கள்வன் ஆம்ப லறுக்கும்" (21), "வயலைச் செங்கொடி கள்வனறுக்கும்" (25), "கள்வன் வள்ளை மென்காலறுக்கும்" (26), "வித்திய

வெண்முளை கள்வனறுக்கும்" (29) என இந்நூலுள்ளும் கூறுப. நெற்கதிரையும், பூவையும் கொண்டு சென்று, எதிர்காலம் நோக்கி, தன் மண்ணளைக்கண் நிறைத்துவைத் தொன்றுதல்பற்றி, "செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன், தண்ணக மண்ணளைச் செல்லுமூரன்," "கள்வன், தண்ணக மண்ணளை நிறைய நெல்லின், இரும்பூவுறைக்கு மூரன்" என்று இந்நூலுட் கூறுப.

நண்டுகள் நாவற்கனியைத் தம் கவைத்த காற்கால் பற்றிச் சுமந்துண்டல் பார்த்தற்கு இன்பம் பயக்கும். அதனிலும் இன்பம் தருவது, அது தன் பெடைநண்டிற்கு அக்கனியை நல்குவதாகும்; ஆண்நண்டு கனியைச் சுமந்துநிற்ப, பெடைநண்டு அதனைத் தழுவியமர்ந்து அதனுடன் கூடியுண்ணும். அக்காலை, அவற்றை நோக்குவார்க்கு, அவ்விரண்டனையும் பிணித்து நிற்கும் காதலன்பின் பெருமாண்பு தோன்றி மகிழ்வுறுத்தும். இதனைக் கூர்த்துநோக்கிய சான்றோர், "அகலிலை நாவலுண்டுறை யுதிர்த்த, கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன், தாழை வேரளை வீழ்துணைக் கீடூஉ மலவன்" (அகம். 380) என்றும், "பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப், புன்கால் நாவற் பொதிப்புற இருங் கனி, கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப், பல்கா லலவன் கொண்டகோட் கூர்ந்து, கொள்ளா நரம்பி னிமிரும் பூசல்" (நற். 35) என்றும், "சேய்கண் டனையன் சென்றாங் கோரலவன்றன் சீர்ப்பெடையின், வாய்வண் டனையதொர் நாவற்கனி நனி நல்கக்கண்டு, பேய்கண் டனையதொன் றாகி நின்றான்" (கோவை. 84) என்றும் கூறுப.

அலவன் என்பது ஓடுமூடிய பஃறுக் காற்களையுடைய உயிர்வகை. இதனை ஓட்டுமீன் (Shell Fish) என்பர் சிலர். ஆயினும் மீனுக்குரிய இயல்புகள் முற்றவும் இன்மையின் மீன் என்றல் நிரம்பாது என்பர் உயிர்நூலறிஞர். தமிழ்நூலார்க்கும் இஃது உடம்பாடன்று.

இதன் உடலின் ஒருபகுதி ஓடொன்றில் அடங்கியுளது; உடற்பொருளை ஆராய்ந்த விடத்து, அது, கடல் நீரிற்பிறக்குஞ்சுண்ணாம்பினை லாகிய தென்பது தோன்றுகிறது. இதன்நிறம் பொன்மையும் சாம்பல்நிறமும் எனப் பலநிறப்படும்.

இதன்தலை உடலின் வேறுபட்டதன்று; ஓட்டின் உள்ளே, ஒருபுறத்தே, கொடுக்குகளுக்கு இடையேயுளது; இதன்வாய், இரண்டு தசைச் செதிள்களால் மூடப்பட்டுள்ளது. வாயின் இருமருங்கிலும் இரண்டு உணரிகள் (Feelers) உண்டு. அவை நீண்டு பல மூட்டுக்களால் (Joints) இணைப்புற் றிருக்கின்றன. இரண்டு சிறு தண்டுகளின் நுனியில் கண்கள் அமைந்திருத்தலின், அலவன் நாற்றிசையும் காணக்கூடிய நோக்குடையது. தண்டின் நுனிக்கண் இருத்தலின், கண்களை வேண்டும்போது நீட்டவும் சுருக்கவும், ஒடுக்கவும் கூடும். கண்சுமந்து நிற்கும் தண்டு வேப்புநனையும், நொச்சியரும்பும் நிகர்த்தலின், அவற்றை உவமை கூறினர் சான்றோர்.

இதன்தேகத்தின் அடிப்பகுதியில் செதிள்கள்பல உண்டு; அவை அடிக்கடித் தூய நீரை வாய்க்கண் இறைத்தலின், நண்டு, உயிர்க்காற்றுப் (Oxygen) பெறுகின்றது. மருங்குக்கு ஐந்தாகப் பத்துக் கால்கள் உடையதாயினும் தலைப்பகுதியின் இருபுறமும் இரண்டு கவைத்த கொடுக்குகள் நின்று, இரைப்பொருளைப் பற்றவும், துண்டிக்கவும், வேண்டுவனசெய்யவும் கைபோற் பயன் படுகின்றன. ஏனையெட்டும் கூரியஉகிர் ஒன்றே யுடையவாய் நுண்மணலை வரிக்கும் தோன்மையுடையவாம். ஒவ்வொருகாலும் பல மூட்டுக்களால் இணைப்புற்றிருக்கின்றது என்று முன்னே கூறினும்.

உறுப்புக்களுள் யாதானும் ஒன்று ஊறுபட்டு ஒடிந்திடின், அதனைப் போக்குதலும், புதியதொன்று முளைத்தலும் அலவனுக்கு இயற்கையே அமைந்தன. மேலும், உடல்

வளர்ச்சிக்கேற்ப, ஓடுகளும், காலந்தோறும் உகுதலும், பிறி தொன்று தோன்றுதலும் உண்டு. இவ்வண்ணம் ஓடுமாற்றும் இயல்பினை ஆங்கிலத்தில் மோல்ட்டிங் (Moulting) என்று கூறுப. புதிதாய்த் தோன்றும் ஓடு, முதற்கண் மென்மைத் தாயினும், நாளேற முதிர்ந்து வலிதாம். தொல்லோடு நீங்க, புத்தோடு தோன்றி வன்மை பெறுத இடைக்காலம், அவ்வனுக்கு அல்லற் காலமாகும். ஆகலின், அதுபோது அஃது எங்கேனும் பதுங்கிக் கிடக்கும்.

தாயலவன் சினைபீனுங் காலத்து, அதன் வாலின்கீழ் உள்ள சிறுமயிர்களில், அதன் சினைகள் ஒட்டிக்கொண்டு கிடந்து, பொரித்தவுடன், நெடிய வாலொன்றும், நீண்ட வுணரி யொன்றும் பெற்று, நண்டினத்தைச் சாராத புத்தின வுயிராய்த் தோன்றும். உயிர்நூற்புலவரை யன்றி ஏனையோர் அதனை நோக்கியவழி, அஃது அலவன் பயந்த அன்புடைச் சினை யென அறிதல் இயலாது. அலவனது முழுவுருவமும் அமைவதற்குள் அஃது அடையும் மாறுதல் பலவாகும்.

சினைபயந்த அவ்வன் உடல் சுருங்கிப் பின், முன்னை யினும் பருத்தல் வேண்டி, ஓடு மாற்றத் தொடங்கும். ஓடு கழன்ற அலவன், மெலிந்து, புத்தோடு பெற்று வன்மை பெறுங்கால், அதன்வாலில் ஒட்டிக் கிடந்த சினை, பொரித்துத் தாயலவனை நீங்கும். சினை பயவாமுன் இருந்தநிலைமையின் வேறாய், புத்தோடும் பருவுடலும் பெறுவான் புலர்ந்து ஓய்ந்து ஒடுங்கிக் கிடக்கும் நண்டு இறந்ததுபோலத் தோன்று தலின், நம் நாட்டுப் பண்டைச் சான்றோர், "தாய் சாவப் பிறக்கும் புள்ளிக் கள்வன்" (ஐங்.24) என்பாராயினர்.

நம்நாட்டில், இழிந்த மக்களுட்பலர் நண்டினை யுண்பர். மேனாட்டவரும் இதனைப் பிடித்துண்பர். நண்டுணவு எளிதிற் செரிக்காது என்று மருத்துவ நூலார் கூறுவர்.

உயிர் வரலாறு கூறும் ஆசிரியன்மார், நண்டினம் உலகில் ஏறக்குறையப் பத்து நூறாயிரம் (Ten millions)

யாண்டுகட்கு முன் தோன்றி யிருத்தல் வேண்டும் என்கின்றனர்.

நண்டின் மூக்குணர்வு மிக்க நுட்பமானது. ஒளி குறைந்த காலங்களிலும், பெரும்பான்மையும் இருட்போதுகளிலும் நண்டினம் இரை தேடிச் சேறலானும், உணவுப் பொருளினும் மிக்க புதியவற்றையே நாடி யுண்டலானும், அவற்றின் நாற்றத்தால் இடமறிந்து பற்றியுண்ணும் அமைதியானும், அதன் மூக்குணர்வு நுண்ணிதாதல் வேண்டும் * என்பர். மற்று, ஆசிரியர்: பேராசிரியர், "நண்டிற்கு மூக்குண்டோ வெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது" என்பாராயினர்.

நண்டினத்துள் பலவகை உண்டு. நீரில்வாழ்வனவும், தரையில் ஊர்ந்துசெல்வனவும் பொதுவகை. நீர்த்தேளும் (Hermit crab), தேண்மீனும் (Shrimp) நண்டினத்தைச் சேர்ந்த சிறப்புவகை. இவற்றைப்பற்றிய குறிப்புக்கள், ஈண்டு வேண்டப் படாமையின் விரித்திலம்.

நண்டுகள் மிக்க சூழ்ச்சியும், கூட்டமாய் வாழும் இயல்பும், நெடுந்தூரம் இரை தேடிச் செல்லும் ஓட்பமும் உடையனவாகும். வலைகளாற் கவர்ந்து, கரைமேற் கொணரப் பட்ட நண்டுகளுட் சில அவ்வலையிலிருந்து வெளிப்பட்டவுடன் இறந்தனபோன்று கிடந்து, வலைஞன் அற்றமறிந்து

---

* "We must suppose the Crab's sense of smell to be acute, for, unlike the lobster which likes its food *high*, the crab will take nothing but fresh meat, unless sorely pressed. Therefore, as it shuns the light for hunting when under observation and must feed mainly by night and as at the best its watery home must be rather gloomy, we may take it that *its nose must be very sensitive to guide it to the bait to which it scurries.* It will eat fresh meat and fish." —*Book of Knowledge.*

ஓடி ஒளித்துக்கொள்ளும். கூட்டமாய்ச் சென்று இரைதேடும் இயல்புடைய நண்டினம், ஒருகால், இந்த சமுத்திரத்து நிலப் பகுதி காணச் சென்றார் சிலர், உறங்கிக்கிடந்த அமையம் நோக்கி, அவர்தம் உடைகளையும், அவர் பிடித்து வைத்த மீன்களையும் துண்டித்துக் கவர்ந்து சென்றன என்று ஆங்கிலேயர் ஒருவர் கூறுகின்றார். அங்ஙனம் சென்றாருள், ஒருவர், "நாங்கள் மாத்திரம் உடனே விழித்திலேமாயின், எங்களை அந்நண்டினம் கொன்றேயிருக்கும்" என்று எழுதுகின்றார். தேங்காய் பறிக்கத் தென்னையின் மேல் ஏறினார் ஒருவர், ஆண்டுத் தேங்காயொன்றில் நண்டிருப்பக் கண்டாராம்; கடற்கரைக்கண் வாழும் நண்டுகள் சில, பல மைல்களுக்கப்பால் உலவக் கண்டதாக ஆங்கிலேயர் ஒருவர் உரைத்துள்ளார். இவ்வாறு உயிர்களின் இயல்பினை அவ்வப்போது கண்ட பெருமக்கள் எழுதிவைத்துள்ளன பல கிடைக்கின்றன. அவற்றை யீண்டு எழுதத் தொடங்கின், இந்நூல் நண்டிற்கே யுரித்தாமென்று அஞ்சுகின்றாம்.

21. முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ னாம்ப லறுக்குந்
தண்டுறை யூரன் றெளிப்பவும்
உண்கண் பசப்ப தெவன்கொ லன்னாய்.

"புறத்தொழுக்கம் எனக்கு இனியில்லை" என்று தலைமகன் தெளிப்பவும், அஃது உளதென்று வேறுபடும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

ப.—ரை:— "*முள்ளி நீடிய.........ஊரன்*" *என்றது தனக்கு உரித்தாகிய இல்லின்கண் ஒழுகிப் பரத்தையரோடு தொடர்ச்சி யறுப்பான் என்றவாறு.*

பு.—ரை:— *நீர்முள்ளிச் செடிகள் நீண்டு வளர்ந்துள்ள பழைய நீர்மிக்க அடைகரையின்கண், புள்ளிகளையுடைய நண்டு, அந்நீரிற் படிந்து கிடக்கும் ஆம்பலின் தண்டினை*

யறுக்கும் குளிர்ந்த துறையினையுடைய வூரன் யாம் தெளியும்படி, புறத்தொழுக்கம் எனக்கு இனியில்லை என்று கூறியிருப்பவும், அன்னாய்! அதனைத் தெளியாது நின் மையுண்ட கண்கள் பசந்து வேறுபடுவ தென்னை? கூறுக எ. று.

"முண்டகங் கலித்த முது நீரடைகரை" (அகம். 80) என்றாற் போல, "முள்ளி நீடிய முதுநீரடைகரை" யென்றார். முள்ளி, முட்களையுடையது; காரண விடுகுறி. இதன் மலர் நீலமணி போல்வதென்பது, "மணிமருள் மலர முள்ளி" (அகம். 236) என்பதனாலறிக. "மணிப்பூ முண்டகம் கொய்யே னாயின்" (நற். 191) என்றார் பிறரும். புள்ளியுடைமை நண்டிற்கு அணியாதலின், புள்ளிக்கள்வன் எனப்பட்டது. "பொறிமா வலவன்" (சிலப். 10:91) என்றார் இளங்கோவடிகளும். ஆம்பல், முதலிற் கூறிய சினையறிகிளவி. கூரிய உகிரால் தண்டினைப் பற்றித் துண்டித்தல் நண்டிற்கு இயல்பாகலின், ஆம்பல் அறுக்கும் என்றார். கூரிய உகிருடைமையை, "கிரவும் கொடுந்தாள், அளைவாழலவன் கூருகிர்" (குறுந். 351) என்றார் பிறரும். "வயலைச் செங்கொடி கள்வ னறுக்கும்" என்றும், "கள்வன், வள்ளை மென்கா லறுக்கும்" (ஐங் 25, 26) என்றும் பிறண்டும் கூறுப. உம்மை, தெளியாமை தோன்ற நின்றது. புறத்தொழுக்கம் என்பது முதலாயின எஞ்சி நின்றன. எவன், அறியாப் பொருள் வயிற் செறியத் தோன்றும் வினாவின் கிளவி. கொல், அசைநிலை.

தலைமகற்குப் புறத்தொழுக்க முளதாகியவழி, அதனையறிந்த தலைவி அவனொடு புலந்தவிடத்து, அவள் தெளியத் தகுவனவற்றை அவன்கூறியது, தான் அறிந்துளாளாகலின், தேளிப்பவும் என்றும், தெளியாமை ஆகா தென்றற் குரிய ஏதுவினை உள்ளுறையாற் கூறியும், அவள் தெளியாது, புலத்தலே பொருளாகக் கொண்டு நிற்றலின் உண்கண் பசப்ப தெவன்கொல் என்றும் கூறினாள். தலைமகன் தெளித்ததே யன்றித் தானும் அஃதில்லையென வுணர்ந்து உள்ளுறுத்

துரைத்தழியும் அவள் தெளியாமைக்குக் காரணம் அறிந்திலள் என்பது தோன்ற, பசப்பது எவன் என்றாள். இஃது, "அடங்காவொழுக்கத் தவன்வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்" (தொல். பொ. 150) தோழி கூறியது. அடங்கக் காட்டுதல் உள்ளுறையாற் பெற்றாம்.

அடைகரைக்கண் வாழும் அலவன் ஆம்பற்பூவை யறுக்கு மூரன் என்றதனால், தலைவன் தனக்குரித் தாகிய இல்லின்கண் ஒழுகிப் பரத்தையர் தொடர்ச்சி யறுப்பான் என உள்ளுறை கொள்க. இஃது உவமமருங்கிற் றோன்றும் இனிதுறுகிளவியின் பாற்படும்; பரத்தையர் தொடர்பின்மை தலைமகட்கு இன்பம் பயப்பதாம். மெய்ப்பாடு: மருட்கை. பயன்: கிவப்பாற்றுவித்தல். (க)

22. அள்ள லாடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேரளைச் செல்லு மூரன்
நல்ல சொல்லி மணந்தினி
"நீயேன்" என்ற தெவன்கொ லன்னாய்.

களவினிற் புணர்ந்து பின்பு வரைந்துகொண்டு ஒழுகாநின்ற தலைமகற்குப் புறத்தொழுக்க முளதாயிற்றாக, ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப.—ரை:—"நல்ல..............அன்னாய்" என்றது இக்காலத்து இங்ஙனம் ஒழுகுகின்றான், அக்காலத்து அங்ஙனம் கூறியதென்கொல்? எ. று. சேறாடிய கள்வன் முள்ளி வேரளைச் செல்லு மென்றது, பிறர் கூறும் அலரஞ்சாது பரத்தையர் மனைக்கட் செல்வான் என்பதாம்.

பு.—ரை:— அன்னாய்! சேறு படிந்த புள்ளிகளையுடைய அலவன் முள்ளியின் வேர்க்கண் அமைந்த வளையின் கட்புகும் ஊரன், களவுக்காலத்து, நன்மைபயக்கும் சொற்களைச் சொல்லி மணந்துகொண்டு கற்புக்காலமாகிய இப்பொழுது, நின்னைப் பிரியேன் எனக் கூறியதன் கருத்து என்னையோ? கூறுக எ. று.

அலை, நண்டுவாழுமிடம். "கள்வன், தண்ணக மண்ணளைச் செல்லு மூரன்" (27) என இந்நூலுள்ளும், "கவைத்தா ளலவன் அளற்றளை சிதைய" (பெரும்பா. 208) எனப் பிற நூலுள்ளும் வருமாறு காண்க. களவுக்காலத்து என்பது முதலாயின அவாய்நிலை. கூடினோர்க்குப் பிரியாமை மேலும் நன்மைதருவன பிற இன்மையின், நன்மை, ஈண்டுப் பிரியாமை மேற்று. அக்காலத்து அச்சொல் தேன்மயங்கு பாலினும் இனிதாயிருந்தமையின், நல்ல சொல்லி என்றாள். "தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்" என்றும், "நல்குவர் நல்ல கூறினும்" (அகம். 241) என்றும் பிறரும் கூறுப. நீயல், நீங்குதல்; "நீயலேன் என்றென்னை யன்பினாற் பிணித்துத்தம், சாயலிற் சுடுதலல்லது" (கலி. 137) என்றாற்போல. கூறுக என்பது சொல்லெச்சம்.

களவு கற்பென்னும் இருவகைக் கைகோளினும், பிரியாமைச் சொல் நிகழ்வதாயினும், களவின்கண் வரைவு கண்ணியதாய் இன்பப்பயத்த தாகலின், நல்லசொல்லி என்றும், கற்பின்கண், அது பொருண்மைக் கேதுவாய், புறத்தொழுக்கத்துப் பிரிவுண்மை புலப்படுத்து நிற்றலின், அவன் கூற்றினையே கொண்டெடுத்தும் கூறினாள். நீயேன் என்றது தலைமகன்கூற்று. "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவுமாகும்" (தொல். பொ. 43) என்பதனால் தலைவன்கண் நிகழ்ந்ததனைத் தலைமகள் நினைந்து கூறினாள். க விற்போல், ஈண்டு, அஞ்ச வேண்டுத லின்மையின், எவன்கொல் என்றாள். இஃது அழிவில் கூட்டத் தவன் பிரிவாற்றாமை. 'நீயேன்' என்றதனால், தலைமகன்பாற் பிரிவும், உள்ளுறையால் புறத்தொழுக்கமும் கூறியவாறு. கூறவே, அக்காலத்து அவ்வாறு கூறியோன் இக்காலத்து இவ்வாறு கூறியொழுகுதல் என்னை என்றாளாம். ஆயினும், தலைமகன்பால் முரணிய சொன்னிகழ்ச்சி யுண்டாயிற்றென ஆராய்ந்து கூறல் ஆற்றாமையாற் கூறுவார்க் கிலக்கண மன்மையான், இக்காலத்து இவ்வாறு கூறியொழுகுவோன், அக்காலத்து அவ்வாறு கூறியதென்னை? என்றாள் என்பது கருத்தாகக் கொள்க. பழையவுரை

காரரும், "இக்காலத்து இங்ஙனம் ஒழுகுகின்றான்; அக்காலத்து அங்ஙனம் கூறியது என்கொல் என்றவாறு," என்றே கூறுதல் காண்க. இவ்வாறு தலைமகன் வஞ்சித்தான் என்பதுபடக் கூறுதல் தலைமகட்கு வழுவாயினும், "மங்கல மொழியும் வைஇய மொழியும், மாறிலாண்மையிற் சொல்லிய மொழியும், கூறியல் மருங்கிற் கொள்ளுமென்ப" (தொல். பொ. 244) என ஆசிரியர் கூறுதலால் அமையுமென்க.

அலவன் அள்ளலாடியதை நினையாது, முள்ளிவேரளைக் கணபுகும் ஊரன் என்றதனால், புறத்தொழுக்கத்தால் தன்னைப் பிறர்கூறும் அலர்க்கஞ்சாது பரத்தையர் மனைக்கட்புகுகின்றானென உள்ளுறை காண்க. "களவுங் கற்பும் அலர்வரை வின்றே" (தொல். பொ. 162) என்றதனால், அலர் கூறினாள். இது புறஞ்சொல் மாணாக் கிளவி "நல்லசொல்லி மணந்து" என்பது, மறைந்தவை யுரைத்தல். ஏனை மெய்ப்பாடு: இளிவரல். பயன்: ஆற்றாமைகூறல். (உ)

23. முள்ளி வேரளைக் கள்வ னாட்டிப்
பூக்குற் றெய்திய புனலணி யூரன்
தேற்றஞ் செய்துநப் புணர்ந்தினித்
தாக்கணங் காவ தெவன்கொ லன்னாய்.

இதுவுமது.

ப.-ரை:— தன்னூர் விளையாட்டுமகளிர் அளையின்கண் வாழும் அலவனை அலைத்துப் பூகதற்று விளையாடினாற் போலத் தனபனைக்கண்வாழும் நம்மை வருத்திப்புறத்துப்போய் இன்பம் நுகர்வான் எ. று.

பு.-ரை:—அன்னாய்! மகளிர், நீர்முள்ளியின் வேர்க்கண் உள்ள வளையின்கண் வாழும் அலவனை அலைத்தும், பூக்களைப் பறித்தும் விளையாட்டெய்திய புனலணியூரன், களவுக் காலத்து, நாம் தெளியத்தக்குவன கூறித் தெளிவித்து நம்மை மணந்துகொண்டு, இப்பொழுது, ஒழுக்கம், உரையாகிய

இரண்டினாலும் தீண்டிவருத்தும் தெய்வமாவது என்னையோ கூறுக எ. று.

அலவனையலைத்தலும், பூக்குறுதலும் மகளிர்விளையாட்டாகலின், மகளிர் என்பது வருவிக்கப்பட்டது. அலவனையலைத்தல் மகளிர் விளையாட்டாதல், "இலங்குவளைதெளிர்ப்ப வலவனாட்டி, முகம்புதைகதுப்பினள் இறைஞ்சிநின்றோளே" (ஐங். 197) என இந்நூலுள்ளும், "சேர்ப்பே ரிரனை யலவற் பார்க்கும் சிறுவிளை யாடலு மழுங்க" (நற். 123 *) எனப் பிறநூலுள்ளும் கூறுப. எய்திய வூரன், புனலணியூரன் என இயைக்க. புனலணியூரன், புனலால் அழகுபெற்ற ஊரன். தேற்றம்செய்து என்றது ஒருசொல்லாய்த் தேற்றி யென்னும் பொருட்டு. நப்புணர்ந் தென்பது, "நப்புணர் வில்லா நயனிலோர் நட்பு" (நற். 165) என்புழிப்போல, ஐகாரவேற்றுமைத்திரிபு புணர்ச்சி முடிபு. "மெல்லெழுத் துமிகுவழி" (தொல். எழுத். 157) என்ற சூத்திரத்து, "அன்ன பிறவும்" என்றதனாலமைந்தது. ஒழுக்கம், புறத்தொழுக்கம். உரை, "நீயேன்" என்பது போல்வன. ஒன்றுநின்றே ஏனையது முடிக்கும் என்னும் இலக்கணமுறையால் இனி என்றது கொண்டு, களவுக்காலம் வருவித்துரைக்கப்பட்டது. அணங்கு, காமநெறியால் உயிர் கொள்ளும் தெய்வமகள். தாக்குதல், தீண்டுதல்.

களவின்கண், வன்புறையாலும், களவுக்குரிய ஒழுக்க நெறியாலும் தன்னையின்றி யமையான் என்பது தோன்ற ஒழுகித் தன் நெஞ்சுகவர்ந்துகொண்டான் என்பாள், தேற்றம் செய்து என்றும், புணர்ந்தவழி, என்றும் பிரிவிலனும் என்பது படக் கூடினான் என்பாள், நப்புணர்ந்து என்றும், இவ்வாறு தன்னெஞ்சினைக் கவர்ந்து கொண்டதன் மேலும், புறத்

---

*"செம்பேரிரனை யலவற்பார்க்கும் சிறுவிளையாடலுமழுங்க' என்பது அ. நாராயணசாமியையர் கொண்டபாடம். ஈண்டு குறித்தது, சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் கொண்ட பாடம்.

தொழுக்கத்தால் தான் மேனிநலங் குன்றி வருந்துமாறு செய்தான் என்றற்குத் தாக்கணங்கு என்றும், அவ்வாறுதல் அவற்கியல்பன்றென்பது, பண்டு கூடியவழி இன்மையினால், அறிந்துளா ளாகலின், ஆவது எவன்கோல் என்றும் கூறினாள். தீண்டுதலும், தீண்டப்பட்டார் நெஞ்சுகவர்ந்து துன்புறுத்த லும் தாக்கணங்கின் செயல் என்பது, "தெள்ளரிச் சிலம் பார்ப்பத் தெருவின்கட் டாக்கி்நின், உள்ளங்கொண்டொழித் தானைக் குறைகூறிக் கொளநின்றாய்" (கலி. 69) என்பதனு லறிக. இதனால் தலைவிமாட்டுப் பொறாமை யெனப்படும் மெய்ப்பாடு தோன்றிற்று. "கிழவனை மகடூஉப் புலம்பு பெரி தாகலின், அலமரல்பெருகிய காமத்துமிகுதிக்கண்" (பொ.147) தலைமகன் செய்கைவேறுபாடு கண்டு தலைவி வருந்திக்கூறிய வாறு.

மகளிர் அலைவாழ் அலவனை யலைத்துப் பூக்குற்று விளையாட்டெய்தும் ஊர் என்றதனால், தலைமகன் மனைவாழும் தன்னைவருத்திப் பரத்தையர் மனைக்கண் இன்பம்நுகருகின் றான் என உள்ளுறை கொள்க.

இனி, அலவனை ஆட்டி, பூவைக்குற்று எய்திய புனல் அணிந்த ஊரன் என்றுகொள்ளின், ஆட்டுதலும், பூக்குறுத லும் புனற்குரிய வினையாகாமையின், அப்பொருள் சிறவாமை யறிக. மெய்ப்பாடும் பயனு மவை. (௩)

24\. தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்
எய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கோ லன்னாய்.

பரத்தையருள்ளும் ஒருத்தியைவிட்டு ஒருத்தியைப்பற்றி யொழுகுகின்றா னென்பது கேட்ட தோழி வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகட்குச் சொல்லியது.

ப.-ரை:— "தாய்சாப்பிறக்கும்...............அவனூர்" என்றது, தொன்னலம்சாம் வண்ணம் பிறக்கும் பொய்யுடனே செய்தனசிறைதூயத் தோன்றும் அறனின்மையையு முடையான் எ. று.

பு. ரை :—அன்னாய், தாய சாவப் பிறக்கும் புள்ளி பொருந்திய அலவனோடு, தன் பார்ப்பினையே தின்னும் முதலையினையுடையது மகிழ்நனுடைய வூர்; அவன் இங்கு எய்தினனாயிற்றோ? அங்ஙன மெய்துவோன், பொன்னாலாகிய தொடிகள் ஒலிக்கத் தன்னைக் கூடிய மகளிரது நலத்தை நுகர்ந்து வைத்தும், அதுகெட, பின், அவரைத் துறப்பது யாது கருதியோ? கூறுக எ. று.

சாவவென்னும் செயவெனெச்சம் இறுதிவகரம் கெட்டது; "சாவ வென்னுஞ் செயவெ னெச்சத், திறுதி வகரம் கெடுதலு முரித்தே", (தொல். எழுத். 209) என்றார் ஆசிரியரும். மகிழ்நன் என்பது மருதத்துத் திணைநிலைப் பெயர். "தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" (பொ. 560) என்பதனால், முதலையினது பிள்ளை பார்ப்பு எனப் பட்டது. இனிப் பேராசிரியர், முதலை தவழ்வனவற்றுள் அடங்குமென்பார், "ஆமையும் முதலையும் நீருள் வாழினும் நிலத்தியங்குங்கால் தவழ்பவை யெனப்படும்" என்றார். தன் பார்ப்பினுள் நோயுற்று வலியிழந்தவற்றைத் தன் பகையினம் பற்றி, அவற்றின்வழியே, பிறவற்றிற்கும் தனக்கும் ஊறு செய்யுமென வுணர்ந்து, தின்னும் இயல்பிற்றாதல்பற்றி, "பிள்ளை தின்னும் முதலை" எனப்பட்டது. இதன் இயல்பினை, "தன்பார்ப்புத் தின்னும் அன்பில்முதலை" (ஐங். 41) என்புழிக் கூறுதும். "தாயுயிர் வேண்டாக் கூருகிர் அலவன்" (தொல். பொ. 157. நச். மேற்.) என்று பிறரும் கூறுப. செய்யுளாகலின், சுட்டு, முற்படவந்தது. பொலந்தொடி, பொன்னென்னும் சொல்லின் செய்யுண்முடிபு பெற்றது. தெளிர்த்தல், ஒலித்தல்; "செறிதொடி தெளிர்ப்ப வீசி" (நற். 20) என்பதனாலறிக. "முயங்கியவர் நலங்

கொண்டு துறப்பது" என்றது சேரியோர் கூற்று. இது, கூற்றவண் இன்மையிற் கொண்டெடுத்து மொழிந்தது; "ஊரு மயலும் சேரி யோரும், நோய்மருங் கறிநரும் தந்தை யும் தன்னையும், கொண்டெடுத்து மொழியப் படுவ தல்லது கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்" (தொல். பொ. 503) என்பது இலக்கணம். நன்று சினையினும் காலத்து இறக்கு மென்பது பண்டையோர் கொள்கை. அஃதுண்மை யன்மை மேலே கூறினும்.

உள்ளுறையால், தலைமகன் கொடுமை கூறும்வகை யால், அவன்வாராமைக்குரிய ஏதுவுணர்த்தினமையின், அவன் அன்புடைய னென்றுதல், வருவனென்றுதல் கோடல் அமை யாது என்னும் கருத்துப்பட வாயில்மறுக்கின்றமையின், எய்தினனுகின்று கொல்லோ என்றாள். ஓகாரம், வாரான் என்னும் துணிவையே வற்புறுத்திற்று. பரத்தையருள்ளும் ஒருத்தியைக் கைவிட்டு, வேறொருத்தியைப்பற்றி யொழுகு கின்றா னென்பது கேட்டு, அப்பெற்றியோன் ஈண்டெய்தி னும் மீட்டும் பிரிவே நிகழ்த்தி, எம் நலம் கெடுவித்தலையே செய்வானாகலின், அவன் பொருட்டு வாயில்வேண்டுவ தென்னை என்பாள், முயங்கியவர் நலங்கொண்டு துறப்ப தேவன் கொல்? என்றாள். புணர்ந்தோரைப் பிரிந்தவழி, அவர் மேனி வேறுபட்டு, அழகு வாடுதலின், முயங்கியவர் நலங்கொண்டு என்றும், முயங்கியவழிப் பிறந்த இன்பச்சிறப் பினை, பொலந்தோடிதெளிர்ப்ப என விசேடித்தும் கூறினாள். துறப்ப தென்றதனால், அத்தகைய இன்பத்தைத் தம் முயக்கத் தால் உதவினார்பால் உளதாகும் தொடர்பு அற நீங்கும் அன் பின்மை கூறியவாறு. இவ்வாற்றால் தலைமகனது செயற் கொடுமையினை வெளிப்படக் கிளத்தல் வழுவாயினும், வாயில் மறுக்கும் குறிப்பினால், ஆற்றாமையாற் கூறுதலின் அமையும் என்க. "வாயிற்கிளவி வெளிப்படக் கிளத்தல், தாவின் றுரிய தத்தங் கூற்றே" (தொல். பொ. 241) என்பது விதி.

தாய்சாவப்பிறக்கும் கள்வனையும், பிள்ளை தின்னும் முதலையினையுமுடைய வூர் என்றதனால், முயங்கிய மகளிர்

தொன்னலம் கெடுக்கும் அன்பின்மையும், இனி முயங்கும் மகளிர் நலம்நுகர்ந்து பிரியும் அருளின்மையும் உடையன் என்றுளாம். இதுதலைமகள் கொடுமை யுணர்த்திய துனியுறு கிளவி. இதுவே பழையவுரைகாரர்க்கும் கருத்தாதல் அறிந்து கொள்க. மெய்ப்பாடு : இளிவாலைச் சார்ந்தவெகுளி. பயன்: வாயின் மறுத்தல்.

பொலந்தொடி தேளிப்ப, தெழிப்ப எனவும் பாடமுண்டு. முயங்குமிடத்துத் தொடி தெளித்தல், நெறியன்மையின், அது பாடமன்மை யறிக. 'தெழித்தல் என்பதும் "எல்வளை தெழிப்ப" (குறிஞ். 167) என்புழிப் போலத் தெளிர்த்தற் பொருட்டே. (௪)

25. அயல்புறந் தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி கள்வனறுக்கும்
கழனி யூரன் மார்புபலர்க்(கு)
இழைநெகிழ் செல்ல லாகு மன்னாய்

இதுவுமது.

ப.-ரை :— அயல்புறந்தந்த......................அறுக்கும் என்றது எம்புதல்வன் வருந்துவதும் உணராது நம்மை வருத்துவான் எ. று.

பு.-ரை :—அன்னாய் ! மனைக்குஅயலில் நட்டுப்பேணி வளர்த்த, முற்றாத பசிய காயினையுடைய வயலையின் சிவந்த கொடியை அலவன் தன் கூருகிரால் அறுக்கும் கழனியை யுடைய வூரன்மார்பு, ஒருவர்க்கே யன்றிப் பலர்க்கு இழை நெகிழத்தக்க இன்னாமையைத் தருவதாகும் எ. று.

அயல் புறந்தந்த வயலை, பைங்காய் வயலை என இயையும். புறந்தருதல், ஓம்புதல். மனைக்கண்ணேயன்றி வயற்புறத்தும், வயலை நட்டுவளர்த்தல் மரபாதல்பற்றி, "அயல் புறந்தந்த வயலை" எனப்பட்டது. "மனைநடுவயலை" (21)

என்று முற்கூறினர். புனிறு, ஈன்றணிமை; ஈண்டுக் காய் தோன்றிய செவ்வி. மார்பு, செல்லலாகும் என இயைக்க. செல்லல், இன்னாமை. "செல்ல லின்னா லின்னா மையே" (தொல். சொல். 302) என்ப. இழை நெகிழ் செல்லல், இழை நெகிழ்தற்குக் காரணமாய செல்லல்; "இழைநெகிழ்பருவரல்" (நற். 70) என்று வெள்ளி வீதியார் கூறியவாற்றாலும் இப் பொருண்மை துணியப்படும்.

பரத்தையருள்ளும், ஒருத்தியைக் கைவிட்டு, ஒருத்தியைப்பற்றி யொழுகுகின்றான் என்பது கேட்டுப் பொருத வுள்ளத்தளாய் வாயிலாய்வந்தார் கேட்பக் கூறுதலின், பலர்க்கு இழைநெகிழ் செல்லலாகுமன்றாய் என்றாள். எனவே, அவன்மார்பு நினைந்து மேனிவேறுபட்டு, இழைநெகிழ்ந்து, அவள் வருந்துவது உள்ளுறையால் பெறும். கூடினார் மலையகம் குளிரமுழ்குமாறு, விரிந்தகன்று ஊற்றின்பம் மிகப் பயந்து, பிரிவின்கண் தன்னையே நினைந்து இணைந்தேங்கி மெலிவிக்கும் இயல்பிற்றாகலின், மார்பு எனப் பிரித்துச் சிறப்பித்தாள். "தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத், தாய் முகநோக்கி வளர்ந்திசினாங், கதுவே யையநின் மார்பே, அறிந்தனை யொழுகுமதி யறனுமாரதுவே" (ஐங். 44) எனப் பிறண்டுங் கூறுமாற்றால் இன்பமும், "கணங்கொளருவிக் கான்கெழு நாடன், மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்" (அகம். 22) எனப் பிரிவினால் துன்பமும் பயக்கும் இயல்பிற்றுமாறு சான்றோர் கூறுதல் காண்க.

வயலைச் செங்கொடியின் பசிய காய் வருந்த, அதன் கொடியை அலவன் அறுக்கும் என்றதனால், புதல்வற் பயந்து மனையகத்திருக்கும் நம் நலத்தினை, நம் புதல்வன் வருந்தச் சிதைக்கின்றான் என உள்ளுறுத்துரைத்தாளாம். இனி, அயல் வளர்ந்த வயலையின் காய் வருந்த, செங்கொடியை அலவன் அறுக்கும் என்றது, புறத்தே தன்னைக்கூடி, தன் பெண்டிராய பரத்தையரும் வருந்த, அவர்தொடர்பறுத் தொழுகுகின்றான் என வுரைப்பர். அப்பொருண்மை, "பலர்க்கு இழைநெகிழ்

செல்ல லாகும்" என வெளிப்படக் கூறிய வாற்றானும் அடங்கும். மெய்ப்பாடும் பயனு மவை. (ரு)

26. கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து கள்வன்
வள்ளை மென்கா லறுக்கு மூரன்
எம்மும் பிறரு மறியான் ;
இன்ன னாவ தெவன்கொ லன்னாய்.

தலைமகற்கு வாயிலாகப்புகுந்தார், "நின் முனிவிற்கு அவன் பொருந்தானின்றான்," என்றவழி, தலைமகட்குத் தோழி "அவன்பாடு அஃதில்லை" என்பதுபடச் சொல்லியது.

ப.—ரை :—"துணைதுறந்து...............ஊரன்" என்றது தான் துணையாகக் காதலித்தொழுதுகின்ற பரத்தையையும் நீங்கி, எம்மையும் வருத்தி ஒழுகுவான் எ. று.

வேறுரை :—"கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து" என்றது நின்னைத்துறந்து எ. று. "வள்ளைமென்காலறுக்கும்" என்றது பரத்தையருள்ளும் ஒருத்தியை விடுவதும் ஒருத்தியைப் பற்றுவதுமாகி அவர்களை வருத்துகின்றான் எ. று. "எம்மும் பிறருமறியான்" என்றது எம்மையும்பிறரையும்...............

பு.—ரை :— கரந்தைக்கொடி படர்ந்த வயலின்கண், அலவன் தன் பெடையினைத்துறந்து சென்று, வள்ளைக்கொடியின் மெல்லிய தண்டினை யறுக்கு மூரன், எம்மியல்பும் பரத்தையரியல்பும் நன்கறியாது, இவ்வியல்பினனா யொழுகுதற்குக் காரணம் என்னை ? எ. று.

என்றது, தலைமகன் கொடுமை கூறுதற்கண் ஒரோவழி, யாமும், பரத்தையரும் ஒத்த இயல்பினேமாயினும், எம்மியல்பும், அவரியல்பும் வேறுபடுமாற்றை யறியாது, அவரைத் தொடர்பறுத் தொழுகுதற்குக் காரணம் அவரவர் பாடறிந் தொழுகும் அவனது பண்புடைமையே போலும்

என்பதாம். எனவே, எம்மாலும், பரத்தையாராலும் கொடுமை கூறப்படுவதல்லது, அவன்பாற் கொடுமை இல்லை என்றவாறும்.

காந்தை, ஒருவகைக் கொடி. "காய்த்த காந்தை மாக் கொடி விளைவயல், வந்திறை கொண்டன்று தானை" (பதிற். 40) என்றும், "கரந்தையஞ்செறுவின் வெண்குருகு கோப்பும்" (அகம். 226) என்றும் வருவனவற்றால், இஃது ஒருவகைக் கொடியென்பதும், வயற்கண் படர்வதென்பதும் பெற்றாம். இதனைக் கோட்டைக் கரந்தை யென்று இக் காலத்திற் கூறுப. வள்ளை, ஒருவகைக்கொடி. இதன் தண்டு, உள்ளிற் புழையுடைய தென்பது, "அந்தூம்பு வள்ளை" (அகம். 6, 376) என்பதனலறிக. எவன் என்றது அறியாப் பொருட்கண் வந்தது. கொல், அசைநிலை. இன்னாவது, அழிவில் கூட்டத்துக்குரிய புறத்தொழுக்கத்தும் புணர்வும், பிரிவும் நிகழ்த்தியொழுகுதல். பிறர் என்றது பரத்தையரை. எம்மும் என்றது, தோழி, தன்னையும் ஏனைவாயில்களையும் உளப்படுத்திக் கூறியது.

வாயில்கள், தலைவன் கொடுமையினைக் கூறல் வழுவாயினும், ஒரோவழி, "மனைவி முன்னர்க் கையறு கிளவி, மனைவிக் குறுதி யுள்வழி யுண்டே" (பொ. 166) என்பதனால், அஃது அமையுமாறு அறிக. அதனால், அவ்வாயில்கள் கூறிய கொடுமையினை உள்ளுறுத் துரைத்தாள். தான் காதலித்த பரத்தையர்பால் தொடர்பறத் தொழுகு மியல்புடையோன், நம்பான் மேவிடவழியும், அது செய்தொழுகும் இயல்பினனும் என்பதுபட அவர் கூறியதனையே தானும் கொண்டு கூறலின், எம்மூர் என்றும், பரத்தையர் சேரி முற்றும் அலர் கூறலின், பிறரும் என்றும், அறிந்தவழி அவ்வாயில்கள் போந்து தலைவன் கொடுமை கூறலும், பரத்தையர்சேரி அலருரைத்தலும் இல்லையா மாகலின், அறியான் என்றும், அவரவர் பாடறிந் தொழுகும் பண்பினையுடைய னாகலின், பரத்தையர் கன்றிசான்ற கற்புடையராதும் பாடிலராதல் பற்றி, அவர்

தொடர்பறுத் தொழுகுகின்றமையின், வேறு காரணமின்மை கூறுவாள், இன்னாதற்குக் காரணம் பிறிதொன்று மின்று என்றும் கூறினாள். உள்ளுறையில், தலைமகன் ஒழுக்கத்தின் இயல்பு கூறுகின்றா ளாகலின், இன்னாவது என வாளாது கூறினாள்.

தலைமகன் புறத்தொழுகுதலும், பாடறிந்தொழுகும் பண்புடைத் தலைமக்கட்கு அமையுமென்றல், "அடங்கா வொழுக்கத்தவன் வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்" (பொ. 150) நிகழும் கூற்றுவகையால் அமைக்கப்படும். தலைமகன்பால் அறியாமை சார்த்திக் கூறல் வழுவாயினும், அவன் பண்புடைமை சிறப்பித்து நிற்றலின், அமையும் என்க. "சினனே பேதைமை நிம்பிரி நல்குர, வனை நால்வகையும் சிறப்பொடு வருமே" (தொல். பொ.241) என்பதற்கு இளம்பூரணர் கூறும் உரை காண்க.

காஞ்சைச் செறுவில் துணைதுறந்து சென்ற கள்வன் வள்ளைக் கொடியின் மெல்லிய தண்டினை யறுக்கும் ஊரன் என்றதனால், தலைமகன் தான் காதலித்த பரத்தையைக் கைவிட்டுப் பிறபரத்தையரைப் பற்றிப் பின் அவரையும் அம் முறையே துறந்தொழுகுகின்றான் என உள்ளுறை கொள்க.

தலைமகன் பண்புடைமை மொழிந்து தலைமகளைவாயில் நேர்விக்கும் குறிப்பினள் என்பது இதுகாறும் கூறியவாற்றாற் பெறப்பட்டமையின், தோழி, தலைமகளது உள்ளத்து அவன் கொடுமை யொழுக்கத்துக் கொடுமையினை விதந்து நினைப்பித்து, வாயில் நேர்வித்தல் சிறப்பன்மையின் பழைய வுரை குறிக்கும் வேறுரை பொருந்தாமை யறிக. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைமகன் இயலெடுத்துக்கூறி வாயில் நேர்வித்தல்.

இனி, இன்னாவது என்பது பாடமாயின், எம்மையும் பிறரையும் வேறுபட்ட இயல்பினர் என்பதனையறியாது

எம்பாலேபோலப் பிறர்பாலும் தன் பிரிவால் இன்னாமையைச் செய்தொழுகுவா னவது என்றுரைக்க. இன்னானென்பது இப்பொருட்டாதல், "புணர்வின் இன்னான் அரும்புணர் வினனே" (ஐங். 150) எனவருதலா லுணர்க. இனி, இப் பெற்றியனாய் ஒழுகுவது எனினுமாம். (௬)

27\. செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
தண்ணக மண்ணளைச் செல்லு மூரற்(கு)
எல்வளை நெகிழச் சாஅய்
அல்ல லுழப்ப தெவன்கொ லன்னாய்.

தலைமகன் மனைக்கண் வருங்காலத்து வாராது, தாழ்த்துழி, புறத்தொழுக்க முளதாயிற் றெனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி கூறியது.

பு.—ரை :— அன்னாய், செங்நெல் விளையும் வயலின்கண், அலவன் அந் நெற்கதிரைக் கவர்ந்துகொண்டு குளிர்ந்த வாழிடமாகிய மண்ணளையின்கட் புகும் ஊரன்பொருட்டு, நீ, நின், இலங்குகின்ற வளைகள் நெகிழும்படி மெலிந்து வருந்துவ தென்னை, கூறுக எ. று.

செந்நெலஞ்செறு என்பது "விரிக்கும்வழி விரித்தல்" எனபதனால் அம்மு விரிந்துநின்றது. "செந்நெலஞ் செறுவின் அன்னந்துஞ்சும்" (நற்.73) என்று சான்றோர் கூறுதலால் செந்நெல் நீர்வளம் நிரம்பிய வயல்களில் விளையும் இயல்பிற்று என அறிக. இதன்பூ நனைந்த வேங்கைப்பூவை நிகர்க்குமென்றும், இதன்கதிர் பண்டைக் காலத்து மகளிர் அணியும் வயந்தகம் என்னும் அணியை ஒத்திருக்குமென்றும் கூறுப. "அகடுநனை வேங்கை வீகண் டன்ன, பகடுதரு செந்நெல்" (புற. 390) என்றும், "வள்ளிதழ் ஊழ்நீடி வயங்கிய வொருகதிர், அவைபுகழ் அரங்கின்மேலாடுவாள் அணிநுதல்,வகைபெறச்செரீஇய வயந்தகம் போல் தோன்றும்" (கலி.79) என்றும், "செந் தாமரைப்பூ வுறநிமிர்ந்த செந்நெலின், பைந்தாரப் புனல்

செந்நெற் செறுவின் கதிர்கொண்டு என்றும் பாடம் உண்டு. அஃது இப்பாடம்போற் கட்டுரைச் சுவை பயவாமை யறிக.

28. உண்டுறை யணங்கிவ ளுறைநோ யாயின்
தண்சேறு கள்வன் வரிக்கு மூரற் (கு)
ஒண்டொடி நெகிழச் சாஅய்
மென்றோள் பசப்ப தெவன்கொ லன்னை.

இற்செறித்தவிடத்துத் தலைமகட் கெய்திய வேறுபாடு கண்டு, "இது தெய்வத்தினா னாயிற்று," என்று, தமர் வெறி யெடுப்புழி, அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

பு.—ரை :—அன்னாய், உண்ணுநீர் கொள்ளும் துறைக்கண் உறையும் தெய்வம் இவளுற்ற நோய்க்குக் காரணம் என்று கருதினையாயின், தண்ணிய சேற்றினை யலவன் தன் நடையால் வரிக்கு மூரன் பொருட்டு, இவள் ஒள்ளிய தொடி நெகிழுமாறு மெலிந்து, மெல்லிய தோள்கள் பசந்து வேறு படுவ தென்னையோ? கூறுக எ. று.

இடத்துநிகழ் பொருளின்கட்படு மியல்பு, இடத்தின் மேற் கூறுவதோர் இயைபுபற்றி, "உண்டுறை" எனப் பட்டது. விடுதல், விடையென வருதல்போல, உறுதல் உறையென வந்தது. நோய், காரணத்தின்மேற்று. அணங்கு, தெய்வம். நீர்த்துறைக்கண் தெய்வ முறையு மென்பது, "அணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி, ஆயும் ஆயமோ டயரும்" (அகம். 240) என்பதனானு மறியப்படும். ஆயின் என்றது ஆகாமைக் குறிப்புணர நின்றது. கள்வன் வரித்தல், கூரியகால்களால், கோலமிட்டதுபோலச் சேற்றின் கட் சுவடுபடுத்தல். "அளைவா ழலவன் கூருகிர் வரித்த, விர்மணா வீர்நெறி" (குறுந். 351) என்றார் பிறரும்.

"உண்டுறை யணங்கிவள் உறை நோய்" என்றது தமர் கூற்றினைக் கொண்டெடுத்து மொழிந்தது. இவளுற்ற நோய்க்கு அணங்கு காரணமாயின், ஊரன் பொருட்டு மேனி வாடுதலும், மெலிதலும் பிறவும் இலவாமாகலின், மென்றோள் பசப்ப தெய்வன் என்றும், தோளெய்திய பசப்பினும் மேனி வாட்டம் தொடிநெகிழ்ச்சியால் எளிது புலனாதலின், ஒண்டொடி நெகிழச் சாஅய் எனச் சிறப்பித்தும் கூறினாள். எனவே, இவள் வேறுபாடு தலைமகன்பால் உளதாகிய நட்புக் காரணமாக நேர்ந்தது எனப் பட்டாங்கு மொழிந்து அறத்தொடு நின்றாளாம். இஃது அறத்தொடுநிலைப் பகுதி ஏழனுள் உண்மைசெப்பல். அவ்வேழும், "எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல், கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பா, டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ, அவ்வெழு வகைய வென்மனார் புலவர்" (பொ. 207) என ஆசிரியர் கூறுமாற்றான் அறிக. இது குறிஞ்சியாயினும், கருப்பொருளால் மருத மாயிற்று. இனிவருவனவும் அன்ன.

அலவன் வரித்தலால் தண் சேறு அழகுறுதல் போல, தலைவனது வரைவினால் இவள் வேறுபாடு நீங்கி மகிழ்வள் என்று உள்ளுறை கொள்க. மெய்ப்பாடு: அச்சம். பயன்: அறத்தொடு நிற்றல். (அ)

29\. மாரி கடிகொளக் காவலர் கடுக
வித்திய வெண்முளை கள்வ னறுக்குங்
கழனி யூரன் மார்புற மரீஇத்
திதலை யல்கு னின்மகள்
பசலை கொள்வ தெவன்கொ லன்னாய்.

வரைவெதிர் கொள்ளார் தமர் அவண் மறுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப.—ரை:—"மாரி கடிகொள................கடுக" என்றது, மாரிநின்ற யாமத்துக் காவலரைத் தப்பி அவன் தலைவியை,

எதிர்ப்பட்டமை உணர்த்தியதெனக்கொள்க. இஃது உண்மை செப்ப லென்னும் அறத்தொடு நிலை.

பு.—ரை :—அன்னாய், மழை மிக்க பெய்யலைச்செய்யவும், காவலர் நன்கு காத்தலைச் செய்யவும் சிறிதும் அஞ்சாத போந்த, விளைதத்த வெள்ளிய முளைகளை அலவன் துண்டிக்கும் கழனிகளை யுடைய ஊரன் மார்பினை ஆர முயங்கியும், துத்தி பொருந்திய அல்குலையுடைய நின்மகள் பசந்து வேறுபடுவ தென்னை? எ. று.

கடி, மிகுதிப் பொருட்டு. கடி கோள என்பது ஒரு சொல்லாய் மிகுதிப் பொருண்மை யுணர்த்திற்று; "பனி கடிகோண்ட பண்பில் வாடை" (அகம்.235) என்புழிப் போல. "மாரி கடிகொள" என மழையினை மருதத்துக் கூறியது, "வைகுறுவிடியல்" (பொ.8) என்ற சூத்திரத்து, "மெய்பெறத் தோன்றும்" என்றதனால் அமையும்; ஆசிரியர் நச்சினார்க்கினியரும், "இவற்றிற்கு (மருதநெய்தல்கட்கு) அறு வகை இருதுவும் உரிய வென்பதன்றிக் காரும் இளவேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப என்பதற்குப் பொருள் பெறத் தோன்றும் என்றார்" என்றனர். கடுக என்பது காவற் பொருட்டாய கடி யென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைத் திரிசொல்; "கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது" (குறள்.693) என்புழியும் அது. சிறிதும் என்பது முதலாயின. எஞ்சி நின்றன. அடுக்கிநின்ற செயவெனெச்சங்கள் அவாய் நின்ற வினைகொண்டன. கடிகொளவும், கடுகவும் போந்த ஊரன், கள்வன் முளையினை அறுக்கும் ஊரன் என இயையும். மரீஇ யென்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. பசலை கொள்வது என்பது ஒருசொல்லாய்ப் பசப்பதென்னும் பொருளதாயிற்று.

வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழி, அறத் தொடுநிற்றலல்லது செயற்பாலது பிறிதின்மையின், உண்மை செப்பும் குறிப்பால், கழனியூரன் மார்புற மரீஇ என்றும்,

இம்மைமாறிமறுமையாயினும் இடையறுப்பெருங்கேண்மைய னாகலின், இதனை யறியாது, தமர் வரைவுமறுத்தலால் பெரிதும் வருந்தினள் என்பாள், பசலைகோள்வ தெவன்கொல் என்றும் கூறினள். "காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும், நொதுமலர் வரையும் பருவமாயினும், வரைவெதிர் கொள்ளார் தமரவண் மறுப்பினும், அவனாறஞ்சுங் காலமாயினும், அந்நாலிடத்து மெய்ந்நாணொரீஇ, அறத்தொடுநிற்றல் தோழிக்கு முரித்தே" (இ. அ. பொ. 29) என்பவாகலின், தமர்வரைவு மறுத்ததுகொண்டு, தோழி அறத்தொடு நிலையன்றிப் பிறிதிலளாயினள் என அறிக. "மாரிகடி கொளக் காவலர் கடுக" என்றது அவன் வேட்கையுரைத்தல். "மார்புற மரீஇ" என்றது உண்மை செப்பல். அறத்தொடு நிலைப்பகுதி யுணர்த்தும் "எளித்தல் ஏத்தல்" என்ற சூத்திரத்து, "அவ்வெழுவகைய என்றதனால், உண்மை செப்புங்கால், ஏனை யாறுபொருளினுட் சிலவற்றை உடன்கூறலும், ஏனைய கூறுங்காலும் தனித்தனி கூறாது, இரண்டும் மூன்றும் உடன்கூறலும் கொள்ளப்படும்," என்பவாகலின், வேட்கையும் உடன் கூறப்பட்டது. ஈன்றதாயினும், களவின்கண், செவிலி சிறந்தமையின், நின்மகள் எனச்சிறப்பித்தாள். "ஆய்பெருஞ் சிறப்பி னருமறை கிளத்தலின், தாயெனப் படுவோள் செவிலி யாகும்" (பொ. 124) என ஆசிரியரும் கூறினர்.

தம்மக்களின் மணவினைக்கண், இற்செறித்துக் காத்தலும், வரைவு மறுத்தலும் இவைபோல்வன பிறவும், அவர்தம் நலமே நினைந்து புரியும் பெற்றோர்க்கு உரியவாதலின், அவர்தம் ஆணைவழி நிற்றல் மக்கட்கு அறமாம்; ஆயினும், அவர் செய்யும் காப்பு மிகுதியால், தலைமகட்கு வருத்தமெய்தியவிடத்து, அறனும் பிறவும் நீங்க நினையும் ஒழுகலாறு வழுவாகாது. "அன்பே யறனே யின்ப நாணொடு, துறந்த வொழுக்கம் பழித்தன் றாகலின், ஒன்றும் வேண்டா காப்பினுள்ளே," (சொல். பொ. 215) என்பது விதி. "பசலை கொள்வ" தென்றது தலைமகள்பால் தோன்றிய பசலைபாய்தல் என்னும் மெய்ப்பாடு.

வித்திய விதையிடத்துத் தோன்றும் வெண்முளையைக் கள்வன் அறுக்கும் என்றது, தாம்பயந்த மகளிடத்துத் தோன்றும் தம் குடிமைச்சிறப்பினை, வரைவெதிர் கொள்ளாது தமர் அவண்மறுத்துச் சிதைக்கின்றனர் என்றவாறு. மகளிடத்துக் குடிமைச் சிறப்புத் தோன்றுதலை, "கொடுப்பின் நன்குடைமையுங் குடிநிரலுடைமையும், வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா, தெமியேந் துணிந்த ஏமஞ்சா லருவினை, நிகழ்ந்தவண்ணம் நீ நனியுணரச், செப்ப லான்றிசின் சினவாதீமோ" (குறிஞ். 30–4) எனத் தோழி வெளிப்படக்கூறி அறத்தொடு நிற்குமாற்று லறிக. மெய்ப்பாடும் பயனுமவை.

இனி, மார்புற வறீஇ என்ற பாடத்துக்கு அவன் மார்பினைக்கூடி அவற்கும் தனக்குமுண்டான முறைமையினை யறிந்து வைத்தும் என வுரைக்க (கூ)

30. வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லின்
இரும்பூ வுறைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தேவன்கொ லன்னாய்.

இதுவுமது.

ப.–ரை :—அலவன் மண்ணளைநிறைய நெல்லின்பூ வுறைக்கு மூர னென்றது, தலைவன் மனையிடத்து உளவாகிய வறுவாய்ச்சிறப்புக் கூறியதெனக் கொள்க என்பது.

பு.–ரை :—அன்னாய், வேம்பினது அரும்பையொத்த நீண்ட கண்களையுடைய அலவன்! குளிர்ந்த அகமாகிய மண்ணளை நிறையுமாறு நெற்றுளின் மிக்க பூ உதிர்ந்து கிடக்கும் ஊரன்பொருட்டு, இவள் தன் மிக்க அழகினை யிழப்பது என்னை ? எ. று.

வேப்பு நனை, "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்" (எழுத். 414) என்பதனான் முடிந்தது. "வேப்பு நனை யன்ன

நெடுங்கணீர் ஞெண்டு'' (அகம். 176) என்று பிறரும் கூறினர். இருமை, மிகுதி. இரும்பூ வுறைக்கும் என்றதற்கு, மிக்க பூவைத் தன் மண்ணளை நிறைய அலவன் கொண் டுய்க்கும் என்று கூறலுமுண்டு. இப்பாட்டின் எருத்தடியின் ஈற்றுச்சீர் மாசேர்சுரம் என்ற வாய்பாட்டு வஞ்சியுரிச்சீ ராயினும், ஆசிரியப்பாவின்கண் அது மயங்குதலும் இலக்கண மாகலின், அமையு மென வறிக. "அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீர், ஒன்றுத லுடைய வோரொரு வழியே" (பொ.343) என்பது செய்யுளியல். பிறாண்டும் இதுவே கூறிக் கொள்க.

தானே தனக்கு நிகராகும் மேன்மையும், இழந்த வழிப் பண்டைத்தன்மையுறப் பெறலாகா அருமையுமுடைய தன் கவின், தமர்வரைவு மறுத்தலால், தலைமகனைக் கூடலரிதா மென நினைந்து, கெடுகின்ற தென்பாள், ஊரற்கு இவள் பெருங்கவின்இழப்பது என்றும், "உற்றோர்க்குரியர் பொற்றொடி மகளிர்" என்னும் உயர்மொழியை யுட்கொண்டு அவனை யின்றியமையாளாயினுள்என்றற்கு, பெருங்கவினிழப்பதேவன் கொல் என்றும் கூறினாள். உள்ளுறையால் தலைமகன் செல்வ மிகுதி கூறுதலின், இஃது ஏத்தல் என்னும் அறத்தொடுநிலை. இங்ஙனம், ஊரன் காரணமாகத் தன் பெருங்கவின் இழப்ப தறியாது இவளை நீவிர் வரைவு மறுத்தல் கூடாதென்பது கருத்து. இஃது இவ்விரண்டு பாட்டிற்கும் ஒக்கும்.

அலவன் மண்ணளை நிறைய நெற்பூ வுதிர்ந்துகிடத்தல் போலத் தலைமகன் மனையகம் நிறையத் தீதின்றியன்ற செல் வம் மிகுந்துளதெனச் செல்வச் சிறப்புரைத்தவாறு. மெய்ப் பாடும் பயனு மவை. (ம)

## 4. தோழிக் குரைத்த பத்து.

கூற்றுநிகழ்த்துவோர், கேட்போர், கூற்றுப்பொருள் என்ற மூன்றனுள், இங்குவரும் பாட்டுக்கள்பத்தும், கேட்போர் பொருளாகத் தொகை பெறுதலும், பிறநெறியால் பெருமையும் உடைமையின், கேட்போர் வகையுட் சிறந்தாளாகிய தோழிக் குரைப்பனவாம் சிறப்புடைமை கருதி, இஃது இப் பெயரதாயிற்று.

கூற்றுநிகழ்த்துவோர், தலைவியும் பரத்தையரும் பிறரு மெனப் பலராகலின், அவர் கூறக்கேட்கும் தோழியரும் பலரே யாவர். ஆயினும், தோழியாம் தன்மையின் ஒற்றுமை கருதிப் பொதுப்படத் தோழி யென்பது கூறப்பட்டது. பன்மைப்பொருள தாயினும், ஒருமை வாய்பாட்டாற் கூறப் படும் வழக்கு நெறி கருதியே ஆசிரியர், "ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும், வருவகைதானே வழக்கெனமொழிப" (தொல். பொ. 222) என்பா ராயினர். ஆகவே, பண்டை யாசிரியன்மாரும், இதுபோல்வனவற்றை, எப்பாற்கண்ணும் ஒப்பவரும் வழக்கு மொழி என்ப என்பது பெறுதும். "உலகத்து ஒரூர்க்கண்ணும் ஒரோவொரு குலத்தின்கண்ணும் தலைவரும் தலைவியரும் பலரேனும், அவர்களை யெல்லாம் கூறுங்கால் கிழவனும் கிழத்தியும் என்று ஒருமையாற் கூறுவ தன்றி, வேறோர் வழக்கின்று" என்று ஆசிரியர் நச்சினார்க் கினியரும் கூறினர். இனி, தலைவன், தலைவி, தாய் என வரு மிடங்களிலும் இவ்விலக்கணமே கூறிக்கொள்க.

31. அம்ம வாழி தோழி மகிழ்நன்
கடனன் றென்னுங் கொல்லோ நம்மூர்
முடமுதிர் மருதத்துப் பெருந்துறை
உடனா டாயமோ டுற்ற சூளே.

முன்னொருநாள் தன்னொடு புதுப்புனலாடுழி, "இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்" என ஆயத்தாரோடு சூளுற்ற தலைமகன் பின்பும் பரத்தையரோடு புனலாடத் தொடங்குகின்றான் என்பது கேட்ட தலைமகள் அவன் உழையர் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

பு.—ரை :—தோழி, கேட்பாயாக. மகிழ்நன் வளைந்து முதிர்ந்த மருதமரங்கள் நிறைந்த பெருந்துறைக்கண், தன்னுடனாடும் ஆயத்தார் அறிய அவரோடு உடனிருந்தே, "இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்," என்று செய்த சூளினை, மறவாது கடைப்பிடித்தல் முறைமையன்று என்று கூறுவான் கொல்லோ, எ. று.

அம்ம என்பது கேட்பித்தற் பொருட்கண் வந்த இடைச்சொல்; "அம்மகேட்பிக்கும்" (தொல். சொல். 276). வாழி, உரையசை. மகிழ்நன், திணைநிலைப் பெயர். கொல், ஐயம். ஓகாரம், அசைநிலை. கடன், உரிமையுடையார் எவ்வாற்றானும் பிழையாது செயற்பாலது. முடமுதிர் மருதம், வளைந்து முதிர்ந்த மருதமரம். ஞாயிற்றின் ஒண்கதிர் பெறுதலை வேண்டி, ஏனை மரங்களால் தடைப்பட்டவழி, வளைந்து சென்று பெறும் பான்மையுடைமையால் மரங்கள் முடமாதல் இயல்பாகலின், முடமுதிர் மருதம் எனப்பட்டது; "முடமுதிர்பலவின் கொழுநிழல்" (அகம். 91) என்றார் பிறரும். முடம், வளைவு; இது முடவு எனவும் வழங்கும்; "முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை" (அகம். 10) என்பதனாலறிக. இச்சொல் உயர்திணைப் பொருளிடத்தும், "முடமுதிர் பார்ப்பான்" (கலி. 65) என வழங்கப் பெறுகின்றது. அறிய என்பது முதனிலைப் பொருளில் வந்த செயவெனெச்சம்.

தலைமக்கள், உடனாடும் உரிமையுடைய ஆயத்தாரோடு கூடி யாடும் பெருமையுடைத்தாகலின், பெருந்துறை என்றும், அவ்வாயத்தார் தாமும், தம்மை என்றும் பிரியாச் சிறப்புடையராகலின், உடனாயம் என்றும், அவ்வாய முட்படப்,

பிறவும் அறிய அவரிடையே நின்று அருள் செய்தானாகலின், உடனுறையாயமோ டுற்றருள் என்றும், பின்பும் பரத்தையரோடு புனலாடுகின்றானென்பது கேட்டுப் பொறாமை ஒருபால் வருத்த, செய்த அருள் பொய்த்தமையால் எய்தும் இளிவரவிற் கஞ்சிக் கடனன்று என்னுங் கோல் என்றுங் கூறினாள்.

தலைமகன் "இன்னாத் தொல்லருள் எடுத்தற்கண்" (பொரு. 147) என்புழி "எடுத்தல்" எனப் பெயர்ப்படுத்துக் கூறினமையின், தலைமகள், அவ்வாறு எடுத்தஅருள்பொய்த்தமையால் எய்தும் ஏதம் தனக்குவரும் என உழையர்கேட்ப மறுத்துரைத்தவாறு. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: உழையர் கேட்டு மாறுவாராவது. (க)

32. அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒருநா ணம்மில் வந்ததற் கெழுநாள்
அழுப வென்பவவன் பெண்டிர்
தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பு.—ரை :—தோழி, கேட்பாயாக: நம்மில்லம்நோக்கி, மகிழ்நன் ஒருநாள் வந்தானாக, அவன் பெண்டிர், பொறாது, அனலிற்பட்ட மெழுகுபோல, விரைய, உளம்நெகிழ்ந்து, எழு நாள்காறும் அழுது தீர்ந்தனர் என்று பலருங் கூறுகிற்பார், காண். எ. று.

எனவே அவன நமககுசெய்சபத ஒருநாளைய தலையளி, அவன் பெண்டிர்க்கு எழுநாளைய துயரமாயிற்றாகலின், அவன் வருமாறென்னை என்றவாறும்.

வந்ததற் கென்புழி, குவ்வுருபு பொருட்டுப் பொருட் கண் வந்தது. எழுநாள் அழுப என்றது, பிறர்கூறிய கூற்றினைக் கொண்டு கூறியது. பெண்டிர், பரத்தையர் மேற்று;

தார்மக் கிழமை யுடையருமாம்; "நாளும் புலத்தகைப் பெண்டிரைத்தேற்றி" (கலி. 73) என்றாற் போல*. தீயுறு மெழுகின் ஞெகிழ்ந்தன்ற உவமை, அவன் வரவு கேட்டுச்சிறிதும் இடையீடின்றி அழுதல் மேயினார் என்பதுபட நின்றது. ஞெகிழ்தல், உருகுதல். இன்னுருபு, ஒப்புப்பொருட்டு.

"எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும், புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" (பொ. 178) என்பதனால், வாயில் வேண்டிப் புகுந்தார் தலைமகன் பண்டு செய்த தலையளியைச் சிறப்பித்துக் கூறினாரென்பது தோன்ற, மகிழ்நன் என்றும், அவ் வொரு நாளைய தலையளியை யுடன்பட்டுத் தழீஇ, மகிழ்ந்து அவன் பெண்டிர்க்கு எழுநாளைய துன்பமாயிற்று என்பாள், ஒருநாள்நம்மில்வந்ததற்கு எழுநாள் அழுப என்ப அவன் பெண்டிர் என்றும், அத்துணைச் சிறுபிரிவையும் ஆற்றாத பேரன்பினரென அவர் நலம் பாராட்டுவாள் போல, தீயுறுமெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே என்றும் கூறினாள். கூறவே, ஒருகால் அவன் வருதலைக் கருதினாளாயினும், அவரது ஆற்றாமை கண்டு அது தவிர்வாளாகலின், அவன் வருமாறின்றென வாயின் மறுத்தவாறுமாம். இனி, காதலர் நம்மை ஒருநாள் பிரிந்தாராயினும், மிக்க வேறுபாடடையும்

* "பெண்டிர் என்பதன் ஈற்றிலுள்ள 'இர்' என்னும் இடைச்சொல் முன்னிலையிலன்றி 'ர்' 'அர்' என்பவைபோலப் படர்க்கைப் பன்மையிலும்வரும் விகுதிபோலும்; மகளிர், கேளிர், வேளிர், புத்தேளிர் முதலியவற்றில் இவ்விகுதி வருதலும்,...... 'பெண்டிராயிற் பிறர்நெஞ்சு புகார்' (மணி. 22: 46) ......எனப் பன்மை வினை பெற்று முடிதலும் இக்கருத்தை வலியுறுத்தும்" என்பர் இ. வை. அனந்தராமையர். கால்டுவெல் என்பார் இர் விகுதி முன்னிலைக்கேயன்றி "மகளிர்" என்புழிப்போலப் படர்க்கைக்கும் வருமென்றும், உயர் என்பதன் பண்டை நிலையாய அர் என்பது அவர்கள் என்னும் பொருளதாக இர், என்பது இவர்கள் என்னும் பொருளதாகும் என்றும் கருதுவர். (Caldwell's Comparative grammar of the Dravidian languages 3rd Edition. P. 239, 240.)

மென்மையாகிய நம்மிற் பிரிந்து சென்று, அவர் மனைக்கண் எழுநாள்காறு மிருந்து, ஒருநாள் வந்தது குறித்துப் பின் எழுநாள்காறும் புலப்புவர் என எள்ளி நகை யாடி யுரைக்கின்றாளாகலின், எழுநாள் அழுப வென்ப என்றும், பிற வியல்புக ளின்றிப் பெண்ணியல் பொன்றே கொண்டு தருக்குவர் என்றற்கு, அவன்பெண்டிர் என்றும், மக்கட்பேறு முதலியவற்றால் எய்தும் கற்பு வசியிலர் என்றற்கு, "தீயுறு மெழுகின் விரைவனர் ஞெகிழ்ந்தே யென்றும் கூறினளாம். "காதலர், ஒருநாள் கழியினும் உயிர்வேறு படூஉம், பொம்ம லோதி நம்மிவ ணொழியச், செல்ப வென்ப" (நற். 129) என்பதனால் தலைமகளின் மென்மைத் தன்மை உணர்ந்து கொள்க. ஒருவாற்றால் வாயில் நேருங் குறிப்பினளு மாகலின், வெளிப்படையாற் காமக் கிழத்தியர் நலம் பாராட்டிக் குறிப்பால் திணையின் முடித்தாள் என அறிக.

"ஒருநாள் நம்மில் வந்ததற்கு எழுநாள் அழுப வென்ப வவன் பெண்டிர்" என்றதனால், பரத்தையர்பால் பொறாமை யென்னும் மெய்ப்பாடும், தலைமகள்பால் உள்ள துவர்த்தல் என்னும் மெய்ப்பாடும் தோன்றின. ஏனை மெய்ப் பாடு: பிறர்கட்டோன்றிய சிறுமை பொருளாகப் பிறந்த மருட்கை. பயன்: வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்டு மாறுவாராவது. (உ)

33. அம்ம வாழி தோழி மகிழ்நன்
மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறைப்
பெண்டிரொ டாடு மென்பதன்
தண்டா ரகலந் தலைத்தலைக் கொளவே.

இதுவுமது.

பு.—ரை :—தோழி, கேட்பாயாக. மருதமரங்கள் மிகுந் தோங்கிய விரிந்த பூக்களையுடைய பெரிய நீர்த்துறைக்கண், மகிழ்நன் தன் குளிர்ந்த மாலையணிந்த மார்பினை ஒவ்வொரு

வரும் மேன்மேலும் பற்றி முயங்குமாறு பரத்தையரோடு புனலாடுகின்றா னென்று கூறுவர். எ. று.

உயர்ந்தோங்கிய என்புழி உயர்வு மிகுதற்பொருட்டு; “உயர்ந் தோங்கு செல்வத்தான்” (சிலப். 1 : 32) என்புழிப் போல. இனி, உயர்வினை மருதுகட்கும், ஓக்கத்தைப்பெருந் துறைக்கும் ஏற்றினுமாம். ஓங்கிய பெருந்துறை, விரிபூம் பெருந்துறை. நீரின் நிறம் தெரியாவகைப் பூக்கள் விரிந்து பரந்துகிடத்தலின், விரிபூம்பெருந்துறை எனப்பட்டதென்க; “நீர்நிறங் கரப்ப ஊழுறு புதிர்ந்து, பூமலர் கஞலிய கடுவரற் கான்யாறு” (அகம் 18) என்றார் பிறரும். “தலைத்தலைக் கொளவே” என்புழித் தலைத்தலை என்பதற்குத் “தலைத் தலைத் தருமே” (புறம். 185) என்றாற்போலப் பொருள் கொள்க.

புறத்தொழுக்கத்தின்கண் தலைமகன் பரத்தையரொடு விளையாட்டயர்ந்தான் என்பது கேட்டவழித் தலைமகட்குப் புலத்தலும் ஊடலும் பிறந்து, காமச்சிறப் பெய்துதலின் வாயில் வேண்டி வந்தாரோடு வெகுண்டு கூறுவாள், மகிழ்நன், விரிபூம் பெருந்துறைப் பெண்டிரோ டாடு மென்ப என்றாள். “கிழவோன் விளையாட் டாங்கு மற்றே” (பொ. 164) என ஆசிரியரும் கூறினர். விரிந்த பூக்கள் நிறைந்த பெருந்துறை, காதலரொடு கூடி யாடுவார்க்கு, அக்கூட்டத்தின் மேலும் இன்பம் மிகுவிக்குமென உட்கொண்டு கூறலின், மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறை எனச் சிறப்பித்தாள். புல்லுந் தோறும் அமையாது பரந்து சிறத்தலின், தண்டாரகலம் என்றும், ஒருமுறை யிருமுறையன்றிப் பலமுறையும் அமை யாது முயங்கும் மிகுதி தோன்ற, தலைத்தலைக் கொளவே என்றும் கூறினாள். “முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்துகொளற், கடக்குவமன்னோ தோழி.......சாரனுடன் சாயன் மார்பே” (அகம். 328) என்பதனாலும், தலைமகனது தண்டாரகலச் சிறப்புணர்க. இதனால், தலைவிமாட்டுப்

பொருமை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. மெய்ப்பாடு: வெகுளி. பயன் : வாயின்மறுத்தல்.

இனி, "பெண்டிரோடுமாடு மேன்ப" என்ற பாடத்துக்கு உம்மை இழிவுச் சிறப்பெனக்கொள்க. இதனாற் பிறக்கும் அகைப்பு வண்ணம், தலைமகளின் பொருமைக்குறிப்பினைச் சிறப்பித்தல் காண்க. "அகைப்புவண்ணம் அறுத்தறுத்தொழுகும்" (தொல். பொ. 541) என்ப. (௩)

34. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கைப் பூத்த புழைக்கா லாம்பல்
தாதேர் வண்ணங் கொண்டன
ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே.

இதுவுமது.

பு.-ரை. :—தோழி, கேட்பாயாக. அன்பிலனைப் புறத்தே யொழுகும் காதலன்பொருட்டுப் பசப்புற்ற என் கண்கள், நம்மூர்க்கண் ணுள்ள பொய்கைக்கட்பூத்த புழை பொருந்திய தண்டினை யுடைய ஆம்பற் பூவின் தாதுபோலும் நிறத்தை யடைந்தன, காண் எ. று.

பொய்கை, மானிடராக்காத நீர்நிலைஎன்பர் நச்சினார்க்கினியர் (சீவக. 107. உரை.). ஆம்பற்றாள் புழையுடையதென்பது, "ஏந்தெழின்மலர தூம்புடைத் திரள்கால் ஆம்பல்" (குறுந். 178) என்றதனாலுமறியப்படும். புழை, உட்டுளை. ஏர், ஒப்பு; "மலரேருண்கண்" (அகம். 176.) என்றாற் போல. பரத்தையர்மனை, தம் மனையைநோக்கத் தலைமக்கட்கு ஏதிலாதலின், அவர் மனைக்கண் ஒழுகுவாரை, ஏதிலாளர் என்றார்; "சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை, ஏதிலாளனுமென்ப" (நற். 74.) என்றார் பிறரும். ஈண்டுத் தலைமகனை ஏதிலாளர் என்றது. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாய்ச் சினந்து கூறுதற்கண் வந்ததாம்.

தன மனையை இகந்து, பரத்தையர் மனைக்கண் உறைதலின், தலைமகனைவெகுண்டு, வாயில்வேண்டிவந்தார் கேட்ப, அவன் கொடுமை கூறுங் குறிப்பால், ஏதிலாளர்க்கு என்றும், அவன் அன்னனாதலைத் தான் அறிந்தாளாயினும், தன் கண்கள் அறியாது பசந்தன வென்பாள், பசந்தவென் கண் என்றும், அங்ஙனம் பசந்தவை, தாமரை, குவளை முதலிய மலர்களை நிகர்த்தற்குரிய உவமவுரிமை யிழந்து, இழிந்த ஆம்பற்பூவின் வண்ணம் பெற்றன என்பாள், புழைக்கா லாம்பற் றூதேர் வண்ணங் கொண்டன என்றும், ஆம்பற்பூ பொன்னிறத்ததாகலின், பசப்புற்ற கண்களைத் "தாதேர்வண்ணம் கொண்டன" என்றும் கூறினாள். "பூப்போலுண்கண் பொன்போர்த்தனவே" (ஐங். 16.) என முன்னரும் கூறியவாறு காண்க. கூறவே, அவன் பொருட்டுப் பசந்த தன்பயன் இதுவே என்றவாறும்.

ஆம்பலின்கால் புழையுடைய தென்றதனால், தலைமகன்பால் அன்பின்மையும் தோன்றினமையின், "ஏதிலாளர்" என எடுத்துக்கூறினாள் என்றலுமொன்று. இவ்வாறு தலைமகன் தவற்றினை வெளிப்படையாகக் கூறல்வழுவாயினும், "வாயிற்கிளவி வெளிப் படக் கிளத்தல், தாவின் றுரிய தத்தங்கூற்றே" (பொ. 241) என்பதனா லமையு மென்க. "ஏதிலாளனை நீ பிரிந்ததற்கே" (ஐங். 232) எனப்பிறண்டும் தோழி கூறுமாறறிக.

இனி, அவன் நம்பால் அன்பிலனுய்ப்புறத்தொழுகுதலாலெழும் அலரை, நாம் மறைப்பினும், நம் கண்கள் பொறாது, முறுகியபசப்புடையவாய் ஆம்பற்பூவின் வண்ணங் கொண்டன என்றும்கூறுப. "பசந்தவென்கண்" என்றது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனுமவை.

"வண்ணங் கொண்ட" என்றும், "ஏதிலார்க்கு" என்றும் உள்ள பாடங்கள் கட்டுரைச்சுவை பயவாமையறிக.

(ச)

35. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கை யாம்ப லாருரி மென்கால்
நிறத்தினு நிழற்றுதன் மன்னே
இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே.

வாயிலாய்ப் புகுந்தார் தலைமகன் குணங் கூறியவழி, "அவனுக்கு இல்லாதனவே கூறுதலால், இப்போழுது காண், என் மேனி பசந்தது" எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பு.—ரை :—தோழி, கேட்பாயாக. இதுகாறும் நம்மூரிற் பொய்கைக்கண் பூத்த ஆம்பலின் நார் உரிக்கப்பட்ட மெல்லிய கால்போல ஒளிர்தலைச் செய்த என் மாமைக்கவின், அது கழிந்து, இம்பொழுதுதான் பசலை பாய்ந்தது, காண் எ. று.

நார் உரி மென்கால் என்புழி வினைத்தொகை இறந்த காலம் தொக நின்றது. உம்மை, இசை நிறை. மன், கழிவுப் பொருட்டு. நோயின்றியன்ற யாக்கை நலமும், அழகு திகழும் இளமை நலமும் ஒருங்கு திகழும் மகளிரது மேனி நிறம் மாமை* யென்றும் சான்றோரால் வழங்கப்பெறும். இம்மாமைக்கு, மழைபால் நனைந்து நீர் துளித்து நிற்கும் பச்சிளந் தளிரையும், நீலமணி பதித்த பொன்னையும் உவமை கூறுவர்; "கொடுமுளிங்கை நெடுமா வந்தளிர், நீர்மலி கதழ் பெயல் தலைஇய, ஆய்நிறம் புரையுமிவள் மாமைக் கவினே" (நற். 205) என்றும், "பூத்துணர், தாதின் துவலை தளிர்

* மகளிர்க்கு நாணம் நிறை முதலியன அகநலமாய் நின்று சிறப்பிக்க, இம்மாமை, புறநலமாய் விளங்கி, அவர்க்கு இனிய சாயலை விளைவிக்கும் என்பர். இதனைப், பக்தாடி நின்ற விமலையின் அகப்புறநலங்களைச் சிறப்பிக்கப்புக்க திருத்தக்கதேவர், "பெண்பாலவர்கட் கணியாய்ப் பிரியாத நாணும், திண்பால் நிறையும் திருமாமையும் சேர்ந்த சாயல்" (சீவக. 1961) என்று கூறு மாற்றாலறிக.

வார்ந்தன்ன, அங்கலுழ்மாமை" (அகம். 41) என்றும், "பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ" (கலி. 48) என்றும், "மணியிடை பொன்னின் மாமை" (நற். 304) என்றும் வருவன காண்க. பொன்னும் இளந் தளிரும் பொன்மை நிறமுடையவாதல்பற்றி, அந் நிறப்பண்புடைய ஏனை மலர் முதலியவும் மாமைக்கு உவமங் கூறுப. "நுணங்கிய நுசுப்பின் நுண்கேழ் மாமை, பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய" (அகம். 319) என்றும், "செயலையந்தளி ரன்னவென் மதனின் மாமை" (நற். 244) என்றும் வருமாற்றால் அறிக. "நீர்வா ழாம்பல் தூம்புடைத் திரள்கால் நாருரித்தன்ன மதனின் மாமை" (நற். 6) என ஒரோவழி நாருரித்த ஆம்பற் றண்டினையும் இதனோடு உவமிக்கும் உவமவியைபுகுறித்து ஈண்டும், "ஆம்பல் நாருரிமென்கால் நிறத்தினும் நிழற்றுதல் மன்னே" என்றார். நிழற்றுதல், ஒளிவிடுதல். "மணியிடை பொன்னின்மாமை சாயவென், அணிநலஞ் சிதைக்குமார் பசலை" (நற். 304.) என்றதனால், மாமை பசலையாற் கெடுதல் அறிக. இனியென்றது இதுகாறும் என்பதனை யெய்துவித்தது. ஆம்பற்றாள் நார்நீங்கியவிடத்து வலிகுன்றுதலின், மென்கால் என்றார். ஒப்புப் பொருட்டாய இன்னுருபினை உறழ்ச்சி யெனினுமாம்.

பிரிவால் உண்டாகும் மெலிவெய்தி யிருந்தாளாயினும், அவன் சோர்பு காத்தல் கடன் என்பதனையுட்கொண்டு ஆற்றியிருந்தமையான், ஒளியுற்றிருந்த மாமைக் கவின், ஆற்றாமைக் கேதுவாகிய சொல் ஒன்று தோன்றினும் வலியழியும் மென்மைத் தென்பாள் ஆம்பல் நாருரி மென்கால் நிறத்தினும் நிழற்றுதல் என்றுவமித்தும், வாயில்கள் கூறிய பொய்ம் மொழிகளைக் கேட்டமாத்திரத்தே, ஆற்றாது, அக்கவின் கெடுதற்குப்புலத்து மன்னே என்றும், இனிப்பசந்தன்று என்றும் கூறினாள்; "எக்கர் ஞாழ லிணர்படு பொதும்பர்த், தனிக்குருகுறங்குந் துறைவற், கினிப்பசந்தன்றென் மாமைக் கவினே" (ஐங். 144) என்புழியும் இக்கருத்தே வலிபெறுதல்

காண்க. இது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனு மவை. (ரு)

36. அம்ம வாழி தோழி யூரன்
நம்மறந் தமைகுவ னாயி னாமறந்(து)
உள்ளா தமைதலு மமைகுவ மன்னே
கயலெனக் கருதிய வுண்கண்
பயலைக் கொல்கா வாகுதல் பெறினே.

தான் வாயில் நேருங் குறிப்பினளானமை யறியாது தோழி வாயின் மறுத்துழி, அவள் நேரும்வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது.

பு.—ரை:—தோழி, கேட்பாயாக. ஊரனாகிய நம் காதலன் நம்மை மறந்துறைவானாயின், நாமும், கயல்போலும் மையுண்ட நம் கண்கள்மட்டில், பசப் பெய்தாமையைப் பெறின், அவனைமறந்து நினைப்பதேயின்றி, அமைந்திருத் தலும் நமக்குக்கூடும்; அவை விரையப் பசத்தலா னன்றே, நாம் அவனை இன்றியமையே மாகின்றேம் எ. று.

நம்மறந்தமைகுவனாயின் என்றது, நம்மைமறந்தமைகுவன் தலைமகன் எனத் தோழி கூறியதனைக் கொண்டுகூறியது. எச்சவும்மை தொக்கி நின்றது. "அமைதலு மமைகுவம்" என்றது, "அறிதலும் அறிதிரோ" (அகம். 8) என்றாற் போல நின்றது. கருதிய என்பது உவமவாசகம். பசலை, பயலை என நின்றது. கண்கள் முதலாயின ஒழியிசையெச்சத்தை முடிக்க வந்தன. மன், ஒழியிசை; அமையாது, பசந்து அவனை யின்றியமையே மாகின்றேம் என எஞ்சி நின்றது காண்க. ஒல்குதல், சுருங்குதல், ஒல்குதற்குரிய ஏது வுண்மையின், ஒல்காவாதற்கு ஏது கூறாளாயினள்.

வாயில் வேண்டிவந்தார் தலைமகனது காதன்மைகூறி நிற்ப, தோழி, அவனதுகொடுமை கூறி வாயில் மறுத்தாளாக,

தலைவி, அதனை நேருங் குறிப்பினளாய், அவள்கூறியதனை ஒரு மருங்கு தழீஇக் கூறுகின்றாளாகலின், ஊரன் நம்மறந்தமைகுவனாயின் என்றும், நம்மை மறந்தாரை நாம் மறத்தல் அரிய செயலன்று என்றற்கு, நாம் மறந்து, உள்ளாதமைதலுமமைகுவம் என்றும், வாயில் நேராதவழி, அவன் புறத்தொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகி இளிவரலைப் பயக்கு மென்றஞ்சி, வாயின் மறுத்தற்கண் சென்ற உள்ளம், சுருங்கி, நேர்தற்கண் நின்ற தென்பாள், அதனை முந்துற் றறிவிக்கும் கண்மேலேற்றி, உண்கண், பயலைக் கொல்கா வாகுதல் பெறின் என்றும் கூறினாள். கூறவே, தலைமகள், தான் தலைமகனை மறந்தமைதற்குரிய ஏது உளதாகிய வழியும், தன் கண்கள், அவன் தவற்றானுண்டாகும் இளிவரலை யஞ்சிப் பசத்தலின், மறத்தல் நமக்குக் கூடாதாயிற் றென்றாளாம். வாயில் நேருங் கருத்தினைக் குறிப்பாய்க் கூறியவாறு. "எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகிப், பொருட் புறத்ததுவே குறிப்பு மொழியென்ப" (பொ. 491) என்றார் ஆசிரியர். "பயலைக் கொல்காவாகுதல் பெறின்" என்றதனால், பெறாது பசத்தலே உண்மையாயிற்று. இது பசலைபாய்தல். "கன்று முண்ணாது கலத்தினும் படாது, நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு," தனக்குமாகாது. தலைவற்கும் உதவாது தன் மாமைக்கவின் பசலையாற் கெடுதலால், அப்பசலைபாய்தலை வாயில் நேர்தற்குத் தலைவி ஏதுவாக்கினாளென அறிக.

இவ்வாறு தலைமகனது தகாதன்மை கூறிவாயில்வேண்டி வந்தார்க்குத் தன் அன்பு பொதி கிளவியினைத் தலைமகள் பொருள்பட மொழிந்ததனை. "அருண்முந் துறுத்த வன்பு பொதிகிளவி, பொருள்பட மொழிதல் கிழவோட்கு முரித்தே" (பொ. 161) என்பதனாற் கொள்க. பொருள்பட மொழிதலாவது, அகத்தெழும் அன்பினைக் கரந்த வாய்பாட்டாற் கூறினும், அது தெரிய நிற்பக் கூறுதல். ஏனை இவ்வாறு வருமிடம் அறிந்து இதனையுரைத்துக் கொள்க. மெய்ப்பாடு: மருட்கை. பயன்: வாயில் நேர்தல். (கூ)

37. அம்ம வாழி தோழி மகிழ்நன்
நயந்தோ ருண்கண் பயந்து பனிமல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்றா னுற்ற சூள்வாய்த் தல்லே.

தலைமகளைச் சூளினால் தெளித்தான் என்பது கேட்ட காதற் பரத்தை* தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

---

*பரத்தையர், காதற்பரத்தை, இற்பரத்தை, சேரிப் பரத்தை எனப் பலவகையாய்க் கூறப்படுவர். அவரை ஆசிரியர் தொல்காப்பியனார் காமக்கிழத்தியர் எனப் பொதுப்பட மொழிவர்.

இனி, காமக்கிழத்தியர், பரத்தையர் என வேறுபடுத்து, “காமக்கிழத்தியராவார் பின்முறை யாக்கிய கிழத்தியர்; அவர் மூவகைப்படுவர்: ஒத்தகிழத்தியரும், இழிந்த கிழத்தியரும், வரையப்பட்டாரும் என. ஒத்தகிழத்தியர், முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னும் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல்; இழிந்தாராவார், அந்தணர்க்கு அரச குலத்தினும், வணிக குலத்தினும், வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டு குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண் குலத்திற் கொடுக்கப்பட்டாரும். வரையப்பட்டார், செல்வராயினார் கணிகைக் குலத்தி னுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர், கன்னியில் வரையப்பட்டாரும், அதன்பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் யாரெனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகும் இளமையுங்காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார்” என்பர் ஆசிரியர் இளம்பூரணர் (தொல். பொ. 149. உரை.).

இனி, நச்சினார்க்கினியர், “காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக் கிழமைபூண்டு இல்லற நிகழ்த்தும் பரத்தையர்” என்றும், “அவர் தலைவனது இளமைப்

பு. ரை :— தோழி, கேட்பாயாக; மகிழ்நன் தான், செய்த சூள் பொய்யாகாத வகையில் ஒழுகுதலைத் தெளிய மாட்டானாயினும், தன்னைக் காதலித்தோருடைய உண்கண் பசந்து நீர்த்துளி சொரியும் வண்ணம் அச் சூளுறவினைப் பொய்த்து நீங்குதலில் மிகவல்லனாயுள்ளான், காண் எ. று.

நயப்பு, காதல். பனி, நீர்த்துளி. அடுக்கு, துணிவின் கண் வந்தது. தேற்றான் என்பது, "உய்த்தல் தேற்றானாயின்" (புறம். 185) என்றாற்போலத் தெளிவின்கண் வந்தது. ஆயினும் என்பது எஞ்சி நின்றது. வாய்த்தல்லே என்பது விரிக்கும் வழி விரித்தல். வாய்த்தல், சொல்லியாங்கு ஒழுகுதல்; மெய்ம்மைப்பட நிற்றல்.

தலைமகன் தலைவியைச் சூளினால் தெளிவிக்கின்றான் என்பது கேட்டு, அவள் அதனால் தெளியாவகை விலக்குந்

---

பருவத்திற்கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப் பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோரும், காமஞ் சாலா இளமையோரும் எனப் பலபகுதியினராம்" என்றும், எனைப் பரத்தையர், "கூத்தும் பாட்டும் உடையாராகிவரும் சேரிப் பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும், அடியரும், வினை வல பாங்கினரும் பிறருமாம்" என்றும் கூறி, இளம்பூரணர் ஒத்தகிழத்தியர் முதல் மூவகையினராகக் கூறிய பாகுபாட்டைச் சிறப்புடைத் தலைவியரோடு பரத்தையரையுங் கூட்டிக் காமக்கிழத்தியரென்றுகூத்திரஞ் செய்யின் மயங்கக்கூறல் என்னும் குற்றம் தங்குமாகலின், அஃது ஆசிரியர்க்குக் கருத்தன்று என மறுத்து, "சான்றோர் பலரும் காமக் கிழத்தியரைப் பரத்தையராகத் தோற்றுவாய் செய்து கூறுமாறும் உணர்க" (பொ. 151) என்பர்.

இனி, நாற்கவிராசநம்பியார், "ஒருவன் தனக்கே யுரிமைபூண்டு, வருகுலப் பரத்தையர் மகளிராகிக், காமக்குவரைந்தார் காமக்கிழத்தியர்", "யாரையும் நயவா வியல்பிற் சிறந்த, சேரிப் பரத்தையர் மகளிராகிக், காதலிற் புணர்ந்தோர் காதற் பரத்தையர்," "அவருளும் வரைதற் குரியா ருளரே" (113-5) என்பர்.

கருத்தினளாகலின், அவட்குப் பாங்காயினார் கேட்பக் காதற் பரத்தை, தேற்றான் உற்ற சூள் வாய்த்தல் என்றதனோடு நில்லாது, வல்லன் வல்லன் பொய்த்தல் என்றும் கூறினாள். இது, "புல்லுதல் மயக்கும்" (தொல். பொ. 151) என்ற சூத்திரத்து, "இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக் கண்ணும்" என்பதனால், தலைவன் தலைவியைச் சூளால் தெளித்துக் கூடுதலை யிகழ்ந்துரைத்தவாறு. இவன் செய்த சூளுறவுகண்டு, இவன் பொய்த்தொழுகானென வுட்கொண்டு இவனை நயந்து, பின்னர்ப் பொய்த்தமையின், பசந்து துன்புற்றார்பலர் என்பாள், நயந்தோருண்கண் பயந்து பனிமல்க எனப் பன்மைவாய்பாட்டாற்கூறி, புலவியும் ஊடலும் நிகழ்வுழி யெல்லாம் சூளுறுதலும் பொய்த்தலுமே அவற்குப் பெரும்பான்மை நிகழ்வன என்றற்கு வல்லன் வல்லன் பொய்த்தல் என்று அடுக்கியுங்கூறினாள். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவி யறிந்து வாயில் நேராளாவது.

இனி, பசந்து பனிமல்க என்னும் பாடம் எதுகை யின்பம் சிறவாமை யறிக. (எ)

38. அம்ம வாழி தோழி மகிழ்நன்
தன்சொ லுணர்ந்தோ ரறியலனென்றுந்
தண்டளிர் வௌவு மேனி
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்தே.

தலைமகன் மனைவயிற் போகக் கருதினானென்பது சொல்லிய தன் தோழிக்குப் பரத்தை சொல்லியது.

பு. ரை :— தோழி, கேட்பாயாக. குளிர்ந்த மாந்தளிர்போலும் மேனியும், ஒள்ளிய தொடியணிந்த முன்கையுமுடைய யாம் இனைந்து அழும்வண்ணம் பிரியக்கருதுதலால், மகிழ்நன், தான் தெளிவிப்பான் கூறுவனவற்றைத் தெளிந்தமைந்த மகளிரின் அன்பினை யறியும் அறிவிலன் என்று கூறுவேம். எ. று.

மகிழ்நன் தன்சொல், மகிழ்நன் தெளிவிப்பான் கூறிய சொற்கள். தெளித்தது தேறியிராமை உணரார் செயலாக லின், உணர்ந்தோர் என்றார். "தன்சொல் உணர்ந்தோர் மேனி" (ஐங். 41) எனப் பிறாண்டும் கூறுவர். 'அறியலன்' என்றதனால், அறிதற்குரிய அறிவும், அறியப்படும் அன்பும் பெற்றாம். என்றும் என்பது, உளப்பாட்டுப் பன்மைத் தன்மை வினைமுற்று. தளிர் என்றதனால் சிறப்புடைய மாந் தளிர்கொள்க. "நறுவடிப், பைங்கண் மாஅத் தந்தளிரன்ன, நன்மா மேனி" (குறுந். 331) என்றார் பிறரும். "ஐதா கின்றென் தளிர்புரை மேனியும்" (அகம். 95) என்புழியும் இதுவே கூறிக்கொள்க. வெளவும் என்றது உவமவாசகம். செய்தெனெச்சம் காரணப் பொருட்டு. "யாமழப் பிரிந்து" என்றது தோழி கூற்றினைக் கொண்டமைத்துக் கூறியது. மேனியும் முன்கையுமுடைய யாம் எனவியைக்க.

தலைமகன் தன்னைமுன்னர்க்கூடிய ஞான்று தெளித்த சொல்லைத் தேறியிருக்கின்றா ளாகலின், பிறர்போற்கூறும் குறிப்பினால், தன் சொல்லுணர்ந்தோர் என்றும், தோழியால் அவன் பிரியக் கருதியிருத்தலைக்கேட்டு, அவன் கருத்தையும், தன் காதலையும் தூக்கி, அவற்றுட் பின்னது சிறந்து நிற்றலை யுணர்ந்து, அதனையறியாது அவன் கருதுதல் தக்கதன்றென் பாள் அறியலன் என்றும், அவ்வறியாமை அவனாற் கூறப்படா தாகலின், தாம் கூறல்வேண்டு மென்பாள் "அறியலன் என்றும்" என்றும், காரணமின்றியே ஒருவரைக் குறைகூறல் முறையன்மையின், யாமழப் பிரிந்தே யென்றும் கூறினாள். இதனாற் பரத்தைமாட்டுக் கலக்கம் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

பரத்தையர் இவ்வாறு தலைமகனைப் புலந்து கூறல் வழுவாயினும் அஃதமையு மென்பதனைப் "புல்லுதல் மயக் கும்" (பொ. 151) என்ற சூத்திரத்து "இவற்றொடு பிறவும்" என்றதனாற் கொள்க. ஏனை மெய்ப்பாடு: இளிவரல். பயன்: தலைமகன் கேட்டுப் பிரியானாவது. (அ)

39. அம்ம வாழி தோழி யூரன்
வெம்முலை யடைய முயங்கி நம்வயிற்
றிருந்திழைப் பணைத்தோள் ஞெகிழப்
பிரிந்தன னாயினும் பிரியலன் மன்னே.

ஒருஞான்று தலைவன்தன்மனைக்கட்சென்றதுகொண்டு அவன பெண்மை நலமெல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தானென்பது தலைவி கூறினளெனக் கேட்ட பரத்தை, அவட்குப்பாங்காயினர் கேட்பத் தன்தோழிக்குச் சொல்லியது.

பு. ரை :—தோழி, கேட்பாயாக. ஊரன் விருப்பந் தரும் நம்முடைய முலைகள் முற்றவும் சேரமுயங்கி, பின்னர், நம்மினின்றும், அழகிய இழையணிந்த பெரிய தோள்கள் நெகிழ்ந்து மெலியுமாறு பிரிந்தானாயினும், நெஞ்சில் இடையறவின்றி நிற்றலின் பிரிந்தானல்லன் எ. று.

எனவே, பிரிந்தான் எனத் தலைமகள் முதலாயினர் கூறுவதென்னை யென்றாளாயிற்று.

வெம்மை, வேண்டல் (சொல்.334). அடைய என்பது எஞ்சாமை யுணர்த்தி நின்றது; "நல்லகவன முலை யடையப் புல்லு தொறும்" (அகம். 337) என்றாற்போல. "பிரிந்தனனாயி னும்," என்றது, தலைமகட்குப் பாங்காயினர் முதலியோர் கூற்றினைக் கொண்டு கூறியது. பிரிந்தானெனக் கூறுத லென்னையென்பது ஒழிந்து நிற்றலின், மன் ஒழியிசை; இனி, பன்னாளும் எம்வயின் உறைந்து, ஒரு ஞான்று, நெஞ்சத்தா னன்றி மெய்யாற் பிரிந்தது பிரிவாகாதென்பது படநிற்றலின், மன்னைச்சொல் பெரும்பான்மை என்னும் பொருட்டெனினு மாம். பிரியலன் என்றற்குரிய ஏதுக்கள் வருவிக்கப்பட் டன.

முயங்குந்தோறும் மேன்மேலும் விருப்பம் விளைவிக் கும் இயல்பினவாகலின், வெம்முலை யென்றும், அவ்வியல்

புடைய முலைகள் முற்றும், அவன் மார்பிடை மூழ்கப் புல்லித் துய்த்த அயர்வில் இன்பத்தைநினைந்து கூறலின், "வெம்முலை யடையமுயங்கி" யென்றும், நம் பெண்மை நலமெல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தானாயின், நம்பால் நலமும் அவனது காதலும் இலவாதல் வேண்டும்; அவ்வாறின்றி, அவை உளவாயின வென்பாள், திருந்திழைப் பணைத்தோள் என்றும், தலைமகட்குப் பாங்காயினார் கூற்றை மறுக்கும் குறிப் பினளாகலின், "தோள் நெகிழப் பிரிந்தனனாயினும் பிரிய லன்மன்" என்றும் கூறினாள். மார்படைய முயங்கும் முயக்கத்தை மகளிர் பெரிதும்வேட்பர் என்பதனைக் "கெடுத் துப்படு நன்கல மெடுத்துக்கொண் டாங்கு, நன்மார் படைய முயங்கி மெல்லெனக், கண்டனம் வருகஞ் சென்மோ" (நற். 182) என்றும், "தண்ணறு கமழும் நின்மார் பொரு நாள், அடைய முயங்கே மாயின் யாமும், விறலிழை நெகிழச் சாஅய்தும்" (அகம். 218) என்றும் சான்றோர் கூறுமாற்றா லறிக. "பிரிந்தனனாயினும்" என்றதனுல் எய்தப்பெறும் பிரிவு பிரிவெனப் படாதென்பதாம். இஃது, "இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக்கண்" (பொ. 151), தலைவி புலந்தும் ஊடியும் தலைவனைக்கூடியபின் கூறியது கேட்டுப் பரத்தை பொறாது கூறியது என்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவிக்குப் பாங்காயினார் கேட்டுத் தலைமடங்குவாராவது.

"திருந்திழை பணைத்தோள் நெகிழ" என்ற பாடத் துக்குத் திருந்திய தொடியாகிய இழை பெரிய தோள்களி னின்றும் நெகிழ்ந் தோடுமாறு என்றுரைக்க. இழை, ஈண்டுத் தொடிமேற்று; "தோளே தொடிநெகிழ்ந்தனவே" (நற். 197) என்றதனாலும், தோளிற்குத் திருந்திய இழை தொடியாதல் காண்க. தொடி இழையாகாதென்பார்க்குத் தொடியோடு உடன்கிடந்து விளங்கும் பிற இழைகளைக் கூறியமைக. (௯)

40 அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்ததன்'

பெண்டி ரூரிறை கொண்டனனென்ப
கெண்டை பாய்தர * வவிழ்ந்த
வண்டுபிணி யாம்பல் நாடுகிழ வோனே.

உலகியல்பற்றித் தலைவன் தன் மனைக்கண் ஒரு ஞான்று போனதே கொண்டு, அவ்வழிப் பிரியாது உறைகின்றானென்று அயற்பரத்தையர் பலரும் கூறினரென்பது கேட்ட காதற்பரத்தை, அவர் பாங்காயினர் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

பு.-ரை:— தோழி, கேட்பாயாக. கெண்டைமீன் பாய்வதனால் மலர்ந்த வண்டுவிரும்பும் ஆம்பல் மிக்க நாடு உடையோனாகிய மகிழ்நன் ஒள்ளிய தொடியணிந்த முன் கையினையுடைய யாம் அழுமாறு பிரிந்து சென்று, தன் பெண்டாகிய மனைவி வாழும் இல்லினையடைந்து பிரியாது தங்கினான் என அயற்பரத்தையர் கூறுகிற்பர்; இஃது என்னையோ? கூறுக எ. று.

பெண்டிர் என்றது அயற்பரத்தையரைப் பொருளையாற் பன்மை வாய்பாட்டால் இழித்துக் கூறியது. ஊர், தலைவி வாழும் மனை. இறைகோடல், தங்குதல்; "வண்டிறை கொண்ட வெரிமருள் தோன்றி" (அகம். 218) என்புழிப் போல. அயற்பரத்தையர் என்றது எஞ்சி நின்றது. பாய் தர என்புழித் தருதலைத் துணைவினையென்ப. மலர்ந்தபூ அவிழ்ந்தது போறலின், "அவிழ்ந்த" என்றார். இனி, முகைப்பதத்தில் பூவின் இதழ்கள் முறுக்கிப் பிணிக்கப்பட்டிருத்தல் போறலின், அப்பொருண்மை தோன்ற, அவற்றைப் பிணி, தளை முதலிய வாய்பாட்டால் வழங்குப. அம்முகைகள்

---

* கெண்டைபாய்தலால் ஆம்பல் மலரும் என ஈண்டுக்கூறியதுபோல, ஆளுடைய பிள்ளையார், திருக்கோத் திருப்பதிகத்தில் "வரிக் கெண்டைபாயச், சுனைநீலம் மொட்டலரும் கேதாரமே" (செவ்வழி. 1) என நீலமும் மலரும் என்று அருளுமாறு காண்க.

மலர்ந்த விடத்தும் அப்பொருண்மையே சிறப்ப, அவிழ்ந்த வாசகத்தாற் கூறல் மரபாகலின் அவிழ்ந்த என்றார் என்றுமாம்; "தோன்றி சுடர்கொளகலிற் சுருங்கு பிணியவிழ," "பிடவுத் தளையவிழ" (அகம். 235, 304), "போதியவிழ் வைகறை" (கலி. 52) எனப்பிறாண்டும் சான்றோர் கூறுதல் காண்க. எனைவருமிடங்களினும் இதுவே கூறிக்கொள்க. "வண்டு பிணியாம்பல்" என்றது நெஞ்சு பிணிபொருள் என்றாற் போல நின்றது. கிழவோன் என்பது "ஆவோ வாகும்பெயருமா ருளவே" (சொல். 188) என்புழி, "உம்மை யெச்சவும்மை யாகலான், அகரம் ஓகாரமாய்த்திரியும் பெயருமுள என்றவாறு. கிழவன், கிழவள் என்பன நாடு கிழவோன் 'கிழவோள்தேஎத்து' எனவும் வரும்," எனத் தெய்வச் சிலையார் கூறுமாற்றாற் கொள்ளப்படும். வழக்கினுள்ளும் கிழவன் என்றே வழங்கப்படுதலின், இதுவே நெறியாதல் துணிக. "ஸ்ரீ ராஜ ராஜேசுவரம் உடையார்க்கு ஸ்ரீகாரியஞ் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான்" (S. I. I. Vol. II. No. 38) எனவருமாறும் காண்க.

அவன் பிரிவு நிகழ்ந்தபொழுது நெடிதன்மையின், பெண்டிர் ஊர் இறைகொண்டனன் என்ப என்றும், உள்ளுறையால் அவ்வாறு கொள்ளினும், அவன்மார்பு எமக்கும் உரித்தாம் என்றும் கூறினாள். தலைவன் தனக்குரிய பெண்டிர்பால் இறைகொள்ப்பிரிந்தானாயினும், அவனாற்பிரியப்பட்டமையின், பரத்தை பிரிவாற்றாது, யாமழப் பிரிந்து என்றாள். இது பிரிவாற்றாமை.

கெண்டை பாய்தலால் மலர்ந்த ஆம்பல், வண்டினைப் பிணித்து நிற்பது போல, தன்மனைவியின் ஊடலைத் தீர்ப்பான் நல்கிய அவனது மார்பு, எம்மாற் பிணித்துக் கொள்ளப்படும் இயைபுடைய தென்றாளாம். "வரிவே யுண்கணவன் பெண்டிர் காணத், தாருந் தானையும் பற்றி யாரியர், பிடிபயின்று தரூஉம் பெருங்களிறுபோல, தோள்கந்தாகக் கூந்தலிற் பிணித்

தவன், மார்புகடி கொள்ளேனாயின் ஆர்வுற், றிரந்தோர்க்கியா தீட்டியோன் பொருள்போற், பரந்து வெளிப்படாதாகி, வருந்துக தில்லயா யோம்பிய நலனே" (அகம். 276) எனப் பிறண்டும் அவள் வெளிப்படையாய்க் கூறுமாறறிக. மெய்ப்பாடு: இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்: அயற்பரத்தையரைக் கழறுதல். (ய)

## 5. புலவிப் பத்து.

இப்பகுதிக்கண்வரும் பாட்டுக்கள் பத்தும் புலவிக் காலத்து நிகழ்ந்த கூற்றுக்களையே பொருளாகக் கொண்டு நின்றமையின், இஃது இப்பெயரினையுடையதாயிற்று. "மறை வெளிப்படுதலும் தமரிற்பெறுதலும், இவைமுதலாகிய வியனெறி திரியாது, மலிவும் புலவியு மூடலு முணர்வும், பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே" (பொ. 499) என்றதனால், கற்பிற்கே சிறந்த மருதத்தின்கண், சிறப்புடைய புலவியே பொருளாக வந்தது.

காமப் புணர்ச்சிக்கண், துனி, புலவி, ஊடல் என்ற மூன்றும் காமவின்பத்துக்குச் சிறப்புத் தருவனவாம். இவற்றுள், துனி, முதிர்ந்த கலாம் என்றும், புலவி இளையகலாம் என்றும் பரிமேலழகர் கூறுவர். இவை காமக்கலவிக்கு முன்னர் நிகழ்வன. "துனிபுலவி யூடலி னோக்கேன் தொடர்ந்த, கனிகலவி காதலினுங் காணேன்" (திணைமா. 153.) என்றதனால், இவற்றின் பெயரும் முறையும் உணர்ந்து கொள்க.

புலவி மிக்கவழி, துனிதோன்றிக் காமவின்பத்தைச் சிறப்பிக்காமையின், அதன் இன்மை காமத்துக்கு ஆக்கமென்றும், "ஊடுதல் காமத்திற்கின்பம்" (குறள். 1330.) ஆயினும், காமம் நீடுவதன்றுகொல் என்னும் உணர்வை யெழுப்பித் துன்பமுறுவிக்கும் சிறுமையுடைமையின், ஊடலினும் புலவியே சிறப்புடையதென்றும் சான்றோர் கருதுப. "துனியும் புலவியும் இல்லாயின் காமம், கனியும் கருக்காயு மற்று" (குறள். 1306) என்றதனால், ஆசிரியர் திருவள்ளுவனார், துனியை விலக்கிப் புலவியின் சிறப்புடைமையை வலியுறுத்துதல் காண்க. அன்றியும், "நலத்தகை நல்லவர்க்கேஎர் புலத்தகை, பூவன்ன கண்ணாரகத்து," "உப்பமைந்தற்றாற் புலவி யதுசிறிது, மிக்கற்றால் நீளவிடல்" (குறள் : 1305, 02)

என்று கூறுமாற்றாலும் காமநுகர்ச்சிக்குப் புலவி அழகும், இன்பமும் பயக்குமாறறிக.

இனி, துனி முதலிய மூன்றனுள், புலவி நடுநிற்றல் அறம் முதலிய இம்மைக்குரிய உறுதிப்பொருண் மூன்றனுள், தானெய்தியவழி இருதலையும் ஒருங்கெய்துமாறு சிறந்த பொருள் நடுநிற்றல்போல என்க. எனவே, புலவியால் ஏனைத் துனியும் ஊடலும் எய்துமென்பதாம். இதனைச் செய்யுட்களிற் காணலாம்; ஈண்டு விரிப்பிற்பெருகும்.

இனி, ஆசிரியர்: பேராசிரியர், "புலவி யென்பது, புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங்கருதிக் கொண்டு பயப்பதோர் உள்ளநிகழ்ச்சி" யெனவும், "ஊட லென்பது, உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியா னன்றிக் கூற்றுமொழியா னுரைப்பது" எனவும், "அங்ஙனம், ஊடல்நிகழ்ந்தவழி, அதற்கேதுவாகிய பொருள் இன்மை யுணர்வித்தல் உணர்வெனப்படும்; இல்லது கடுத்த மயக்கந் தீர உணர்த்துதலால் உணர்த்துதலெனவும், அதனையுணர்த லால் உணர்வெனவும்படும்," எனவும், "புலவிக்காயின், உணர்த்தல் வேண்டா; அது குளிர்ப்பக்கூறலும் தளிர்ப்ப முயங்கலும் முதலாயவற்றான் நீங்குதலின்" எனவும்கூறி, "ஊடலிற்பிறந்த துனியும் பிரிவின்பாற்படும் என்பதூஉங் கொள்க: என்னை, காட்டக்காணாது காந்துமாறுதலின்" என்று முடிபுகூறினர். கூறினாராயினும், உள்ளநிகழ்ச்சியும், மொழி யான் உரைத்தலும் ஒரோவழி ஒற்றுமையெய்தக் கூறப் படுதலுமுண்மையின், ஊடிய செய்கையினையும் சான்றோர் புலத்தல்வாய்பாட்டாற் கூறுப. அக்காலை அதுவும் புலவி யெனப்படுதற்கிழுக்கின்மையின், துனித்தார்போலவும், ஊடி னார்போலவும் புலந்து கூறுவனவும் புலவியாதல்பற்றி இப் பகுதி புலவிப்பெயர் பெற்றதெனினுமாம்.

இனி, உயிரானும், உள்ளத்தானும், குரவராற்செய்யப் படும் சிறப்பானும் ஒற்றுமையுடைய தோழி கூற்றும், தலை

டிகள கூற்றேயாய்க் கருதப்படுமாகலின், புலவிக்கண், அவள் கூற்றும் ஒருங்கு தொகுக்கப்பெறும் எனவுணர்க.

41. தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையோடு
வெண்பூம் பொய்கைத்தவ னூரேன்ப வதனால்
தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே.

கழறித்தேருட்டற்பாலராகிய அகம்புகன்மரபின்வாயில்கள் புகுந்துழித் தலைவனையும் பாணன்முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து தலைவி கூறியது.

ப. ரை :— அன்பில்லாத முதலையென்றது தலைவனை நோக்கியதெனவும், பொய்கையில் வெண்பூவென்றது, புறத்தொழுக்கத்திற்குத் துணையாகிய அறிவிலாதாரை நோக்கியதெனவும் கொள்க.

பு. ரை :— தான் ஈன்றபார்ப்பினைத் தானே தின்னும் அன்பில்லாத முதலைகளோடு வெண்மையானபூக்கள் நிறைந்த பொய்கையினையுடையது அவனது ஊர்; அதனால், அவ்வூர் கிழவோனாகிய தலைமகன், தான் தெளித்த சொல்லைத் தேறியிருந்தவர் மேனி, தன்பிரிவால், பொன்போலும் பசப்பினை யெய்துவிக்கின்றான். எ. று.

முதலை நீர்வாழும் உயிரினத்துள் வைத்துக் கூறப்படுதற் கமைந்ததாயினும், நிலத்திலும் இயங்கும் இயல்புடைமையின், இதனைத் தவழ்வனவற்றுள் அடக்கினர் ஆசிரியர் : தொல்காப்பியனார்; "தவழ்பவை தாமும் அவற்றோரன்ன" (பொ. 560) என்பது தொல்காப்பியம். "கெண்டையஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய், முண்டகத் துறை சேர்ந்த முதலைமா" (சூளா. நாட்டு. 22) என்றுதோலாமொழித்தேவர் கூறியதனை யெடுத்துக்காட்டி, "முதலையை மா வென்பர்" என்றுகூறி, "அவை மீனெனப்படுவதல்லது,

மா எனப்படா" என்றனர் அடியார்க்கு நல்லார். நச்சினார்க்கினியரும், "முதலையும் சுறவும் மீனாதலின், மாவென்றல் மாபன்று" என்பர். இக்காலத்து உயிர் நூலறிஞர் சுறவினை மீனினத்துட்கொண்டு, முதலையை மீன் என்னார். அவர்கள் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியாங்கு, முதலையைத் தவழ்வனவற்றுள் (Reptiles) வைத்தே ஆராய்வர். "ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும், கொடுந்தாண்முதலையும் இடங்கரும், கராமும்" (குறிஞ். 256-7) என்பதன் உரையில், "இவைமூன்றும் சாதிவிசேடம்" என்று நச்சினார்க்கினியர் கூறினார். இனி, இக்கால அறிஞர், முதலைவகை இருபதின் மேலுமுளவென்பர். இவை ஊனூண் வாழ்க்கைய (Flesh-eaters) ஆயினும், பெறலருமையான், பெரும்பாலும் மீனுண்டே வாழ்கின்றன *. "முதலைப்போத்து முழுமீனாரும்" (5) என இந்நூலுள்ளும் கூறுப. இம்முதலைகள் நீரினும் நிலத்தினும் இயங்குவனவாகலின், அவ்வியக்கத்திற் கேற்பச் சூடுங்குளிர்ச்சியும் எய்துமாறு அவற்றின் உதிரம் அமைந்துளது. நீரின் அடியிற்போல நிலத்தினும் நடப்பதற் கேற்ப அவற்றின் கால்களும் அமைந்திருக்கின்றன. முதலைகள் முட்டையிட்டு வாழும் உயிர்வகை யாகும். இவை முறைக்கு இருபதுமுதல் நூறுவரை முட்டையீனும். ஈனுங்கால், சிலமுதலைகள், மண்ணிற் குழியொன் றகழ்ந்து, அதன்கண், தாமீன்ற முட்டைகளை வைத்து, மண்ணாலே மூடி, அவை பொரிக்குமளவும் புறந்தருதலுண்டு; சில அக் குழியினிடத்தே அடைகாப்பனபோல இருந்து, அமர்ந்துறையும். அக்குழியின்புறத்தே படைபேர்ந்து தோன்றின், முட்டை பொரிக்குங் காலமாயிற்று என்று உணர்ந்து முட்டைகளை வெளியே கொணர்ந்துவிடும். பின்பு, அம்முட்டைகளைத் தம் மூக்கின்கண் அமைந்த கூரிய வுறுப்பினால், உடைத்துக்

---

* "All (crocodiles) are flesh-eaters, though from force of circumstances many have to live largely on fish"—*Book of knowledge*.

கொண்டு, முதலையின் பார்ப்பு வெளிப்போதரும் †. அவ்வாறு போந்தவற்றுள், தாயுடன் தொடர்ந்துசென்று இரை தேரும் மதுகையில்லாதவற்றைத் தாய்முதலை யுண்டுவிடும். நோயுற்றனவும், ஊறுபட்டனவும், தாய் முதலையைத் தொடர்ந்து வரும் வன்மை யிழந்தவழி அதனால் அன்பின்றி உண்ணப்படும் *. இதனைக் கருதியே, ஈண்டும் ஆசிரியர் ஓரம்போகியார், "தன்பார்ப்புத் தின்னு மன்பில் முதலை" யென்றார்போலும்.

அன்புடைமைக்குச் சிறப்புடைய எடுத்துக்காட்டாவது தாய்மையாகலின், அப் பண்பிற்குமாறாய செயலுடைமை பற்றித் தாய்முதலையைத் "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை" யென்றுகாட்டினர். கொடுமை கூறற்குச் சிறந்த அன்பின்மை சுட்டிநிற்றலின், முதலையொடு என்புழி, ஒடு உயர்பின் வழித்தாயிற்று. வெண்பூ வென்றற்கு ஏற்புடையன வெண்டாமரையும் வெள்ளாம்பலுமாயினும், உள்ளுறையால், பரத்தையைக் குறித்துநிற்றலின் சிறப்பில்லாத வெள்ளாம்பலே, ஈண்டு, வெண்பூ வெனப்பட்டதென்க. அதனால் என்னும் சுட்டுமுதலாகிய காரணக்கிளவி அவனுடையவூரது

† "Some crocodiles dig deep pits in the sand, lay their eggs, cover over the hole and keep watch even brooding on the spot till the young are near hatching. Low barks from within the eggs tell of dawning life when the mother excavates the sand which cover her brood. The babies escape from the egg by means of a cutting implement on the end of the snout"—*Book of knowledge.*

* "Such of those young crocodiles as are either physically too feeble to follow their mother or rendered so by accidents are mercilessly killed by the mother brute...."—*Dr. Wasson's miscellaneous Lectures.*

உடைமையைச் சுட்டிநின்றது. ஊர்க்குரியசெயல், அவ்வூரை யுடையோர்க்கு முன்னென்ப தெய்துவித்தற்கு, "ஊர் கிழவோன்" என்றார். பசப்பெய்தியமேனி பொன்போறலின், "பொன்போற்செய்யும்" என்றுகூறப்பட்டது. போற் செய்யும் என்பன ஒரு சொல்லாய்ப் பிறவினைப் பொருள் தந்தன. மேனி பொன்போறல் மகளிர்க்கு இயற்கையன்மை யின், காரணமும் உடன்கூறப்பட்டது; "தொன்னலனிழந்த வென்பொன்னிற நோக்கி" (நற். 56) என்பதனானும் இப் பொருண்மை துணியப்படும்.

பிறவற்றின் பார்ப்பைத் தின்றல் அஃறிணையுயிர்கட்கு அமையுமென்பார்க்கும், தன்பார்ப்பினைத் தானே தின்றல் அமையாதென்னுங் கருத்தால், தன்பார்ப்புத் தின்னும் என் றும், அவ்வாறு அறன்கடைநின்ற உயிர்களைப் பொய்கைக் கண் உடைய ஊர்கிழவோனுக்குத்தன்னால் எம்பால் உளதாய மேனிநலம் கெடுமாறு அன்பிலனாதலும் அமையும் என்றற்கு, அன்பின்முதலையோடு என்றும், தலைவனது புறத்தொழுக்கங் காரணமாக, பசந்த மகளிரின் முகம்போல விளர்த்துத் தோன்றி, தம்மைக்காணும் அவர்மனத்து அன்புதோற்று விக்கும் சிறப்புடைய வெண்டாமரையினும், தம்மைப்பிரியா வாறு பிணித்துநிற்கும் பரத்தையர் இவ்வெல்லாந்துயிலாது நின்றுகாப்பதுபோல, விடியலினும் கூம்பாதுநிற்கும் இயல் பினையுடைய ஆம்பலை மிகவுடைய ஊரனுயினன் ...ன்பதுபட வெண்பூம் பொய்கைத்து அவனூர் என்றும், தலைமகனது கொடுமை யொழுக்கத்தைத் தான் அறிந்துளா ளாயினும், தன்பாங்காயினார் அவ்வொழுக்கத்தோடு அதற்குரிய பரத் தையரியல்பும் அறிந்து கூறலின், அவர்மேல் வைத்து, என்ப என்றும், அப்பெற்றியினையுடைய் தலைமகற்குச் சொல்லுஞ் செயலும் ஒவ்வாமை யொழுகல் இயல்பாகலின், அதனை யுணராது, அவன் தெளித்த சொல்லையே தேறியிருந்தமை தோன்றத் தன்சோல் உணர்ந்தோர் என்றும், எனவே, தேறி யிருக்குங்கால் நினைந்த மேனிநலத்தின் ஆக்கத்திற்கு மாறாகிய பசப்பு நிகழ்தல் ஒருதலையாகலின் மேனி பொன்போலுமாறு

பசப்பிப்பன் என்றும், அவற்கு வாயிலாய்வந்தார் அனைவரும் அவனது கொடுமையினை மறைத்து, மீட்டும் அவன் சொல்லையே தேறியிருக்குமாறு கூறலின், அவருமகப்பட, ஊர் கிழவோன் என்றும் கூறினாள். அக்கருத்துக்கு ஊர் என்றது முன்னிலைப் புறமொழி. இதனால், தலைமகற்கு வாயிலாய் வந்தாரையும் ஓராற்றால் இகழ்ந்தவாறுகாண்க.

தான் ஈன்று புறந்தருதற்குரிய தன்பார்ப்பினைத் தானே தின்னும் முதலையினையும் அதனோடு உடனுறையும் வெள்ளாம்பலினையு முடையவூர் என்றதனால், தான்தெளிவிப்பான் கூறிய சொற்களைத் தன்புறத்தொழுக்கத்தால் தானே சிதைத்தலையும், தன்கொடுமை கினையாது கூடியுறையும் அறிவில்லாத பரத்தையரையுமுடையன் என்றாளாம். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

இனி, ஆசிரியர் பேராசிரியர், "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையென்பது இன்னுந் தலைமகனது கொடுமைக்கு உவமையாயிற்று; வெண்பூம் பொய்கைத் தவனூர் என்பது தலைமகள் பசப்பு நிறம்பற்றி உவமையாயிற்று" என்றும், "தன்பார்ப்புத்தின்னும் அன்பில் முதலையொடு ..........ஊர் கிழவோன் என்றவழி இன்னதிறத்தனென்றதனோனே, இத்தன்மைத்தாகிய வூரனையான் எனச்சொல்லுதலும்," என்றும், "வெண்பூம் பொய்கைத்தவனூர் எனத் தலைவனூரின் உள்ளதொன்றதனால், தலைவிக்கு உவமையைப் பிறப்பித்தவாறாயிற்று," என்றும், "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையென்பது தோழிகூற்று; என்னை, அவற்றின் செய்கையெல்லாம் அறியாளன்றே; தலைமகள் பெரும் பேதையாகலின் என்பது" என்றும் கூறுவர் (பொ. 300, 301 உரை). மற்று, இதன்கண் தலைமகள் பெரும்பேதையென்பதொக்குமாயினும், அறிவிக்க அறியும் அறிவமைதி புடைமையால், தலைவி, பிறர் கூறிய வாய்ப்பாட்டால் அவனூர்

என்ப என்று கூறுகின்றுளென்பது எய்துதலால், தோழி கூற்றென்றல் நிரம்பாமையறிக.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு வெண்பூம் பொய்கைத்தவனூரென்ப என்றாற் போலத் தலைவன் கொடுமையும் தலைவி பேதைமையும் உடனுறையுவமம் கொள்ள நிற்கும்" என்பர். (பொ. 230 உரை.) எனவே, இவர்க்கும் இது தோழி கூற்றென்றலே கருத்தென்பதும், அது நிரம்பாமையும் உணர்ந்துகொள்க.

இனி, ஐங்குறு நூற்று அச்சுப்பிரதி, இப்பாட்டின் இரண்டாமடி "வெண்பூம் பொய்கைத் தவனூரென்ப" என நேரடியாகக்கொண்டு, "அதனால்" என்ற சீரினைக் கூனாகக் கொண்டுளது. "சீர் கூனாதல் நேரடிக் குரித்தே" (தொல். செய். 49) என்ற சூத்திரத்தின்கண் ஆசிரியர் தொல்காப்பியனார் கூனாகிய சீர்க்கு இடம் வரைந்து கூறிற்றிலராயினும், ஆசிரியர் நச்சினார்க்கினியர், "ஏற்புழிக்கோடல் என்பதனால் அடிமுதற்கட் கோடும்" என்பவாகலின், அது பொருந்தாமை பெறுதும். மற்று, "கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற" என்ற அகப்பாட்டினுள் (26) "இவைபாராட்டிய பருவமு முளவே, இனியே" (வரி. 11) என்றும், "தீம்பால் படுதருமஞ்சினமே, யாமிடை" (வரி. 16) என்றும், "இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்" என்னும் அகப்பாட்டினுள் (122) "நில்லா நெஞ்சத் தவர்வா ரலமே, யதனால்" (வரி. 18) என்றும், சீர்கூனாகி நேரடியிற்றில் வந்தன, முறையே, "புதல்வற்றடுத்த பாலொடுதடைஇ," "கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடை" எனவும், "அரிபெய் புட்டிலார்ப்பப் பரிசிறந்(து)" எனவும் முன்னர்நின்ற நேரடி முதற்கண் வந்தனவெனப்படுமென்க. ஈண்டு அவ்வாறு நிற்றற்கு முன்நின்ற அடி நேரடியன்மையு மறிந்துகொள்க. (க)

42. மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாணர் ஊர நின் மாணிழை யரிவை
காவிரி மலிர்நிறை யன்ன நின்
மார்புநனி விலக்கல் தொடங்கி யோளே.

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை, தலைவன் பிற பரத்தையருடன் ஒழுகுகின்றானென்று புலந்தாளாக, அதனையறிந்த தலைவி, அவன் தன்னில்லத்துப் புகுந்துழித் தான் அறிந்தமை தோன்றச் சொல்லியது.

பு. ரை :—புதுவருவாயினையுடைய ஊரனே, மாண்ட இழைகளையணிந்த, நினக்குரியளாகிய அரிவை, காவிரியாற்றின் பெருக்குப்போல் விரிந்த நின்னுடைய மார்பினை மிகவும் விலக்குதலைத் தொடங்கினாள்; அவள் கள்ளுண்ட களிப்பு மேன்மேலும் மிக்குற மயக்கமெய்தினள் போலும் எ. று.

அரிவை, தொடங்கியோள், மயங்கினள் கொல்லோ என இயையும். மகிழ், முதனிலைத் தொழிற் பெயர்; மகிழ்தல் கள்ளுண்டு மயங்கல்; "மகிழ்க்களிப்பட்ட தேன்தேறல்" (பரி. 16:28) என்றதனாலும் இப்பொருண்மை துணியப்படும். உண்டு பயின்றவழிக் கள்ளும் மயக்கஞ் செய்யாதாகலின் மிகச்சிறப்ப என்று விசேடித்தார். யாணர், புதுமை; ஆகுபெயரால், நாளும் இடையறாது பெருகும் செல்வ வருவாய் மேற்று; "அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்" (பொருந. 1) என்புழிப்போல. ஏனையிடங்களினும் இதுவே கூறிக்கொள்க. அரிவை யென்றது, ஈண்டுப் பரத்தையை. தம்மை மறந்தாரைப் பிரியா வகையிற் பிணிக்கும் கருவியாய்ப் பயன்படும் சிறப்புடைமையின், அவரணியும் இழையினை, "மாணிழை" யென்றார்; "ஆய்தொடியார்" (குறள். 911) என்பதற்கும் ஆசிரியர் பரிமேலழகர் இப்பொருளே யுரைத்தனர். பரத்தையை இழித்துக் கூறல் கருத்தாகலின்,

இது குறிப்பு மொழி; இனி, உயர்த்திக் கூறியதாகக் கொள் வழியும் இஃது அவள் மனத்துப் புலவிக் குறிப்பினையே யுணர்த்தும் என அறிக: "கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும், உள்ளத் தூட லுண்டென மொழிப" (பொ. 233) என்பது பொருளியல். பூவும் சாந்தும் சுமந்து பரந்து விளங்குதலின் காவிரி மலிர்நிறை கூறினர்; "புதுவது வந்த காவிரிக் கோடுதோய் மலிர்நிறை" (அகம். 166) என்றும், "செங்குணக் கொழுகுந் கலுழி மலிர்நிறைக் காவிரி" (பதிற். 50) என்றும் சான்றோர் காவிரியினையே கூறுதல் காண்க.

பரத்தையர் சேரிக்கண் நிகழ்ந்தது மறைத்து, தலைவி பால் எய்தியிருந்த தலைமகற்கு, தலைவி, தான் அறிந்தமை தோன்றச் சொல்லெடுக்கின்றாளாகலின், மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள்கொல்லோ என்றாள். இதனால் தலைவன் மனத் துச் சூழ்ச்சி* பிறந்தது. தலைமகன் பரத்தையிற் பிரிந்து நாளும் புதுவோரை மேவி யொழுகுகின்ற றதலைக் குறிப் பாற்காட்டுவாள், யாணரூர என்றும், அவர் அவற்குரிய ராக, அவருள் ஒருத்தி செய்ததனைத் தானறிந்தமைதோன்ற நின்மாணிழையரிவை என்றும், காவிரி மலிர்நிறை, மகளிர் பலரும் படிந்தாடும் பான்மை யுடைத்தாதல்போல, நின் மார்பு, நின்பெண்டிர் பலர்க்கும் உரித்தாயிற் றென்றற்கு, "காவிரிமலிர்நிறை யன்னநின் மார்பு என்றும், அதனை யறி யாது புலந்து, தன் கையாலும், தானையாலும், கோதையா லும் நின்னைப் பலகாலும் சிறைப்ப, நின்மார்பு சிறைப்ப டாது, அவளைச் செறியச் சென்றதென்பாள், "நளிவிலக்கல் தொடங்கினள்" என்றும், அக்காலை, அவள் ஊடலுணர்த்

---

*"சூழ்ச்சி யென்பது சூழ்ச்சி, சூழ்வருவானைச் சுழல்வரு மென்பவாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன்கட் டோன்றின், அதுவும் மெய்ப்பாடு; அஃதாவது மனத்தடுமாற்றம்" என்பர் பேராசிரியர்.

தும் வாயிலாக, நீ செய்தனவும், செப்பியனவும், உணரா வியல்பினரும் எளிதில் உணரும் பான்மையவாக, அவள் உணராது விலக்குதலே பொருளாகத் தொடங்கியதற்குக் காரணம் உணர்வொழிந்தமையன்றிப் பிறிதில்லையென்பாள், மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள்கொல் என்றும் கூறினாள்.

இது, "புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற், ககன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி, இயன்றநெஞ்சந் தலைப் பெயர்த்தருக்கி, எதிர்பெய்து மறுத்த ஈரத்துமருங்கின்" (பொ. 147) தலைவி புலந்து கூறியது. இதன்கண், "யாணரூர" வென்றது புதுவோர் சாயற் ககன்றவாறும், "காவிரி மலிர்நிறை யன்ன மார்பு" என்றது புகன்றவுள்ளமுடைமையும், "நனிவிலக்கல் தொடக்கியோள்" என்றது புலம்புநனி காட்டலும், "மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள்" என்றது, இயன்றநெஞ்சந் தலைப்பெயர்த்தருக்கி, எதிர்பெய்து கூறலும், இவ்வாறு தன்போல்வா ளொருத்தியைக் கூடிய துணையானே புலந்து வேறுபடுவாள், தன்னின் வேறாய என்மனை வருதலை யறிவாளேல் பிறிதுபடுவாளாகலின் அவள் பாலே செல்க என மறுத்தலும் சுட்டி நின்றவாறு காண்க. மெய்ப்பாடு: வெகுளியைச் சார்ந்த பெருமிதம். பயன் புலத்தல்.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், இதனைத் தோழி கூற்றாகக்கொண்டு, "உயர்மொழிக் கிளவியு முரியவா லவட்கே" (பொ. 240) என்பதற்கு உதாரணமாகக் காட்டி, "இதனுட் காவிரிப்பெருக்குப் போலத் தலைவியை நோக்கி வருகின்ற மார்பினைத் தான் விலக்குமா றென்னை யெனத் தலைவியை உயர்த்துக் கூறியவாறு காண்க" என்பர். அவ்வாறு விலக்குதற்குக் காரணம் மகிழ்மிகச் சிறத்தலாற் பிறக்கும் மயக்கம் போலும் என்கின்றா ளாகலினாலும், அஃது உயர்மொழிக்கிளவி யாகாமையாலும் அவர் கூறியது பொருந்தாமை யுணர்ந்துகொள்க.

விலங்கல் என்றும் பாடமுண்டு. அதனுற் சிறப்புடைய பொருட்பேறின்று. (௨)

43. அம்பணத் தன்ன யாமை யேறிச்
செம்பி னன்ன பார்ப்புப்பல துஞ்சும்
யாண ரூர நின்னினும்
பாணன் பொய்யன் பலசூ ளினனே.

பாணன் வாயிலாகப் புகுந்து தேளிப்ப மறுத்த தலைமகள் பாணனேடு தலைவன் புகுந்து தெளித்துழிச் சொல்லியது.

ப. ரை:—யாமைப் புறத்து ஏறிப் பார்ப்புப்பல துஞ்சு மூரவென்றது, மார்பில் துயில்கின்ற புதல்வரையுடையாய் எ. று. மகப்பெற்று வாழ்வார்க்குப் பொய்கூறலாகா தென்பதாம்.

பு. ரை :—செம்புகளையொக்கும் யாமைப் பார்ப்புக்கள், மரக்கால் போலும் தாயாமையின் மேல் ஏறியுறங்கும் யாணரூரனே, நின்னினும் நினக்கு வாயிலாகப் புகுந்த பாணன் பொய்பல கூறுதலும், சூள்பல செய்தலுமுடையன், காண் எ. று.

அம்பணம், மரக்கால்; இதனைத் தரகர் அளக்கும் மரக்கால் என்பர் அடியார்க்குநல்லார். "பறைக்கட் பராரையர் அம்பணவளவையர்" (சிலப். 14: 209-10) என்பதனைப் "பறைக்கட் பராரை யம்பணம்" என்று கொண்டு, "பட்டமணிந்த வாயையும் பரிய அரையையுமுடைய அம்பணவளவை" யென அதன் அரும்பதவுரைகாரர் கூறுவர். யாமைப் பார்ப்புக்களின் அடிப்பகுதி செம்மை நிறம் பெற்று, ஓட்டின்கட் பெய்து நிரப்பி இறுகுவித்த செம்பின் குழம்பு போறலின், செம்பின் அன்ன பார்ப்பு என்றார்; "கம்மியர் செம்பு சொரிபானையின் மின்னி" (நற். 153) என்ற

தனுலும், செம்பு, அதன் குழம்பினை யுணர்த்துமாறறிக. இனி, அம்பணவளவையின், வாயிலணிந்த செம்பினுலியன்ற பட்டம் போல, யானைப் புறத்தே கிடந்து துஞ்சுதலின், இவ்வாறு கூறினுரெனினுமாம். இன்னுருபு, உறழ்ச்சி. பாண னது இயல்பு பாணற்குரைத்தபத்தின் முன்னுரைக்கட் கூறப் படும். பாணன் தலைமகற்குவாயிலாய்வந்து, அவனது காதன் மையும் வரவுங் கூறி, அவற்குரிய மகளிரின் சிவப்பாற்று விக்குமிடத்து, அவன் சொல்லினை மகளிர் தேறியிருத்தலும், அவன் கூறியாங்குத் தலைமகன் வாராது தாழ்த்தலும், அதனுன் அம்மகளிர் ஆற்றாது வருந்தி வேறுபடுதலும் அகவொழுக்கத் துண்மையின், அவர்கள் அவன் சொற் களைப் பொய்யென மொழிதல் இயல்பு. "கைவளம்பூத்த நரம்பியைசீர்ப் பொய்வளம், பூத்தன பாண நின் பாட்டு" (பரி. 18: 20) என்றும், "அககவர் நரம்பிற் பனுவற்பாணன், செய்த வல்லல் பல்குவ வையெயிற், றைதக லல்குல் மகளிர் இவன், பொய்பொதி கொடுஞ்சொல் ஓம்புமின்" என்றும், "பாணன் கையதை, வள்ளுயிர்த்தண்ணுமைபோல, உள்யாது மில்லதோர் போர்வையஞ் சொல்லே" (நற். 200, 310) என்றும் சான்றோர் செய்யுட்களிற் பயின்றுவருதல் காண்க. சூள் என்றது ஈண்டு வஞ்சுறையை.

புறத்தொழுகித் தன் மனையகம் போந்து, புதல் வனைத் தாங்கி நின்ற தலைமகனை நோக்கி, புறத்தொழுக் கினரும், அவர்கட்குத் துணையாயினரும் பொய்ம் மொழியும், பொய்ச் சூளும் செய்தொழுகுப வாயினும், அச்செய்கை மகப்பயந்தார்க்குத் தக்கதன்றாக, அதனை நினையாது நீயும் நின்பாணனும் செய்தொழுகுகின்றீர் கள் என்பாள், "தலைமகனையும் பாணனையும் ஒருங் கெடுத்து, தலைமைக் குணங்களால் உயர்ந்த நின்பால் பொய் யொழுக்கம் தோன்றினமையின், நின் குறிப்புவழி யொழு கும் பாணனிடத்தும் அது தோன்றிற்றென்றற்கு, நின்னி

னும் என உறழ்ந்தும், நின்பொய்யொழுக்கத்திற்குத் துணை யாதல் தனக்குக் கடனென்பதுபற்றிப் பாணன் அது செய் கின்றானின், அதனால் யாம் ஆய்நலக்கேடும் ஆறாத்துயரு மடைய வெய்தினேம் என்பாள், "பாணன் பொய்யன் பல சூளினனே" என்றும் கூறினாள். சூளுறுவார், தெய்வத்தினை முன்னிலையாக்கிக் கூறுபவாகலின், அச் சூள் பொய்யினும் கொடிதாதல் நோக்கி, சூளுறவினைப் பிரித்தும், பலகாற் போந்து பொய்யும் சூளும் செய்தான் என்பாள் பல பொய்யன், பலசூளினன் என்றும் கூறினாள். "கொண்க எம்வயின், மாணல மருட்டு நின்னினும், பாண னல்லோர் நலஞ்சிதைக்கும்மே" (ஐங். 139) எனப்பிறாண்டும் பாணன் கொடுமை கூறுமுகத்தால், தலைமகன் கொடுமை கூறப்படு மாறு காண்க.

யாமையின்மீது அதன் பார்ப்பு ஏறித் துஞ்சுமென்ற தனால், தலைமகன்மார்பின்மீது அவன்புதல்வன் அமர்ந்து துயில்கின்றமை பெற்றாம்; பெறவே, மகப்பயந்து வாழ் வார்க்கு, அம்மக்கள் தம் மார்பின்மீது ஏறி விளையாட்டயர் தலும், அமர்ந்துகிடந்து துயிறலுமாகிய இச்செயல்களாற் பிறக்கும் இன்பத்தினும் இம்மைக்கண் சீரியது பிறிதின்மை யின், அதனைச் சுட்டி யுள்ளுறுத் துரைத்தவாறாயிற்று; "மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்" (குறள். 65) எனத் திருவள்ளுவனாரும், "இன்னகை, மனையோள் துணைவியாகப் புதல்வன், மார்பினூரு மகிழ்நகையின்பம்" (ஐங். 410) எனப் பேயனாரும் கூறுதல் காண்க. மெய்ப்பாடும் பயனுமவை. (௩)

44. தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னாஅங்(கு)
அதுவே யைய நின் மார்பே
அறிந்தனை யொழுகுமதி யறனுமா ரதுவே.

பரத்தையர் மனைக்கண்ணே பன்னாட் டங்கித் தன் மனைக் கண்ணே வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை:—நின் மார்பிற் கொள்ளும் பயனின்றிக் காட்சி யெய்தவும் பெறுகின்றிலள் எனப் புலந்து கூறியவாறறிக.

பு. உரை:—ஐய, இனிய நீர்மிக்க பொய்கைக்கண் வாழும் யாமையின் இளம்பார்ப்புக்கள், தம் தாய் தம்மை யோம்பாவிடினும், தாம் அதன் முகநோக்கி வளர்ந்ததுபோல, இவள், நீ நல்காயாயினும், நின் மார்பினையே நோக்கி வாழும் இயல்பினளாயினள்; நின் மார்பு அத்தன்மையதாகும்; ஆகலின், நீ அதனை யறிந்தொழுகுவாயாக; அஃது இவள் உயிர் வாழ்க்கைக்கு ஆக்கமாவதேயன்றி நினக்கு அறமுமாம் எ-று.

தீம்பெரும் பொய்கை யென்புழி, பெருமை இடத்தினையும், இனிமை இடத்து நிகழ்பொருளினையும் விசேடித்து நின்றன. யாமை தவழ்வனவற்றுள் ஒன்றாதலின், அதன் பிள்ளையைப் "பார்ப்பு" என்றார். "தவழ்பவை தாமும் அவற் றோரன்ன" (பொ. 560) என்பது மரபியல். இது மேலதற்கும் ஒக்கும். தான் ஈன்ற பார்ப்பினைத் தாயாமை யோம்புதல் இல்லை யென்றும், அதன் கனவே அது செய்யும் என்றும், பண்டையாசிரியன்மார் கூறுப. உவமைக்கேற்பப் பொருள் வருவிக்கப்பட்டது. அத்தன்மையாவது, தன்னை நோக்கி வாழ்வாரை வாழ்விக்குந்தன்மை. நின்மார்பு அதுவே யென்றதற்கு, நின்மார்பு நயந்த இவளுக்கு நீ செய்யும் அருள், தானீன்ற பார்ப்புக்குத் தாயாமைசெய்யும் அருளே யாகும் எனினுமாம். வளர்ந்திசின் என்பது இறந்தகால முற்றுவினைத் திரிசொல். "இசினுஞ் சின்னு மேனை யிடத் தொடுந் தகுநிலை யுடைய" (சொல். 275) என்றதனாற் படர்க்கைக்கண் வந்தது. மதி முன்னிலையசை. உம்மை எச்சவும்மை. ஆர், அசை நிலை; "அசைநிலைக் கிளவி யாகு வழி யறிதல்" (சொல். 271) என்ப.

யாமைகளும் முதலைபோல நெடுங்காலம் வாழும் உயிர் வகையாகும். ஊறின்றி வளரவிடின் முதலைகள் முந்நூறு

யாண்டும், யாமைகள் மூந்நூற்றைம்பது யாண்டும் உயிர் வாழுமென்று உயிர்நூலறிஞர் கூறுவர். இவை நீரினும் நிலத்தினும் இயங்குவனவாகலின், அவ்வவ்விடத்துத் தட்ப வெப்பங்கட்கேற்ப இவற்றின் உதிரமும் அமைந்துமாறும் இயல்பிற்று. இவை நாற்பதின்மேலும் வகைப்படும் என்றும், இவற்றுள் மிகப்பரியன பசிபிக் (Pacific), இந்து (Indian ocean) ஆகிய இருபேராளக்கரினும் வாழ்கின்றனவென்றும், அவற்றுட் சில ஐம்பத்தைந்தங்குல நீளமும், ஐஞ்ஞூற்றைம்பது பவுண்டு (550 lbs.) நிறையுமுடைய வென்றுங் கூறுப. பிரேசில் (Brazil) நாட்டு யாமைகள் இரண்டடி நீளமுடைய வென்ப.

யாமை இராக்காலங்களில் நிலத்திடைப்போதரும். சினையீனுங் காலத்தில், நீராலும் பிறவற்றாலும் இடையூறு நிகழாததோர் தனியிடங் கண்டு, ஆங்கொரு குழி செய்து, அதன்கண் தன் சினைகளையீன்று, மணலான் மெத்தென மூடிவிட்டுப் பின் வேறொருவழியால் நீர் நிலையை யடையும். சினையீனும் காலம் எய்தியவழியும், அக்காலத்து, அது செய்தலால், தனக்காதல், தன்சினைகட்காதல் ஊறு நிகழும் என்பது தோன்றின், அது நிகழாமைக் குரிய காலம் வருமளவும், சினையீனுது நின்று, பெயர்த்துக் கருவுயிர்க்கும் பெற்றிமையுடையது! சினையீன்றயாமை, முன்னர்ப் போந்த வழியே மீளாமல், பிறிதொருவழியாற் சேறல், பகையுயிர்கள் தன் சுவடுபற்றிப் போந்து, தன் சினைகட்குத் தீங்கு விளைவிக்குமென்பது கருதிப்போலும்! இதனைக் கூர்த்து நோக்கிய நம் பண்டைச் சான்றோர், யாமை தன் சினையினை மணலிடைப் புதைத்துவைத்தலையும், அக்காலை யம் முட்டைகள் தாயின் துணையின்றித் தமித்துக் கிடத்தலையும் விதந்து, "அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக், குப்பைவெண் மணற் பக்கஞ் சேர்த்தி, நிறைச்சூல் யாமை மறைத் தீன்று புதைத்த, கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டை, பார்ப்பிட னாகுமளவைப் பகுவாய்க், கணவனோம்புங் கானலஞ்

சேர்ப்பன்" (அகம் 160) என்றும், "தாயில் முட்டை போல வுட்கிடந்து, சாயினல்லது பிறிதெவ னுடைத்தோ, யாமைப் பார்ப்பி னன்ன, காமம் காதலர் கையற விடினே" (குறுந் 152) என்றும் கூறினர். இக்காட்டியவற்றான், தாயாமை யீன்ற சினைகளை அதன் கணவனே, அவை பார்ப்பாகு மளவும் புறந்தருமென்பது கூறப்படுதல் காண்க.

முட்டை பொரித்தவுடன், யாமைப் பார்ப்புக்கள் மணலைக் கிளைத்துக்கொண்டு வெளிவரும். அவற்றிற்கு அக்காலத்துக் கண் முதலிய பொறியில்லையாயினும், வாயினால் மணலைக் கறித்துக்கொண்டே நீர்நிலையையடையும். காந்தவூசியை எவ்வழியிற் றிருப்பினும், அது வடதிசையே நோக்கி நிற்றல் போல, யாமைப் பார்ப்புக்கள் நீர் நிலையை யடைதற்குரிய நெறியைப் பற்றுதவாறு எத்துணை இடையீடுபடுப்பினும், அவை அவ்வனைத்தும் கடந்து நீர்நிலையையே தவறாது அடையும் இயற்கை வன்மை படைத்துள என்பர்*

---

*The crocodiles can live for 300 years and the tortoise for 350 years. The tortoises leave water only when the time comes for them to lay eggs. Then they are but cold-blooded reptiles and they exhibit caution and cunning. The site of man will keep them off shore and the females will retain their eggs for long rather than force unnatural risk. Landing in the still of night, they march inland to some point high enough to escape flood and high tide, dig deep pits in the sand and there lay their eggs. Then they return to the sea but *not by the way they came in as if to lead astray any who should follow them to their nurseries.* The young turtles, when hatched from the eggs, bite their way out of the sand and may be seen with their mouths full of grit as they march to the water. Instinct is strong and overmastering with them, No matter how many times

மற்று, தமிழாசிரியன்மார் இவை தாய்முக நோக்கி வளர்கின்றன என்றது, தம் தாய் வாழுமிடம் அந்நீர்நிலையே யாகலின், ஆண்டடையின், தம் தாயினை யடைதல் கூடுமென்றே இவை நீர்நிலையை நோக்கிப் பெயர்கின்றன வென்ற கருத்தினாற் போலும். இவ் யாமையின் ஊனும், ஓடும், பிறவும் பயன்படுமாற்றினை ஈண்டு விரிப்பிற் பெருகுமாகலின், அவற்றைப்பற்றிய குறிப்புக்களைக் கூறிற்றிலம்.

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கிவந்த தலைமகற்குத் தலைமகளின் மெல்லியற் பொறையை விளங்கக்கூறுதல் தோழி கருத்தாகலின், உவமமும் ஓர் அளவை யாதல் குறித்து, யாமைப் பார்ப்பின்மேல் வைத்து உவமித்தாள். தாய் பயந்த பார்ப்பினை யாமைக் கணவன் ஓம்புதல்போல, நின் பொருட்டு இவள் கொண்ட காமத்தினை நீ ஓம்பாய் பினை; அதனை நின் மார்பின் காட்சி செய்யும் என்பாள், அதுவே யைய நின் மார்பே என்றாள். "காதலர் நல்கார் நயவாராயினும், பல்காற்காண்டலும் உள்ளத்துக் கினிதே" (குறுந். 60) என்றும், "வேட்டோர்க், கமிழ்தத்தன்ன கமழ்தார் மார்பு" (அகம். 332) என்றும் சான்றோர் கூறிய வாற்றானும் இக்கருத்து அறியப்படும். தாய் கழித் தகன்ற பார்ப்பினை யாமைக் கணவன் ஓம்புதலை மேலே கூறினும். தன் மார்பின் இயல்பு அஃதென்பதை யறிந்தவழி, கணவனாகிய தான் தலைமகள்பாற் பிறந்த காமம் அழியாவகை யொழுகுதல் தனக்கு அறமென்பது தலைமகனால் உணரப்படுமாகலின், அறிந்தனை யொழுகுமதி அறனுமாரதுவே என்று கூறினாள். "உறுக

---

they may be diverted or even turned round and forced in an opposite direction they make for the sea as a magnetic needle points to the north. These are vegetarians. Naturalists have tabulated some 40 species of land tortoises. Tortoise in Brazil is 2 ft. long. Those in Pacific and Indian oceans are 55 inches in length and 550 lbs. weight.—*Book of knowledge*.

ணும்பல்தன்னியல்பாகலின், உரியதாகும் தோழிகண் உரனே" (பொ. 239) என்றதனால் இது தோழிமாட் டுடைமையுமெனவறிக.

இது, "பிழைத்துவந்திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங்காக்கிக் கொடுத்தற்கண்" (பொ. 150) தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். முன்னர் வருவதற்கும் இஃதொக்கும். இதன்கண், "அறிந்தனையொழுகுமதி" யென்றதனோடமையாது, "அறனுமாரதுவே" யென்றதனால், நெருங்கிக் கூறிய வாறுகாண்க. மெய்ப்பாடும் பயனுமவை.

ஐயன்மார்பே என்று பாடமாயின், இப்பாட்டு, அடங்கா வொழுக்கத் தலைவன்வயின் அழிந்த தலைமகளை அடங்கக் காட்டுதற்கண், தலைவன் மார்பினது இயல்பு அஃதென்றும், அதனையறிந்தொழுகுதல் அவட்கு அறமென்றும் தோழி கூறியவாறாம். (சு)

45. கூதி ராயிற் றண்கலிழ் தந்து
வேனி லாயின் மணிநிறங் கொள்ளும்
யாறணிந் தன்று நின் னூரே
பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே

நெடுநாட் பரத்தையரிடத்தனாய் ஒழுகிய தலைமகன் மனைவயிற் சென்றுழித் தோழி சொல்லியது.

ப. ரை:—கலங்குதலுந் தெளிதலு முடைத்தாகிய யாற்றியல்பும் பெறாது என்றும் பசந்தே ஒழுகுகின்றாள் இவள் என்பதாம்.

பு. ரை:—மகிழ்ந, கூதிர்க்காலத்துக் குளிர்ந்த நீர்பெருகுதலால் கலங்கி, வேனிற் காலத்து அஃதின்மையின் தெளிந்து நீலமணியின் நிறத்தைப்பெறும் யாற்றினால், நின்னுடையவூர் அழகு பெற்றது; அவ்வாறின்றி, இவள் கண்கள் எஞ்ஞான்றும் பசப்பினால் அழகுபெற்றன எ. று.

கூதிர், அறுவகைப் பெரும்பொழுதினுள் ஒன்று; ஐப்பசியும் கார்த்திகையும் அதற்குரிய திங்களாம். தண் கலிழ், கலங்கிய நீர்ப்பெருக்கு. வேனில், இளவேனில், முதுவேனில் என இருவகைத்தாம்; அவற்றிற்கு, முறையே சித்திரை வைகாசித் திங்களும், ஆனி ஆடித்திங்களும் உரியவாம். வேனிலில், மழையின்மையான் மேன்மேலும் வருவாய் இன்றாதலின், நின்ற நீர் தெளிந்து நீலமணிபோறலின், "வேனிலாயின் மணிநிறம் கொள்ளும்" என்றார். தெளிந்த நீர் நீலமணிபோறலை, "மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப" (குறுந். 49) என்பதனாலுமறிக. ஊர் யாறணிந்தன்று என்றும், கண் பசப்பணிந்தன வென்றும் இயையும். தலைவி புறப்பிரிவைத் தோழி தன்னுறுப்பாகக் கூறியது, "எம்மென வருஉங் கிழமைத் தொற்றம் அல்லவாயினும் புல்லுவ வுளவே" (பொ. 221) என்றதனா லமைந்தது.

"நின் ஊரணிந்தயாறு கூதிரிற் கலக்கமும், வேனிலில் தெளிவும் பெறுதல் போல, நின் தோளை மணந்த இவளும் நீ செய்யும் பிரிவு புணர்வுகளால் இடும்பையும் இன்பமும் எய்துதற்குரிய," ளென்பதனைக் கூதிராயின் தண்கலிழ்தந்து, வேனிலாயின் மணி நிறங்கொள்ளும் யாறணிந்தன்று நின்னூரே யென்பதனால் எய்துவித்து, அவன் புறத்தொழுக்கத்துக் கொடுமை சுட்டி, தோழி, "பரத்தையமைனக்கண், நீ நெடிது தங்கினமையின், இவள் ஆற்றாள், அவ் யாற்றியல்பும் பெறுதல் எஞ்ஞான்றும் பசத்தலையே பொருளாகக் கொண்டாள்" என்பாள், பசப்பணிந்தனவால் மகிழ்ந என் கண்ணே என்றாள். வாழ்க்கைக்கண், புணர்வும் பிரிவும் நிகழ்தல் இயல்பாதலின், அவைகாரணமாக முறையே இன்பமும் இடும்பையு மெய்துதல் தலைமக்கட்குரித்தென்றாள். இவ்வுரிமை, "இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும், நண்பக லமையமும் இரவும் போல, வேறு வேறியலவாகி மாறெதிர்ந்துள" (அகம். 327) என்புழி உவமையாலும் பெறப்படும். மெய்ப்பாடும் பயனுமவை.

இனி, இப்பாட்டின்கண், "என் கண்ணே" என்றதற்கு அமைதி கண்டுரைக்கும் வழுவமைதி வலிந்து கோடலாய்த் தோன்றுதலானும், பிறண்டும், "ஐயவி யன்ன சிறுவீ ஞாழல், செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த், துறை யணிந் தன்றவ ரூரே யிறைபிறந், திலங்குவளை நெகிழச் சாஅய்ப், புலம்பணிந் தன்றவர் மணந்ததோளே" (குறுந். 50) என இக் கருத்தமைந்த பாட்டுத் தலைவி கூற்றாகவே கொள்ளப் பட்டிருத்தலானும், இதனைத் தலைவி கூற்றாகக் கொள்ளினும் அமையுமென்பர். (ரு)

46. நினக்கே யன்றஃ தெமக்குமா ரினிதே
நின்மார்பு நயந்த நன்னுத லரிவை
வேண்டிய குறிப்பினை யாகி
ஈண்டுநீ யருளா தாண்டுறை தல்லே.

மனைக்கண் வருதல் பரத்தை விலக்க விலங்கிப் பின்பு உலகியல்பற்றி அவள் குறிப்பினோடும் வந்தமையறிந்த தோழி தலைமகனைப் புலந்து சொல்லியது.

ப· ரை :—இவ்வாறு வருதலின் வாராமையே இனிதென் பதாம்.

பு. ரை :—பெரும, நின்மார்பினை விரும்பிய, நல்ல நெற்றியினையுடைய அரிவையாவாள் விழைந்து செய்த குறிப்பினையுடையையாய், இங்கு வந்தருளுவ தொழிந்து, வாராது, அவள் மனைக்கண்ணே தங்கியருளுதல் நினக்கே யன்றி, எமக்கும் இனிதாகும் எ. று.

"நினக்கே யன்றஃ தெமக்குமார் இனிதே" என்புழி, ஏகாரம் முன்னது பிரிநிலையும், பின்னது தேற்றமுமாம். அன்றியென்னும் வினையெச்சகளவி, "இன்றியென்னும் வினையெஞ்சி றுதி, நின்ற இகரம் உகரமாதல், தொன்றியல் மருங்கிற் செய்யுளு ளுரித்தே" (எழுத்து. 237) என்புழித்

"தோன்றியல் மருங்கின் என்றதனால், இகரம் உகரமாதல் எய்திற்று. அஃதென்னும் சுட்டு, செய்யுளாதலின், முற்பட வந்தது. "வேண்டிய குறிப்பினை" யென்புழி வேண்டல் தலைமகன், பரத்தை என்ற இருவர்பாலும் நின்ற விழைவு தோற்றுவித்து, அவன் அவள் குறிப்பினனாதற் கேதுவுமாத லின், ஆக்கம் வந்தது. அருளாதென்னும் எதிர்மறைவினை யெச்சம் உறைதல் என்னும் வினைப்பெயரின் வினை கொண் டது. ஈண்டு, ஆண்டு என்பன முறையே தலைமகன்மனை யும், பரத்தைமனையும் சுட்டி நின்றன.

மனைக்கண் வருதலைக் கருதிய தலைமகனை அவ்வாறு வாராவகைப் பரத்தை விலக்கியது தானறிந்தமை தோன்ற, நின்மார்பு நயந்த நன்னுதலரிவை யென்றும், "அவள் விலக்க விலங்கி வருதல்தவிர்ந்த நீ, இன்று, ஈண்டுப் போந்தது, உலகியல் பற்றியல்லது, இவளை அருளும் குறிப்புப்பற்றி யன்று" என்பாள், வேண்டிய குறிப்பினை யாகி யென்றும், "அக் குறிப்பினால் இதுபோது செய்யும் தலையளிதானும் அவளது குறிப்புவழிப்பட்டதே யன்றிப் பிறிதின்மையின், அவள் மனைக்கண்ணே தங்குதலே நினக்கு இன்பமாவது" என்பாள், ஈண்டு நீ யருளா தாண்டுறைதல் என்றும், அது செய்தலால் நினக்கும் நின் பரத்தைக்குமே இனிதாம் எனக்கருதற்க, நின்னின்யாம் வேறல்லேமாய், நீ செய்துவனவெல்லாம் எய்தநிற்கின்றே மென்பாள் நினக்கே யன்றஃ தெமக்கு மாரினிதே என்றும் கூறினள். "எமக்கு மாரினிதே" என்பது குறிப்பு மொழி.

நீ மனைக்கண் வருதலைப்பேணாது, நின்பரத்தை விலக்க விலங்கிப் பின் அவள் குறிப்பினையாகி வருதல் எமக்கு நாணுத்தருமாகலின், ஆண்டு உறைதலே தக்கது எனப் புலந்து கூறுகின்றாளாகலின், இது, "பேணுவொழுக்கம் நாணிய பொருளின்கண்" (பொ. 150) தோழி கூறுவதன் பாற்படும். மெய்ப்பாடும் பயனுமவை.

இனி, ஆசிரியர் இளம்பூரணர், "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 145) என்ற சூத்திரத்துத் "தங்கிய வொழுக்கத்துக் கிழவனை வணங்கி, எங்கையர்க் குரையென விரத்தற் கண்ணும்" என்பதற்கு உதாரணமாக்குவர்; நச்சினார்க்கினியர், அச்சூத்திரத்துக் (பொ. 147), "கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக், காத லெங்கையர் காணின் நன்றென, மாதர் சான்ற வகையின் கண்ணும்" என்பதற்குக் காட்டினர். இக் கூற்றுவகை யிரண்டும் தலைவிக்குரிய வாகலின், இப்பாட்டுத் தலைவி கூற்றென்பது அவர்கள் கருத்தாதல் அறிக. தலைவிகூற்றாயின், உலகியல்பற்றித் தன் மனைக்குப் போந்தான் பிரியான் என்பதை யுணர்ந்துவைத்தும், நீ அவன் குறிப்பினையாய் வருதலின், வாராது ஆண்டே சென்று உறைக எனக்கூறுதலின், இஃது அச்சூத்திரத்துச் "செல்லாக்காலைச் செல்கென விடுத்தற்கண்ணும்" என்புழி நிகழும் கூற்றுவகையாதல் காண்க. அக்காலை, இது புலவிக்கண் நிகழ்தலின் உள்ளது உவர்த்தலாம் எனவுணர்க. (சூ)

47\. முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த
அகல்பெறு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர
மாணிழை யாய மறியுநின்
பாணன் போலப் பல பொய்த் தன்றே.

பாணற்கு வாயின் மறுத்த தலைமகள், பின், அப்பாணனொடு, தலைமகன் புகுந்து, தன் காதன்மை கூறியவழிச் சொல்லியது.

ப.ரை :—மாணிழை யாயம் அறியுமென்ற கருத்து : கூறுங் காதன்மை பொய்யென்பது ஆயமெல்லா மறியும்; ஈான இதனை மெய்யென்று கொள்ளினும் அவர் கொளார் என்பதாம்.

கெடிறுசொரிந்த வட்டிநிறைய மனையோள் பயறுநிறைக்கு மூர வென்றது, நீ நின் காதல் சொல்லிவிடுத்து, அவர் சிறந்த காதல் சொல்லிவரவிடப்பெறுவாய் எ. று.

பு. ரை :—முட்போலும் கூறிய பற்களையுடைய பாண் மகளின் இனிய கெடிற்றுமீன் பெய்த அகன்ற பெரிய வட்டி நிறைய, மனையவள், அரிகா லிடத்து வித்திப்பெற்ற பெரும்பயற்றைக் கொடுக்கும் ஊரனே, நினக்கு வாயி லாய்ப் புகுந்த பாணனைப்போல, நீயும் பொய்பல கூறுதலைச் சிறந்த இழையணிந்த ஆயமகளிரு மறிவாராகலின், யான் மெய்யென்று கொள்ளுமாறு இல்லை, காண் எ. று.

கூர்மைபற்றி, முள்ளெயி றென்றார்; "முள்ளெயிற்றுத் துவர்வாய்" (அகம். 39) என்று பிறரும் கூறினர். பாண் மகள் என்புழிப் பாண் என்பது குடிப்பெயர்; துடியன் "பாணன் பறையன் கடம்பனென், றிந்நான் கல்லது குடியு மில்லை" (புறம். 335) என்பதனாலு மறியப்படும். கெடிறு, ஒருவகை மீன்*. இதனை இக் காலத்திற் கெளுத்தி யென வழங்குப. கடையர் இதனைக் கலந்துண்ப ரென்ப; "விழவின் றாயினும் உழவர் மண்டை இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து" (புறம். 384) என வருதல் காண்க. வட்டி, கடகப்பெட்டி யென்பர்; இஃது உட்புறம் பனங் குருத்தாலும், வெளிப்புறம் அதன் அகணியாலும் செய்யப் படும் என்ப. இது, பாணரும் கடையரும், மீனும், ஊனும் பெய்துவைத்தற்குப் பயன்படுவதேயன்றி, உழுதொழிலோர் விதை முளைவைத்தற்கும், மகளிர் பூப்பெய்து வைத்தற்கும் பயன்படுமென்று மறிக. முளைவைத்தலாவது, வித்தற் குரிய விதை முளைத்தற் குரிய செவ்வி பெறுவித்தல். "கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன், மான்றசைச் சொரிந்த வட்டியும்" (புறம். 33), "ஊனுூர் வட்டியர்" (மலைபடு. 152), "வித்தொடுசென்ற வட்டி பற்பல, மீனொடு

---

* Surmullet.

பெயரும்" (நற். 210) என்றும், "உழவர் விதைக்குறு வட்டி போகொடு பொதுளப், பெயர்ந்தோர் தான் வந்தன்றே" (குறுந். 155) என்றும், "துய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு, பித்திகை விரவுமலர் கொள்ளீரோவென, வண்டுசூழ் வட்டியள் திரிதரும், தண்டலை யுழவர் தனிமட மகளே" (நற். 67), "வரிமென் முகைய நுண்கொடி யதிரல், மல்ககல் வட்டியர்" (அகம். 391) என்றும் சான்றோர் கூறுதல் காண்க. அரிகால், அன்மொழித்தொகை; அரிந்த கால்கள் நின்ற வயல் என விரியும். "அரிகால்போழ்ந்த தெரிபகட்டுழவர்" (அகம். 41) என்புழியும் அது. "அரிகால் மாறிய வங்கணகன்வயல்" (நற். 210) என்புழி இறந்த காலந்தொக்க வினைத்தொகையாய் நிற்றல் காண்க. அரிகாலில் எள்ளாதல், பயறுதல் விதைத்தல் இக்காலத்தும் உழவர் மரபாதலின், "அரிகாற் பெரும்பயறு" எனப்பட்டது. பாணன் பொய் கூறுவனென்பதனை, "பாணன் பொய்யன் பலசூ ளினனே" (43) என இந்நூலுள்ளும், "இவன் (பாணன்) பொய்பொதி கொடுஞ்சொல் ஓம்புமின்" (நற். 200) எனப் பிறாண்டும் கூறுப.

பண்டு, தலைமகனைத் தலைப்பெய்த விடத்து, ~~நின்னோடு~~ உடனுறையும் ஆயமகளிர் அறிய வஞ்சின முரைத்துப் பின் அது பொய்படப் பிரிந்தானாகலின், மாணிழை யாயம் அறியும் என்றும், அவற்கு வாயில் வேண்டிவந்தாருள், பாணன் பல பொய்ம்மொழிகளால் தலைவனது காதன்மை கூறக் கேட்டிருந்தாள், அவையனைத்தும் பொய்யாயினமை கண்டு, பின்னொருகால், அது கூறிவந்த அவற்கு வாயின்மறுத்தாளாகலின், நின் பாணன் போல என்றும், இதுபோது பாணனோடு போந்து அக்காதன்மையே கூறுங் கருத்தினனாகலின், "நின் பாணன் போலப் பல பொய்த்தல்லே" என்றும், கூறினாள். கூறவே, நின் பொய்ம்மை எம்பால் நில்லாது எம்மோடு உடன்பயிலும் ஆயமும் அறிய நின்றமையின், யாம் மெய்யெனக் கொள்ளினும், அவர் பொய்யென்றே

கொள்வர் என்றுளாம். "உடனு டாயமோ டுற்ற சூளே" (ஐங். 31) என்றும், "தாதுசேர் நிகர்மலர் கொய்யும், ஆயமெல்லா முடன்கண் டன்றே" (குறுந். 311) என்றும் வருவனவற்றால், ஆயமறியவொழுகியது பெரிதும் நினைக்கப் படுமா றறிக.

பாண்மகளது இழிந்த கெடிறு சொரிந்த வட்டி நிறைய, மனையோள் உயர்ந்த பெரும்பயற்றினைக் கொடுப்பள் என்றது, நினக்கு வாயிலாவார் வந்து பொய் பொதிந்த சொற்களால் மொழிந்த நின்காதன்மைக்கு, நின்னை நடந்தோர் வாயில் நேர்தலைப் பெறுவாய் என்றவாறு. எனவே, நீ இவ்வாறு பொய்த்தற்குக் காரணம், நின் வாயில்களால் நெஞ்சு நெகிழ்ந்து அது நேரும் தவறுடைய யாமே எனப் புலந்தவாறு. "மாணிழையாயம் அறியும்" என்றது புறஞ்சொல் மாணாக்கிளவி. "பல பொய்த்தல்" என்றது ஓராற்றால் தெய்வமஞ்சலுமாம்.

இவ்வாறு, குறிப்பாலும் வெளிப்படையாலும் வைஇய மொழி கூறல் தலைமகட்கு வழுவாயினும், தன்வயினுரிமையும், அவன்வயிற் பரத்தைமையும் விளங்கக்கூறும் பான்மைக்கண் நிகழ்தலின், அமையும் என்க; ஆசிரியரும் "மங்கல மொழியும், வைஇயமொழியும், மாறிலாண்மையிற் சொல்லிய மொழியும்,கூறியன் மருங்கிற் கொள்ளுமென்ப" (பொ. 244) என்றனர்.

இது, துனிபோலத் தோன்றினும், உள்ளுறையால் நயப்பாடு காட்டி நிற்றலின், சிறு துனியாய், பின்னெய்தும் இன்பத்துக்கு ஆக்கமாம் எனவறிக; "ஊடலிற் றோன்றும் சிறுதுனி நல்லளி, வாடினும் பாடு பெறும்" (குறள். 1322) என்பதனாலறிக. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல். (எ)

48\. வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்

வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள்

யாண்டுகழி வெண்ணெல் நிறைக்குமூர
வேண்டேம் பெருமநின் பரத்தை
ஆண்டுச்செய் குறியோ டீண்டுநீ வரலே.

பரத்தையர்மாட்டு ஒழுகாநின்று தன் மனைக்கட் சென்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

பு. ரை:— மீன்வலை வீசுதலில் வல்ல பாண்மகனும், வாலிய பற்களையுடைய இளையளாய பாண்மகளும், வரால் மீனைக் கொணர்ந்து சொரிந்த வட்டி நிறைய, மனையவள் பழைமையான வெண்ணெல்லை உதவும் ஊர, நின்பரத்தை யாவாள் ஆண்டுச் செய்த குறியுடன், நீ, ஈண்டு வருதலை யாம் விரும்புகின்றிலேம் எ. று.

வலைவீசி மீன் பிடிக்கும் வன்மையுடைமை பற்றி "வலைவல் பாண்மகன்" என்றும், ஒரோவழி அஃது அப் பாண்மகட்கும் எய்த, "வாலெயிற்று மடமகள்" என்றும் கூறினர்; "நாண்கொ ளுண் கோலின் மீன்கொள் பாண்மகள் தான்புன வடைகரைப் படுத்த வராஅல், நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு, வஞ்சி விறகிற் சுட்டுவா யுறுக்கும், தண்டுறை யூரன்" (அகம். 216) என்று பிறரும் கூறுதல் காண்க. பாண்மகனும் பாண்மகளு முள்ளிட்ட பாணர்களை வேண்டுவ கொடுத்து ஓம்புதல் மனையோட்கு இயல்பாதல் தோன்ற, இருபாலாரையும் ஒருங்கு கூறினர்; "மனையோள் பாணரார்த்தவும் பரிசிலரோம்பவும், ஊனொலி யரவமொடு கைதூ வாளே" (புறம். 334) எனவரும் புறப்பாட்டானும் அறியப்படும். யாண்டுகழி வெண்ணெல் என்றது, விளைந்து ஓர் யாண்டின் எல்லை கழிந்த நெல்லை; அஃதாவது, பழைமை யுற்ற நெல் என்பதாம். யாண்டுகழி வெண்ணெல்லை இவ் வாற்றாற் செலவிடாத வழி, அவை பயனின்றிக் கழிதலே யன்றி, ஆண்டுதோ றெய்தும் புதுநெல்லை நிறைத்தற்கு இடனுமின்றாம் எனவுணர்க. இவ்வகையிற் பழநெல்லை

செலவிடப்பெறு மென்பதை, "காலைத்தந்த கனைக்கோட்டு வாளைக், கவ்வாங்குந்தி யஞ்சொற் பாண்மகள், நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற், பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள், கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்" (அகம். 126) என்பதனானு மறியலாம். வெண்ணெல், கார் நெல், செந்நெல் என்பவற்றினைப் போலும் நெல் விசேடம். இஃது இனஞ்சுட்டிய பண்புகொள் பெயர். ஆண்டு ஈண்டு என்பன பரத்தை மனையும், தன்மனையும் சுட்டி நின்றன. குறி, "முலையாலும் பூணாலும் முன்கட் டாஞ் சேர்ந்த, இலையாலும் இட்ட குறி" (திணைமா. 152)

"நினக்குரிய வாயில்களால், அது நேர்வித்துக் கூடும் இயல்புடைமை யாயினும், நீ நின்பரத்தை செய்த குறி யொடுவருதலின், யாம் நின்னை வேண்டேம்" என்பாள், உள்ளுறையால் தலைமகன் வாயில் நேர்வித்துக் கூடுதலையும், வாயில் நேரும் தான்மட்டும் அது நேராவாறு குறியொடு போதருதலையும் தலைவி கூறினாள். "நீ விடுத்த வாயில்கள் எம் நெஞ்சு நெகிழக் கூறிய காதன்மைக்கு யாம் அது நேரு முகத்தால் நின்னை வேண்டி நின்றேமாயினும், வேண்டா வாறு நீ பரத்தை செய்த குறியொடு வந்தனை" யென்பாள், வேண்டேம் பெரும நின் பரத்தை ஆண்டுச் செய் குறியோடு ஈண்டு நீ வரலே யென்றாள். ஊர என்றதனோ டமையாது பெரும எனப்பெயர்த்தும் விளித்ததனால், "என் தொன்னலம் தொலைவதாயினும், நின்மார்பினைக் கூடுதல் செய்யேன்" எனப் புலவி மிகுந்து கூறியவாறும்." "வெண்ணெலரிநர்" (350) என்னும் நற்றிணைப்பாட்டினுள், தலைமகள், "என் தொல்கவின் தொலையினுந் தொலைக, சாரல் விடேன்" என்றும், "குவவு முலை சாடிய சாந்தினை, வாடிய கோதையை எனப் பரத்தை செய்குறியை விதந்தும், "*ஆகில் கலங்கந் தீஇ

"*ஆகி லகலந் தழீஇ யற்று" என்று திருத்திக்கோடல் பொருந்தாதென்பது இந்நூல் உரைகாரரால் ஆராய்ந்து காணப் பெற்றுளது. தமிழ்ப்பொழில் துணர் XI பக். 378 பார்க்க.

யற்றுமன்" என்று அக் குறியொடு வந்தானைக் கூடலை பிழிக்தும் புலவி மிகுந்து கூறுதல் காண்க.

வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள் யாண்டு கழிந்த வெண்ணெல்லை நிறைக்கு மென்றது, வாயில்கள் கூறிய காதன்மைக்குத் தலைவி வாயில் நேர்ந்தமை கூறிய வாறு. யாண்டுகழி வெண்ணெல் என்பது வாளாது பெயராய் நின்றது; "அடியளந்தான்" (குறள் 610) என் புழிப்போல. மெய்ப்பாடும் பயனுமவை. (அ)

49. அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்
யாண ரூர நின் பாண்மகள்
யார் நலஞ் சிதையப் பொய்க்குமோ வினியே.

பாணன் வாயிலாகப் பரத்தையோடு கூடினானென்பது கேட்ட தலைமகள் தனக்கும் பாணற்கு காதன்மை கூறிவிப் பான் புக்க தலைமகற்குச் சொல்லியது.

பு. ரை:— அழகிய சிலவாகிய கூந்தலையும், அசைந்த நடையினையு முடைய பாண்மகள், சிலவாகிய மீன்களைக் கொடுத்துப் பலவாகிய நெல்லைப் பெறும் புதுவருவாயினை யுடைய வூரனே, நினக்கு வாயிலாகிய பாண்மகன், இனி யாருடைய நலம் கெடுமாறு பொய் கூறுவனோ? எனைப் பரத்தையரும் அவன் பொய்ம்மையினை யுணர்ந்து கொண்டனராகலின் எ. று.

அஞ்சிலோதி, தொகை நூல்களில் மிகப்பயின்று வழக்கிற்று. இனி யென்றதனால், பண்டெல்லாம் அவன் கூறியது கேட்டு மெய்யென நினைந்து தலைமகள் ஒழுகி னளென்பது பெற்றும். ஓ, வினா. இனி, இதனை வினைப் படுத்து, "அவனை நீக்குக; அவன் பொய்ம்மை யாண்டும் அறியப்பட்டது" எனினுமாம். இஃதிப் பொருட்டாதல்,

"பாணே மென்னவு மொல்லார்" (அகம். 23) என்பதனானு மறிக. ஏனைப் பரத்தையரும் என்பது முதலாயின கூற்றெச்சம்.

தலைமகனோடு போந்த பாணனது மொழிக்கொடுமையினைக் கூறுகின்றாளாகலின், தலைமகனை நோக்கி, தான் கூறுவது பொய்யாவதும், அதனால் மகளிர் பலர் நலங்கெடுவதும் தெளியாதாரைத் தெரிந்தாளுதல் நினக்குத் தக்கதன்றென்பது பட, நின்பாணன் என்றும், முன்பு பரத்தைபால் நினக்கு வாயிலாய்ச் சென்று கூட்டிய செய்தி யாமறிந்தமையின், அவன் இனிக் கூறுவன எம்மைத் தெளிவிக்கும் பான்மைய அல்லவாக, அவன் ஈண்டுப் போந்து இதுபோது கூறும் காதன்மையால், பரத்தையரும் உணர்ந்து, இனி இவன் கூறுவனவற்றைப் பொய்யெனவே தேறுதலொருதலை; இவன் சொல்லுவன யாண்டுஞ் செல்லா வென்பாள், யார் நலஞ் சிதையப் போய்க்குமோ வினியே யென்றும் கூறினாள்.

பாண்மகள் சில மீன் சொரிந்து பல நெற் பெறுவாள் என்றது, நினக்குவாயிலாய் வந்த பாணன் நின்காதன்மை யுணர்த்தும் சில சொற்களைச் சொல்லிப் பலமகளிரை நின்பாற் புணர்ப்பன் என்றவாறு. மெய்ப்பாடும் பயனுமவை.

இன்னோரன்ன கூற்றுக்கள், "அவனறி வாற்ற வறியுமாகலின்" என்ற சூத்திரத்து, "வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ" யென்புழி "வகை" யென்பதன்பாற் படுமென்க. இவ்வாறு வாயில் நேர்விப்பான் புக்க பாணனொடு புலந்து கூறவே, அவனொடு புகுந்த தலைமகனையும் புலந்து கூறியவாறு பெற்றாம். (கூ)

50. துணையோர் செல்வமும் யாமும் வருந்ததும்
வஞ்சி யோங்கிய யாண ரூர
தஞ்ச மருளாய் நீயே நின்
நெஞ்சம் பெற்ற விவளுமா ரழுமே.

மனையினீங்கிப் பரத்தையிடத்துப் பன்னாள் தங்கிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

பு. ரை:—வஞ்சி மரங்களோங்கிய யாணரூரனே, நின்னைத் தன் நெஞ்சிடைப் பெற்ற இவள் எளியளாதலின், இவளையே அருளுக; நின்பிரிவாற்றாது இவளும் அழுகின்றாள்; ஒரோவழி நீ பிரியினும், பன்னாள் தங்கிவிடுதலால், துணையாயினார் செல்வமேயன்றி, இல்லறம் சிறவாமையால், யாமும் வருந்தாநிற்கின்றேம் எ. று.

துணையோர், தலைமகனது துணைமைபெற்றுப் பொருள் செய்துகொள்ளும் பான்மையோர். செல்வம், இன்ப நுகர்ச்சிக் கேதுவாய பொருள். யாமும் என்றது தலைமகளை யுளப்படுத்து நின்றது. செல்வமும் யாமும் என எண்ணி நின்று, வருந்தும் என உயர்திணை வினையான் முடிதலை, "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென், றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்" (சொல். 43) என்பதனாற் கொள்க. தஞ்சம் என்பது எண்மைப்பொருட்டு. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. நின் நெஞ்சம் பெற்ற இவள் என்பதற்கு, நின்னெஞ்சார்ந்த அருளைப்பெற்ற இவள் எனினுமாம்.

மனையின் நீங்கிப் போய்ப் பன்னாள் பரத்தை மனையன் கட்டங்கினானாதலின், "அருள் நிறைந்த நின்னைத் தன் நெஞ்சிடைப் பெற்றும், அவ்வருள் பெறாது தஞ்சமாயினள்" என்பாள், தஞ்சம் என்றும், அப் பெற்றியாட்கு நின் அருள் இன்றியமையாது என்றற்கு, அருளாய் நீயே என்றும், பிரிவின்றிருந்து அருளாவழி, இவள் செய்வது பிறிதின்மையின், இவளுமா ரழுமே என்றும், அதனால் யாங்களும், எம்போல் நினக்கமைந்த துணைவரும் செய்வன சிறவாமையால், பயனிழந்து வருந்துவேமாயினேம் என்றற்குத் துணையோர் செல்வமும் யாமும் வருந்தும் என்றும் தோழி கூறினாள். துணையாயினார்க்கு ஆக்கந்தரும்

வினையினும், ஆடவர்க்குச் சிறப்புடைய வினை பிறிதின்மையின், அதற்குரிய செல்வத்தை முற்கூறினள். "நட்டோராக்கம் வேண்டியும் ஒட்டிய, நின்றோள் அணிபெறவரற்கு, மன்றோ தோழியவர் சென்ற திறமே" (நற். 286) என்று பிறரும் கூறுதல்காண்க. இனி, செல்வமென்றது சான்றோர் உயர்த்துக் கூறும் அருட்செல்வமெனக் கொண்டு, "நீ யருளாமையால் இவ ளெய்திய அவலங் கண்ட துணையோரும் அருள்மேவிய தம் உள்ளம் மருளி ஆற்றாராயினமையின், யாமும் அத்தன்மையேமாய் வருந்துதல் செய்யா நின்றேம்" என்பாள் துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும் என்றாள் என்று கூறினுமாம். உடையாரது தொழில் உடைமை மேல் ஏற்றிக் கூறப்படும் இயைபினால், வருத்தம் செல்வத்தோடும் இயைந்தது. "நெடிய மொழிதலும் கடியவூர்தலும், செல்வமன்று தன் செய் வினைப்பயனே, சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர் புன்கணஞ்சும் பண்பின், மென்கட் செல்வம்" (நற். 210) என்றும், "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" (குறள் 241) என்றும் சான்றோர் கூறினர்.

தலைமகள் முன்னின்று, அவனது பரத்தைமை மறுத்தல் வேண்டி, "தஞ்சமருளாய் நீயே" என்றதனால் அன்பின்மையும், "துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்" என்றதனால் கொடுமையும் கூறலின், மெய்ப்பாடு வெகுளியும், பயன் வாயில் நேர்தலுமாம்; "பரத்தைமை மறுத்தல் வேண்டியுங் கிழத்தி, மடத்தகு கிழமை யுடைமை யானும், அன்பிலை கொடியை யென்றலும் உரியள்" (பொ. 158.) என்றதனால், தலைவிக்கு உரிமை யெய்தும் இக் கூற்று, அவள் குறிப்பின்வழி மொழியும் தோழிக்கும் அமையுமாறு கண்டுகொள்க. (ம)

## 6. தோழி கூற்றுப் பத்து.

இப் பத்தின்கண் வரும் பாட்டுக்கள் பத்தும், கூற்று நிகழ்த்துவோர் பொருளாகத் தொகுக்கப்பட்டன வாகலின், இஃது இப்பெயர் எய்துவதாயிற்று. தோழிகூற்று, தோழி கூறும் மொழிகள். கூறப்படுவது கூற்று; பாடப்படுவது பாட்டு என்றும், ஓதப்படுவது ஓத்து என்றும் வருதல் போல முதனிலை ஈற்றுமெய் இரட்டித்துச் செயப்படு பொருண்மை யுணர நின்றது. ஏனையிடங்களிலும் இதனையே உரைத்துக் கொள்க.

தோழியாவாள், தலைமகளைப் பயந்த நற்றாய்க்குத் தோழியாகி, பின் தலைமகளை வளர்த்தமையின் அவட்குச் செவிலித் தாயாகிய நங்கையின் மகள். இவள் தலைமகளோடு உடனிருந்து அவட்கு உயிர்த்துணை புரிபவளாவாள். தலைமகட்குரிய சிறப்பெல்லாம், தானும், அவள் பெற்றோராற் பெற்று ஒழுகும் சால்புடையவள். களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் தலைமகட்கு உசாத்துணை யாகும் உயர்வுடையவள். களவின்கண் தலைவியின் மறைந்த வொழுக்கத்தைத் தன் கூர்த்த மதியால் ஆராய்ந்து கண்டு ஆவனவற்றை அறிந்து ஆற்றும் அமைதியுடையவள். உலகியலின் உட்கிடையை உள்ளவாறறிந்து, தலைமகள் உறுதி எய்துதற்குரிய நெறியறிந்து செலுத்தும் நீர்மை சிறந்தவள். அதனால், தலைமக்களை ஒரோருகால் உறழ்ந்தும், கழறியும், உயர்பொருள் சுட்டியும் தக்காங்கு உரைக்கும் தகுதி வாய்ந்துளாள். தலைமகளின் உணர்வுவழி நின்று, உவந்துழி உவந்தும், வருந்துழி வருந்தியும் வாழும் வாழ்க்கையுடையவள். ஆயினும், தலைமகள் எய்தும் வருத்தம் பிறழ்வுடையதாகத் தோன்றின், பிறழா நிலையில், தான் நின்று, அவளை ஆற்றுவிக்கும் உரனுடைமையும், தலைமகன் பாலும், தான் அவனினும் உரனுடையாள் போலக் கூறும் இடமுண்

டாகியவழி, அவ் வுரனுடைமை தோன்றுவகையில், பணிந்த மொழியால், தான் கூறக்கருதுவதைக் கூறிக் கருத்தை முற்றுவித்துக் கொள்ளும் வாய்மையும் நிரம்பியவள். எவ்வாற்றானும், தலைமக்கட்கு அன்புவழி நிற்கும் இன்பம் எய்துவதொன்றனையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்கேற்ப வொழுகும் கடப்பாட்டினள் இத் தோழி என்பே மாயின், எஞ்சிய பிறவெல்லாம் எஞ்சாமற் கூறியவாறும். இக் கருத்துக்களெல்லாம் தோன்ற, ஆசிரியர் : தொல்காப்பியர், தலைமகட்கும் தோழிக்கும் உரிய கிழமையினைத் "தாயத்தினடையா வீயச் செல்லா, வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்பட்டா, எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்" (பொ. 221) எனச் சிறப்பித்துள்ளார். இச் சிறப்பால், தலைவி யுறுப்புக்களையும், தோழி, தன்னுறுப்பாகக் கூறிய வழியும், அது குற்ற மாகாது அமையும் என்று மொழிந்திருக்கின்றனர். ஏனைச் சான்றோர்களும் இதனை வலியுறுப்பார் போல, இந்நெறியே புலனெறிவழக்கமும் செய்திருக்கின்றனர். இயல்பாய் உளதாகிய ஆன்மவறிவினைச் செயற்கையாய் உளதாகும் கல்வியறிவு பண்படுத்தி உண்மையறிவாக்குவது போல, தலைமகள்பால் தோழி அறிவுநெறியே நின்று அவள் வாழ்க்கையை அறவாழ்க்கை யாக்கும் அமைதி கொண்டவள். சுருங்கச் சொல்லின், தோழியாவாள், அறிவே பெண்ணுருக் கொண்டு வந்தாற் போலும் பெருமையுடையவள் என்று சொல்லுவது மிகையாகாது.

இனி, இக் கூறிய அனைத்தையும் வற்புறுத்தற்பொருட்டுச் சான்றோர் மொழிந்துள்ளன வாகிய பொருளுரைகள் பலவற்றையும் ஈண்டுக் காட்டலுறின், இம் முன்னுரை மிகவிரியு மென் றஞ்சி விடுத்து மேற்செல்லுகின்றாம்.

இனி, கேட்போர் பொருளாகத் தொகுத்த பத்தின்கட் கூறப்பட்ட தோழி, கேட்போர் திறத்துச் சிறப்புடையாரும், இல்லாரும், இல்லனவும் எனப் பலரோடும் ஒருங்குவைத்து எண்ணப்படும் இயையுடைய ளாதலின், அவள் இயல்பினை,

ஆண்டெல்லாம் கூறாது, அவட்கே சிறப்பா யமைந்த ஈண்டுக் கூறினும். சிறப்புடைய இயைபு தோன்றிய விடத்தே, அவ் வியைபுக்குரிய ஏதுவும், இயல்பும், பிறவும் முன்னுரைத்துச் சேறல் உரையாளர் கடன் என்க.

51. நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே.

வாயில் பெற்றுப் புகுந்து போய்ப் புறத்தொழுக்கம் ஒழுகிப் பின்பும் வாயில் வேண்டும் தலைமகற்குத் தோழி மறுத்தது.

பு. ரை :—நீரின்கண் வாழும் நீலநிறத்தை யுடைய சேவற் கோழியைக் கூரிய நகங்களை யுடைய அதன் பெட்டை நினைந்து வேட்கை மிக்கு வதியும் ஊரனே, இவளது வயவு நோய்க்கு, நினது அகன்ற மார்பு புளிங்காய் வேட்கைதானும் விளைவிப்ப தின்றி, நினைக்குந்தோறும் புலவிக் கேதுவா யிராநின்றது, காண் எ. று.

நீருறை கோழி என்றது, சம்பங்கோழியை ; இஃது முறையே சேவலையும் பெடையினையும் விசேடித்து நின்றது. பெடை, பேடை, பெட்டை முதலியன பெண்மைப்பெயர் ; "பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்" (பொ. 558) எனவரும் மரபியற் சூத்திரத்தால், இது பெறப்படும். வயாஅம் என்பது வேட்கைப் பெருக்க முணர்த்தும் உரிச்சொல் லடியாகப் பிறந்த பெயரெச்சவினை ; இஃது ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு இடப்பெயர் கொண்டது. புளிங்காய் வேட்கை, புளிங்காய் பிறப்பிக்கும் வேட்கை போலும் வேட்கை; அஃதாவது, புளிங்காயை நினைத்தவழி, வாயில் நீரூறி வேட்கை தணிவித்தல் போல, நினைந்தவழி நினைந்தார் நினைவில் இன்பம் கிளர்வித்து வேட்கை தணிவித்

தல். வேட்கைத்து என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. வயவுறு மகளிர்க்குப் புளிவேட்கை சிறந்து நிற்கும் என்பது, வழக்கினும், சான்றோர் செய்யுளினும் காணப்படுகிறது. "பசுப்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்" (குறுந். 287) எனச் சான்றோர் கூறுதல் காண்க. வயா, வேட்கைப் பெருக்கம்; பெரும்பாலும், இது, கருவுற்ற காலத்து உயிரினம் எய்தும் வேட்கை மேற்று; "வீழ்பிடிக் குற்ற கடுஞ்சூல் வயா" (கலி. 40) என்பதனாலும் அறியப் படும்.

புளிங்காய், நினைந்தவழி, வாயில் நீரூறி, நினைத்தாரது வேட்கையைத் தணிவித்தல் போல, நின் மார்பினை நினைத்த வழி, அஃது இவட்கு இன்பவுணர்ச்சி பயந்து, இவள் எய்திய வருத்தத்தைப் போக்கற்பாலதாகும்; இதுபோது அஃது அதனைச் செய்யாது, ஒருகாலைக் கொருகாலை பிரிவுணர்வும், துன்பமும் பயந்து வருத்துவ தாயிற்று என்றற்கு, புளிங்காய் வேட்கைத் தன்று நின் மலர்ந்த மார்பு என்றாள். வயாவுற்றோர் எய்தும் வேட்கையைத் தணிவித்தல் உரிமை யுடையார்க்குத் தள்ளாக் கடப்பாடாதலைச் சுட்டி, இவள் வயாஅம் நோய்க்கு என்று கூறினாள். விரிந்த பண்பிற் றாயினும், இவள் எய்தும் வருத்தத்தைப் போக்கிய தில்லை எனத் தான் கருதிய தனை முடித்தற்கு, "மலர்ந்த மார்பு" என விசேடித்தாள்.

தலைவி காணுவகையில், தலைமகன் பிரிந்தொழுகுங்கால், அவன் மார்பு புளிங்காய் வேட்கைத்தாயும், கண்டவழி, அவள் எய்தும் நோய்க்கு மருந்தாயும் வேட்கை தணிவிப்ப தொன்று. இதனைத் "தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை, புன்கயத் தூன்றும் வயலூர—வண்கயம், போலு நின் மார்பு புளிவேட்கைத் தொன்றிவள் மாலுமா றுநோய் மருந்து" (திணைமா 150 : 142) எனப் பிறர் கூறுமாற்றா லறியலாம். இனி, நின் மார்பு, நின் புறத்தொழுக்கத்தால், இவள் நோய் தீர்க்கும் மருந்தாகாமையே யன்றி, நினைந்தவழிப் பொறாமை தோற்றுவித்து

வருத்துதலின், வேட்கைத்தும் அன்று என்றாள் என்றுமாம்; என்றவழி, உம்மை, எச்சப்பொருட்டு.

நீலச் சேவலைப் பெடை நினைந்து வயாவும் ஊரனாகலின், இவளும் நின் மார்பு நினைந்து வயாவுற்றாள்; அதனை நினையாது நீ, மேன்மேலும் புறத்தொழுக்கம் விரும்புவாயாயினை என்றாளாம். மெய்ப்பாடு: வெகுளி, பயன்: வாயின்மறுத்தல்.

இனி, ஆசிரியர் பேராசிரியர் "தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின், வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும், பிறப்பினும் வரூஉம் திறத்திய வென்ப" (பொ. 300) என்புழிப் பயவுவமப் போலிக்கு இதனைக் காட்டி, "நீருறை கோழி நீலச் சேவலை, அதன் கூருகிர்ப் பேடை நினைந்து கடுஞ்சூலான் வந்த வயாத் தீர்தற் பயத்ததாகும்; அதுபோல நின்மார்பு நினைத்து தன் வயவுநோய் தீரும் இவளும் என்றவாறு. புளிங்காய் வேட்கைத் தென்பது, நின் மார்பு தான் இவளை நயவா தாயினும், இவள் தானே நின்மார்பை நயந்து பயம் பெற்றாள் போலச் சுவைக் கொண்டு சிறிது வேட்கை தணிதற் பயத்தளாகும்; புளிங்காய் நினைய வாய் நீர் ஊறுமாறு போல என்பது" என்பர்.

இனி, "வயாவுமூர" என்றும், மலர்ந்த மார் பிவண் என்றும் பாடம் உண்டு. இவண் என்பது பாடமாயின், இவள் என்பதனை வருவித்து ஈண்டுக் கூறியவுரைகளையே உரைத்துக் கொள்க. (க)

52. வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கட்
செவ்வாய்க் குறுமகள் இனைய
எவ்வாய் முன்னின்று மகிழ்நநின் தேரே.

வாயில் பெற்றுக் கூடி யிருந்த தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

பு. ரை:—மகிழ்ந, வயலையின் செவ்விய கொடியாற் மாலை தொடுத்தலின் செவ்விய விரல் சிவந்த, செவ்வரி பரந்த குளிர்ந்த கண்களையும், சிவந்த வாயினையு முடைய இளையவள் அழுது வருந்த, நின் தேர் நிற்றற்குக் குறித்தது எவ்விடம்? கூறுக. எ. று.

தைஇ, பசந்த குறுமகள், கண்ணும் வாயு முடைய குறுமகள் என இயையும். குறுமை, இளமைப் பொருட்டாய் அவளது ஆற்றாமைக் குரிய மென்மைத்தன்மை யுணர நின்றது. முன்னின்று, வினைமுற்று. உடையானது தொழில் உடைமைமேல் நின்றது. எவ்வாய், இடப்பொருட்டாய திரிசொல். "நீ மற்று எவ்வாய்ச் சென்றனை" (நற். 147) எனப் பிறரும் கூறினர். வயலையும், கைவிரலும், வரியும், வாயும் இயல்பாகவே சிவந்திருத்தலின், சாதியடை யாண்டும் தொடர்ந்தது.

மனையகத்துத் தான் பேணி வளர்த்த கொடியே யாயினும், அதனாற் பிணையல் தொடுத்தது பொறாது சிவக்கும் செவ்விரலுடையள் என்றது, நின்னாற் பேணப்படும் நலமுடைய ளாயினும், அதனால் நின் தேர் பிறிதோரிடத்து நின்ற வழியும் பொறாது கண்கலுழ்ந்து வாய்வெருவி மெய் வேறுபடுவாளாயினள் எனத் தலைவியின் ஆற்றாமை சுட்டி நிற்பது தோன்ற, பிணையல் தைஇச் சேவ்விரல் சிவந்த சேயரிமழைக்கட் செவ்வாய்க் குறுமகள் என்றாள். தேர் பிறிதோ ரிடத்து முன்னிய துணையானே நின் நெஞ்சு பிறளொருத்திபால் மாறிற்றெனக் கருதினள் என்பதற்கு ஏது கூறுவாள் போல, அவளது இளமையை விதந்து குறுமகள் என்றாள்.

தலைவன் தம் மனைக்கட் போதரும் போதெல்லாம், அவனது தேர் தன் மணிக்குரல் இயம்பி அவன் வரவினை முன்னறிவித்துச் சிறப்பித்த தாகலின், அதன்பாற்பெரிதும் அன்புடையளாய தலைவி, அத் தேர், இதுபோது அவள்

மனைக்கண் நிற்றலை முன்னது, பிறிதோரிடத்தினை முன்னிய வழி, பொறாது வேறுபடுவாள் எனத் தேரினது இன்றியமையாமை தோன்ற, "குறுமகள் இனைய எவ்வாய் முன்னின்று மகிழ்ந நின் தேரே" என்றாள்; "நற்றேர்த், தார்மணி பலவுடன் இயம்பச், சீர்மிகு குரிசில்நீ வந்துநின் றதுவே, ...புகழ்மிகு சிறப்பின், நன்னராட்டிக் கன்றியும் எனக்கும் இனிதாகின்றால், சிறக்கநின் னாயுள்" (அகம். 184) எனத் தேரொடு போந்தானை மகிழ்ந்தவாறும், "கலிமகி ழூரன் ஒலிமணி நெடுந்தேர், ஒள்ளிழை மகளிர் சேரிப் பன்னாள், இயங்க லானா தாயின் வயங்கிழை, யார்கொல்அளியள்....கண் பனி ஆகத் துறைப்பக் கண்பசந்து, ஆயமும் அயலும் மருளத், தாயோம் பாய்நலம் வேண்டா தோளே" (அகம். 146) எனத் தலைவன் தேரது புறவியக்கங் குறித்து வேறுபட்டவாறும் காண்க.

இனிக் கூடி மகிழ்ந்திருப்பவன்பால், பண்டு நிகழ்ந்தது கூறி, அவனை அம் மகிழ்ச்சிக்கண்ணே நிலைபெறுவிக்கும் கருத்தினளாய்த் தோழி, வேறுவகையாற் கூறின் தன்பால் வழு வெய்துதல் உணர்ந்து, நகையாடிக் கூறுதலின், அவன் தேர்மேல் வைத்து, எவ்வாய் முன்னின்று மகிழ்ந நின் தேரே என்றாள் என்றுமாம்.

"வயலைச் செங்கொடியால் பிணையல் தொடுத்தவழி இயல்பாகவே சிவந்துள்ள இவள் விரல் மிகச் சிவத்தல் இயற்கையாகவும், அதனை யறியாது, செவ்விரல் சிவந்தன எனக் கண் கலுழ்ந்து வாய்வெருவிப் புலம்பினாள்" என்றும், 'குறுமகள்' என்றும் தலைவியைக் கூறியது, தோழி, தான் பிறப்பித்துக் கொண்ட நகைக்குப் பொருளாம். மிகச் சிவத்தலை யறியாமை பேதைமையும், குறுமகள் என்றது இளமையும் குறித்தன. மேலும், நீ இயக்க இயங்கும் இயல்பிற்றாய தேர், நின்னையின்றித் தனியே யாண்டு நிற்பினும் தீதொன்றும் பிறவாதாகவும், அதனை யறியாது, அது பிறிதோரிடத்து முன்னியதெனக் கொண்டு இனைந்தாள் என்றது, தலைவியது பேதை

மையினையே சுட்டி நகையாடற்குப் பொருளாயவாறு காண்க, "எள்ளல் இளமை பேதைமை மடன் என், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப" (பொ. 252) என்பது தொல் காப்பியம்.

மெய்ப்பாடு: நகை. பயன்: தலைவன் கேட்டுப் பிரியாது உறைவானாவது.

53. துறையெவ னணங்கும் யாமுற்ற நோயே
சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன வூரநீ யுற்ற சூளே.

தலைவி தன்னுடன் போய்ப் புனலாடியவழி, "இது பரத்தையருடன் ஆடிய துறை" என நினைந்து பிறந்த மேலிவை மறைத்தமையை உணர்ந்த தலைமகன், மனைவயிற் புகுந்தழி, "தெய்வங்கள் உறையும் துறைக்கண்ணே நாம் ஆடினவதனாற் பிறந்ததுகொல் இவட்கு இவ் வேறுபாடு?" என்று வினவியாற்குத் தோழி சொல்லியது.

பு. ரை :— அணையை அழித்துக்கொண்டு வரும் புது வெள்ளம் கழனிக்கட் புகுந்ததாக, அக் கழனிகளி லுள்ள தாமரைகள் கலங்கி மலரும் பழனங்களை யுடைய வூரனே, புனலாடிய நீர்த்துறைக்கண், நீ நின் காதற்பரத்தைக்குச் செய்த சூளே, யாம் எய்திய நோய்க்குக் காரண மாகலின், அத்துறைக்கண் உள்ள தெய்வம் வருத்துமாறு என்னை? இல்லையன்றே எ. று.

துறை, ஆகுபெயர். துறைகளில் தெய்வம் உறையும் என்பது பண்டையோர் கொள்கை. "அணங்குடைப் பனித் துறை" (ஐங். 174) என்றும், "அணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி, யாயும் ஆயமோ டயரும்" (அகம். 240) என்றும், "நிலைத்துறைக் கடவுள்" (அகம். 156) என்றும்

சான்றோர் கூறுதல் காண்க. "துறையும் ஆலமும் தொல் வலி மராஅமும், முறையுளிப் பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ" (கலி. 101) என்றதனால், துறையே யன்றிப் பிறண்டும் தெய்வம் உறையும் எனப் பண்டையோர் கருதி யிருந்தமை அறிக. எவன் என்னும் வினாப் பெயர் இன்மை குறித்து நின்றது. காரணமாகிய சூள் காரியமாக உபசரிக் கப்பட்டது. சிறை, அணை; "சிறையழி புதுப்புன லாடுகம்" (ஐங். 78) எனப் பின்னரும் கூறுப. கழனி, வயல். பழனம், ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய நிலம் என்ப. எனவே ஈண்டைக் கழனி, பழனத்தைச் சார்ந்தது என்பது பெற்றாம். "பழனப் பல்புள் ளிரியக் கழனி வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்" (நற். 350) எனப் பிறரும் பழனமும் கழனியும் இணைந்துவரக் கூறினர் *. துறை யுறையும் தெய் வத்தைப் பிரித்தலின், சூளோ என்புழி ஏகாரம் பிரிநிலை; ஏனையது அசைநிலை.

பண்டு, தலைவியைக் கூடியஞான்று, தன் பிரியாமை யினை வற்புறுப்பான், தெய்வத்தை முன்னிறுத்திச் சூள் செய்தவன், இப்போது பிரிந்து, புறத்தொழுக்கம் மேற் கொண்டு, பரத்தையருடன் கூடி மகிழ்ந்துறைவது உணர்ந்து, "சூள் பொய்த்தமையால், ஆண்டு முன்னிறுத் தப்பட்ட தெய்வத்தால் எமக்கு இந் நோய் உளதாயிற்றே யன்றித் துறை யுறையும் தெய்வத்தா லன்று" என்பாள் துறை யெவன் அணங்கும் என்றும், நீ யுற்ற சூளே என்றும் கூறினாள். "எம்மணங்கினவே மகிழ்ந....எம்மூர் வியன்துறை, நேரிறை முன்கை பற்றிச், சூரர மகளிரோ டுற்ற சூளே" (குறுந். 53) என இக்கருத்தே தோன்றச் சான்றோர் கூறி

---

* "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி யதனுள் போய்ப், புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும் புள்ளம் பூதங் குடியானே" (பெரிய திரு : 5 : 1 : 2) என்று கூறிய திருமங்கைமன்னர் திரு மொழிக்கு, உரை யெழுதிய சான்றோர், "பழனம், நீர்நிலைகள்" என்றனர். நற்றிணை யுரைகாரரும் இதுவே கூறினர்.

யிருத்தல் காண்க. சூள் பொய்த்தவழித் தீங்கு எய்தும் என்பது, "இன்னாத் தொல்சூள்" (பொ. 147) என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதனாலும், "பூக்கஞ் ஊரன் சூளிவண், வாய்ப்பதாக எனவேட் டேமே" (ஐங் 8) எனச் சூள் வாயாது பொய்த்தவழி எய்தும் ஏதம் குறித்து, இந் நூலாசிரியர் கூறியதனாலும் உணரப்படும்.

"எம்மைக் கூடுங்கால் சூள் செய்து தெளிவித்தான், பரத்தையர்பாலும் அது செய்தேயிருப்பன்" எனத் துணிந்து, அவன் ஆடிய துறையைக் கண்டு, அவன் பரத்தைமையினையும் உடன் நினைந்து வேறுபட்ட தலைவியைத் தலைவன், "நின்னை இத்துறைக்கண் உறையும் தெய்வம் அணங்கிற்றுப் போலும்" என்றானாக, அதனைத் "துறை எவன் அணங்கும்" என்று தோழி கொண்டுகூறினாள். ஆயினும், இது "கூற்றவண் இன்மையின்" வந்த கொண்டு கூற்றன்று.

சிறையழிக்கும் புதுப்புனல் பாயக் கழனித்தாமரை கலங்கி மலரும் பழனங்களை யுடைய வூர என்றது, மகளிர் நலம் சிதைக்கும் புறத்தொழுக்கத்தை நீ மேற்கொண்டு ஒழுகுவதால், பொருது, முன்னர் வேறுபட்டுப் பின்னர்க் கூடும் பரத்தையர் பலரை உடையையாயினை் என்றவாறும். ஆகவே, இது தோழியால் தோன்றிய துனியுறு கிளவி யென்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: மறுத்தல்.

54. திண்டேர்த் தென்னவன் நன்னாட் டுள்ளதை
வேனி லாயினுந் தண்புன லொழுகுந்
தேனூ * ரன்னவிவ டெரிவளை நெகிழ

---

* நம் ஆளுடைய பிள்ளையார், திருச்செங்காட்டங்குடித் தேவாரத் திருப்பதிகத்தில், "வானூரான் வையகத்தான் வாழ்த்து வார் மனத்தகத்தான், தேனூரான் செங்காட்டங் குடியான்சிற் றம்

ஊரி னூரனை நீதர வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க் (கு)
அஞ்சுவ லம்ம வம்முறை வரினே.

வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தலைமகள் குறிப்பறிந்த தோழி, அவன் கொடுமை கூறி வாயில்மறுத்தது.

*ப. ரை :—திண்ணிய தேர்களையுடைய தென்னவனது நல்ல நாட்டிலுள்ள தாகிய, வேனிற்காலத்தும் வற்றாது குளிர்ந்த நீர்பெருகும் தேனூர் என்னும் ஊரினை யொத்த இவள் ஆய்ந்த வளைகள் நெகிழுமாறு, ஊரனாகிய நீ, பரத்தையர் தெருக்கட் பிரிந்துழி, நெய்யணி குறித்து யான் அத்தெருக்கண் முறைமையே வருதலுறின், ஆண்டு, நின்னாற் றரப்பட்டு நின்னைச் சூழ்ந்து நிற்கும் பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு அஞ்சாநிற்கின்றேன் எ. று.*

*தென்னவன், பாண்டியன். செந்தமிழ் நிலைஇய சீரிய நாடாதல்பற்றி "நன்னாடு" என்றார். உள்ளதை, ஐகாரம் அசை. "வெல்போர்க் கவுரியர் நன்னாட் டுள்ளதை" (அகம். 342) என்று பிறரும் கூறினர். "ஆயினும்" என்றது புனலொழுக்கின் அருமை தோன்றநின்றது. தேனூர், பாண்டிநாட்டி லுள்ளதோர் ஊர். இஃது "ஆம்பலஞ் செறுவிற் றேனூர்," "தேர்வண் கோமான் தேனூர். (ஐங். 57, 55.) என்றும், "வலஞ்சுரி மராஅத்து, வேனி லஞ்சினை கமழும், தேனூர் * எண்ணுதல் நின்னொடுஞ் செலவே" (குறுங். 22) என்றும் சான்றோர்களால் சிறப்பிக்கப்பெறுகின்றது. நாடா வளமுடைமையால், வாழ்வார் இனிது*

---

*பலத்தான்" என வருமிடத்துக் கூறியருளிய தேனூர் என்பதும் இப் பதியே போலும்.*

* "தேழ ரெண்ணுதல்" எனக் குறுந்தொகைப் பழைய அச்சுப் பிரதி கூறுகின்றது.

வாழுமூர் என்றற்கு "ஊரின் ஊர்" எனப்பட்டது. ஊரிற் பரத்தையர் சேரியிடத் தானென் என்பது தோன்ற அவ்வாறு கூறப்பட்ட தெனினுமாம். பஞ்சாய்க்கோதை மகளிர், பஞ்சாய்க்கோரை போல் நீண்ட கூந்தலையுடைய மகளிர்; இனி, பசிய தண்டான்கோரையை நாராய்க் கிழித்துத் தொடுத்த பூமாலையினை யுடைய மகளிர் என்றும் கூறுப. "பஞ்சாய்க் கூந்தல்" (ஐங். 76) என இந்நூலாசிரி யர் கூறுமாறு காண்க. அம்முறை யென்புழிச் சுட்டு, உல கறி சுட்டு. நெய்யணியாவது, மகப்பயந்த மகளிர் அவ் வாலாமை நீங்க நெய்யாடுதல்; "குவளை மேய்ந்த குறுந்தா ளெருமை,குடநிறை தீம்பாற் படூஉமூர, புதல்வனை யீன்றிவள் நெய்யா டினளே" (தொல். பொ. 146. நச்சி. மேற்) என வருதல் காண்க. இதனைத் தலைமகன் உணர்ந்து போந்து, ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் செய்பெருஞ் சிறப் பினைச் செய்தற்பொருட்டு, தோழி, பரத்தையர் தெருக்கட் சென்று, ஆண்டுறையும் தலைமகற் குணர்த்துவது முறைமை; அதனால், அம்முறை வரினே என்று தோழி கூறுகின்றாள்.

தலைமகன் அன்பின்றிப் பிரிந்து சென்று பரத்தையர் சேரியனுவழியும், தலைவி அயரா அன்புபூண்டு அவனை இன்றியமையா ளாயினாள் என்பது சுட்டி, வேனி லாயினும் தண்புன லொழுகும் தேனூர் அன்ன இவள் என்றாள். அவ் வாறு, தன்னை இன்றியமையாப் பெருங்காதலால் அயரா அன்புசெலுத்தும் இவளைப் பிரிதலினும் மிக்க செயல் தலை மகற்குப் பிறிதில்லை யென்பதுபட இவள் தெரிவளை நெகிழ என்றாம், "இவ் வூரிடத்தும் நின் மனைக்கண் உறையாது பரத்தையர் மனைக்கண்ணே தங்கினை" என்றற்கு, ஊரின் ஊரனை என்றும் கூறினாள். இது, தலைவிய திருமையும், தலைவனது பரத்தைமையும் வகுத்துக் கூறியது. "தெரிவளை நெகிழ" என்றது உடம்புநனி சுருங்கல்.

தோழி பிறமகளிரைக் காணாளாயினும், எதிர்பெய்து மறுக்கும் குறிப்பினால், மகளிர்க்கு அஞ்சுவல் என்றும்,

அச்சமிகுதி தோன்ற, அம்ம என்றும், அம் மகளிர்தாமும், எம் மனையின் அகன்று, புகன்ற உள்ளமொடு சென்ற நின்னொடு புணரப்பட்ட புதுவோர் என்பாள், நீ தர வந்த மகளிர் என்றும் கூறினள். மேலும், "நெய்யணி மயக்கம் புரியும் தலைமகனை நோக்கிச் செய்பெருஞ் சிறப்பொடு அவனைச் சேர்தலாகிய முறைமை கருதி, நீ உருத்த வுறினும், அம் மகளிர் என்னைச் சிறைப்பதே யன்றி, நின்னையும், அது செய்யா வாறு தகைப்பதும் செய்வர் என்று அஞ்சுகின்றேன்" என்பது தோன்ற, அஞ்சுவல் அம்ம நீ அம் முறை வரினே என்றுளுமாம். எதிர்பெய்து பரிதலும், மறுத்தலும் தலைவிக்கு உரியவாயினும், அவள் குறிப்பின்வழி யொழுகும் சிறப்புடையளாகலின், தோழிக்கும் உரியவாயின.

உலகியல்பற்றி வருதலாகிய அம்முறைவரின் என்றதனல், அம்முறை யில்வழி வாராய் எனத் தலைவன்பால் அன்பின்மையும், கொடுமையும், உவமையால் தலைவிபால் அன்புடைமையும் கூறித் தோழி மறுத்தவாறும். இவ்வாறு தலைவியது புலவிக்குறிப் பறிந்து, கொடுமையும் அன்பின்மையும் தோழி கூறுவது, தலைவனது பரத்தைமை மறுத்தல் வேண்டி நிகழ்தலின், அமையுமென அறிக. "பரத்தைமை மறுத்தல் வேண்டியும் கிழத்தி, மடத்தகு கிழமை யுடைமையானும், அன்பிலை கொடியை யென்றலும் உரியள்" (பொ. 158) என ஆசிரியர் அமைக்குமாறு காண்க.

மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயில்மறுத்தல்.

தேஎறன்ன என்ற பாடம் பொருட்சிறப் புடையதன்று; ஏனைப் பாட்டுக்களை நோக்க, இது திருந்திய தாகவும் தோன்றவில்லை. (ச)

55. கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூ ரன்னவிவள்

நல்லணி நயந்துநீ துறத்தலின்
பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே.

வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுக; வாயில்வேண்டி வந்து, தன் மெலிவு கூறிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

ப.-ரை:—களிற்றெதிர் பிளிற்றும் என்றது, நீ கூறுகின்ற மெலிவுக்கு மேலே மெலிவு கூறுகின்றது இவள் நுதல் என்பதாம்.

பு. ரை:—கரும்பினை அடும் எந்திரம், களிறு பிளிறுவதற்கு எதிராக ஒலிக்கும், தேரினையும் வண்மையினையுமுடைய அரசனாகிய பாண்டியனது, தேனூர் என்னும் ஊரை யொக்கும் இவளது நல்ல அழகை நயந்து வரைந்து கொண்டு, வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கத்தால், நயவாது, பிரிந்துறைதலின், இவளது நுதல் பலரும் நன்கு அறியுமாறு பசந்தது, காண் எ. று.

எந்திரம் பிளிற்றும் ஊர், கோமான் ஊர் என இயையும். இடத்து நிகழ் பொருளும் இடமுமாகிய இயைபுபற்றிப் பிளிற்றும் என்பது ஊர் என்னும் பெயர்கொண்டது. நயந்தென்னும் காரணவினை காரியத்தின்மேல் நின்றது. "துறத்தலின்" என்றதனால், அதற்குரியகாரணமும் காலமும் வருவிக்கப்பட்டன; "வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்" (சொல். 113) என்பவாகலின், இவை எஞ்சிநின்றன. முற்றும்மை விகாரத்தால் தொக்கது. கரும்பாட்டும் ஆலையினைக் "கரும்பின் எந்திரம்" என்றார். எந்திரம், வடசொற்சிதைவு; "கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது, இருஞ்சுவல் வாளை பிறழும்" (புறம். 322) எனப் பிற சான்றோரும் கூறினர்.

எதிர்பிளிற்றுதலாவது, "குயிலொடு மாறுகூவுதும், மயிலொடு மாறாடுதும்" என்றாற்போல ஒப்ப ஒலித்தல்; அஃ

தாவது ஆலையில் எழும் ஓசையும் களிறு பிளிறும் ஓசையும் ஒக்கும் எ. று.

"பண்டு, களவில் ஒழுகியஞான்று, இவளது அருமையும் பெருநலமும் கெழுமியிருந்த அணி நயந்து வரைந்து கொண்ட நீ, இத்துணைச் சிறுபொழுதிலேயே இவளைத் துறந்து பிரிந்துறைதல் தகாது" என்பாள், நல்லணி நயந்து நீ துறத்தலின் என்றும், "பசலை யென்பது நுணுகி நோக்கினார்க்கன்றி நன்கு புலப்படாதாகவும், இவள் கொண்ட பசப்பு நின் திருமணம் போலப் பலரும் அறியத்தக்க நிலைமையினையுடைத்து" என்பாள், பல்லோர் அறியப் பசந்தன்று நுதலே என்றும் கூறினாள்.

தலைவன் பிரிவதற்குமுன் தலைவி மேனிக்கட் கிடந்து பேரழகு திகழ்ந்த மாமைக்கவின், இப்போது அவன் பிரியப் பிரிந்து பசலைக் கிடந்தந்து நிற்பதற்கு இரங்குவாள்போலத் தலைவனது நிலையின்மையினைக் குறிப்பால் உணர்த்துகின்றாளாகலின், நல்லணி என விசேடித்தாள். நன்மை, தலைவன் இன்றியாமையானுப் நயத்தற்கு ஏதுவாய், அவன் புணரப் புணர்தலும், பிரியப் பிரிதலுமாகிய இயல்பு. "கான நாடன் பிரிந்தெனத், தானும் பிரிந்தன்றென் மாமைக் கவினே" (பொ. 112, நச்சி. மேற்) எனப் பிறரும் மாமையின் இயல்பு தெரித்தவாறு காண்க.

எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும் என்ற வினையுவமப் போலி, நீ கூறுகின்ற மெலிவுக்கு மேலே மெலிவு கூறுகின்றது இவளது நுதல் எனத் தலைவியது எளிமை கூறித் தோழி இரங்குதற்கு உபகாரமாய் நின்றது.

இது, "பெறற்கரும் பெரும்பொருள்" (பொ. 150) என்ற சூத்திரத்து, "அருமைக் காலத்துப் பெருமை காட்டிய, எண்மைக் காலத்து இரக்கத்தானும்" என்புழித் தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். இச் சூத்திரத்துப்,

"பெருமை காட்டிய இரக்கம் எனக் கூட்டுக; இதனாற் சொல்லியது, வாளாதே இரங்குதலன்றி, பண்டு இவ்வாறு செய்தனை, இப்பொழுது இவ்வாறு செய்யாநின்றனை எனத் தமது உயர்ச்சியும், தலைமகனது நிலையின்மையும் தோன்ற இரங்குதலாயிற்று" என ஆசிரியர் இளம்பூரணர் கூறுவர், அப்பொருண்மைக் கேற்ப, "பண்டு நீ இவளது நல்லணி நயந்து இன்றியமையாயாய் மணந்தனை; இது போது அதனை நயவாது துறந்தனை; அதனால் நுதலும் பசந்தது" என இரங்கியவாறாகக் கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

இனி, "களவும் கற்பும் அலர்வரை வின்றே" (பொ. 162) என்பதனால், இது, தோழி அலர் கூறியது என்றும், "பெறற்கரும் பெரும்பொருள்" (பொ. 150) என்ற சூத்திரத்துச் "சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்" என்பதனால், தலைமகன் அறம்பொருள்களைச் செய்தற்கும், இசையும் கூத்து மாகிய இன்பம் நுகர்தற்கும் தலைவியை மறந்தொழுகுதற்கு, இதனைக் காட்டி, "இதனுள் துறத்தலின் எனப் பொதுவாகக் கூறினாள், அறமுதலியவற்றைக் கருதுதலின்," என்றும் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இனி, ஆசிரியர் பேராசிரியர், "தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்" (பொ. 300) என்ற சூத்திரத்தின் விசேடவுரையின்கண், "வினையுவமும் உருவுவமும் ஒரு செய்யுளுள்ளே தொடர்ந்து ஒருங்கு வருதலுடைய," என்று கூறி, "இத்தன்மைத்தாகிய ஊர் அனையான்..........." எனச் சொல்லுதலும் உண்டென்று காட்டுதற்கு, இதனுள், "தேர் வண் கோமான் தேனூரன்ன இவள் என்பது அவன் ஊர் அனையாள் என வந்தது," என்பர்.

பிளிறும் என்பதும் பாடம். ஆயினும் தொடைநலம் நோக்கியவழி, பிளிற்றும் என்ற பாடமே சிறப்புடைத்தெனக் கொள்க.

56. பகல்கொள் விளக்கோ டிராநாள் அறியா
வெல்போர்ச் சோழ ராமூ ரன்னவிவள்
நலம்பெறு சுடர்நுதல் தேம்ப
எவன்பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே.

புறத்தொழுக்கம் உண்டாகியது அறிந்து தலைமகள் மெலிந்துழி, அஃது இல்லை யென்று தேற்றும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. உரை:—"தேம்ப" என்பது தேம்பாநிற்க என்றவாறு. "பகல்கொள் விளக்கோடு ..........அன்ன" என்பது ஒருநாளும் மெலிவறியாத இவள் மெலிவறிய ஒழுகினாய் எ. று.

பு. உரை:—பகற்போதின் ஒளியினையுடைய விளக்குகளால், இராக்காலத்தின் உண்மை அறியலாகாத, வெல்லுகின்ற போரினையுடைய சோழரது ஆமூர் போலும் இவளுடைய நலம்பெற்ற ஒளிதிகழும் நுதல் பசந்து ஒளிமழுங்குதலால், நீ பண்டு தெளித்துக் கூறிய மொழிகள் எப் பயனைச் செய்வனவாம்? செயலொடு ஒவ்வாது பொய்த்தமையின், இப்போது தெளிப்பனவும் அன்னவாதலன்றி ஒருபயனும் செய்யா எ. று.

பகல், நண்பகற் போதின் நல்லொளி; ஆகுபெயர். விளக்கு, பாண்டில் விளக்கு. "வளிமுனை யவிர்வரும் கொடிநுடங்கு தெருவிற் சொரிசுரை கவரு நெய்வழி புராலின், பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல" (பதிற். 47) எனப் பிறரும் பேரொளித்தப் பாண்டில் விளக்கினைக் கூறு

---

வெயிலவன் ஒளிவிளங்கும் நண்பகற் போதின் ஒள்ளொளியும், ஐந்நூறாயிரம் மெழுகுவர்த்திகளை யேற்றி, அவற்றிற்கு ஓரடியணுக்கத்தே நின்று நோக்குழிப் பெறும் பேரொளியும் ஒக்கும் என இக்காலத்து ஒளியாராய்ச்சியாளர் அளவிடுகின்றனர்.

தல் காண்க. நண்பகற்போதின் நல்லொளியைச் செய்யும் பேரொளி விளக்கு என்றற்குப் பகல்கோள் விளக்கு என்றார்.

"கலந்தர வுள்ளமொடு கழியக் காட்டி" (அகம். 3) என்புழிப் போல, ஒடு, ஆனுருபின் பொருட்டு. ஆமூர் "அந்தணர் அருகா வருங்கடி வியனகர், அந்தண் கிடங்கின் ஆமூர்" எனச் சிறுபாணாற்றிலும், "இன்கடுங் கள்ளின் ஆமூர்" (80) எனப் புறத்திலும் புகழப்படுமாறு காண்க. பசலையால் ஒளி கரவாவழி, அது பேரழகு திகழும் நல்லொளி கொண்டு விளங்குதலின், நலம்பெறு சுடர்நுதல் என்றார்; "சுடர்புரை திருநுதல் பசப்ப" (நற். 108) எனப் பிறரும் கூறினர். தேற்றிய என்றதனால், தேற்றிய காலம் வருவிக்கப்பட்டது. செயலொடு ஒவ்வாது என்பது முதலாயின எஞ்சிநின்றன. நீ தேற்றிய மொழி எவன்பயஞ் செய்தன என்றது, செய்யு மென்றது, இப்பொழுதையிற் கூறும் தெளிப்புரையும் அதுபோலப் பொய்யாதலன்றி மெய்யாய்ப் பயன் தாராது என்பது முடித்தற்கு.

நீ தேற்றிய மொழி, இப்பொழுதைய நின் புறத்தொழுக்கத்தால் பொய்த்தமை கண்டு, இனிக் கூறுவனவும் அன்னவே யாம் எனத் தெளிந்து வருந்துகின்றாள் என்பாள் நலம்பெறு சுடர்நுதல் தேம்ப என்றாள். நலம்பெறு சுடர்நுதல் என்றது, அவ்வாறு தேம்புமாறு ஒழுகுதல் நின் தலைமைக்கு ஆகாது என வற்புறுத்தியவாறு. "நும்மோரன்னோர் மாட்டும் இன்ன, பொய்யொடு மிடைந்தவை தோன்றின், மெய்யாண் டுளதோஇவ் வுலகத் தானே" (அகம் 286) என இவ்வாசிரியரே பிறாண்டும் கூறுதல் காண்க. நின்பால் நலமே பெறத்தக்க இவளது திருநுதல், நீ தேற்றிய மொழியின் பயனாய், பசப்பு எய்தினமையின், இனிக் கூறுவனவற்றால் எய்தக்கூடிய பயன் வேறொன்றும் இல்லையென்பாள் எவன் பயஞ்செய்யும் என்றும், அம்மொழியின் பொய்ம்மை சுட்டித் தேற்றிய மொழி என்றும் கூறினாள்.

"எவன்பயஞ் செய்யும் நீ தேற்றிய மொழி" யென்றது தெய்வமஞ்சல். "சுடர்நுதல் தேம்ப" என்றது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனு மவை.

இராநாள் உளதாகவும், விளக்கங்கள் தம் ஒளியால் அதனை அறியாவண்ணம் மறைப்பது போல, நின்பாற் பரத்தைமை யுளதாகவும், அதனை இப் பொய்ம்மொழிகளால் மறைத்துத் தெளிவிக்கின்றாய் எனத் தலைவனது தெளிப்புரையின் இயல்பு கூறினாளாயிற்று.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், "சூள்நயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்" (பொ. 150) என்புழி இதனைக் காட்டி, "இதனுள் இவள் நுதல் தேம்பும்படி நீ தேற்றிய சொல் எனவே, சோர்வுகண் டழிந்தாள் என்பது உணர்த்தும் இப் பொய்ச்சூள் நினக்கு என்ன பயனைத் தரும் எனத் தோழி தலைவனை நோக்கிக் கூறியவாறு காண்க," என்பர்.

இனி, பகல்கோல் விளக்கு என்ற பாடத்துக்குப் பகலைத் தன் ஒளிமிகுதியால் மறைக்கும் என்றும், இரா நன்றறியா என்ற பாடத்துக்கு இரவுப்பொழுதினைப் பெரிதும் அறியலாகாத என்றும் உரைக்க. பகல் கொல்லும் விளக்கு என விசேடித்தபின், இரா நன்றறியா என்பது பாட்டின் பொருள்நலத்தைச் சிறப்பியாமையின், அது பாடமன்மை யறிக. (சு)

57. பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன
இவள்நலம் புலம்பப் பிரிய
அனைநலம் உடையளோ மகிழ்நநின் பெண்டே.

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற் றென்பது கேட்ட தோழி அவனை வினாயது.

ப. ரை :—வேள்வித் தீயினையும் ஆம்பலஞ் செறுவினையும் உடைய தேனூர் என்றது மனத்தொழுக்கத் தூய்மையு ............... கூறியவாறு.

பு. ரை :—பகற்போதினைச் செய்யும் ஞாயிற்றைப் போலத் தோன்றும் பல கதிர்களையுடைய வேள்வித்தீயினையும், ஆம்பல் நிறைந்த வயல்களையு முடைய தேனூர் என்னும் ஊரை யொக்கும் இவளது அழகு தனிமையுற்று வருந்தப் பிரிதலின், நீ அவ்வாறு பிரியத்தக்க அத்துணை நலம் உடையளோ நின் பெண்டு? கூறுக எ. று.

பகல், ஆகுபெயர். பலவாகிய கதிர்களைப் பரப்பிக் கொழுந்துவிட் டெரிதலின் பல்கதிர்த்தீ என்றார். "பல் பொருட் கேற்பின் நல்லது கோடல்" (பொ. 666) என்றதனால், ஈண்டு நலஞ்செய்யும் வேள்வி மேலதாயிற்று. இனி, பன்மையைத் தீமே லேற்றி, பலவாகிய தீயாவன, ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினியம் என்ற மூன்றையும் கோடலும் ஒன்று. இனி, பல்கதிர்த்தீயினால், இரவுப்பொழுதும் பகல்போலத்தோன்றும் தேனூர் என இயைப்பினுமாம். பார்ப்பாருள் இல்லிருந்து நல்லறஞ் செய்வார் யாவர்க்கும் இம்மூன்று தீயும் உரியவாகலின், அச்சிறப்புக் கருதி அதனை விதந்தோதினர். உடையளோ என்புழி ஓ கா ர ம் வினா. பெண்டென்றது பரத்தையை.

உயர்ந்தோர்க் கு ரி ய வேள்வியினையும், வள்வயற்கு அணிசெய்யும் ஆம்பலினையும் கூறியதனால், தலைவிபால் மனையறம் புரிதற் குரிய மாட்சியும், கொடைக்கடன் இறுத்தற் குரிய வளமையும் கூறிச் சிறப்பித்தவா றாயிற்று. "மகப் பயந்து பயன்படும் மாட்சியுடைய இவள் போல, நின் பரத்தை பயன்படுதல் இலளாகவும், அவளை நீ பெரிதும் நயந்துறைதலின், அவள்பால் பெருநலம் உளதாகல் வேண்டு மன்றோ?" என்பாள், அனைநலம் உடையளோ நின் பெண்டு என்றாள். அனைநலம் என்றது மகப்பயந்து பயன்படும் அத்துணை நலம் என்றவாறு. எனவே, பரத்தைமாட்டு

அஃ தில்லை யென்பது குறிப்பு. "எம்போற், புல்லுளைக் குடுமிப் புதல்வற்பயந்து, நெல்லுடை நெடுகர் நின்னின் றுறைய்ம், என்ன கடத்தளோ" (அகம். 176) என்பதனால் பரத்தையின் பயப்பாடின்மை துணியப்படும்.

"கற்பும், காமமும், நற்பா லொழுக்கமும்" முதலாகிய மாண்புகளால் ஒப்புயர் வின்றி விளங்கும் இவள் நலம் கெடாதவாறு ஒழுகுதல் நினக்குச் சிறப்பியல்பாக, அதனை நெகிழ்த்து, இவள் தனிமையுற்று வருந்துமாறு, மாண்பில் லாத பரத்தையை நயந்து பிரிதல் கூடாது," என்றற்கு இவள்நலம் புலம்ப என்றும், பிரிய என்றும் காரண காரிய வியைபு எய்த வகுத்தோதினாள். "இவள் நலம் புலம்ப" என்றது பசலைபாய்தல். "பிரிய" என்றது அழிவில் கூட் டத் தவன்பிரி வாற்றாமை. எனை மெய்ப்பாடு: இளிவரல். பயன்: பிரிவருமை கூறல்.

இனி, "பெறற்கரும் பெரும்பொருள்" (பொ. 148) என்ற சூத்திரத்து, "பிழைத்து வந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்" நிகழும் கூற்றுக்கு இதனைக் காட்டுவர் ஆசிரியர் இளம்பூரணர்; ஆசி ரியர் நச்சினார்க்கினியார், இச்சூத்திரத்து, "வணங்கியல் மொழியால் வணங்கற் கண்ணும்" என்புழி நிகழும் கூற் றுக்கு உதாரணமாகக் காட்டி, "இதுவும் அதன்பாற் படும்" என்பர்.

அணிநலம் உடையளோ என்ற பாடத்துக்குத் தலை மகளை ஒத்த நலம் உடையளோ என்று உரைக்க. அவ ளோடு ஒழுகுதலைப் பொருத தோழி, அவளைத் தலைமகளோடு ஒப்பக் கருதுவதும் செய்யா ளாகலின், அப்பாடம் சிற வாமையறிக. (எ)

58. விண்டு வன்ன வெண்ணெற் போர்விற்
கைவண் விராஅன் இருப்பை * யன்ன

இவளணங் குற்றனை போறி
பிறர்க்கு மனையையால் வாழி நீயே.

உணர்ப்புவயின் வாரா வூடற்கண் புலந்த தலைமகற்குத் தோழி கூறியது.

ப. ரை :—*கைவண் விராஅன் இருப்பை யன்ன என்றது நினது இல்வாழ்க்கைக் குரியவாகிய குணங்களால் உயர்ந்தாள் எ. று.*

*பு. ரை :—மலைபோல் உயர்ந்த வெண்ணெற் போர்களை யும, வரையாது வழங்கும் வண்மையினையு முடைய விராஅன் என்பானது இருப்பை என்னும் ஊரை யொக்கும் இவளால் வருத்தமுற்றாய் போல வருந்தினை ; பிற மகளிர்பாலும் நீ இத்தன்மையை யாகலின் அமைக எ. று.*

விண்டு, மலை, "விண்டு வனைய விண்டோய் பிறங்கல்" (புறம். 391) என்றார் பிறரும். வெண்ணெல், நெல்வகையுள் ஒன்று. விராஅன், இருப்பை யென்னும் ஊரின்கண் இருந்தா னொரு வள்ளல். இவனை, ஆசிரியர் பரணர், "முனை யெழத் தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன், மலிபுனல் வாயில் இருப்பை" என்றும், "வெண்ணெல் அரிநர் தண் ணுமை வெரீஇப், பழனப் பல்புள் இரியக் கழனி, வாங்கு சினை மருதத் தூங்குதுணை றுதிரும், தேர்வண் கோமான் விராஅன் இருப்பை" (நற். 260, 350) என்றும் சிறப்பித் திருக்கின்றனர். இப் பாட்டாலும், இருப்பையூர் வெண் ணெல்லால் வீறுபெற்று விளங்குமாறு காண்க. மூன்ற

புதுக்கோட்டையைச் சார்ந்த விராலிமலை இவன் மலையா கவும், அம்மலையைச் சார்ந்த இருப்பையூர் இவன் ஆட்சியிலிருந்த இருப்பையாகவும் கருதப்படுகின்றன என்பர் டாக்டர். உ. வே. சுவாமிநாதையர்.

னுருபு விகாரத்தால் தொக்கது. ஏழாவதன்கண் நான்காவது வந்து மயங்கிற்று. 'வாழி', அசைநிலை.

உணர்ப்புவயின் வாரா வூடற்கட் டலைவன் புலந்திருந்ததனை யுணர்ந்த தோழி, அப்புலவி தீர்க்கும் கருத்தினளாகலின், அப்புலவியால் அவன் எய்திய வேறுபாட்டைப் பிறிதொன்றாக விதந்து, இவள் அணங்குற்றனை போறி என்றாள். மகளிரை அணங்குறுத்தற் குரிய நீ இவளால் அணங்குற்றாய் போறலின், அது, நீ பிறமகளிராலும் இவ்வாறு அணங்குறுதற் கமைந்தனை எனத் துணிதற் கேதுவாதலின், புலத்தலில் சிறப்பின்று என்பாள் பிறர்க்கும் அனையையால் என்றும், புலவி தீராவழித் தலைமகட் கெய்தும் வருத்தம் குறித்து, வாழிநீயே என்றும் கூறினாள். தலைவன் தலைவியால் அணங்குற்றது போலக் கூறுதல், "தான்நம் மணங்குதல் அறியான் நம்மிற்; றனணங் குற்றமை கூறிக் கானற், சுரும்பிமிர் சுடர்நுதல் நோக்கிப், பெருங்கடற் சேர்ப்பன் தொழூதுநின்றதுவே" (நற். 245) என்பதனாலு மறியப்படும். புலவி தீராவழி வருத்த முண்டென்பது, "அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்" (குறள். 1303) என்பதனால் உணரப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவன் புலவி தீர்ந்து கூடுதல் உறுவானாவது.

"உணர்ப்பவயின் வாரா வூடலுற் றோள்வயின், உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று, தான் வெகுண் டாக்கிய தகுதிக் கண்" (பொ. 150), தலைவியைக் கழறிக் கூறற்பாலளாகிய தோழி, உணராமையால் புலந்த அத்தலைமகள் உணருமாறு, அவன் தகுதி நோக்கித் தகுவன கூறலும் தனக்கு முறைமை யாகலின், அவன் புலத்தலும் தலைவி பொறாமைக் கேதுவாய், மறுவலும் அவள் ஊடுதற்கே இடனாதல் காட்டித் தலைவனைத் தெளிவித்தா ளாம். மற்று, அதனால் தலைவி புலவா வகையில் உவமையால் அவளது இல்வாழ்க்கைக் குரிய மாண்புகளைச் சுட்டினாள் என அறிக.

விராலின் இருப்பை என்ற பாடம் ஏனைச் செய்யுட்களிற் காணப்படவில்லை. அது "விராலிமலை" யெனவரும் வழக்குப்பற்றி, விராலின் எனக் கொண்ட பாடம் போலும்.

59. கேட்டிசின் வாழியோ மகிழ்ந வாற்றுற
மைய னெஞ்சிற் கெவ்வந் தீர
நினக்குமருந் தாகிய யானினி
இவட்குமருந் தன்மை நோமென் னெஞ்சே.

தலைமகள் ஆற்ருளாம்வண்ணம் மனைக்கண் வரவு சுருங்கிய தலைமகற்குப் புறத்தொழுக்க முளதாகியவழி ஆற்ருளாகிய தோழி சொல்லியது.

பு. ரை:—மகிழ்ந, கேட்பாயாக. மயங்கிய நெஞ்சின்கண் எழுந்த வருத்தம் தீர, பண்டு, நீ ஆற்றுமாறு மருந்தாய்ப் பயன்பட்ட யான், இப்பொழுது, இவளது ஆற்ருமை தீர்க்கமாட்டாமையின், அவ்வாறு பயன்படுமாறு இல்லேன்; அதனுல் இவளை ஆற்றுவிப்பது குறித்து என் நெஞ்சம் வருந்தாநிற்கின்றது எ. று.

கேட்டிசின், சின், முன்னிலையசை. ஆற்றுற என்பதனை மருந்தாகிய என்பதனேடு கூட்டுக. மையல், கருதியது எய்தப் பெருமையால் உளதாகும் திகைப்பு; அஃதாவது களவின்கண் இடையீடுகளாலும், கற்பின்கட் பிரிவுகளாலும் தலைக்கூடப் பெருமையால் தலைமக்கட்கு நிகழும் மையல். எவ்வம், வருத்தம். "மையல் நெஞ்சிற் கெவ்வந் தீர" என்பதனை "இவட்கு மருந்தன்மை" என்பதனேடும் இயைக்க. மருந்தன்மை யென்புழி ஏதுப்பொருட்டாய இன்னுருபு தொக்கது. நோவு மென்பது ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டு நோமென நின்றது.

களவுக்காலத்து இடையறாக் கூட்ட மெய்தாவகையில் நேர்ந்த இடையீடுகளால், தலைமகன் தலைவியை எய்தப்பெறு ஞய், ஆற்ருது மையலுற்ற காலங்களில், ஆற்றத் தகுவன கூறி ஆற்றுவித்து, இடமும் காலமும் வாய்ப்புழிக் கூட்ட மெய்துவித்துத் தோழி அவனது எவ்வம் களைந்தா ளாகலின், மையல் நெஞ்சிற்கு எவ்வந் தீர நினக்கு மருந்தாகிய யான் என் ருள். "அந்தண் பொய்கை பெருந்தை யெம்மூர்க், கடும் பாம்பு வழங்குந் தெருவின், நடுங்களுர் எவ்வம் களைந்த வெம்மே" (குறுங். 354) எனத் தோழி தான் பண்டு நிகழ்த்தி யது கூறுதல் காண்க. "இப்பொழுது நீ இவளைப் பிரிந்து ஒழுகுதலின், யான் இவளுற்ற வருத்தம் நீங்க அரிது ஆற்று வித்தவழிப்பட்டு, நின் புறத்தொழுக்கத்தை விடாதே மேற் கொண்டு, சுருங்கிய வரவுடையை யாயினமையின், யான் இவளைத் தேற்றும் திறனின்றி வறிது கழிவே ஞயினேன்" என்பாள், இவட்கு மருந்தன்மையின் என்றும், "இந் நிலைக்கண் யான் சுண்டை யிருந்தும், இவளெய்தும் எவ்வம் தீர்க்கும் வகையின்றி அதனைக் கண்ணிற் கண்டு வருந்துகின் றேன்" என்பாள், நோமென் னெஞ்சே என்றும் கூறினள். மெய்ப்பாடு : இளிவரல். பயன் : ஆற்ருமை கூறல்.

"பெறற்கரும் பெரும்பொருள்" (பொ. 150) என்ற சூத்திரத்துட், "பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்" நிகழும் கூற்றுக்கு இதனைக் காட்டினர் ஆசிரியர் இளம்பூரணரும் நச்சினர்க் கினியரும்.

மகிழ்ந வாற்றும் என்பது பாடமாயின், ஆற்றும் என் பதை மருந்தென்பதனேடு இயைத்துக் கொள்க.

60. பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவும்
கழனி யூர நின் மொழிவல் என்றும்

ரு| துஞ்சுமனை நெடுநகர் வருதி
அஞ்சா யோவிவள் தந்தைகை வேலே.

வரையா தொழுகும் தலைமகன் இரவுக்குறி வந்துழித் தோழி சொல்லியது.

பு. ரை :—பழனங்களில் வாழும் கம்புட் கோழி அழைப்பிடுதலையுடைய பெட்டையைக் கூவி யழைக்கும் கழனிகளை யுடைய வூரனே, நின்பால் ஒன்று மொழிவேன்: உள்ளிருப்பவர் இனிது உறங்கும் மனைகளையுடைய பெரிய நகரின்கண், என்றும், இரவில் வருகின்றாயாகலின், நீ, இவள் தந்தையின் கையில் வேலுக்கு அஞ்சுவையல்லை கொல்லோ? யாம் அஞ்சிப் பெரிதும் வருந்தாநிற்கின்றேம், காண் எ. று.

கம்புள், கம்புட்கோழி; இதனைச் சம்பங்கோழி என்றும் கூறுப. கம்புள் என்பது இறந்த வழக்கு என ஆசிரியர் நச்சினார்க்கினியார் கூறுவர்.* பயிர்தல், அழைப்பிடுதல்; "யானைப் பெருநிரை வானம் பயிரும்" (அகம். 333) என வருதல் காண்க. துஞ்சுமனை என்புழி இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. வருதி, முன்னிலை வினைமுற்று. துஞ்சுமனை வருதி என்றதனால், இஃது இரவுக் குறிக்கண்ணது என்பது பெற்றாம்.

வரைவுகடாவும் குறிப்பினளாதலின், தோழி, முதற்கண், நின் மொழிவல் என முகம்புகுகின்றாள். "வரைதலைக் கருதாது நாளும் களவே விரும்பி யொழுகுகின்றாய்" என்பாள், என்றும் துஞ்சுமனை நெடுநகர் வருதி என்றும், இரவுக்குறிக்கண் வரும் அருமை தோன்ற, துஞ்சுமனை யென்றும் கூறினாள். "இயங்குநர் மடிந்த வயந்திகழ் சிறுநெறிக், கடுமா வழங்குத லறிந்தும், நடுநாள் வருதி நோகோ

* சீவக. மண்மகள். 7. உரை.

யானே" (நற். 257) என இரவில் வருதலின் அருமை குறித்துத் தோழி கூறியது காண்க. "காப்புமிகுதியும் நெறியினதருமையும் கருதாது எம்பாற் கொண்ட பேரன்பினால், வருதலைச் செய்கின்றனை" யென்பாள் நெடுநகர் வருதி என்றாள். "நீயே, அடியறிந் தொதுங்கா வாரிருள் வந்தெங், கடியுடை வியனகர்க் காவல் நீவியும், பேரன் பினையே பெருங்கல் நாட" (நற். 156) எனப் பிறாண்டும் வரும் தோழிகூற்றுக் காண்க. "இவ்வாறு வருதலால் நினக்கு வரும் ஏதத்தை எண்ணி யாம் வருந்துமாறும், தாயறியின், இஃது இற்செறிப்புக் கேதுவாமாறும், பிறவும், கருதாயாயினும், இவள் தந்தை தன்னையர் மிகக் கொடிய ராகலின், அவர் செய்யும் ஏதத்தினையும் கருதுகின்றிலை" என்பாள், அஞ்சாயோ விவள் தந்தை கைவேலே என்றாள். யாம் அஞ்சி யென்பது முதலாயின எஞ்சிநின்றன.

"பொழுது மாறும் காப்புமென் றிவற்றின், வழுவினாகிய குற்றம் காட்டலும், தன்னை யழிதலு மவனூ றஞ்சலும், இரவினும் பகலினும் நீவர லென்றலும், கிழவோன் றன்னை வார லென்றலும், நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும், புரைபட வந்த வன்னவை பிறவும், வரைதல் வேட்கைப் பொருள வென்ப" (பொ. 210) என்பதனுள் "துஞ்சுமனை நெடுநகர் வருதி" யென்றது, பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின் வழுவினாகிய குற்றங் காட்டல். "அஞ்சாயோ இவள் தந்தை கைவேலே" யென்றது அவனூ றஞ்சல். "யாம் அஞ்சி வருந்துகின்றேம்" என்பது தன்னையழிதல். "பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல், யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப, வேங்கை கமழும் சிறுகுடி, யாங்கறிந் தனையோ நோகோ யானே" (குறுந். 355) எனத் தோழி வருந்திக் கூறியதும் இதுவே. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவுகடாதல்; இதன்கண் இரவுக்குறி வருதல் கூறினமையின், பகற்குறி மறுக்கப்பட்டமையும், இதனால் இரவுக்குறியும் மறுக்கப்பட்டமையும் எய்

தினமையின், தோழியின் இக்கூற்றுற் பயன் தலைவன் தெருண்டு வரைவொடு புகுவான் என்பது.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியாரும் இது, "தோழி இரவுக்குறி மறுத்தது" என்றே கூறினர். (பொ. 12, உரை).

பயிர்பெடை யென்றபாடம் வினைத்தொகை யென்றும், பயிற்பெடை யென்ற பாடத்துக்கு அன்பிற் பயின்ற பெடை யென்றும் உரைத்துக் கொள்க.

இது மருதத்துக் களவு. (ய)

## 7. கிழத்திகூற்றுப்பத்து.

இதுவும் முன்னையது போலக் கூற்று நிகழ்த்துவோர் பொருளாக வரும் பாட்டுக்களின் தொகையாகலின், இப் பெயரினதாயிற்று.

ஈண்டுத் தொகைபெற்ற கூற்றுக்கள் யாவும் தலைவன் புறத்தொழுகித் தன் மனைக்கட் போந்துழி, தலைவி புலந்து கூறுவனவாகும். ஊடலும் ஊடல்நிமித்தமும் மருதத்துக்கே உரிய உரிப்பொருளாகலின், அவ்வாறு தலைவி ஊடக் கூறுவனவாகிய கூற்றுக்களைத் தன்கண் வருதல்பற்றி, ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் கிழத்திகூற்றென வகுத்துச் சிறப்பித்தனர்.

61. நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅ ரன்ன
நல்லோர் நல்லோர் நாடி
வதுவை யயர விரும்புதி நீயே.

"வதுவை யயர்ந்தா னொரு பரத்தையைச் சின்னாளில் விட்டு, மற்றொரு பரத்தையை வதுவையயர்ந்தான்" என்பது அறிந்த தலைமகள் அவன் மனைவயிற் புக்குழிப் புலந்தாளாக, "இது மறைத்தற் கரிது" என உடன்பட்டு, "இனி, என்னிடத்து இவ்வாறு நிகழாது" என்றாற்கு அவள் சொல்லியது.

ப. ரை:—மணமிக்க வடுக்களையுடைய மாமரத்தின் பழுத்துகும் இனிய பழம், ஆழ்ந்த நீரினையுடைய பொய்கையின்கண் துடும் என்னும் ஓசையுடன் விழும்—கொடை வண்மையுடைய மத்தி என்பானது கழார் என்னும் ஊர்

போலும்,—நல்ல நல்ல மகளிரையே நாடி, நீ வதுவை கொள்ள விரும்புகின்றாயாக, "இனி, என்னிடத்து இவ் வாறு நிகழாது," என்பது என்னை? எ. று.

வடி, மாவடு; "நறுவடிப் பைங்கண் மாஅத்து அந் தளிர்" (குறுந். 331) என்பதனால், இஃ திப்பொருட்டாதல் உணரப்படும். துடும் என்பது கனிவிய பொருள் நீரின்கண் விழுதலால் எழும் ஓசை. "கொக்கினுக் கொழிந்த தீம் பழம் கொக்கின், கூம்புநிலை யன்ன முகைய வாம்பல், தூங்கு நீர்க் குட்டத்துத் துடும்என விழூஉம், தண்டுறை யூரன்" (நற். 280) என இக் கருத்தினையே பிறரும் கூறுதல் காண்க. மத்தி என்பவன் பரதவர் என்னும் தென்புலமக்கட்குத் தலைவன். இவனது படைப் பெருமையும் கொடைவண்மை யும் புலவர் பாடும் நலம்பெற்றனவாம். இதனை, "வள் ளெயிற்று நீர்நாய், முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும், பல்வேள் மத்தி கழாஅர்" (அகம். 6) என ஆசிரியர் பரணர் பாடியிருத்தல் காண்க. அன்றியும், இவன் வெண் மணி என்னுமிடத்துப் பனித்துறை யொன்று கட்டி, ஆசிரி யர் மாமூலனாரால் புகழப்பெற்றான். அது, "வன்கட் கத வின் வெண்மணி வாயில், மத்தி நாட்டிய கல்கெழு பனித் துறை" (அகம். 211) என வருகின்றது. கழாஅர் என்பது காவிரிக் கரையை யடுத்தது; மேலும், இது கழாஅர்க்கீரன் எயிற்றியார் என்னும் புலவர்பெருமாட்டியார் பிறந்த ஊராய்க், கரிகால்வளவன், தன் மகள் ஆதிமந்தியும், அவள் கணவன் ஆட்டனத்தியும் சூழ்வரச் சென்று, தண்பதங் கொண்ட சீரிய இடமுமாகும். வதுவையயர்ந்தவிடத்தும், பரத்தையர், மேனிநல மல்லது குலமகளிர் போலும் கற்பு நலம் இலராகலின், அடுக்கு இழித்தற்கண் வந்தது. இனி என்னிடத்து என்பது முதலாயின கூற்றெச்சம்.

முதற்கண் ஒருத்தியை மணந்து, பின்னாளில் அவளைக் கைவிட்டுப் பிறளொருத்தியை மணந்தானென முன்னே

கேட்டறிந்துளா ளாகலின், நல்லோர் நல்லோர் நாடி என்றும், அப்பெற்றியோன், இனியும் அவ்வாறே செய்தொழுகுவன் என்று புலத்தலின், "வதுவை யயர" விரும்பினை என்றது விரும்புதி என்றும் கூறினாள். இவை புறஞ்சொன் மாணாக்கிளவி. "நல்லோர் நல்லோர்" என்ற பெயர்த்துரை அவன் நாளும் புதுவோர்மேவலனாய் ஒழுகுதலை நியமித்தது. பரத்தையரைத் தலைவன் தலைக்கூடலை வதுவையயர்ந்தானெனவும், அஃது அலராய் ஊர்முழுதும் கௌவையாயிற்றெனவும் தான் அவனது புறத்தொழுக்கத்தை அறிந்தவாற்றைத் தலைவி வெளிப்படக் கூறுதலு முண்மையின், ஈண்டு வாளா "நல்லோர் நல்லோர் நாடி" வதுவை விரும்புதி என்றாள். "திருமருது தோய்கிய விரிமலர்க் காவின், நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு, வதுவையயர்ந்தனை யென்ப, அலரே ............... வீரர் ஆர்ப்பினும் பெரிதே" (அகம். 36) என்பது தலைவி வெளிப்படக் கூறியது. ஈண்டுக் கற்புநலம் சுட்டாது மேனிநலமே குறிப்பால் விதந்தவாறே, இவ் வகப்பாட்டினும் பரத்தையின் கூந்தலும் தொடியுமே தலைவி எடுத்தோதியவாறு காண்க.

நறுவடி மாவின்கண் விளைந்து முதிர்ந்த தீம்பழம், அதனின் நீங்கி, நெடுநீர்க் குட்டத்துத் துடும் என வீழும் என்றது, பரத்தையர் சேரிக்கண் நலங்கனிந்து சிறந்த பரத்தையர் தம் தாயர் முதலாயினாரின் நீங்கி நின்னொடு வதுவையிற் கூடி மகிழ்வர் என உள்ளுறையாற் பரத்தையரைக் குறைகூறியவாறு.

இதுமதி நீயே என்பது பாடமாயின், வதுவை யயர்தற் பொருட்டு அவர்பால் நீ விழுகின்றாய் என்றும், எனவே, தீம்பழம் தன்னைப் பேணிய மாவின் சினை புலம்பக் குட்டத்து வீழ்தல் போல, நின்னைக் காதலித்துப் பேணிய யாம் புலம்பப் பரத்தையரை அணைகின்றாய் எனத் துனியுறு வாய்பாட்டால், உள்ளுறுத் துரைத்தவாறு என்றும், "உள்

ஒருறை யுவமம் ஏனை யுவமமெனத் தள்ளா தாகும் திணை யுணர் வகையே" (பொ. 46) என்றதனால் இஃது அமையு மென்றும் உரைக்க. மெய்ப்பாடு: வெகுளி: பயன் புலத்தல்.

62. இந்திர விழவிற் பூவி னன்ன
புன்றலைப் பேடை வரிநிழ லகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்தினி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் றேரே.

இதுவுமது.

பு. ரை:—மகிழ்ந, பூப்போலப் புல்லிய தலையினை யுடைய பேடை செறியாத நிழற்கண் இருந்து கூவும் இவ் வூரின்கண் எடுத்த இந்திரவிழவில், விரும்பிய மங்கையர் பலரைக் கொணர்ந்து தொகுத்து, இப்பொழுது, நின் தேர் எவ்வூர்க்கட் சென்று நிற்கின்றது, கூறுக எ. று.

பேடை அகவும் இவ்வூர் எடுத்த இந்திரவிழவில், மங் கையர்த் தொகுத்து, இனி, நின்தேர் எவ்வூர் நின்றன்று கூறுக என இயையும். தலைமக்கள் விழவுக்காலத்துத் தம் மனக்கினிய மங்கையரோடு கூடி மகிழ்தல் மரபாகலின், இந் திரவிழவு கூறப்பட்டது. புகாரில் எடுத்த இந்திரவிழவில், "நகையா டாயத்து நன்மொழி திளைத்துக், குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு, திரிதரு மரபிற் கோவலன்" (சிலப்: 5: 199—202) செய்தியும் ஈண்டு நினைவுகூர்தற் பாலது. நின்றன்று, முற்று.

"இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி எவ்வூர் நின் றன்று நின்தேர்" என்றது, இவ் வூரின்கட் பல மங்கை யரை வதுவை யயர்ந்த நீ, அவர்களோ டமையாது, வேறு பிறவூர்கட்கும் சென்று, வேறு மங்கையர் பலரைக் கூட விரும்புகின்றாய் என்றவாறும். "மாட்டுமாட் டோடி மக

ளிர்த் தரத்தரப், பூட்டுமான் திண்டேர்" என்றும், "நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின், தேர்பூண்ட நெடுநன்மான் தெண்மணிவந் தெடுப்புமே" (கலி. 98, 70) என்றும் சான்றோர் கூறுதல் காண்க.

புன்றலைப் பேடை வரிநிழற்கண் இருந்து அகவும் என்றது, தலைவன் பிரிவாற்றாது தான் இல்லிருந்து வருந்தியது உணர்த்தி நின்றது.

இந்திரவிழவிற் பூவினன்ன என்பதை மங்கையர்க் கடையாக்கி, இந்திரவிழவின்கண் வேறு வேறு நிலத்தினின்றும் பூக்கள் பல கொணர்ந்து தொகுத்துத் தொடுத்துப் பயன் கோடல் போல, வேறுவேறு ஊர்களிலிருந்தும் மகளிரைக் கொணர்ந்து வதுவைநலம் கொள்கின்றாய் என்று கூறலும் ஒன்று. மெய்ப்பாடும் பயனும் அவை.

மங்கையைத் தொகுத்து என்றும் மகிழ்ந்தநின் தேரே என்றும் வரும் பாடம் பொருட்சிறப்பில. இனி, மங்கையைத் தொகுத்து அவரொடு காமக்களியாட்டயர்ந்து மகிழ்ந்த நீ, அம் மயக்கத்தால், எம் மனைக்கட் போந்தனை போலும் என்றற்கு எவ்வூர் நின்றன்று மகிழ்ந்தநின் தேர் என்றாள் எனினுமாம். இப் பொருள்கோளில் ஊர் என்றது, முறையே பரத்தையர்சேரியும், தன் மனையும் குறித்து நிற்கும். ஆகவே, இது நின் பரத்தை மனையன்று; செல்க என்பது கருத்தாயிற்று. (உ)

63. பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
எந்நலந் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து கூறியது.

பு. ரை :—பொய்கையாகிய இடத்தில் வாழும் புலால் நாறும் நீர் நாய் வாளைமீனை நாளிரையாகப் பெறும் ஊர, பெரும, கூடி முயங்காதவழி, எமது நலம் முற்றும் கழிந்து படுவதாயினும், பிறரைக் கூடி முயங்கிய நின் மார்பினை யாம் கூடுவேமல்லேம் எ. று.

பொய்கைப்பள்ளி, இருபெயரொட்டு; "கல்லளைப் பள்ளி" (நற். 98) எனப் பிறவிடங்கட்கும் பள்ளியென்பது உரிமை யெய்துமாறு காண்க. நாளிரை, காலைவேளையிற் பெறும் உணவு. "நாள் ஞாயிறு" (கள. 2) என நாட் பெயர் காலைப்போது குறித்தல் அறிக. உம்மையால், கூடாதவழி நலங்கெடுதல் ஒருதலை யென்பது உணரநின்றது. "அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய், வாளை நாளிரை பெறூஉம் ஊரன்," (குறுந். 364) என்றும், "பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து, வாளை நாளிரை தேரும் ஊர" (அகம். 386) என்றும் சான்றோர் கூறுப. துன்னலம், அன்மை சுட்டிய எதிர்மறைப் பன்மைத் தன்மைவினை முற்று.

நீர்நாய் (Otter) என்பது நீரில் வாழும் உயிரினங் களைப் பிடித்துண்டு வாழும் உயிர்வகையுள் ஒன்று. இது காடி இனத்தைச் சேர்ந்தது என்றும் கூறுப. இஃது ஏனைய நாய்கள் செழித்து வாழும் நிலங்களிற் செம்மையாக வாழும் சிறப்புடையது. *நீந்துவதிலும், நீர்க்கு அடியில் இருகரை களுக்கும் இடையே வழிவளை (Tunnel) செய்தலிலும் கை தேர்ந்தது. இதன் பற்கள் வாள்வாய் போல் அமைந்து, அகப்பட்ட பொருள் நெகிழ்ந்தோடா வகையில் இறுகப் பற்றும் பான்மையமைந்தவை. அதனால், மிக்க வழுவழுப்

---

* Their brilliant swimming and tunnelling, their fine teeth which grip fishes that elude fingers, their extensive travels when food or water fail, make otters very efficient in the struggle for life.—*Ibid.*

புடைய மீனினங்களையும் நீர்நாய் எளிதிற் பற்றிக்கொள்ளு கின்றது.* இவ்வியல்பினைக் கண்டசான்றோர், "வள்ளை யிற்று நீர்நாய்" என அகத்திற் சிறப்பித்துக் கூறியிருக்கின் றனர். தான் வாழுமிடத்தில் தண்ணீரோ, தனக்குரிய இரையோ கிடைப்பது அரிதாய காலத்தில், அது குறித்து நெடுந் தொலைவு செல்லும் நேர்மையுள்ளது.

நீர்நாய்களைமட்டில் சுமார் பன்னிரண்டு வகைகளாகப் பிரித்திருக்கின்றனர். அவற்றுட் கடலில் வாழும் நாய், கடல்நாய் எனப்படும். அதுவே மிகச் சிறந்ததாக மேனாட் டவர் கருதுகின்றனர். அதன் பூமயிர் (Fur) பேரழகு வாய்ந்தது; அதனைக் கைசெய்து அணிந்து கொள்வதில் மேனாட்டு மக்கட்குப் பெருவேட்கை யுண்டு. அதனால், அதனைப் பெறுவதுகுறித்து வேட்டையாடுவோர் பெருகினர்; அதன்பயனாக, அதன் பூண்டே அற்றுப்போக நேர்ந்தது.*

நீர்நாய்கள் செங்குத்தாய் உயர்ந்திருக்கும் ஆற்றங்கரை களில் நயமான வழிகளைச் செய்து, அவற்றில் இன்புற ஏறி யிறங்குவது காண்பார்க்குப் பேரின்பம் பயக்கும் காட்சி யாகும்.

நீர்நாய் மிக்க மனத்திட்பம் உடையது. அது தனக்குத் தீங்கு செய்யக் கருதும் உயிரை எதிர்த்துநின்று வெல்லக் கருதும் வீறுபெற்றது. ஒருகால் வேட்டுவன் ஒருவன், நீர் நாய்கள் இரண்டினைக் கண்டு, தன் கையிலிருந்த சில்லாக் கோல் (pitch fork) கொண்டு கொல்லமுயன்றானாக, அவை யிரண்டும் அவனை எதிர்த்து நெடிது போராடி, முடிவில்

* Of nearly dozen species the sea-otter is the most famous, partly because of its fur is so luxurious, partly because a craze for that fur has caused men to hunt it almost out of existence.—*Ibid.*

அவன் தானே புறமிட்டு ஓடுமாறு செய்தனவாம்! இதனது உடற்சிறுமை கண்டு, எளிதிற்பற்றி உயிர்குடிக்கக் கருதிய காட்டுப்பூனை (Pole cat) ஒன்று, நீர்நாய் ஒன்றை எதிர்த்த தாக, அந்நாய் அப்பூனையை வென்று, கொன்று தின்றொழிந் ததாம்.

களவிற் போல இனி, மேனி வேறுபாட்டிற்கு அஞ்ச வேண்டாமையின் எந்நலம் தொலைவ தாயினும் என்றாள். இஃது அழிவில் கூட்டத் தவண்பிரி வாற்றாமை. சிறப்பில் லாத பரத்தையரோடு கூடியது பொருளாகப் புலவி மிகு கின்று ளாகலின், ஊர என்றதனோ டமையாது, பெரும என மீட்டும் முன்னிலைப் படுத்தாள். ஊர என்றது, உள்ளுறை யால் அவனது புறத்தொழுக்கத்தைக் குறித்தற்கு என்றும், பெரும என்றது, புலவிமிகுதியால், மார்பு தோய்வதை மறுத்தற்கு என்றும் வருத்துக்கொள்க. புறமகளிர், காமக் கிழத்தியரும் பரத்தையரும் எனப் பலராகலின், பிறர் என் றாள். உள்ளுறைக்கண் நீர்நாயை, "புலவுநாறு நீர்நாய்" என விசேடித்ததனால், தலைவன், பரத்தையரைக் கூடிப் புணர்குறியும் மணமும் கமழ வந்தான் என்பது பெறுதும். அவற்றைக் காணுந்தோறும் தலைவிக்குப் பொறாமை மிகு தலின், துன்னலம் பெரும பிறர்த் தோய்ந்த மார்பே என்றாள்.

இஃது, "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 147) என்ற சூத்திரத்து, "புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்கு, அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி, இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி, எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கின்" தலைவி நிகழ்த்தும் கூற்றுவகை யாகும். "எந்நலம் தொலைவ தாயினும்" என்றது, அகன்ற கிழவற்குத் தன் புலம்புநனி காட்டியது. "துன்னலம்" என்றது, இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்து அருக்கி எதிர்பெய்து மறுத்தது. மெய்ப்பாடும் பயனும் அவை.

இனி, ஆசிரியர் பேராசிரியர் இதனைப் பிறப்புமவப் போலிக்கு உதாரணமாகக் காட்டி, "நல்ல குலத்திற் பிறந்தும் இழிந்தாரைத் தோய்ந்தமையால், அவர் நாற்றமே நாறியது, அவரையே பாதுகாவாய், மேற்குலத்துப் பிறந்த எம்மைத் தீண்டல் என்பாள், அவையெல்லாம் விளங்கக் கூறுது, பொய்கைப் பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னாள் தின்ற வாளை மீன் புலவு நாற்றத்தோடும், பின்னாளும் அதனையே வேண்டும் ஊரன் என்றமையின், பரத்தையர் பிறப்பு இழிந்தமையும், தலைவி பிறப்பு உயர்ந்தமையும் கூறி, அவன் பிறப்பின் உயர்வும் கூறினமையின், இது பிறப்பு வமப் போலி யாயிற்று; இவையெல்லாம் கருதிக் கூறின் செய்யுட்குச் சிறப்பா மெனவும், வாளாது நீர்நாய் வாளை பெறூஉம் ஊர என்றதனால் ஒரு பயமின் றெனவும் கொள்க," (தொல். பொ. 300 உரை) என்பர்.

நீர்வாய் வாளை என்றும் பாடமுண்டு; இதற்கு நீரில் வாழும் வாளையென்றும், எனவே வாளைமீன் நாளிரையாகப் பெறப்படும் ஊர என்றும் உரைத்துக் கொள்க. மற்று அதனாற் பொருட்சிறப் பின்று.

64. அலமர லாயமோ டமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புன லாடக் கண்டோர்
ஒருவரு மிருவரு மல்லர்
பலரே தெய்யவெம் மறையா தீமே.

தலைமகன் பரத்தையரோடு புனலாடினான் என்பது அறிந்த தலைமகள் அவன் மறைத்துழிச் சொல்லியது.

பு. ரை:—தன்னைச் சூழ்ந்து திரியும் ஆயமகளிருடன், நின்னால் விரும்பப்பட்டு நினக்குப் புணர்துணையாகிய பரத்தையைத் தழுவிக்கொண்டு, நீ, அழகுமிக்க புதுப்புனலில் ஆடக் கண்டவர் ஒருவர் இருவர் அல்லர்; பலரேயாவர்; ஆகலின், நீ அதனை எமக்கு மறைத்தல் என்னை? எ. று.

அலமரல், சுழற்சி; சூழ்வருதலும் சுழற்சி யாகலின், "அலமர லாயம்" என்றார். துணை, ஈண்டுப் புணர்துணை யாகிய பரத்தைமேற்று. உம்மை எண்ணுப் பொருட்டு. இருவர் என்பதும் பலரையே எனினும், ஈண்டு, "ஒன்று இரண்டு பல" என்னும் வழக்குப்பற்றி வந்தது. ஏகாரம் தேற்றம். தெய்ய என்பது அசைநிலை; இதனைக் "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும், கிளந்தவற் றியலான் உணர்ந் தனர் கொளலே" (சொல். 296) என்பதனு லமைப்ப. மறையார்நிமே, முன்னிலைப் பன்மை எதிர்மறை முற்று வினைத் திரிசொல்.

ஆயவெள்ளம் புடைசூழத் திரியும் பரத்தை யென்றற்கு, அலமர லாயமோடு அமர்துணை என்றும், தன்பால் அன்பு சுருங்கிப் பரத்தைபால் மிகுந்தொழுகுகின்றான் என்னும் நிம்பிரியினால், அமர்துணை தழீஇ என விசேடித்தும் கூறினாள். "எஃகுடை எழில் நலத் தொருத்தியொடு நெருநல், வைகுபுன லயர்ந்தனை என்ப" (அகம். 116) எனப் பிற சான்றோரும் கூறியவாறு காண்க. பல்வகை நறுமல ரும் சுமந்து, அளிமொய்ப்ப ஒளி சிறந்து கட்கின்பமும், துணையொடு கூடி யாடுவார்க்கு ஊற்றின்பமும் பயக்கும் சிறப்புடைப் பெருக்காதலால், அதனை நலமிகு புதப்புனல் என்றாள். இதனைக் கண்டோர் ஒருவர் இருவராயின் நீ மறைத்தல் வாய்க்கும் என்பாள், ஒருவரும் இருவரும் அல்லர் என்றும், நீ புனலாடிய செய்கை அலராய், ஊரெங்கும் பரவிப் பலரும் அறிபொருளாயிற்று என்றற்குப் பலரே என்றும் கூறினாள். "கிழவோன் விளையாட் டாங்கு மற்றே" (பொ. 164) என்பதனால் புனலாட்டும் புலவிக் கேதுவாய்க் காமஞ் சிறப்பிக்கு மென அறிக. ஆகலின் என்பது முதலாயின குறிப்பெச்சம். தலைவன்பாற் பரத் தைமை கண்டு, தன்வயின் உள்ள உரிமையால், உயர்வு தோன்ற எம் எனப் பன்மையாற் கூறினாள், இது புலவி யாகலின். "மனைவி யுயர்வும் கிழவோன் பணிவும் நினை

புங் காலைப் புலவியுள் உரிய" (பொ. 227) என்பது தொல்காப்பியம். "பேரூர் அலரெழ நீரலைக் கலங்கி, நின்னொடு தண்புன லாடுதும், எம்மோடு சென்மோ செல்லல்நின் மனையே" (ஐங். 77) எனப் பரத்தை தலைவனொடு புனலாட்டயருமாற்றினைப் பிறண்டுக் காண்க.

மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புனலாட்டுக் கூறிப் புலத்தல். (௪)

65. கருட்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே.

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

பு. ரை:—கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியின்கண் தழைத்த நீராம்பல், ஆண்டு வரும் வண்டுகளின் பசியைத் தன்னிடத்துத் தேனாற் களையும் மிக்க புனலையுடைய வூரனே, புதல்வனைப் பயந்து முதிர்ந்த எம் மேனியைப் புல்லுதல் ஒழிக; அது நின் மார்பிற் கோலத்தைச் சிதைப்பதா மாகலின் எ. று.

கரும்பு நடுதற்கு வகுத்த பாத்திகளுள் நீர் இடையறாமையின் ஆம்பல் முதலிய நீர்ப்பூக்கள் தழைப்பனவாயின என்க. பெரும்புனல் என்றவிடத்துப் பெருமை மிகுதிப் பொருட்டு. சுரும்பு முதலிய உயிரினம் தேனுண்டு வாழ்தற் கேதுவாகிய ஆம்பல் முதலியவற்றைத் தழைப்பிக்கும் சிறப்புக் குறித்து, மிகுபுனலூர என்னாது, "பெரும்புன லூர" என்றார். "வயலே, நெல்லின் வேலி சூடிய கரும்பின், பாத்திப் பன்மலர்ப் பூத் ததும்பின்று" (புறம். 386)

என்று பிற சான்றோரும் கூறினர். மோ, தெய்ய என்பன அசைநிலை. சிதைப்பதுவே என்புழிக் குற்றுகரத்தின் முன் உடம்படுமெய் விகாரத்தால் வந்தது. மார்பு, பரத்தையர் செய்த கோலத்தின் மேலதாகலின், ஆகுபெயர்.

உள்ளுறையால், தான் இல்லிருந்து தனக்குரிய நல்லறத்தை வழுவாது ஆற்றும் உயர்வு தோன்ற எம்மேனி எனப் பன்மைவாய்பாட்டாற் கூறினள். புதல்வர்ப் பயந்த மேனி திதலை யணிந்து தீம்பால் கமழ்தலின், பூவினும் சாந்தினும் புதுமணம் கமழும் நின் மார்பின் நறுமணம் கெடும் என்பாள், எம் மேனி முயங்கன்மோ என்றாள். "இனியே, புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத், திதலை யணிந்த தேங்கொண் மென்முலை, நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம், வீங்க முயங்கல் யாம்வேண் டினமே, தீம்பால் படுதல் தாமஞ் சினரே" (அகம். 26) என்று பிறரும் கூறியவாறு காண்க. சிதைதல், தீம்பாற்பட்டுப் பரத்தை செய்த கோலம் கெடுதல். புதல்வனை ஈன்ற என்ற அடை, முதுமையும், முயங்க லாகாமைக் குரிய நலக்குறைவுமாகிய ஏதுவை யுட்கொண்டு நின்றது. புதல்வர்ப் பயந்து புனிறு தீரா நிலைமைக்கண், கண் குழிந்து, இதழ் வெளுத்து, மேனி குழைந்து மெலிந்து அழகு குறைந்து தோன்றுதலின் அதனை, அப் புலவுப்புனிறு தீர்ந்து பொற்பொடு திகழும் இக் காலத்துத் தான் புலத்தற்குக் கருவியாகக் கொண்டாள்; பிறாண்டும், "பேஎய் அனையம் யாம் சேப் பயந்தனமே" (ஐங். 70) என்கின்றாள்.

கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியின்கண், ஆம்பல் முதலியன தழைத்துச் கரும்பினத்தின் பசிகளையும் என்ற வினையுவமப்போலியால், பரத்தையர்க்காக அமைக்கப்பட்ட இல்லின்கண் யாம் இருந்து விருந்தோம்பல் முதலிய அறங்களைப் புரிந்தொழுகுகின்றோம் என்றாளாம்.

இனி, ஆசிரியர் பேராசிரியர், "கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை" என்று பாடங்கொண்டு, வினையுவமப் போலிக்கு உதாரணமாகக் காட்டி, "தாமரையினை விளைப்ப தன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை கரும்பின் பசிதீர்க்கும் ஊரன் என்றாள். இதன்கருத்து, அது காதற்பரத்தையர்க்கும் இற்பரத்தை யர்க்கும் என்று அமைக்கப்பட்ட கோயிலுள், யாமும் உள மாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம்............... இது கரும்பு பசிகளையும் தொழிலோடு விருந்தோம்புதற் றொழில் உவமங் கொள்ள நின்றமையின் வினையுவமப் போலியாயிற்று" (தொல். பொ. 300 உரை.) என்பர். ஆசிரியர் இளம்பூரணர், "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 145) என்ற சூத்திரத்து, "கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி, நயந்த கிழவனை நெஞ்சுபுண் ணுறீஇ, நளியின் நீக்கிய விளிவரு நிலையும்" என்புழி இளிவந்த நிலையாவது, தன்னை யவமதித்தான் என்றும் குறிப்பென்று கூறி, இதனை அதற்கு மேற்கோளாகக் கொண்டனர். மற்று, ஆசிரியர் நச்சினார்க்கினியார் இச் சூத்திரத்தே இக் கிளவிக் கண் இதனைக் காட்டி, "இது, புதல்வர்ப் பயந்த காலத்துப் பிரிவுபற்றிக் கூறியது" என்பர்.

இனி, "புதல்வனை நன்ற எம் மேனி முயங்கல்" என்றது, "கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி" நயந்து போந்த கிழவனை, "நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய" மொழியாகலின், அதுபற்றி ஆற்றாளாய், "அலமரல் பெருகிய காமத்து மிகுதி"யால், அவன் அவளைச் செறிய நின் றான் என்பது "நின் மார்பு சிதைப்பதுவே" என்பதனால் பெறப்படுதலின், முரணின்மை யறிக. மெய்ப்பாடு. பெரு மிதம். பயன்: புலவிதீர்தல்.

பாத்திக் கலித்த, பாத்தி கலித்த என்ற பாடங்கட்கு முறையே பாத்தியின்கண் தழைத்த என்றும், பாத்திகள்

தழைப்பித்த என்றும் உரைக்க. கதித்த வாம்பல் என்ற பாடம் தோன்றிய ஆம்பல் என்னும் பொருட்டு. கதித்த என்பது, கதி என்னும் பெயரடியாகப் பிறந்த வினை; "அமர்த்த கண்" என்பது போல. ஈன்ற தேன் மேனி என்ற பாடத்திற்கு, ஈன்று நலங்குறைந்தது என் மேனி என்றும், ஈன்றென்னும் காரணவினை காரியத்தின்மேல் நின்றது என்றும் உரைக்க. ஈன்ற வெம் முயங்கல் அதுவே தெய்ய நின் மார்பு சிதைப்பதுவே என்றும் பாடமுண்டு.

66. உடலினே னல்லேன் பொய்யா துரைமோ
யாரவண் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவியோளே.

புதல்வனைப் பிரியாதவன் புறத்துத் தங்கி வந்தானாக, அவனொடு புலந்து தலைமகள் சொல்லியது.

பு. ரை:—மகிழ்ந, உருட்டி விளையாடும் சிறுதேரின் பின், தளர்ந்த நடையினையுடையனைச் செல்லும் புதல்வனை நயந்து நீ நின் வளவிய மனைக்கு வருங்கால், நின்னைத் தகைத்துப் பற்றிச் சென்றவள் யாவள்? கூறுக; யான் சினந்து வினவுகின்றே னல்லேன்; பொய்யாது மெய்யினையே உரைக்க எ. று.

உடலுதல், சினங்காரணமாக இகலுதல். யார் என்னும் வினாவின் கிளவி முப்பாற்கும் உரித்து. சிறப்புவகையாற் கிளவாது, பொதுவகையால் வினவியது, இகழ்தற் குறிப்பு. சிறுதேரின்பின், மணியார்ப்பச் சாய்ந்து சாய்ந்து செல்லும் தளர்நடைச் சிறுவரைக் காண்டல் மிக்க இன்பம் தருவ தொன்றாகலின், "தேரொடு தளர்நடைப் புதல்வன்" என்றார். "புணர்ந்த காதலியிற் புதல்வன் றலையும், அமர்ந்த வுள்ளம் பெரிதாகின்றே, அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை

பெயரன், முறுவல் இன்னகை பயிற்றிச், சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே" (ஐங். 403) என்றும், "கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும், தளர்நடை காண்டல் இனிது" (கலி. 80) என்றும் சான்றோர் கூறுப. நம் வாழ்க்கையில், நாம் நாளும் காணும் காட்சியும் அதுவே. இனி, தேரொடு என்பதனைத் தலைவற்கேற்றி, புதல்வனை யுள்ளி, தேரொடு வளமனை வருதலும் வெளவியோள் எனக் கூட்டி உரைத்தலும் ஒன்று. எல்லாப்பேற்றினும் சிறந்த மக்கட் பேறு வாய்த்தமையின், தலைவியில்லம் "வளமனை" எனப் பட்டது. வருதலும் என்னும் உம்மீற்று வினையெச்சம் முடிக்கும் வினையது வினைநிகழ்ச்சியின் விரைவுமிகுதி சுட்டி நின்றது. செய்யுளாகலின் சுட்டு முற்கூறப்பட்டது.

பிரிதல் கூடாத பேரன்பிற்குரிய புதல்வனைப் பிரிந்து புறத்துத் தங்கின தலைமகன், அவனைக் காண்டல் குறித்து வந்தான் என்றற்கு, புதல்வனை யுள்ளி வளமனை வருதலும் என்றாள். எனவே, இதுகாறும் வாராமைக்கு ஏது, அவனுக்குத் தன்பால் அன்பில்லை யென்றும், வரவிற்கு ஏது புதல்வன்பாலுள்ள அன்புடைமை யென்றும், அதனால், தனக்கு அவன் புதல்வன்தாய் என்னும் இயைபன்றிப் பிறிதில்லை யென்றும் கருதிப் புலந்தாளாம். புதல்வனும், தன் தளர்நடையால் தலைமகற்குக் காட்சியின்பம் தருவதொன்றே யுடையன் என்பாள், தளர்நடைப் புதல்வனை யுள்ளி என்றும், ஒருகால் அக்காட்சி வேட்கை மிக்கவழியும், வரவருமை தோன்ற வருதலும் என்றும் கூறினாள். "புதுவதின் இயன்ற அணியன் இத் தெரு விறப்போன், மாண்தொழில் மாமணி கறங்கக் கடை கழிந்து, காண்டல் விருப்பொடு தளர்புதளர்போடும், பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர், தாங்குமதி வலவ என்றிழிந் தனன் தாங்காது, மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப், புல்லிப் பெரும செல்இனி அகத்தெனக், கொடுப்போற் கொல்லான் கலுழ்தலிற் றடுத்த, மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு, தானே புகுதந் தோனே" (அகம். 66)

எனப் பிற சான்றோரும் கூறுதல் காண்க. இதன்கண் ஹும், தெருவிறந்து செல்லும் தலைமகன், 'பூங்கட் புதல்வனது தளர்புதளர்பு ஓடும் நடையழகால் ஈர்ப்பூண்டு வந்தமையும், அக்காட்சியின்பம் பெற்ற பின்னர் நீங்க முயன்றவன், அப் புதல்வன் கலுழ்ந்துநின்றது காரணமாகத் தானே வளமனைக் குட் புகுந்தமையும் பெறப்படுமாறு அறிக. இவ்வாறு தன் பாலுள்ள அன்புமிகுதியால், தலைவன் தன் புதல்வனையும் மறந்து கிடப்பதை யறிந்துவைத்தும், பரத்தை, நின்னைத் தகைதல் அறிவுடைமை யன்று; அறிந்தும் அறியாதார் போல் ஒழுகும் அவளை அறிதல் வேண்டினேன் என்பாள், யார் அவள் மகிழ்ந என்றாள். இனி, செறுநரும் காண்டற்கு விரும்பும் செயிர்தீர் காட்சியினையுடையர் புதல்வர்; அப் பெற்றியோனாகிய புதல்வனைக் காண்டற்குப் போந்தவனைத் தகைத்தல் நற்செய லன்மையின், அது செய்த பரத்தையை வெளவியோள் என்றாள். அச் செயல் நின்பால் அன்புடை யார்க்குப் பெருஞ்சினம் விளைவிக்கும் இயல்பிற்றாயினும், நின்னையாதல், நின்னால் விரும்பப்பட்ட அப் பரத்தையை யாதல் சினந்திலேன்; மற்று, அப் புதல்வனைக் காண்டற்குப் போதரும் நின்னை மறிக்கவல்ல அத்துணைப் பேரன்புடை யாளை அறிதல் வேண்டினேன் என்றற்கு யார்அவள் என் றும், உடலினேனல்லேன் என்றும் சொன்னாள் எனினு மாம். "கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும், உள் ளத் தூடல் உண்டென மொழிப" (பொ. 233) என்பது பொருளியல். பிரியேன் என்ற தலைமகன் பிரிந்தொழுகிச் சொல்லும் செயலும் ஒவ்வா ளுயினமையின், அதனால், அவளை மறைத்தலும் கூடும் என வுட்கொண்டு பொய்யாது உரைமோ என்றாள்.

தன்பால் அன்புகூர்ந்து வந்தானையும் அஃது இல்லாத வன்போலத் தலைவி கூறுதலின், இஃது அவள்பால் தோன்றிய உள்ளதுவர்த்தல். ஏனை மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 147) என்ற சூத்திரத்துக் "கொடுமை யொழுக்கம் தோழிக் குரியவை, வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக், காய்தலும் உவத்தலும் பிரிதலும் பெட்டலும், ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும், வாயிலின் வரூஉம் வகை" என்பதிற் கூறிய, "பல்வேறு நிலையினும்" என்றதனால், "இது புதல்வனை நீங்கியவழிக் கூறியது" என்றனர். (௬)

67. மடவ ளம்மநீ யினிக்கொண் டோளே
தன்னொடு நிகரா வென்னொடு நிகரிப்
பெருநலந் தருக்கு மென்ப விரிமலர்த்
தாதுண் வண்டினும் பலரே
ஓதி யொண்ணுதல் பசப்பித் தோரே.

தலைநின்றொழுகப்படாநின்ற பரத்தை புறனுரைத்தாள் எனக் கேட்ட தலைவி தலைமகன் வந்துழி அவன் திறத்தாராய் நின்றொழுகும் வாயில்கள் கேட்பச் சொல்லியது.

ப. உரை:—நீ இப்பொழுது தலைக்கொண்டொழுகும் பரத்தையாவாள், தன்னோடு நிகரில்லாத என்னொடு, தன்னை நிகராகக் கருதித் தனது பெருநலத்தை வியந்து என்னைப் புறனுரைத்தாள் என்பர்; முன்னர், நின்னால் நலனுகரப் பட்டுக் கதுப்பயல் விளங்கும் ஒள்ளிய நுதல் பசக்கப்பட்ட மகளிர், வண்டினம் தேனுண்டு கழித்த மலரினும் பலராதலை அறிந்திலளாகலின், அவள் அறியாமை நிரம்பிய இளையளே யாவாள் எ. று.

மடவள், மடம் உடையவள்; அஃதாவது ஈண்டு அறியாமையும் இளமைச்செவ்வியும் ஒருங்குடையள் என்பதுபட நின்றது.. நிகர்தல், மெய்யுவமப் பொருட்டு; "கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய, ஒட்ட வொடுங்க வோட நிகர்ப்ப

வென், றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம். (பொ. 290) என்பது உவமவியல். எனவே, மேனியிற் கிடந்து திகழும் இளமைநலமே ஈண்டு உவமங்கொள்ள நின்றதாம். தருக்கு தல், தன்னை வியந்து, பிறரெல்லாம் தன்னிற் சிறந்தா ரல்ல ரெனச் செருக்கி மாறுபடுதல்; ஈண்டுத் தலைவி தன்னிற் சிறந் திலளென்பதுபடப் புறனுரைத்தல் மேற்று. உம்மைபிரித்துக் கூட்டப்பட்டது. ஓதி, கூந்தல். கருங்குழலின் அயலே கிடந்து சுடர்விட்டுத் திகழும் இயல்பிற்றாகலின், நுதலை, "ஓதி யொண்ணுதல்" என விசேடித்தார்; "கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்" (குறுந். 129) என்று பிற சான்றோ ரும் கூறினர். பலரே என்புழி ஏகாரம் தேற்றம். பசப்பித் தோர், செயப்படுபொருண்மேல் நின்ற வினைப்பெயர்.

புறத்தொழுகிப் போந்த தலைவனால் தலையளிக்கப்பட்ட நலம் புதியளாய பரத்தை, தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் பொறாதாளாய தலைமகள், அவன் முன்னின்று, அவளைக் கண்ணுற இகழ்தலை நயவாதாள் போல, "நீ இனிக் கொண்டோள் தன்னொடு நிகரா என்னொடு நிகரிப் பெருநலம் தருக்கும் என்ப" எனப் பிறர்மேல் வைத்துக் கூறினாள். இதனாற் பயன், "நின் புறத்தொழுக்கம் குலமகளிரைப் பரத்தையரோடு நிகர்ப்பித்து வருத்துவிக்கின்றது" எனத் தலைவற்கு உணர்த்தியவாறாம். "பரத்தைபால் பன்னாட் பிரிவின்றிக் கூடி யிருத்தலால், நினக்கு என்பால் அன்பின் மையும், அதற்கேதுவாக என்பால் நலமின்மையும், அவள் பால் நினக்கு அன்புண்மையும், அதற்கேற்ப அவள்பால் நலமுண்மையும் இனிது உணரப்படுதலின், அவ்வாற்றால், நினது அன்புநெறிக்கண், யான் அவளோடு ஒவ்வேனாயி னேன்," என்பாள், தன்னொடு நிகரா என்னொடு என்றாள். இனி, "இதுபோது நின்னாற் கொள்ளப்பட்ட அவளது நலத்தை நோக்க, அவட்கு முன்னர்க் கொளப்பட்ட எனது நலம் முதுமைத்தாதலின், நாளும் புதுவோரை மேவும் நினக்கு யான் அவளொப்பப் பெருநலம் உடையேனல்

லேன்," என்றற்கு, இது கூறினு ளெனினுமாம். இனி, " இஃதறியாது, நின்னாற் கொள்ளப்பட்ட தொன்றேயன்றி, பெண்ணியல்பாலும் நிகர்க்கின்றேன் என வுட்கொண்டு தன் இளமை நலத்தால் தருக்குகின்றாள் " என்பாள், என்னொடு நிகரிப் பெருநலம் தருக்கும் என்றும், இவ்வாறு தான் உரைக்கின்றது பலரும் அறிந்த செய்தி யென்பதுபட என்ப என்றும் கூறினாள். கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்தொழுகுவது மடவோர் செய்கை என்றும், நிகராகாததனை நிகராக மதித்தல் அறிவுடையோர் செயலன்று என்றும் அறிந்திலள் என்பாள், மடவள் அம்ம என்றாள். "நினக்குரிய மகளிருள் அவள் யாவள் என ஐயுறல் வேண்டா; அவள் இன்னள்" என வரைந்து கூறுவாள், இனிக் கோண்டோள் என்றாள். "பேணுதகு சிறப்பிற் பெண்ணியல் பாயினும், என்னொடு புரையுந ளல்லள், தன்னொடு புரையுநர்த் தானறி யுநளே " (தொ. 180 உரை) எனப் பிறரும் கூறியவாறு காண்க. மேலும், " அவள் தருக்குதற் கேதுவாகிய இளமைப் புதுநலம், தன்னை நயந்தாரையும் நின்னை மீட்டும் பிரியாவகைப் பிணிக்கும் பெருமையின்றி, விரைவிற் கழிந்து, நின் பிரிவாற் பசந்து தேயும் சிறுமையுடைத்து " என்பாள், புகழ்ச்சிவாய்பாட்டாற் பெருநலம் எனக் குறித்தாள்.

இனி, "இவற்றைத் தன் மடமையால் அறியாளாயினும், நின்னாற் பசக்கப்பட்ட மகளிர் பலர் உளராதலைக் கண்டேனும் அறிதற்பாலள்" என்பாள், பலரே ஓதி யொண்ணுதல் பசப்பித்தோரே என்றாள். எனவே, "அறிந்தவழி, தன் பெருநலம் தருக்குதலை யொழிவள்; ஒழியாமையின், அவள் மடவள் மடவளே" எனத் தான் முன்மொழிந்த தனைச் சாதித்தவாறாயிற்று. "வண்டினம் தாதுண்டு கழித்த மலர் பொலிவு வாடுதல்போல, நின்னால் நலன் நுகரப்பட்ட மகளிர் பலர் பசப்பெய்தினர்", என்றற்கு, வண்டினம் தாதுண் விரிமலரினும் பலர் என்றாள். "புதுநலம் பூவாடி

யற்றுத் தாம்வீழ்வார், மதிமருள நீத்தக் கடை" (கலி. 147) என்பதன் உரையால், வண்டு தாதுண்ட மலர் வாடுதல் உண்மை யறியப்படும்.

இஃது, "அவனறி வாற்ற வறியுமாகலின்" (பொ. 147) என்ற சூத்திரத்துக் "காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய, தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்" என்னும் பகுதியிற் கூறும், காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய பொருளின்கண் தலைவி கூறியது. காமக்கிழத்தியர் தம் நலத்தைப் பாராட்டுமிடத்துத் தலைவியொடு மாறுபட்டுத் தருக்கி யொழுகுவ ராகலின், அஃதறியும் தலைவி பொழுது அவரை இகழ்ந்து மொழிதற்கும் உரியள். "பெருநலம் தருக்கு மென்ப" என்றது காமக்கிழத்தியாகிய பரத்தை தன் நலம் பாராட்டியதாகும். "வண்டு தாதுண்ட மல ரினும் பலர் நுதல் பசக்கப்பட்டோர்" என்றது, இவளும் அவர்போல நுதல்பசந்து நலங்கெடுதல் ஒருதலை என்பது எய்தத் தீமையின் முடித்தவாறு. இனி இச் சூத்திரப் பகுதிக்கு, காமக்கிழத்தியர் நலம்பாராட்டிய பொருளின் கண்ணும், தீமையின் முடிக்கும் பொருளின்கண்ணும், தலைவி காமக்கிழத்தியர் நலம்பாராட்டித் தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழும் எனவரும் எண்பொருளை நோக்காது, ஆசிரியர், நச்சினார்க்கினியர், "நலம்பாராட்டிய காமக்கிழத்தியர், தலைவி தன்னிற் சிறத்தா ராக, தன்னுன் நலம் பாராட்டப்பட்ட இற்பரத்தையர் மேல் தீமையுறுவர் என முடித்துக் கூறும் பொருளின்கண்" என்று உரைப்பர். மேலும், அவர், இப் பகுதிக்கு இப் பாட்டினையே காட்டி, "இப்பொழுது கிடையாதது கிடைத்த தாக வரைந்து கொண்ட பரத்தை, தன்னொடு இளமைச் செவ்வி யொவ்வா என்னையும் தன்னோடு ஒப்பித்துத் தன் பெரிய நலத்தாலே மாறுபடும் என்ப என அவள் நலத் தைப் பாராட்டியவாறும், நீ பசப்பித்தோர் வண்டு தாதுண்ட மலரினும் பலர் எனத் தீமையின் முடித்தவாறும்

காண்க" என்றனர், அன்றியும், இவர், இப் பாட்டின் முதலடியை மடவளம்ம இனிக் கொண்டோளே என்றும், "தாதுண் வண்டினும் பலரே" என்பதை, தாதுண் வண்டினும் பலர் நீ என்றும் பாடங் கொண்டிருக்கின்றனர். இவர் கருத்திற்கேற்ப, கூற்றுநிகழ்த்துபவள் காமக்கிழத்தியும், "இனிக்கொண்டோள்" இற்பரத்தையுமாவர். இதன்கண், இற்பரத்தை தலைவியினும் தன்னிற் சிறந்தாளாக நலம்பாராட்டப்பட்டவாறு இன்மையாலும், "அவள் நலத்தைப் பாராட்டியவாறு" என அவர் காட்டும் பகுதி நலம்பாராட்டலாகாமையாலும், அது பொருந்தாமை யறிக.

இனி, இதன்கண், தலைவி "மடவள் அம்ம நீ இனிக் கொண்டோளே" என்று எடுத்து மொழிந்த மேற்கோளையே, "பெருநலம் தருக்கு மென்ப" என்று கூறியும், அவளது பெருநலத்தின் பெருமையின்மையைப் "பலரே ஒண்ணுதல் பசப்பித்தோர்" என்று வற்புறுத்தியும் சாதித்தலின், மெய்ப்பாடு, பிறர்கட் டோன்றிய மடமை பொருளாகப் பிறந்த நகையும், பயன், பரத்தை கேட்டுத் தலைமடங்குவாளாவதும், ஒருமுகத்தாற் புலந்தவாறுமாம். (எ)

68. கன்னி விடியற் கணைக்கா லாம்பல்
தாமரை போல மலரு மூர
பேணா ளோநின் பெண்டே
யான்றன் னடக்கவுந் தானடங் கலளே.

பரத்தை தான் தலைமகளைப் புறங்கூறிவைத்து, தன்னைத் தலைமகள் புறங்கூறினளாகப் பிறர்க்குக் கூறினமை கேட்ட தலைவி தலைமகற்குச் சொல்லியது.

பு. ரை:—திரண்ட தாளினையுடைய ஆம்பல், விடியற் காலத்தில், தாமரையைப்போல மலரும் ஊரனே, நினக்குப்

பெண்டாயின நின் காதற்பரத்தை அடக்கத்தைப் பொருளாகப் பேணிக் கொள்ளுவது இலள் கொல்லோ? அவள் அடங்குமா றென்று யான் அடங்கியிருக்கவும், அவள் தான் அடங்காது, யான் புறங்கூறினேன் எனப் பிறர்க்குக் கூறுகின்றா ளாகலான் எ. று.

விடியல் தோன்றிய அணிமைக்காலம் "கன்னிவிடியல்" எனப்பட்டது; "குமரியிருட்டு" என்னும் வழக்குப்போல. ஆம்பல், மாலையிற் கூம்பி வைகறையில் மலரும்; "குண்டுநீ ராம்பலுங் கூம்பின இனியே, வந்தன்று வாழியோ மாலை" (குறுந். 122) என்றும், "கணைக்கா லாம்பல் அமிழ்துநா றுதண்போது, குணக்குத்தோன்று வெள்ளியின் இருள்கெட மலரும்" (நற். 230) என்றும் வருவன காண்க. தாமரை மலரத் தொடங்குதற்கு அது காலமாகலின், "ஆம்பல் தாமரைபோல மலரும்" என்றார். ஏதுவின்கண், அடக்கத் தையே விதந்து கூறுதலின், பேணுவது அடக்கமாயிற்று. "காக்க பொருளா அடக்கத்தை" (குறள். 122) எனச் சான் றோர் கூறினர். அடங்குதல், ஈண்டுப் புறங்கூறுதல் முதலி யன செய்யாது அமைந்திருத்தல். அடக்குதல், தான் அடங்குதலால், பிறர் தன்னைப் புறங்கூறுதற்குக் காரணம் பெறாது அமைவித்தல்.

"புறத்தொழுக்கத்தில் நின்றொற் கொள்ளப்பட்டுச் செருக்கித் திரியும் நின் காதற்பரத்தை" யென்பதுபட நின்பெண்டு என்றும், "நினக்குப் பெண்டாயினள் நீ ஏல கூறி யொழுகுதல், அவட்கே யன்றி, நின் சீர்மைக்கும் மாசுதரு மாகலின், அதனை நினைந்து அடங்கியிராது, யான் புறனுரைத்தேனெனப் பிறர்பால் இல்லதுகூறித் தருக்கு கின்றாள்" என்றற்குப் பேணுளோ என்றும் கூறினாள். "யான் நின் பெண்டினையாதல், அவளொடு கூடி யொழுகும் நின் னொழுக்கத்தையாதல் குறித்து யாதுங் கூறாது, அடங்கி யிருந்தால், அவளும், அவளொத்த பிறரும் என்னைப் புற

னுரைத்தற்கு ஏது வொன்றும் பெறுது வாயடங்குவர் என்பது பேணினேன்" என்பாள், யான் தன்னடக்கவும் என்றும், "அடங்காமைக் குரிய காரணம் இன்றாகவும், அவர், உளதாகப் பொய்ந்நினைந்து புறனுறைத்துத் திரிகின்றான்" என்பாள், தான் அடங்கலளே என்றும் கூறினாள்.

இவ்வாறு, தலைவி பரத்தை நலம்பாராட்டாது, அவள் செய்கையினைத் தலைவன்முன் இகழ்ந்து கூறும் இது, "கற்பு வழிப் பட்டவள் பரத்தை யேத்தினும், உள்ளத்தூட லுண் டென மொழிப" (பொ. 233) என்புழி, உம்மையால், ஏத்தாது இகழ்தலும் எய்துதல் கொண்டு அமைக்கப்படும்.

சிறப்பில்லாத ஆம்பல் தாமரை போல மலரும் என்றதனல், கற்புச்சிறப் பின்மையால் அடக்கிக் கிடத்தற்குரிய பரத்தை, குலமகளிர் போலச் சிறப்புடையாள் எனக் கருதித் தருக்குகின்றாள் என்றவாறு. மெய்ப்பாடு: பிறர்கட் டோன்றிய சிறுமை பொருளாகப் பிறந்த மருட்கை. பயன்: ஒருமுகத்தாற் புலந்தவாறு. (அ)

69. கண்டனெ மல்லமோ மகிழ்நநின் பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வண்ட லுய்த்தெனை
உண்கண் சிவப்ப வழுதுநின் றோளே.

தலைமகன் பேதும்பைப் பருவத்தா ளொருத்தியைக் களவில் மணந்து ஒழுகுகின்றதனை அறிந்த தலைமகள், தனக்கில்லை யென்று அவன் மறைத்துழிச் சொல்லியது.

ப. ரை:— மகிழ்ந, பலர் கூடி யாடும் நீர்த்துறைக்கண், மலரொடு பெருகிவந்த குளிர்ந்த புனல், வண்டலாட்டுக் கெனச் செய்து வைத்த பாவையைச் சிதைத்ததாக, தன் மையுண்ட கண்கள் சிவப்பேற அழுது நின்றவள் நின்

பெண்டேயாவள்; யாம் அவளைத் தெளியக் கண்டேமாக லின், நீ இல்லையென மறைப்பது என்னை? எ. று,

கண்டனமல்லமோ என்புழி, அல்லம் என்ற எதிர் மறை முற்றுவினையும், எதிர்மறை ஓகாரமும் இயைந்து, உடம்பாட்டுப் பொருளின் தெளிவு விளங்கநின்றன; தெளி யக் கண்டேம் என்றவாறு. ஏகாரம் முன்னையது தேற்றம்; ஈற்றது அசைநிலை. வண்டல், பண்டைக்காலத்தில் மகளிர் அயர்ந்த ஒருவகை விளையாட்டு. "மலரொடு வந்த தண் புனல்" எனவே, புதுப்புனல் என்பது பெற்றும்; புதுப் புனலைத் தண்பதம் என்றும் வழங்குப. உய்த்தல், தான் சுமந்து போந்த நுரையும், திரையும், மலரும், பிறவும் கொணர்ந்து பரப்பிப் பரவுதல். உய்த்தென என்பது செய்தென வென்னும் வினையெச்சம். மணற்றுறையாகலின் தண்புனல் உய்த்தலும் இடையறவின்றி, இழைத்த வண்டல் விரையச் சிதைதலின், "உய்த்தென" என்றார். ஆகலின், நீ என்பது முதலாயின எஞ்சிநின்றன.

தலைவன் களவிற் கூடி யொழுகும் பெண்டினைத் தலைவி யறிந்து கூறியவழி, அவன் இல்லையென மறைத்தலும், தான் அவனை மறுப்பாள், "யாம் அவளைப் புனலாடச் சென்ற போதில் தெளியக்கண்டோம்; அவள் நின்னாற் கொளப்பட்ட பெண்டே" என்பாள், கண்டன மல்லமோ மகிழ்ந நின் பெண்டே என்றாள். பன்மை, தன்வயின் உரிமை பற்றி வந்தது. பின்னர், அவள் அவற்குரிய பெண்டே எனத் தான் துணிந்தவாற்றைக் கூறுவாள், அவள் தன் உண்கண் சிவப்ப அழுததனை எடுத்துரைக்கின்றாள்: பலராடு பெருந்துறைக்கண், தண்புனல் வண்டல் சிதைத்தல் இயல் பாகலின், அவட்கு அழுகை, யாம் புனலாடல் கண்டு பொறாதெழுந்தது என்றற்கு, அழுது நின்றோள் என்றும், தண்புனல் எய்தாவிட னறிந்து, பிறிதொரு வண்டலமைத் துக் கோடலும், ஆண்டுநின் றகறலுமின்றி, எம்மையே

நோக்கிநின்றமையின், அவள் நின் பெண்டே என்பது துணியப்பட்ட தென்பாள், நின் பெண்டே என்றும் கூறினாள். தண்புனல் வண்டல் சிதைத்தற்கு அத்துணை யழுகை வேண்டாமையின், உண்கண் சிவப்ப அழுது என்றது பிற குறிப்புணர நின்றது. தண்புனல் வண்டலைச் சிதைத்தது அவள் அழுகைக்கு நிரம்பிய ஏதுவாகாது என்பதுபட, வண்டல் உய்த்தேனை என்றாள் என்க. "கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே, தெண்டிரை பாவை வௌவ, உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே" (ஐங். 125) எனப் பிறுண்டும் வருதல் காண்க.

பேதை, பெதும்பை என்ற இருபருவத்து மகளிருள், பெருந்துறைக்கண், தானே வண்டலமைத்து விளையாட்டயர்தல் பேதைக்குக் கூடாமையின், பெதும்பைப்பருவத்தாள் என்பது பெறப்பட்டது.

தலைவி காமக்கிழத்தியின் நலங்கூறுவாள் போலத் தலைவன் புறத்தொழுக்கத்தின் திமையைக் காட்டிப் புலத்தலின், இஃது, "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ.147) என்ற சூத்திரத்துக் "காமக் கிழத்தியர் நலம்பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண்" தலைவி நிகழ்த்தும் கூற்றுவகையுள் அடங்கும். இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியார், இதனை, இச் சூத்திரத்துப் "பல்வேறு நிலையினும்" என்றதனால், அமைத்து, "இது காமஞ்சாலா இளமையோளைக் களவில் மணந்தமை யறிந்தேன் என்றது" என்பர்.

மெய்ப்பாடு: தன்கட் டோன்றிய பொருமை காரணமாகப் பிறந்த வெகுளி. பயன்: ஒருமுகத்தாற்புலத்தல். (கூ)

70\. பழனப் பன்மீ னருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணரூர

தூயர் நறியர் நின் பெண்டிர்
பேஎ யனையமியாஞ் சேய்பயந் தனமே.

பரத்தையரோடு பொழுது போக்கி, நெடிது துய்தது வந்த தலைமகனேடு தலைமகள் புலந்து சொல்லியது.

*பு. ரை:— பழனங்களிலுள்ள பலவாகிய மீன் கனை யுண்ட நாரை கழனியிலுள்ள மருதமரத்தின் உச்சியிற் றங்கும், மிக்க நீரினையுடைய பொய்கையினையும், புதுவருவாயினையு முடைய ஊரனே, யாம் மகப்பயந்து பேயினை ஒத்தே மாக, நின்பெண்டிர் தூய்மையும் நறுமையு முடையராகலின், அவர்பாலே செல்லுக எ. று.*

*பழனம், நீர்நிலை யென்பது முன்னரே கூறப்பட்டது. ஆர்ந்த* என்பது, அருந்த எனவந்தது. வீழ்ந்த மரம், விழுந்த மரம் என வழக்கினும், ஆழ்ந்துபடு விழுப்புண் எனற்பாலது "அழுந்துபடு விழுப்புண்" (நற். 97) எனச் சான்றோர் வழக்கினும் வருதல் காண்க. "அவரை யருந்த மந்தி" (ஐங். 271) என்புழியும் இதுவே கொள்க. சென்னி, உச்சி. மிக்க நீர், தனது ஆழமுடைமையாற் கருமையாய்த் தோன்றுதலின், நீர்மிகவுடைய பொய்கையை, "மாநீர்ப்*

---

* ஆசிரியர் நச்சினார்க்கினியர், "ஆர்ந்த" என்பதன் ஆகாரம் குறுக்கலும், உகரம் விரித்தலும் ஆகிய "இரண்டும் வருவனவற்றை நாட்டல் வலிய (தொல். சொல். 403) என்றதனாற் கொள்க" என்பர். "தாதுதேர் பறவையின் அருந்துஇறல் கொடுக்குங்கால்" (கலி. 22) என்பதன் அடிக்குறிப்பில், "நெடிலைக்குறுக்கிப் பின்னின்ற ரகரமெய்யின்மேல் உகரவுயிரேற்றல் தமிழ்மரபு" என்பர் இ. வை. அனந்தராமையர். குறுக்கும்வழிக் குறுக்கல் என்றதனால், ஆகாரத்தைக் குறைத்தபின், விரிக்கும்வழி விரித்தல் என்றதனால் உகரம் விரித்தல் மேற்கோள்மலைவாகலின், அதனை விடுத்து, ஆசிரியர் சேனாவரையர் கூறியாங்குக் குறுக்கும்வழிக் குறுக்கல் என்றதனாற் கோடலே சிறப்பு என்க.

பொய்கை" என்றார். "மாநீர் வேலிக் கடம்பெறிந்து (சிலப். 25:1)என அடிகளும் கூறினர். மா, கருமை. பரத்தையரின் பன்மை தோன்றப் "பெண்டிர்" எனப்பட்டது. சேய் பயந்தமகளிர், மெலிந்த மேனியும், குழிந்தகண்களும், ஒப்பனையின்றி யுலறிய கதுப்பும், புலவுநாற்றமும் உடையராதலின், அவையெல்லா முடைய பேயினை உவமைகூறினர். மகப்பயந்து பயன்படாமையும், பிறர்நலம் நுகர்தற் கென்றே இடையறாது ஒப்பனை செய்து கோடலும் உடையராதல் தோன்ற, "தூயர் நறியர்" என்றார்.

"மகப்பயந்தமையின், மேனிநலம் முதிர்ந்து, புனிற்றுப்புலவு நாறி, வேட்கை சிறந்து நிற்கும் எம்மினும், அப்பயப்பாடு இலராயினும், நலங்கிளரும் மேனியும், புதுமணமும் உடையர் நின் பெண்டிர்; அவர்பாலே செல்க" என்பாள், தூயர் நறியர் நின் பெண்டிர் என்றாள். எனவே, இது, "காமக்கிழத்தியர் நலம்பாராட்டிய" பகுதியாயினும், மகப்பயந்து வயங்கும் தன்பாற் போந்து, செய்தற்குரிய கடன்களைச் செய்யும் முறைமையால் பிரியானாகலின், அதனை யறிந்துவைத்தே, புலக்கின்றாளாகலின், இது "செல்லாக் காலத்துச் செல்க என விடுத்த" கூற்றாகும் குறிப்புமுடைத்து.

யாம் சேய் பயந்தேமாக, எம் மேனி மெலிவும், புலவு நாற்றமும் அறிந்து, எம்மைக் காண்டலும் குற்றமெனக் கருதிப் பரத்தையர்பால் நெடிதுதங்கினை என்பாள், பேஎய் அனையம் சேய்பயந்தனமே என்றாள். பேயினைக் காண்டலும் குற்ற மென்பது, "அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம், பேஎய் கண்டன்ன துடைத்து" (குறள் 565) என்பதனா லறிக. இது காமக்கிழத்தியின் நலம் பாராட்டிய தலைவி, தனது தீமையினை முடித்துக் கூறும் பொருளாகும். இதனாற்பயன் ஒரு முகத்தாற் புலந்தவாறு. "கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும், உள்ளத் தூடலுண்டென மொழிப" (பொ. 233).

இனி நின் பெண்டிர் தாயரும் நறியரு மாயினும், எம்போற் புதல்வர்ப் பயந்து பயன்படும் கற்புச்சிறப் பிலர் என்றற்குச் "செய்பயந்தனம்" என்றும், மகப்பேற்றால் மேனி தளர்ந்தேமாயினும், வழிபாட்டுமுறையிற் குன்றிற் றிலேம் என்றற்கு, "பேஎய்அனையம்" என்றும் கூறினாள் என்றும், பின்னிலை முனியாதது பேஎய் என்பதற்கு, "களிறுபடப் பொருத, பெரும்புண் ணுறுநர்க்குப் பேஎய் போலப் பின்னிலை முனியா நம்வயின்" (நற். 349) என்றும் கூறுவர்.

பழனப் பன்மீனை யுண்ட நாரை தங்குதற்குக் கழனி மருதின் சென்னி யாதாரமானது போல, பரத்தையர் நலனை நுகர்ந்த நீ, அவர்பால் நெடிதுதங்குதற்கு, யாம் செய்பயந்தமை யாதாரமாயிற்று என உடனுறையாகிய உள்ளுறையுவமம் கொள்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

பேஎ, யனையம் யாஞ்சே பயந்தனை சென்மே என்பது பாடமாயின், யாம் பேயினை ஒத்தேம்; நீ தழுவுதற்குரிய சிவந்த ஏற்றினைப் பெற்றனை; நீ இனிச் செல்க என்று பொருளாம். ஈண்டு, சே என்றது, புதல்வனைக் குறித்த தாயின், நின் புதல்வனும், "தந்தையர் ஒப்பர் மக்கள்" (பொ. 147) என்பதனால், தாயாகிய என்பால் அன்பின்றி நீங்குவன் என்றும், பரத்தையரைக் குறிக்குமாயின், அவர் பாற் செல்க என்றும் ஆம். (ம)

## 8. புனலாட்டுப்பத்து.

புனலாடுதல் பொருளாகப் பிறந்த கூற்றுக்களைக் குறித்து வரும் பாட்டுக்களின் தொகையாதல்பற்றி, இஃது இப் பெயர் பெறுவதாயிற்று.

பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த விளையாட்டுவகைகளில், புனலாட்டு என்பது ஒன்று. இது பெரும்பாலும் வேனிற்காலத்து நிகழ்வ தொன்று. ஏனைப் பருவங்களில், யாறுகள் புது நீர் பெருகிப் பொலிவுற்றுத் திகழும் சிறப்புக்குறித்துப் புனலாட்டயர்தலும் பண்டையோர் மரபு.

குறிஞ்சி முதலிய நிலத்துமக்கள், முறையே சுனையும் அருவியும், யாறும், குளமும் என்ற நீர்நிலைகளில் நீர் விளையாட்டயர்வர். "அன்னல் நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர், அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவித், தவிர் வில் வேட்கையேம் தண்டா தாடிப், பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி" (குறிஞ்சி. 54—7) எனக் குறிஞ்சி நிலமக்கள் புனலாடியவாறு காண்க. இவ்வண்ணமே, மருத நிலமாந்தரும் யாறும் பொய்கையும் புக்குப் புனலாடுவர்.

புனலாட்டின்கண், செல்வரும் வறியரும், இளையரும் முதியரும், ஆண்மக்களும் பெண்மக்களும் ஒத்த வகையாற் கூடிப் புனலாட்டு இன்பம் துய்க்கும் எண்மை யுடைய தாகலின், சான்றோர் இதனைச் சிறப்பக் கூறி யிருக்கின்றனர். செல்வச்சிறப்பு மிக்க தலைமக்கள் புனலாட்டினைப் பெரிதும் விரும்பித் தம் மனக்கினிய காதலர்சூழச் சென்று விளையாடி இன்பம்நுகர்வர். இளையோர், இவ்வாறு புனலாடி இன்பம் நுகர்தலின்றித் தம் மனையின்கண் செறிப்புண் டிருத்தல் தீது என்றும் பண்டைத் தமிழ்ச்சான்றோர் கருதியிருந்தனர்.

"விளையா டாயமோ டோரை யாடாது, இளையோர் இல் லிடத் திற்செறிந் திருத்தல், அற னுமன் றே ஆக்கமும் தேய்ம்" (நற். 68) என்பதனால் இஃது இனிதுணரப்படும். இனி, தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் நல்லிசைச் சான்றோர் ஒருவர், கழிந்த தமது இளமைப்பருவத்தின் இன்பநயப்பை நினைந்து, "மறையென லறியா மாயமி லாய மொடு, உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்த, நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக், கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து, குளித்து மணற் கொண்ட கல்லா இளமை" (புறம். 243) என இனைந்து கூறுவது, இப் புனலாட்டு ஆடவர் பெண்டிர் என்ற இருபாலாரும் விரும்பும் இயல்பிற் றென்பதனை வற் புறுத்துகின்றது.

இப் புனலாட்டினை நயந்த தலைவன், தலைவியோடும் காமக்கிழத்தியரோடும் கூடி, தமது பதியிகந்து சென்று இவ் விளையாட்டின்பத்தினை நுகர்வன். "யாறும் குளனும் காவு மாடிப், பதியிகந்து நுகர்தலும் உரிய வென்ப" (பொ. 191) என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருக்கின்றனர்.

இனிக் கடற்கரையைச் சார்ந்த நெய்தல்நிலத்தலை மக்கள், புனலாட்டு விருப்பம் தோன்றியவழிக் கடலில் நீர் விளையாட மேவுவர். இவ் விளையாட்டுக் கடலாடுதல் என்று சிறப்பிக்கப்படும். "கடலாடு மகளிர் கான லிழைத்த சிறுமனை" (குறுந். 326) என்றும், "தொடலை யாய மொடு கடலுடனாடியும்" (அகம். 110) என்றும் வருவன காண்க. இதனைச் சிலப்பதிகாரம் முதலிய தமிழ்நூல்கள் இனிது விளக்குவனவாம். மேலும், பண்டைத் தமிழ் வேந்தருட் சிறந்த கரிகால்வளவன் புனலாட்டிற் பெரு வேட்கை கொண்டு, யாறும் கடலும் படிந்து புதுப்புன லாடிப் போகம் நுகர்ந்தான் என இந்நூல்களால் அறிகின் றோம். காவிரிப்பூம்பட்டினத்து நிகழ்ந்த கடலாடுநிகழ்ச்சி

யொன்றினைச் சிறப்பிக்கப் போந்த இளங்கோவடிகள், அது, "விண்பொரு பெரும் புகழ்க் கரிகால்வளவன், தண் பதங் கொள்ளும் தலைநாட்போல" (சிலப் 6: 159—160) இருந்ததெனக் குறிக்கின்றார்.

இக் கடலாட்டு, மேனாடுகளிலும் பெரிதும் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. இக்காலத்திலும், கடற்கரை நகரங் களிலுள்ளவர்கள் இதனை விரும்புகின்றனர். இதுகுறித்து ஆராய்ச்சி செய்த அறிஞர் சில அரிய குறிப்புக்களைத் தந்திருக்கின்றனர்.

"கடலாடுவது உடல்நலங் குன்றிய இளைஞர்க்குப் பெரிதும் நன்மைதருவதாகும். ஆனால், அவர்கள், காலையில் உணவுகொண்டபின், இரண்டுமணிநேரம் கழித்துக் கடலா டல் வேண்டும்; அதுவும் குறைந்தது இரண்டு, அல்லது மூன்றுமணிநேரம் நீரில் நீந்தி விளையாட வேண்டும். உண வுண்ட இரண்டுமணி நேரத்திற்குள் எவரும் கடலாடக் கூடாது. மிக்க உழைப்பால் உடல் ஓய்ந்து இருப்பவர்க்குக் கடலாட்டுத் தீங்கு விளைவிக்கும். நீராடுவோர் தமது உடல் சூடாக இருக்கும்போதுதான் அது செய்யத் தொடங்க வேண்டும். கடலில் நீராட இறங்குங்கால், சிறி தும் தயக்க மின்றி, விரையச் சென்று இறங்கி மூழ்குவதும், கரையேறியவழி, சிறிதும் தாழாது உடலைத் துடைத்துக் கொள்வதும் கடலாடுவோர் குறிக்கொள்ள வேண்டியன வாகும். இன்றேல், இவை உடல்நலத்துக்குப் பெருந்தீங் கினை உண்டுபண்ணும் என்று துணிந்திருக்கின்றனர். உடலில் தோய்ந்த நீர் தானே புலருமாறு விடுவதும், நீரின் கண் நெடிதுதங்கி ஆடுவதும் ஆகா. நீராடுங்கால், ஆடு வோர் உடலில் குளிருணர்ச்சி தட்டுமாயின், உடனே கரையேறிவிடுவது தக்கது.

"கடலாடுவதே பெருந்தொழிலாக உடையவர் பலர் உளர். அவர்களுட் பலர் காதுநோயால் மெலிந்து உயிரை

இழக்கின்றனர். கடலாடுவோருட் சிலர்க்குக் கடல்நீர், காதுக்குட் புகுந்து மயக்க முண்டு பண்ணுவது முண்டு. அன்னோர் முதற்கண் தமது காதுகளில் சிறிது பஞ்சி யடைத்துக்கொள்வது நலம் என்பர்.

"கடலில் எவ்விடத்தில் வேண்டினும் இறங்கி நீராடுவது தீது; மிகப்பெரிய அலைகள் இல்லாமல், அகன்று விரிந்து விளங்கும் மணற்றுறைகளே தக்க இடமாகும். நிற்போர் காலை வாரத்தக்க நீரோட்டமுள்ள இடங்கள் கடலாட்டிற்கு ஏற்றவை யாகா. அக் கடற்றுறைகள் சேறும், முழையும், கூரிய கற்களும், கடற்பூடுகளும் இன்றிப் பரந்து மணலே நிறைந்து கிடக்கும் இடமாதல் வேண்டும். நீராடுங்கால், ஆடுவோர் வாயைத் திறந்துகொண் டிருப்பது தீதென்பர். நீராடுமிடத்து, ஆடுவோருடைய கால் யாதேனு மொரு முழைஞ்சினுட் சிக்குமாயின், உடனே அவர் தமது வாயை மூடிக்கொண்டு நீரை உதைத்து பாய்தல்வேண்டும்; இன்றேல், நீர் வாயுட்புகுந்து, நீந்தும் அவருடைய நெஞ்சுறுதியைக் கெடுத்துப் பெருந்தீங்கை விளைவிக்கும்.

கடலாட்டு விழைந்து நீந்தப் பயில்வோர், தண்ணீரில் கரையை நோக்கியவண்ணம் நின்று நீராடவேண்டும். இறங்கும்போது மார்பளவு ஆழத்திற் சென்றதும், முகத்தைக் கரைப்பக்கமாகத் திருப்பிக்கொள்வது நன்று; அதன்மேலும் ஆழத்திற் செல்லக் கருதினால், கரையை நோக்கிநின்றே, பின்னே கழுத்தளவு வரையிற் செல்ல வேண்டும். நன்றாய்ப் பயின்றவர்களே அதன்மேலும் செல்லுதற் குரியவராவர்"* என்பர்.

---

* S. D. Raymont's Lecture on Sea-bathing.
*Morning Post, 17th June 1914.*

இக் கூறிய புனலாட்டு இன்பக்காரணமாகிய விளையாட்டாகலின், தலைமக்கள் தலைவியருடனும் பிற காதல்மங்கையருடனும் கூடியாடுவது அவர் புலவிக்கு ஏதுவாகிறது; "கிழவோன் விளையாட் டாங்கு மற்றே" (பொ. 164) எனக் கூறப்படுவ தாயிற்று. ஆகவே, தலைவன் பரத்தையருடன் யாறும், குளமும், கடலும் ஆடி இன்பநுகர்ச்சி பெய்துவானாயின், அது தலைவிக்கும், ஏனைக் காமக்கிழத்தியர்க்கும் ஊடலும் புலவியும் பயக்கும் என்பதாம்.

71. சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே

பரத்தையரோடு புனலாடினானெனக் கேட்டுப் புலந்த தலைமகள், தலைமகன் அதனை இல்லை யென்று மறைத்துழிச் சொல்லியது.

பு. ரை:— மகிழ்ந, சூதுபோலும் மூட்டுவாயினையுடைய குறிய தொடையும், வளைவுபொருந்திய வளையுமுடைய நின்னால் விரும்பப்பட்ட நின் காதலியைத் தழுவிக்கொண்டு, நீ, நெருநல், புனலாடினை என்று அலர்கூறுகின்றனர்; ஞாயிற்றின் ஒளியை எவற்றாலும் எத்துணையும் மறைத்தால் கூடாதவாறு போல, நீ புனலாடியதனாலெழுந்த அலர், நின் மாயப் பொய்ம் மொழிகளால் சிறிதும் மறைக்கப்படாது, காண் எ. று.

சூது, சூதாடுவோர் இயக்கும் காய். தொடியின் மூட்டுவாய் அச் சூதாடுகாய் போறலின், சூதென்றது ஆகுபெயர். சூர், வளைவு; "சூர்ப்புறு கோல்வளை" (அகம். 142) என வருதல் காண்க. சூர்ப்புற்ற வளை துவண்டு

நுடங்கியது போன்றிருப்பது குறித்து, அதனை "நுடக்கம்" என்றார். தொடி தோளிற்கும், வளை முன்கைக்கும் உரிய வாதல் பற்றி இரண்டும் கூறினார்.* குறுந்தொடி எனவே, பரத்தையின் இளமை குறித்தவாறும். வெங்காதலி என் புழி, வெம்மை வேண்டற்பொருட்டு. ஓகாரம் இரண்டும் எதிர்மறை.

தலைவன் பரத்தையைக் கூடிப் புனலாடியது கேட்டுப் புலக்கின்றாளாகலின், சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து எனப் பரத்தையை நலம்பாராட்டுபவள் போலக் கூறினாள். "கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும், உள்ளத் தூடல் உண்டென மொழிப." தொடியும் வளையு மாகிய அணிநல மல்லது பிற கற்புநல மிலளாயினும், அவள்பால் நினக்கு உண்டாகிய அன்பு பெரிது என்பாள் நின் வெங்காதலி என்றும், புனலாடிய போதேயன்றி அதற்கு முன்பும், பின்பும், முறையே அவளைத் தழீஇப் போவதும் வருவதும் செய்தனை என்பாள், தழீஇ என்றும், புனலாடிய காலம் சேய்த்தன்று, மிக்க அணித்தாய நேற்றைப்போது என்பது சுட்டி, நெருநை ஆடினை புனலே என்றும், நின் புனலாட்டால் எழுந்த அலர்தானும் பலர் அறியப்பட்டதென்றற்கு, என்ப என்றும் கூறினாள். "அலரிற் றோன்றும் காமத்து மிகுதி" "கிழவோன் விளையாட் டாங்கு மற்றே" (பொ. 163, 164) என ஆசிரியர் கூறுதலின், அலர் விதந்து கூறப்பட்டது. இது புறஞ்சோல் மாணக்கிளவி. "களவும் கற்பும் அலர்வரை வின்றே" (பொ. 162) என்பதனால், தலைவி அலர் எடுத்துக் கூறல் அமைவதாயிற்று.

புனலாடிய செய்தி கேட்டுப் பொறாளாகிய தலைவி, அதனாலெழுந்த அலரைக் கூறினாளாக, அது கேட்ட தலைவன், அவ்வாறு இல்லை யென்பதுபடப் பலசொல்லவும்,

---

* தொடியும் வளையும் வேறுவேறு என்பது சீவகசிந்தாமணி, 468, 469 ஆம் செய்யுட்களால் விளங்குமாறு கண்டு கொள்க.

அவள், அவையாவும் அவன் தன் பரத்தைமை மறைத்தற்குக் கூறியன என்று கொண்டு, "நீ எத்துணைப் பொய்ம் மொழிகளால் அதனை மறைப்பினும், அது மறையாது யாவரும் அறிய அலர்மிகுவதாயிற்று" என்பாள், அலரே மறைத்தல் ஒல்லுமோ என்றாள். "ஊர, பொய்யால் அறிவென் நின் மாயம் அதுவே, கையகப் பட்டமை யறியாய், நெருநை, மைஎழில் உண்கண் மடந்தையொடு, வையை, ஏர்தரு புதுப்புன லுரிதினின் நுகர்ந்து, பரத்தை யாயம் கரப்பவும் ஒல்லாது, கவ்வை யாகின்றாற் பெரிதே" (அகம். 256) என்றும், இவ்வகையால் எழுந்த அலரை மறைத்தல் முடியாது என்பதை, "அரிமதர் மழைக்கண் மாஅயோளொடு, நெருநையும் கமழ்பொழிற் றுஞ்சி யின்றும், பெருநீர் வையை யவளோ டாடிப், புலரா மார்பினை வந்து நின்றெம்வயிற், கரத்தல் கூடுமோ மற்றே ..............அலரா கின்று அது பலர்வாய்ப் பட்டே" (அகம். 296) என்றும் சான்றோர் காட்டியவாறு காண்க.

விண்ணினும், மண்ணினும், தன் ஒண்கதிர் பரப்பிப் பேரொளி செய்யும் ஞாயிற்றை, ஒருகால், கார்முகிற் கூட்டம் சிறிது மறைக்க முயலினும், ஞாயிற்றொளி, மறையாது, விண்ணகத்தும், அம் முகிற் கூட்டத்தின் அடியிலுள்ள நிலப்பகுதி சிறிது ஒழிந்த பிறாண்டும், நன்கு விளங்குதல் போல, நீ மறைக்க முயலும் அலர், நின்னாற் காதலிக்கப்பட்ட நின் பரத்தை யொழியப் பிறர்பலரும் அறிய நிற்பதாயிற் றென்பாள், புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்ற தோளியே என்றாள். இது பிறிதுமொழிதல். நின்செயல் சிறிதும் மறைக்கப்படாது என்பது கருத்து.

மெய்ப்பாடு : வெகுளி. பயன் : புலத்தல். (க)

72. வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழைத்
திதலை யல்குற் றுயல்வருங் கூந்தற்

குவளை யுண்க ணேஎர் மெல்லியல்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை யாயின ளெமக்கே

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன், களவுக்காலத்துப் புனலாட்டு நிகழ்ந்த தனை, அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

பு. ரை. வயலில் மலர்ந்த ஆம்பலாற் றொடுக்கப்பட்ட, மூட்டுவாய் பொருந்திய, அசைகின்ற தழையினையும், அரி பரந்த அல்குலையும், அசைபவிடப் பெற்ற கூந்தலையும், குவளைமலர் போன்ற, மைதீட்டிய கண்களையும், அழகும் மென்மையும் பொருந்திய இயல்பினையு முடையவள், பண்டு யாம் களவில் ஒழுகிய காலத்து, பல்வகைப் பூக்களைச் சுமந்து புதுநீர் வந்ததாக, அதன்கண் யாம் ஆடுதற்குரிய துணையாயினள், எ. று.

இளையமகளிர் ஆம்பற்றழை யணிதல் மரபாகலின் ஆம்பற்றழையினை முதற்கட் கூறினான். "சிறுவெள் ளாம்பல், இளையமாகத் தழையா யினவே" (புறம். 248) எனச் சான்றோரும் கூறினர். துயல்வருதல், அசைதல். ஏஎர், அழகு; "நலத்தகை நல்லவர்க் கேஎர்" (குறள். 1305). அழகாவது, "இன்பப்பயனைத் தலைப்படுதல்" என்றனர் ஆசிரியர் பரிமேலழகர். புணர்துணை, இறந்தகாலந் தொக்க வினைத்தொகை. புணர்துணை யாயினள் என இறந்தகாலத் தாற் கூறவே, இப்புனலாட்டுக் களவுக்காலத்து நிகழ்ந்த தென்பது பெற்றாம்.

தலைவி கொண்ட புலவியை நீக்கும் குறிப்பின னாகலின், அவள் பண்டு அணிந்திருந்த தழையினையும், ஏனை நலங்களையும் பாராட்டினான். தன்னொடு புதுப்புன லாட வேண்டுகின்றமையின், பண்டு நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைப் பித்து, அவள் மனத்து நிகழும் புலவியுணர்வை மறப்பிப்

பான், மலராா் மலிர்நிறை வந்தேன என்றான். இதனால் தலைவன்பால் அன்புதோக நிற்றல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. என்பால் இவள் அன்று கொண்ட அன்பு, இன்று சுருங்கிற் றன்றாகலின், இப்போழ்தும் புனலாடப் போந்து புணர்துணையாவள் என்பான், புனலாடு புணர் துணை யாயினள் எமக்கே என இறந்தகாலத்துக் குறிப்பே எய்தக் கூறினான்.

"யாறும் குளனும் காவு மாடிப், பதியிகந்து நுகர் தலும் உரிய என்ப" (பொ. 191) என்பதற்கு இதனைக் காட்டி, "இது தலைவி புலவிநீங்கித் தன்னொடு புனலாடல் வேண்டிய தலைவன், முன் புனலாடியதனை அவள் கேட்பத் தோழிக் குரைத்தது" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். மெய்ப்பாடு : இளிவரல். பயன் : தலைமகள் கேட்டுப் புனலாடற்கு நேர்வாளாவது.

கயலமை நுடங்குதழை யென்னும் பாடம் உண்டு. இதனைக் கயலமை வயல்மலர் ஆம்பல் நுடங்குதழை என வியைத்து, கயல் மீன்கள் பொருந்திய வயல்களிடத்து மலர்ந்த ஆம்பல்மலராற் றொடுக்கப்பட்ட நுடங்குதழை என்று உரைக்க. (உ)

73. வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
ஒண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே.

இதுவுமது.

பு. ரை :—வெள்ளிய இழையினையும், ஒள்ளிய நுத லினையுமுடைய அரிவை அழகிய தழையுடை இடையிற் கிடந்து அசைய, பண்டு, களவின்கண், பெருந்துறைப் புன லில் விளையாட் டயர்தற்குப் புகுந்தாளாக, அது, தேன்

பொருந்திய நறிய குவளையின் மணம் கமழ்ந்து தண்ணிதாயிற்று; ஆகலாற்றான், இதுபோதும் அதனை விரும்புவேனாயினேன் எ. று.

வண்ணம், அழகு; நிறமுமாம். வாலிழை, முத்துமாலையுமாம். புனலாடலும் விளையாட்டே யாதலின், பண்ணையெனப்பட்டது; "கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு" (சொல். 319). என்றிசின், இறந்தகால முற்றுவினைத் திரிசொல். "அவற்றுள், இகுமுஞ் சின்னும் ஏனை யிடத் தொடுந், தகுநிலை யுடைய வென்மனார் புலவர்" (சொல். 275) என்பதனால், சின், படர்க்கைக்கும் அமைவதாயிற்று. கண்நறுங் குவளை எனக் கொண்டு, கண்போலும் நறிய குவளை என்றலுமாம்.

புனலாடிய ஞான்று, தலைவியது இழையும், நுதலும் ஒளிதிகழ்ந்து பொலிவு சிறந்த காட்சி தலைவன் மனத்தைப் பற்றி நீங்காது விளங்கினமையின், அதுகுறித்து அவற்றை விதந்து, வாலிழை ஒண்ணுதல் எனச் சிறப்பித்தான். தலைவி பண்ணைபாய்வோள் விரைந்தோடித் தன்னைத் தழுவி மகிழ்வுமிக்கு விளையாடிய காலத்தில், அவள் இடையிற் கிடந்து, வண்ணம் சிறக்க, அசைந்து சிறந்தமையின், தழையினை வண்ண வொண்டழை நுடங்க என உள்ளதன் உண்மை கூறித் தலைவன் இன்புற்றான். அக்காலை, புனற் குவளை தலைவியின் கண்ணை நிகர்த்தும், அப்புனலின் தட்பம் அவளது மேனித்தட்பத்தை நிகர்த்தும் முறையே காட்சியின்பமும் ஊற்றின்பமும் பயந்தமையின், குவளை நாறிப் புனல் தண்ணென்றிசின் என்றான். அவள் பண்ணை பாயா வழிப்புனல் இன்பஞ்செய்யா தென்றும், எனவே, இதுபோது நிகழும் புனலாட்டிற்கும் அவள் இன்றியமையாள் என்பதைத் தோழி உட்கொள்ளுமாறும், பண்ணை பாய்ந்தேனக் குவளை கள்நாறிய தெனவும், புனல் தண்ணென்றிசின் எனவும் பாராட்டினான். மெய்ப்பாடும் பயனுமவை.

இனி, ஆசிரியர் பேராசிரியர், "இஃது உருவுவமப் போலி" என்றும், தலைவியைப் புலவி நீக்கி அவளொடு புனலாடிய தலைமகனைத் தோழி, "நீ புனலாடியஞான்று, பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாம் தண்ணென்றது" எனக் கூறியவழி, தலைவன் இதனைக் கூறினான் என்று கொண்டு, "அத் தடம் போல் இவள் உறக்கலங்கித் தெளிந்து தண்ணென்றாள் என்பது கருதி யுணரப்பட்டது" என்றும், "அவளொடு புனல் பாய்ந்தாடிய இன்பச்சிறப்புக் கேட்டு நிலையாற்றாள் என்பது கருத்து" என்றும், "தவலரும் சிறப் பின்" (பொ. 300) என்னும் சூத்திர வுரையின்கண் கூறுவர்.

வெண்டழை யென்பது பாடமாயின், வெள்ளாம்பலாற் றொடுக்கப்பட்ட தழை யென்று உரைக்க. தண்ணென் குவளை நாறி யென்ற பாடத்துக்கு, விகாரத்தால் தொகும் உம்மையை விரித்து, தண்ணென்ற குவளை நாறியும், புனல் தண்ணிதாகாது, அரிவை பண்ணை பாய்தலால் தண்ணிதா யிற்றென உரைக்க. கண்ணுறுங் குவளை என்றும் பாட முண்டு. இதற்குக் கண்ணொடு உவமமாதற் கமையும் குவளை என்று பொருள்கோடல் சிறப்பாம். (௩)

74. விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொ னவிரிழை பைய நிழற்றக்
கரைசேர் மருத மேறிப்
பண்ணை பாய்வோ டண்ணறுங் கதுப்பே.

இதுவுமது.

பு. ரை :—பசிய பொன்னாற் செய்யப்பட்டு விளங்கும் இழைகள் மெல்ல ஒளிவீச, கரையில் நின்ற மருதமரத்தின் மேலேறிப் பண்ணையாடிய இவளது குளிர்ந்த நறிய கூந்தல், விசும்பினின்றும் இழியும் தோகைமயிலின் சிறை ஒத்திருக்

தோகை, மயில். சிர், விரியாது குவிந்து படிந்து நீண்டு விளங்கும் கலாபம். "தோடுகொள், உருகெழு மஞ்ஞை யொலிசிர் ஏய்ப்பத், தகர மண்ணிய தண்ணறு முச்சி" (அகம். 393) என ஆசிரியர் மாமூலனாரும் மகளிர் கூந்தற்கு மயிலின் சிறினையே உவமங் கூறியிருத்தல் காண்க. நீண்ட தோகை காற்றில் அசைய, ஒளிவிட் டிலங்கும் மயில் விசும்பினின்றும் இழிதல் போலப் பண்ணை பாய்ந்தவழி, தண்ணறுங் கூந்தல் காற்றில் பறக்க, பொற்கலம் ஒளிதிகழ, மருதமரத்தினின்றும் தலைவி இழிந்தது கூறலின், இது வடிவும் தொழிலும் விரவி வந்த உவமமாம். "விரவியும் வரூஉ மரபின என்ப" (பொ. 277) என்பது உவமவியல். மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை யிமைப்பப், பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள், வரையிழி மயிலின் நல்குவன ளொதுங்கி, மிடையூர் பிழியக் கண்டனென்" (அகம். 158) எனப் பிற சான்றோர் இக் கருத்தினைக் குறித்தல் காண்க. போன்றிசின், இடைச்சொல் லடியாகப் பிறந்த முற்று வினைத் திரிசொல். பாய்ந்தாள் எனற்பாலது மயங்கு மொழிக் கிளவியாய் எதிர்வின்கண் வந்தது; "இறப்பே யெதிர்வே யாயிரு காலமும், சிறப்பத் தோன்றும் மயங்கு மொழிக் கிளவி" (சொல். 247) என்ப. உயர்சினை மருதத் துச்சி யேறி நீர்நிலைக்குட் குதித்து விளையாடும் மரபினைத் தொடித்தலைவிழுத்தண்டினாரும், "உயர்சினை மருதத் துறை யுறத் தாழ்ந்து, நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக், கரை யவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து" (புறம். 243) என்று கூறியுள்ளார்.

தலைவியைப் புலவிநீக்கிப் புனலாடக் கருதுகின்றானாகலின், பண்டு, களவில் ஒழுகிய ஞான்று, அவள் புனலாடியதனை வியந்து கூறிப் புலவிக் கருத்தை நீக்குவான், அவள்கேட்ப, கரைசேர் மருதமேறிப் பண்ணைபாய்வோள் என்றான். எனவே, பண்ணையிற் பிறக்கும் இன்பத்துக்குக் கரைசேர் மருதம் உதவியாயது போல, களவின்கண் தான் துய்த்த இன்பத்

துக்கு அவளது விளையாட்டு உபகாரமாயிற்று என்றானும். ஆகவே, இப்பொழுதையில், தான் துய்க்கக் கருதும் இன்பத் துக்கும் புனலாட்டு வேண்டியிருக்குமாறு சுட்டியவாறு காண்க. மருதமேறிப் பனிப்பாய்ந்த விடத்து, அவளது நீண்ட கூந்தல் காற்றிற் பறந்து பேரழகு திகழக் கண்ட காட்சி, தலைவன் மனத்தே நிலைபெற நின்று, நினைக்குந் தொறும் மிக்க இன்பம் பயந்தது குறித்து, தண்ணறுங் கதுப்பு விசும்பிழி தோகைச் சீர்டோன்றிசின் என்றான். களவுக் காலத்து அவளைக் கூடுந்தோறும், அவளுடைய கூந்தலைத் தானே கைசெய்தும், தன் மனக்கினிய பூச்சூடியும் இன் புற்றானாகலின், அதனால் அதனைத் தண்ணறுங் கதுப்பு என விசேடித்தும், நீரால் ஈர்த்து விட்டுவிட்டிமைத்தலின், அவளணிந்த இழையின் ஒளிவிளக்கத்தைப் பசும்பொன் அவி ரிழை பையநிழற்ற எனவும் கூறினான். மெய்ப்பாடும் பயனு மவை.

களவுக்காலத்து நிகழ்ந்ததனை நினைப்பிக்குமுகத்தால், கற்பினுள், தலைவன், தலைவியின் அழகினைப் புகழ்வது, வேட் கை மிகுதியால் அவளது புலவிநீக்குங் குறிப்பிற்றாதலின் அமையுமென்க. "நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற், புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே" (பொ. 228) என ஆசி ரியர் தொல்காப்பியனார் விளக்கக் கூறுமாற்றானும் இவ் வமைதி துணியப்படும். (சு)

75. பலரிவ ணைவ்வாய் மகிழ்ந வதனால்
அலர்தொடங் கின்றா லூரே மலர
தொன்னிலை மருதத்துப் பெருந்துறை
நின்னோ டாடின ளண்புன லதுவே.

பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத் துக் கூறியவழித் தோழி கூறியது.

பு. ரை:—மகிழ்ந, மலர்களையுடைய பழைமையான நிலைமைத் தாகிய மருதமரங்கள் செறிந்த பெருந்துறைக்கண், ஒருத்தி நின்னுடன் தண்ணிய புனலாடினளாக, அதனை நீ எம்முன் ஏலாது மறைப்பினும், நின்னை ஆங்குக் கண்டோர் இவ்வூரிடத்துப் பலர், காண்; ஆகவே, ஊர் அலர் கூறத் தொடங்கிற்று; இனி, நீ மறைப்பதிற் பயன் இல்லை எ. று.

மகிழ்ந, பெருந்துறைக்கண், நின்னொடு தண்புனலாடினள்; நீ ஒவ்வா யாயினும் அது கண்டோர் பலர்; அதனால் ஊர் அலர்தொடங்கின்று என இயையும். ஒத்தல், இயைதல்; "வென்வேலாற் கொத்தன்று தண்பரங் குன்று" (பரி. 9 : 68-9) என்றாற்போல. அதனால் என்பது சுட்டுமுதலாகிய காரணக்கிளவி; இஃது, ஈண்டு, கண்டோர் பலர் என்ற காரணத்தைச் சுட்டிநிற்கின்றது. தொடங்கின்று, இறந்தகாலத் தெரிநிலை முற்றுவினை. மலர என்னும் பெயரெச்சக்குறிப்பு மருதம் என்னும் பெயர்கொண்டது. தொன்னிலை, பழைமையான நிலைமை. தொகைநூல்களில் இது பெருகிய வழக்கிற்று. "நின்னிலைத் தோன்றுநின் தொன்னிலைச் சிறப்பே" (பரி. 2 : 27), "தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணி" (அகம். 45) "தொன்னிலை நெகிழ்ந்த வளையள்" (குறுந். 303) எனப் பில வழங்குமாறு காண்க. ஏற்புடைய சொற்கள் எச்சவகையாற் பெய்துரைக்கப் பட்டன.

"நீ மருதத்துப் பெருந்துறைக்கண் நின் பரத்தையொடு புனலாடினை யல்லையோ" என்ற தோழி கூற்றினை, "இல்லை" எனத் தலைமகன் மறுத்து உடன்படாவாயினமையின், ஒவ்வாய் மகிழ்ந என்றும், "நீ ஒவ்வா யாயினும், நின்னைப் புனலாட்டிற் கண்டோர் சிலர் அல்லர்" என்பாள் இவண் பலர் என்றும் தோழி கூறினாள். "தொன்னிலை மருதத்துப் பெருந்துறை" யென மருதத்தையும், துறையினையும் சிறப்பித்தாள், பழைமையிற் றிரிதலும், கற்புப்

பெருமை யில்லாப் பரத்தையரோ டாடலும் விலக்கும் குறிப்பின ளாகலின். இவ்வாறு, தோழி தலைமகனிலும் உயர்ந்தாள் போலக் கூறுதல் வழுவாயினும், அவன் செய்கை யால் தலைவிக் குளதாகும் உறுகணைத் தாங்குதல் அவட்கு இயல்பாகலின், அமையும் என்பர்; "உறுகண் ஓம்பல் தன் னியல் பாகலின், உரிய தாகும் தோழிகண் ணுரனே" (பொ. 239) என ஆசிரியர் அமைக்குமாறு காண்க. "ஊர, பெரிய நாணிலை மன்ற பொரியெனப், புன்கவி ழகன் றுறைப் பொலிய வொண்ணுதல், நறுமலர்க் காண்வரும் குறும்பல் கூந்தல், மாமை நோக்கிற் காழியல் வனமுலை, எஃகுடை எழில்நலத் தொருத்தியொடு நெருநை, வைகுபுன லயர்ந்தனை யென்ப அதுவே, பொய்புறம் பொதிந்தியாங் கரப்பவுங் கையிகந்து, அலரா கின்றால் தானே" (அகம். 116) எனவரும் ஆசிரியர் பரணர் பாட்டிலும் தோழி அலர் பொருளாகத் தலைவனைக் கழறிக் கூறுமாறு காண்க. இது தோழிபால் தோன்றிய புறஞ்சொல் மாணாக் கிளவி. "ஒன்றித் தோன்றும் தோழி மேன" (பொ. 39) என்பத னால், இம்மெய்ப்பாடு தோழிக்கும் கொள்ளப்படுவ தாயிற்று. ஏனை மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின்மறுத்தல். (ரு)

76. பஞ்சாய்க் கூந்தற் பசுமலர்ச் சுணங்கின்
தண்புன லாடித்தன் னலமேம் பட்டனள்
ஒண்டொடி மடவர னின்னொ (டு)
அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே.

இதுவுமது.

ப.-ரை :—தண்டான் கோரை போலும் கூந்தலும், பசிய மலர்போலும் சுணங்கும், ஒள்ளிய தொடியுமுடைய மடவரலாவாள், நின்னுடன் தண்ணிய புனலாடி, வானவர் மகளிரும் வணங்குதற் குரிய தெய்வம் போன்று, தன் நலம் மேம்படலானாள்; ஆகலின், நீ அதனை மறைத்துக் கூறுவ தென்னை? எ. று.

பஞ்சாய், தண்டான்கோரை. இதனை நாராய்க் கிழித்துக் கண்ணியும் மாலையும் தொடுத்தலும் மரபு; "பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப், புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி, ஈருடை யிருந்தலை யாரச் சூடி" (பெரும்பா: 217–9) எனச் சான்றோர் கூறியவாறு காண்க. நீண்ட கூந்தலுடையாளை, இக்காலத்தும் "கோரைபோல் நீண்ட தலைமயி ருடையாள்" என்று மக்கள் வழங்குவது முண்டு. பசுமலர் என்புழிப் பசுமை புதுமை மேற்று. மடவரல், மடப்பமுடையப் பெண். "மடவர லின்றுணை" (ஐங். 328) எனப் பிறண்டும் வருமாறு காண்க. உம்மையை அந்தரமகளிரு மெனமாறுக.

"குலமகளிர் தம் கற்புடைமையினால் அந்தரமகளிரும் வணங்கும் பத்தினித்தெய்வமாய் நலம்மேம்பட்டுப் பலரும் அறியத்தக்க விளக்கமெய்துவர்; மற்று, நின் மடவரல், நின்னோடு தண்புனலாடிய சிறப்பினால், பலரும் அறிய நிற்பதொரு விளக்கமெய்தினள்" என்பாள், அந்தரமகளிர்க்குத் தெய்வமும் போன்று என்றாள். "நாணி நின்றோள் நிலைகண்டு யானும், பேணினெ னல்லனோ, மகிழ்ந, வானத் தணங்கருங் கடவுளன்னோள் நின் மகன்றா யாதல் புரைவதாங் கெனவே" (அகம். 16) எனப் பிற சான்றோர் செய்யுளினும், தலைவியால், பரத்தை அந்தரமகளிரோடு உவமிக்கப்பட்டிருத்தல் காண்க. "பல மகளிரைக் கூடி நலமுண்டு கழிக்கும் நின் மனத்தைப் பிணித்துப் பிரியாது சென்று நின்னுடன் புனலாடினளாகலின், அவள் ஏனைப் பலரினும் நலம்மேம்பட்டா ளென்பது துணியப்பட்ட" தென்பாள், தண்புன லாடித் தன் நலம் மேம்பட்டனள் என்றாள். வண்டோ ரனைய நின்னைப் பிணித்தலின் நலமிகுதியும், பரத்தையர் பலரும் கண்டு தம் மாட்டாமை நினைந்து இளிவரல் எய்துமாறு நிற்றலின், விளக்க மிகுதியும் உடையளாயினள் என்றவாறும். "கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக், கிழவோன் குறிப்பினை புணர்தற்கு முரியள்" (பொ. 234) என்பதனுள், "பரத்தையென்றது பிறள் என்றதனால்,................தோழி கூறுங்கால்

தலைவியரைக் கூறப்பெறாள் என்பதூஉம், பரத்தையரைக் கூறின், அவர்க்கு முதுக்குறைமை கூறிக் கூறுவள் என்பதூஉம் கொள்க" எனக் கூறி, இதுபோல வரும் தோழி கூற்று அமைக்கப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஒருமுகத்தால் வாயில்மறுத்தவாறு.

நலம் மேம்பட்டன வொண்டொடி என்றும், பைஞ்சாய்க் கூந்தல் என்றும் பாடமுண்டு. மேம்பட்டன என்ற பாடம் பொருட்சிறப்பின்று. பைஞ்சாய், பசிய கோரை; "பழனப் பைஞ்சாய் கொழுதி" (அகம். 226) என வருதல் காண்க. (சு)

77. அம்ம வாழியோ மகிழ்நநின் மொழிவல்
பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுதும்
எம்மொடு சென்மோ செல்லனின் மனையே

முன்னொரு ஞான்று தலைவியோடு புனலாடினானைக் கேட்டு, "இவனுடன் இனி ஆடேன்" என உட்கொண்ட பரத்தை, "புதுப்புனல் ஆடப் போது," என்ற தலைமகற்குச் சொல்லியது.

பு. ரை :—மகிழ்ந, நினக்கு ஒன்று கூறுவேன், கேட்பாயாக; நீ நின் மனைக்குச் செல்லாது, எம்மோடு கூடிப் போதருவா யாயின், யாம் இப் பெரிய வூர் அலர்கூற, நீர் அலைத்தலாற் கலங்கி மகிழ்ச்சி மிகுமாறு தண்ணிய புனலாடுவேம் எ. று.

அம்ம, கேட்பித்தற் பொருட்டாய இடைச்சொல். மொழிவல் என்ற ஒருமை பரத்தைத்தலைவி மேற்று. ஆடுதும், எம்மொடு என நின்ற பன்மை, அத் தலைவியையும், அவளது ஆயத்தையும் உளப்படுத்துநின்றது. அலைக்கலங்கி என்பது தொகைநூல்களில் மிகப்பயின்ற வழக்கிற்றாய

சொற்றொடர். "பெயலலைக் கலங்கிய மலைப்பூங் கோதை," "பனியலைக் கலங்கிய நெஞ்சம்" (அகம், 142, 183) எனவும், "வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி," "நோயலைக் கலங்கிய மதனழி பொழிது" (நற். 153, 94) எனவும் வருமாறு காண்க. "நீரலைக் கலைஇய விரிதழ்த் தொடையல்," "நீரலைக் கலைஇய கண்ணி" "நீரலைக் கலைஇப கூழை" (நற். 339, 357, 398) என வேறுவாய்பாட்டினும் வழங்குதலு முண்டு. சென்மோ, செல்லல் என்பன எச்சப்பொருளவாய், செல்லின், செல்லாது என நின்றன.

முன்பு தலைவியோடு புனலாடினானெனக் கேட்டு, "இவனுடன் இனி ஆடேன்" என உட்கொண்டு புலந்திருந்த பரத்தையை அப்புலவி நீக்கித் தன்னோடு புனலாட வேண்டிய தலைமகற்கு உடன்படுவாள், நின்னோடு தண்புனலாடுதும் என்றும், அதுகுறித்து அவன் தன்மனைக்கு ஏகாது தம்மொடு போந்து நீராடவேண்டு மென்பாள், எம்மோடு சென்மோ செல்லல் நின் மனையே என்றும் கூறினாள். தனக்குரிய மனைக்கு ஏகாதவாறு தலைவனைத் தகைத்தல் அரிய செயலாதலின், அதனை மொழிவாள் முதற்கண் நின்மொழிவல் என முகம்புகுந்தாள். தான் ஆடற்கு விரும்பும் புனலாட்டு மறைந்த நிகழ்ச்சி யாகாது, பலரும் அறிய நிகழ்வதொன்றாக வேண்டும் என்றும், ஆட்டும் நெடிதுஆடிக் கண்சிவப்புறக் களிக்கவேண்டும் என்றும் குறிப்பாள், பேரூர் அலரெழ எனவும், நீரலைக் கலங்கி எனவும் மொழிந்தாள். இதனாற் பயன், தலைவி கேட்டுப் பொறாது புலந்த உள்ளத்தளாவது. "செல்லல் நின்மனையே" என்றதனாற் பரத்தைபால் பொறாமைக் குறிப்பு மெய்ப்பட்டது.

இது, "புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்" (பொ. 151) என்ற சூத்திரத்து, "எண்ணிய பண்ணை யென் றிவற்றொடு பிறவும்" என்புழி, பண்ணை பொருளாக நிகழும் கூற்று வகை யாகும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஒருமுகத்தாற் புலந்தவாறு

78. கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்புநெறி வந்த
சிறையழி புதுப்புன லாடுகம்
எம்மொடு கொண்மோவெந் தோள்புரை புணையே

இதுவுமது.

பு. ரை:— மகிழ்ந, நின் மனைக்கட் சென்று நின் மனைவி யொடு கூடிப் புனலாடுவதை விடுத்து, எம்மொடு கூடிப் போந்து, எம் தோளை நிகர்க்கும் புணையைப் பற்றிப் புன லாடுவை யாயின், யாம் ஒளிவீசும் இலையினையுடைய நெடிய வேலும், விரைந்த செலவினையுடைய குதிரையு முடைய கிள்ளியினது பகைவர்களின் மதிலை யழிக்கும் யானைபோல, தன்னெறியே விரைந்து வந்த, சிறையை யழிக்கும் புதுப் புனலில் நின்னொடு ஆடுவேம், காண் எ. று.

கிள்ளி, சோழவேந்தர்க் குரிய பெயர்களுள் ஒன்று. மதில்கொல் யானை யெனவே, பகைவர்மதில் என்பது பெறப்பட்டது; "நுதிமுக மழுங்க மண்டி யொன்னார், கடிமதில் பாயுநின் களிறடங் கலவே" (புறம். 31) என் பதனலு மறிக. கதழ்பு, விரைவுப் பொருட்டாய உரிச் சொல்லின் அடியாகப் பிறந்த வினையெச்சம்; "கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள" (சொல். 315) என ஆசிரியர் கூறினர். மதில்கொல் யானையிற் சிறையழி புதுப் புனல், நெறிவந்த புதுப்புனல் என இயக்க. நெறிவருதலா வது, கரைகடந்து சென்று தீங்கு செய்யாது, வேண்டுமிடங் களிற் சென்று பாய்ந்து வருவது; "வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது................புதுநாற்றஞ் செய்கின்றே செம்பூம் புனல்" (பரி. 7. 19—22) எனவரும் பரிபாடல் காண்க. இனி, நெறிவந்த சிறையழி புதுப்புனல் என் பதற்கு, நெறியிடை அகப்பட்ட பொருள்களைக் கொணர்ந் தேற்றிச் சிறையை யழிக்கும் புதுப்புனல் எனினுமாம். "மைபடு சிலம்பிற் கறியொடும் சாந்தொடும், நெய்குடை

தயிரின் நுரையொடும் பிறவொடும், எவ்வயி னுனும் மீதுமீ தழியும்" (பரி. 16) எனச் சான்றோர் கூறுப. சிறை, அணை. ஆடுகம் என்புழி, அம்மீறு ககரவொற்றுப் பெற்று முடிந்தது. புணை, வேழத்தாற் செய்த தெப்பம்; "வேழ வெண்புணை," "கொழுங்கால் வேழத்துப் புணை" (அகம். 6. 186) என வருதல் காண்க.

தலைமகன் பண்டு, தலைவியுடன் புனலாடினு னென்பது கேட்டுப் பொறாது புலக்கின்றா ளாகலின், அது தோன்ற எம்மோடு கோண்மோ என்றும், தலைமகளோ டாடிய புணை அவளுடைய தோள்போறலின், அதனை விடுத்துத் தன் றோள்போலும் பிறிதொரு புணை கொள்க என்பாள், எம் தோள் புரை புணை என்றும் கூறினுள். இவ்வாறு, பொறு மைபால், "இனி, இவனுடன் புனலாடேன்" எனப் பரத்தை, தன்னுட் கொண்டிருந்த குறிப்பு நன்கு வெளிப் பட, புதுப்புனலாடுகம் என்றாள். "எம்மொடு கொண்மோ எம்தோள் புரை புணையே" என்பது மெய்ப்பாட்டியலுள் ஆகாதென விலக்கிய நிம்பிரி யாயினும், பரத்தையின் காதற் கருத்தைச் சிறப்பித்தலின் அமையுமென்க; "சினனே பேதைமை நிம்பிரி நல்குர, வனைநால் வகையும் சிறப்பொடு வருமே" (பொ. 245) என ஆசிரியர் விதிக்குமாறறிக. இது சிறுபான்மை பரத்தைக்கும் எய்தப்பெறும்; அவளும் தலைவனொடு ஊடியும் உணர்ந்தும் உரைத்தற்குரியளாகலின். பிறாண்டும் இதுபோல்வன அறிந்து கூறிக்கொள்க.

பகைவர் தமக்கு அரணுக அமைத்த மதிலைக் கிள்ளி யின் யானை அழித்தாற்போல, உயிர்களின் நலப்பேற்றுக்கு அரணுக அமைந்த சிறையினைப் புதுப்புனல் அழிக்கும் என்ற தனுல், எங்கள் இன்பப்பேற்றுக்கு அரணுக அமைந்த நின் கூட்டத்தை நீ தலைவியுடன் ஆடும் புனலாட் டழிக்கும் என் றாளாம். ஆகவே, இஃது உவமையும் பொருளுமாய் நின்று கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்தலின், திணையுணர்வகை யில் ஏனையுவம மெனத் தள்ளப்படா தாயிற்று; "உள்ளுறை

யுவமம் ஏனை யுவமமெனத், தள்ளார் தாகும் திணையுணர் வகையே" (பொ. 46) என ஆசிரியர் கூறுப. "கிழவோற் காயின் உரனொடு கிளக்கும், ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே" (பொ. 302) என்பவாகலின், பரத்தைபால் இஃது அமைவதாயிற்று.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், "இது, காமக்கிழத்தி நின் மனைவியோடன்றி எம்மொடு புணைகொள்ளின் யாம் ஆடுதும் என்று புனலாட்டிற் கியைந்தாள்போல மறுத்தது" என்பர். மெய்ப்பாடும் பயனு மவை.

கதிமான் என்றும் கதவுநெரி தந்த என்றும் வரும் பாடங்கட்கு முறையே செலவினையுடைய குதிரை யென் றும், மதிற்கதவை நெருக்கிக் கொண்டு செல்லும் என்றும் உரைத்துக் கொள்க. (அ)

79\. புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்
யார்மக ளிவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மக ளாயினு மறியாய்
நீயார் மகனையெம் பற்றி யோயே.

தனனொடு கூடாது தனித்துப் புனலாடுகின்றான் எனக் கேட்டுத் தலைவின் ஏவப்படாநின்ற பரத்தை, தானும் தனியே போய்ப் புனலாடினாளாக, அவளை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று, தான் அறியான் போல, நகையாடிக் கூறிக்கைப்பற்றியவழி, அவள் தோழி சொல்லியது.

ப. ரை:—புதுப்புனலாடிச் சிவந்த கண்ணை யுடைய ளாகிய இவள் யாவர் மகள் எனக் கூறிக் கைப்பற்றிய மகிழ்ந, இவள் யாவர் மகளாயினும் நீ அறியாய்; அறியாயாயினும், எம்மைக் கைப்பற்றின நீ யாவர்மகனோ? கூறுக எ. று.

அமர்த்தல், சண்டுச் சிவத்தல்; நீரில் நெடிதாடியவழிக் கண் சிவக்கும்; "நீர்நீ டாடிற் கண்ணும் சிவக்கும்" (குறுந்.

354) என்ப. கூறி என்பது சொல்லெச்சம். ஆயினும் என்றது, இவள் நின்னால் நன்கு அறியப்பட்டவள் என்பது எய்துவித்தது. தோழி எம்பற்றியோய் என்றது, "தாயத்தி னடையா வீயச் செல்லா, வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப் படா, எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம், அல்லா வாயினும் புல்லுவ வுளவே" (பொ. 221) என்பதனு லமையும்.

தான் அவளோடு கூடிப் புனலாடாது தனித்தாடினனாக, அதுகேட்டுப் பொறாது, தனித்தாடி, அவன் தலைப்பெயரு மளவும் அப்புனலிலேயே நெடிதிருந்தா ளாகலின், புதுப் புனலாடி யமர்த்த கண்ணள் என்றும், அவள் பார்வை தானும் அவள் மனத்துநிகழ்த்த புலவிக்குறிப்பை இனிது புலப்படுத்தி, அயன்மை தோன்ற நின்றமையின், யார்மகள் இவள் என்றும் கூறி, அப்புலவி தீருமாறு கைப்பற்றினு னாயிற்று.

மெய்யே அறியானுயின், "யார்மகள் இவள்?" என வினவிக்கொண்டே, அவளைக் கைப்பற்றானுகலின், ஈண்டை வினு, அறிந்துவைத்தும் அறியான்போல வினவியதாம். ஆகவே, இதனுற் பயன் பரத்தை புலவிதீர்வாளாவது. மற்று, அஃது அங்ஙனமாகாது மிகுதல் கண்டு, அது தீருமாறு கைப்பற்றினு னென்பது தோன்றத் தோழி, பற்றிய மகிழ்ந என்றாள். தலைநின்றொழுகும் பரத்தையை அறியான்போலத் தலைவன் "யார்மகள் இவள்?" என்றதனுல், "இவள் நின் பெண்டே" எனினும், இதுபோது இன்னள் என எடுத்துக் கூறினும் நீ அறியாய், என்பாள் யார்மக ளாயினும் அறியாய் என்றும், மற்று, அறியார் போல வினவுவதும், அறிந்தார் போலக் கைப்பற்றுதலும் செய்யும் நீ, தனித்துப் புனலாடியதனுல், நின்னை நன்கு அறியகில்லேமாய் அறிய விரும்புகின்றோம்" மென்பாள், நீ யார் மகளை எம் பற்றியோயே என்றும் கூறினள். மெய்ப்பாடு: வெகுளி. பயன் வாயில் மறுத்தல். (கூ)

80. புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவநனி சிவந்தன மகிழ்நநின் கண்ணே.

தன்னை யொழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

*ப. ரை:—மகிழ்ந, நற்குணங்களால் தகுதியுடையராய மகளிர் தோட்டுணையாகி, முதற்பெயலாகிய மழையா னுண்டான சிவந்த புதுப்புனலாடி நின் கண்கள் மிகச் சிவந்தன; அஃது உண்மையன்றோ? ~~கூறுக~~; அதுபற்றி யாம் புலப்பே மல்லேம்; ஆகலின்; பொய்யாது உரைப்பாயாக எ. று.*

*நலத்தகு மகளிர் என்றது பரத்தையரை. புனலாடு மகளிர்/ புணைபோலப்பற்றி யாடுதற்குரிய துணைமை நல்குதல் நோக்கி, அவன் கூட்டத்தைத் தோட்டுணை என்றார். வேனிற் பருவத்துப் பெய்யும் மழை ஆண்டின் முதன்மழை யாதலின் தலைப்பெயல் எனப்பட்டது. அதனாற் பெருகிவரும் புனல் தெளிவின்றிக் கலங்கி வருதல்பற்றி, "செம்புனல்" என்றார். தவநனி என்னும் உரிச்சொற்கள், "பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றலும்" (சொல். 297) என்பதனால், மிகுதிப் பொருட் குரிமைபெற்று, "ஒருபொருள் இருசொற் பிரிவில வரையார்" (சொல். 460) என்பதனா லமைந்தன.*

*தன்கண் சிவந்திருத்தல் தலைமகள் புலத்தற்கு ஏதுவா மென்று கருதித் தலைவன் தாழ்த்து வந்தானாயினும், அதனை யுணர்ந்த அவள், அவன் மறைப்பா னென வுட்கொண்டு, புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ என்றும், அப்புலவாமை தோன்றப் பரத்தையைப் பாராட்டி, நலத்தகை மகளிர்க்கு என்றும், அவரொடு புனலாடியதனைத் தான் அறிந்தமை யெய்தத் தோட்டுணையாகி என்றும், அப்புனல்தானும்*

ஆடற்கு மிக்க இனிது என்பது புலப்பட, தலைப்பெயற் செம்புனல் என்றும், "இவற்றை நீ மறைக்கினும் நின் கண்கள் மறையாவாய்ச் சிவந்து தோன்றி, யான் அறியக் காட்டி விட்டன" என்றற்குத் தவநனி சிவந்தன மகிழ்ந நின் கண்ணே என்றும் கூறினாள்.

மெய்ப்பாடு : வெகுளி. பயன் : புலத்தல். (௰)

## 9. புலவி விராய பத்து.

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தும், தலைவியும், தோழியும், பரத்தையும் புலந்துகூறுவனவும், வாயின் மறுத்துக் கூறுவனவும், பிறவுமாய் விரவிவருதலின், இஃது இப் பெயரினைப் பெறுவதாயிற்று.

81. குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை
அரிப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயிற் பொய்கை யூர நீ
என்னை நயந்தனெ னென்றி நின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே.

தன்னைக் கொடுமைகூறினாள் தலைமகள் என்பது கேட்ட பரத்தை, தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினாக, அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ப. வுரை:—குருகுடைத் துண்ட யாமையிறைச்சியை வினைஞர் உணவிற்கூட்டு மூர எனவே, நாங்கள் நுகர்ந்துகழித்த மார்பை நுகர்வாள் என்று தலைமகளைப் பழித்தவாறும்.

பு. வுரை:—குருகுகள் உடைத்து உண்டு கழித்த, வெள்ளிய வயிற்றினையுடைய யாமையிறைச்சியினை, அரிப்பறையை முழக்குதலையுடைய உழவர் தமது மிக்கவுணவோடு கூட்டி யுண்ணும், மலரால் அழகுற்ற துறையினையுடைய ஊரனே, நீ என்னை விரும்பினேன் என்று கூறுகின்றனை; மற்று, இதனை நின் மனைவி கேட்பின் பொறாது மிகவும் வருந்துவள், காண் எ. று.

அகடு, வயிறு. அரிப்பறை, அரித்த ஓசையினையுடைய பறை. நெல்லரியும் உழவர், விளைந்த நெல்லை அறுக்கப்

புகுமுன், அவ் வயலிற் கூடமைத்து வாழும் உயிரினங்கள் ஏதமின்றி நீங்குவது குறித்து, இப் பறையோசை யெழுப்புவர்; "கழிசுற்றிய விளைகழனி, அரிப்பறையாற் புள்ளோப் புந்து" (புறம். 396) என மாங்குடிகிழாரும், "வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப் பழனப் பல்புள் இரிய" (நற். 350) எனப் பரணரும் கூறுமாறு காண்க. அல்குமிசை, மிக்கவுணவு; "அரிலிவர் புற்றத் தல்கிரை நசைஇ" (அகம். 257) என வருமாற்றால் உணர்க. இனி "சிலநாளைக்கு இட்டு வைத் துண்ணும் உணவு" என்பர் புறநானூற்றுரைகாரர்.* பிற வுயிர்கள் உண்டு கழித்த மிச்சிலை மக்கள் உண்ணும் முறை, "ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி, ஆர்ந்தன வொழிந்த மிச்சில் சேய்நாட், டருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி யாகும்" (நற். 43) என வருதலாலும் தெளியப்படும். பொய்கைக்குத் துறை,வாயில்போறலின், "வாயில்" என்றார். என்றி, றகர மூர்ந்த முன்னிலை நிகழ்கால முற்றுவினை.

தலைமகள் தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் புலந்த பரத்தை,அப் புலவி தீருமாறு,தலைவன், தான் அவளை இன்றியமையாமை கூறினனாக, அதனை மேற்கொண்ட அப் பரத்தை, என்னை நயந்தனென் என்றி என அவன் கூறிய தனையே கொண்டமைத்துக் கூறினாள். தலைவன் இவ்வாறு கூறியதனால் பெருமகிழ்வு கொண்டவள், தலைவி கேட்டுப் பொறாது வருந்தவேண்டு மென்ற கருத்தினால், நின் மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே என்றாள். "கொடுமை யொழுக்கம் கோடல் வேண்டி, அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக், காதல் எங்கையர் காணின் நன்று" எனத் தலைவன் பரத்தைமை கூறித் தலைவி புலந்தாளாக, அது தன்னைப் புறனுரைத்ததாகக் கொண்டு பரத்தை அத் தலைவியை இகழ்வதாகிய குறிப்புத் தோன்ற வருதலின், இது, "புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்" (பொ. 151) என்ற

---

* "கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம், சிலைகெழு குறவர்க் கல்குமிசை யாகும்"—(புறம். 236) உரை காண்க.

சூத்திரத்து, "இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்" நிகழும் கூற்றுவகையாகும்.

குருகு உடைத்துண்டு கழித்த யாமைமிச்சிலை வினைஞர் தம் உணவிற் கூட்டி யுண்பர் என்றதனால், நாங்கள் நுகர்ந்து கழித்த நின்மார்பினை நுகர்வாள் நின்மனையோள் என உள்ளுறுத் துரைத்தவாறு. மெய்ப்பாடு : பெருமிதம், பயன் : தலைவியை இகழ்தல்.

இனி, வினைஞர் நல்குமிசை என்ற பாடம், பிறர்க்கு நல்கி யுண்ணும் உணவு எ. று. பாத்தூண் வாழ்க்கை எல்லா மக்கட்கும் பொதுவாகலின் இவ்வாறு கூறினாராம். ஆகவே, நின் மார்பு தனக்கேயன்றி எமக்கும் உரித்தாதலை யறியாது புலக்கின்றாள் என்றவாறாயிற்று.

82. வெகுண்டன ளென்ப பாணநின் றலைமகள்
மகிழ்நன் மார்பி னவிழிணர் நறுந்தார்த்
தாதுண் பறவை வந்தெம்
போதார் கூந்த லிருந்தன வெனவே.

மனைவயிற் புகுந்த பாணற்குத் தலைமகன் கேட்குமாற்றால் தலைமகள் சொல்லியது.

ப. ரை :—"இதுவும் பொறாதவள் நீ சென்று வருதல் பொறாள், கடிதிற்செல்" என்பதாம்.

பு. ரை :—பாண, மகிழ்நனது மார்பின்கண் உள்ள முறுக்கவிழ்ந்த பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட நறிய மாலையிற் றேனை யுண்ட வண்டினம் போந்து, எமது மலரணி கூந்தலில் தங்கின வென்று அவட்குப் பாங்காயினர் கூறக் கேட்டலும், நின் தலைவியாகிய பரத்தை வெகுண்டனள் என்று பலருங் கூறுகின்றனர்; இதுவும் பொறாதாள், நீ சென்று வருதல் அறியினும் பொறாது வெகுளுவ ளாகலின், கடிதிற் செல்க எ. று.

மலரரும்பு பிணித்தது போறலின், விரிந்தவழி, அதனைப் பிணியவிழ்ந்த வாய்பாட்டால், "அவிழினர்" என்றார்; "பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ" (அகம். 4) எனச் சான்றோர் வழங்குமாறு காண்க. தாதுண் பறவை, வண்டினம்; "தாதுண் பறவை பேதுற லஞ்சி" (அகம். 4) என்ப. ஏனைப் புள்ளினங்களிலும் தேன் உண்பன உளவாயினும், தாதுண்பறவை யென்பது வண்டினத்தையே குறிப்பது, பன்மைபற்றிய வழக்கு என அறிக. தேன் தேடியுண்ணும் புள்ளினைத் தேன்சிட்டு (Sun bird) என வழங்குப. பரத்தைபால், தலைவி யில்லின்கண் நிகழ்ந்தது உணர்ந்து கூறுவோர் அவட்குப் பாங்காயினாரே யாகலின், அது வருவித்துரைக்கப்பட்டது; "சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள். 69) என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் கூறிய உரை காண்க. நின் தலைமகள் என்றது பரத்தையை இழித்தற் குறிப்பிற்றாய உயர்சொற் கிளவி. இதுவும் பொருதார் என்பது முதலாயின எஞ்சிநின்றன.

மகிழ்செய்யும் தேனையுண்ணும் வண்டின மாகலின், தலைவன் தாரிலுள்ள தேனை யுண்டதனோ டமையாது, எம் கூந்தற் போதுகளிலுள்ள தேனை விரும்பி வந்திருந்தன என்பாள், தாதுண்பறவை என்றும், எம் போதார் கூந்தல் என்றும் கூறினாள். தலைமகன் தாரினை அவிழிணர் நறுந்தார் என்றும், தன் கூந்தலை, போதார் கூந்தல் என்றும் விசேடித்ததனால், தலைவன் தாரிற் பூக்கள் மலர்ந்து தேன்கமழ இருந்தமையும், தன் கூந்தலிற் பூக்கள் மலரும் பருவத்தவாய் இருந்தமையும் சுட்டினாள். இதனாற் பயன், வேட்கைமிகுதியால், இவ் வேற்றுமை காண்மாட்டாத வண்டின் செய்கையைப் பொருளாகக் கொண்டு வெகுளுதல் நன்றன் றெனப் பரத்தையைப் பழித்தவாறு; "தாதுண் வேட்கையிற் போது தெரிந் தூதா வண்டு" (நற். 25) எனச் சான்றோர் வண்டின் இயல் கூறியவாறு அறிக.

தலைவன் தாரினது மலர்த்தேனை யுண்ட வண்டு, தலைவி கூந்தலி லணிந்த போதுகள் மலரும் செவ்வி நோக்கி யிருந்தன எனத் தனக்குப் பாங்காயினார் சொல்லக் கேட்ட பரத்தை, தன்பால் இன்பம் நுகர்ந்த தலைவன் தன் மனையகம் புக்குத் தலைவி புலவி நீங்கும் செவ்வி நோக்கி யிருந்தானென உட்கொண்டு வெகுண்டாளாக, அதனை யுணர்ந்த தலைவி, பொறாது, அவளைப் பழித்தும், பாணனை மறுத்தும், நிகழ்ந்த வாறு கூறி வெகுண்டனள் என்றும், அதனைப் பலரும் கூறுப என்றற்கு என்ப என்றும் எடுத்து மொழிந்தாள். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல்.

இஃது, "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 147) என்ற சூத்திரத்து, "வாயிலின் வரூஉம் வகை" என்பதனுள் அடங்கும். (௨)

83. மணந்தனை யருளா யாயினும் பைபயத்
தணந்தனை யாகி யுய்ம்மோ நும்மூர்
ஒண்டொடி முன்கை யாயமுந்
தண்டுறை யூரன் பெண்டெனப் படற்கே.

வரைந்த அணிமைக்கண்ணே தலைமகற்குப் புறத்தொழுக்கம் உண்டாகியவழி, அதனை யறிந்த தலைவி அவனோடு புலந்து சொல்லியது.

ப. ரை:—ஊர, எம்மை மணந்துகொண்ட நீ, எமக்கு நின்னுடைய அருளை நெடிது செய்யாதொழியினும், நுமது ஊரிலுள்ள, ஒள்ளிய தொடியணிந்த முன்கையினையுடைய பரத்தையர்குழாம், முற்றும், "தண்டுறையூரன் பெண்டு" எனக் கூறப்படுமாறு மெல்லமெல்ல நீங்கி ஒழுகுவாயாக எ. று.

அருளுதல், தலையளித்தல். பைய பைய என்ற அடுக்குப் பைபய என மரூஉவாயிற்று; மெல்லமெல்ல என்பது பொருள்; "படரும் பைபயப் பெயரும்" (குறுந். 215)

என்ப. உய்தல், ஈண்டு ஒழுகுதன்மேற்று. தண்டுறையூரன் பெண்டு, தண்ணிய துறையினையுடைய ஊரற்குரிய காமக் கிழத்தியர்; இது கூற்றவண் இன்மையின் யாப்புறத் தோன்றிய கொண்டுகூற்று. எனப்படற்கு என்பது, "உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புமை யுடையதாயினும், உருபும் பெயரும் ஒன்றாகாது, பகுப்பப் பிளவுப்பட்டிசையாது ஒன்றுபட் டிசைத்தலால்" (சொல். 40 உரை) அதனின் வேறாகிய செயற்கென்னும் வினையெச்சமாய், தணந்தனையாகி என்பதனோடு முடிந்தது.

வரைந்த அணிமைக்கண்ணே தலைவன்பால் புறத் தொழுக்கம் உண்டாய்விட்டமையின், தலைவி மணந்தனை யருளாய் என்றும், அருளாயாயினும், நீ நெடிது பிரிந்துறை யின், காட்சியின்பமு மின்றி, வருத்தம் மிக்கு உறைவது எனக்கு இன்னாதாகலின், மெல்லமெல்லப் பிரிந்துறைவதை வேண்டுகின்றே னென்பாள், பையயத் தணந்தனையாகி யுய்ம்மோ என்றும் கூறினாள்; "துனிதீர் கூட்டமொடு துன்னா ராயினும், இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்" (நற். 216) எனப் பிறாண்டும் சான்றோர் கூறுமாற்றால் அறிக. தன்வயின் உரிமையும், அவன்வயிற் பரத்தைமையும் சுட்டி நும்மூர் என்றாள். மணந்தவரைப் பிரிவின்றிக் கூடியிருந்து மகிழாது, நாளும் பலப்பல மகளிரைக் கூடுவது, அப்பலரும் நின்பெண்டிர் எனப்படுவது ஒன்றையே கருதியதென்பது, நின் னொழுக்கத்தால் விளங்கிற் றென்பாள், தண்டுறை யூரன் பெண்டெனப்படற்கு என்றாளாம். ஆயமும் என்ற எச்ச வும்மை, என்னை நின் பெண்டெனப்படுமாறு மணந்ததே யன்றி, "ஒண்டொடி முன்கை" யாயத்தையும் அவ்வண் ணமே செய்து நீ ஒழுகுகின்றாய் என்பது எய்துவித்தது. ஆயத்தை ஒண்டொடி முன்கை யாயம் என விசேடித்த தனால், அவர்கள் பெண்ணியல்பொன்றையே யுடைய ராவ ரன்றி, எம்போல் நன்றிசான்ற கற்புடையராதல் இலர் என்றவாறும்.

இஃது "அவனறி வாற்ற வறியு மாகலின்" (பொ. 147) என்ற சூத்திரத்து, "செல்லாக் காலைச் செல்கென" விடுத்தற்கண் தலைவி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

டைய என்ற பாடம், பைபய என்ற பாடத்தாற் பிறக்கும் பொருள்நலம் தாராமை யுணர்ந்துகொள்க. (ரு)

செவியிற் கேட்பினுஞ் சொல்லிறந்து வெகுள் [வோள்
கண்ணிற் காணி னென்னு குவள்கொல்
நறுவீ யைம்பான் மகளி ராடுந்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே.

பரத்தையர் மனைக்கண் தங்கிப் புணர்ச்சிக் குறியோடு வாயில்வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

பு. ரை :—மகிழ்ந, நறிய பூக்களணிந்த கூந்தலையுடைய மகளிர் படிந்தாடும் தைஇத் தண்கயம் போலப் பலர் முயங்கி நுகரும் நின்மார்பினைச் சிறப்பித்துப் பிறர் கூறத் தன் செவியிற் கேட்பினும், சொல்லரிய சினங்கொள்ளும் இவள், பரத்தை செய்த குறியொடு தோன்றும் அதனைத் தன் கண்களாலே காண்பாளாயின், என்னுவாளோ? அறியேன் எ.று.

சொல்லிறந்து வெகுளலாவது, சொல்லாடற் கியலாச் சினம் மிகுதல்; சொல்லாடுதற்கு நாவெழாத அத்துணை அளவிறந்த சினம் கொள்ளுதல். ஐம்பால், கூந்தல்; ஐவகை ஒப்பனை விசேட முடைமைபற்றி, இது பெயராயிற்று. அவை, முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் எனவரும். "நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன, வைகை பாராட்டி னுய் மற்றெங் கூந்தற், செய்வினை பாராட் டினையோ வைய"

(கலி. 22) என்றும், ''ஐம்பால் வருத்த கூந்தல்'' (நற். 160) என்றும் வருவன காண்க. தைஇத் தண்கயம், தைத்திங்களில் மகளிராடும் தண்ணிய குளம்; தெளிந்த நீர் தண்ணிதாகலின் தெளிவும் கொள்க. கார்காலத்துப் பெருமழையால் நீர் பெருகிக் கலக்கமுற்ற கயம், தைத்திங்களில் தெளிந்து தண்ணி தாதலால், தெண்ணீர்க்கய மென்னாது, ''தைஇத் தண்கயம்'' என்றார். ''தைஇத் திங்கட் டண்கயம் போலக், கொளக்குறைபடாக் கூழுடை வியனகர்'' (புறம். 70) எனப் பிறரும் கூறுதல் காண்க. பரத்தை மார்பு, பரத்தை செய்த குறி கிடந்து விளங்கும் மார்பு. மார்பு செவியிற் கேட்பினும் வெகுள்வோள், கண்ணிற் காணின் என்னாகுவள்கொல் என இயையும்.

மகளிராடும் தண்கயம், அவரணிந்த கோதையும், குங்குமச்சாந்தும், நெய்யும் விரவித் தோன்றுதல்போல, நின் மார்பும் பரத்தையின் முயக்கத்தால் சாடிய சாந்தும், வாடிய கோதையும் உடைத்தாய்த் தோன்றுகின்ற தென்பாள், நின் பரத்தை மார்பே என்றாள்; ''குவவுமுலை சாடிய சாந்தினை, வாடிய கோதையை'' (நற். 350) என வருதல் காண்க. இளையரும் முதியரும் எனப் பலரும் ஆடும் கயம்போல, நின்னைக் கூடும் பரத்தையரும் அவ்வகைப்பட்ட பலர் என்றற்கு, தண்கயம் போலப் பலர் படிந்துண்ணும் மார்பு என்றாள்; ''வண்கயம் போலும்நின் மார்பு'' (திணைமா. 150—142) என்று பிற சான்றோரும் கூறினர். தைத்திங்களில் இளமகளிர் நீராடி நோற்பது மரபாகலின், தைஇத் தண்கயம் எனச் சிறப்பித்தாள்; ''இழைபணி யாயமொடு தகுநாண் தடைஇத் தைஇத் தண்கயம் படியும் பெருந்தோட் குறுமகள்'' (நற். 80) எனவும், ''தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல்'' (பரி. 11: 91) எனவும், ''தையில் நீராடிய தவம்'' (கலி. 59) எனவும் வருமாறு காண்க.

நின் மார்பின் சிறப்பினைப் பிறர் புகழ்ந்துகூறக் கேட்டதுணையானே, பொறாது, கழிசினங் கொண்டு சொல்லாட

வியலாது தம்பித்து நிற்பவள், சாடிய சாந்தும் வாடிய கோதையும் கொண்டு தோன்றும் நின் மார்பினைக் காணின், உயிர்வாழாள் என்பாள், என்னுதவள்கொல் எனத் தோழி கூறினள். செவியில், கண்ணில் என நின்ற விதப்புமொழி கள், முறையே, கேட்டல், காண்டல் முதலிய செயல்வகை களில் அவளெய்தும் மனவேறுபாட்டின் கடுமை யுணர்த்தி நின்றன. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயில்மறுத்தல். (௪)

85. வெண்ணுதற் கம்பு ளரிக்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலும்
மறுவில் யாணர் மலிகே ழூர நீ
சிறுவரி னினைய செய்தி
நகாரோ பெருமநிற் கண்டிசி னோரே.

தலைமகன் பரத்தையர்மேல் காதல்கூர்ந்து நெடித்துச் செல்வுழி மனைய்கம் புகுந்தானாகத் தலைவி கூறியது.

ப. ரை:— கம்புட்பேடை சேவலொழியக் கிளையுடனே ஆலு மூர என்றது, கிளையுடனே வாழ்கின்ற எமக்கு நின்னின் நீங்கிய மெலிவு உளதாகக் கூறுகின்றேமல்லேம், நின் குலத் தொழுக்கத்துக்குத் தகாது எனக் கழறியதாம். "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப" (பொ. 173) என்றதூஉம் இத் திறன்நோக்கி எனக் கொள்க, என்பது.

பு. ரை:— வெள்ளிய தலையினையுடைய கம்புட்கோழி யின் அரித்த குரலையுடைய பேடை, குளிர்ந்த நறுவிய பழ னங்களிலுள்ள ஏனைப் புள்ளினங்களோடு ஆலும் குற்றமில் லாத புதுவருவாய் மிக்க ஊரனே, நீ சிறுவர்களைப்போலப் பின்னிருந்து வருந்தத்தக்குவனவாய இவற்றைச் செய்கின்று

நெடித்து—தாமதித்து; சீவக. 2147. உரைகாண்க.

யாகலின், பெரும, நின்னைக் கண்டோர் இச் செயல்பற்றி நகுதலைச்செய்யாரோ? கூறுக எ. று.

கம்புட்கோழியின் தலை வெண்மையாகலின், "வெண்ணுதற் கம்புள்" என்றார்; வெண்டலைக் கம்புள் என்றும் பாடமுண்டு. அரிக்குரல், அரித்த ஓசையினையுடைய குரல்; இஃது "அரிகுரல்" (பரி. 17 : 19) என்றும், "அரிந்த குரல்" என வுரையும் கூறப்படுவ துண்டு. மறுவில் யாணர், குற்றமில்லாத புதுவருவாய்; குற்றமாவது, நாடோறும் மக்களுக்குப் புதுமைபிடத்து விழைவும், அதுபற்றிய முயற்சியும் பெருகிவருதலின், அப் பெருக்கத்திற் கேற்ப வருவாய் குறைவற வாராமை. சிறுவரின் என்புழி ஐந்தாவது ஒப்புப் பொருட்டு. இனைய, பின்னிருந்து எண்ணி யிரங்கத்தக்க இச் செயல்; "எற்றென் றிரங்குவ செய்யற்க" (குறள். 655) எனப் பெரியோர் தெருட்டுப. இவற்றைச் செய்தவழி, எல்லாரும் இகழ்தல்பற்றி, இவை விலக்கப்படுவவாயின. கண்டிசினோர், வினைமுதன்மே னின்ற வினையாலணையும்பெயர்.

சிறுவர், தம் செய்கைகளால் மேல் விளைவது நினையாது செய்தல்போல, நீயும், நின் பெருமைக்குரிய அறமும், பொருளும், பிற தகவுடைமையும் முன்னர் நோக்கிப் பின்னர்ச் செய்வதை விடுத்து, பின்னிருந்து வருந்தத்தக்க பரத்தைமை மேற்கொண்டு, யாம் தமித்து வருந்த விடுகின்றனை என்பாள், சிறுவரின் இனைய செய்தி என்றாள். "விழையா வுள்ளம் விழையு மாயினும், என்றும், கேட்டவை தோட்டியாக மீட்டாங்கு, அறனும் பொருளும் வழாமை நாடித், தற்றக வுடைமை நோக்கி மற்றதன், பின்னா கும்மே முன்னியது முடித்தல், அனைய பெரியோர் ஒழுக்கம்" (அகம். 286) என இவ்வாசிரியரே தோழி கூற்றில் வைத்துத் தெரித்திருத்தல் காண்க. "சிறியரின்" என்னாது சிறுவரின் என்றாள், தாய்போற் கழறித் தழீஇக் கோடற்குரிய தகுதிபற்றி. உள்ளுறையால், தலைவி, தான் தனித்திருந்து வருந்தும் செய்தியைக் குறித்தமையின், இனைய எனச் சுட்டியொழிந்தாள்.

தலைவன் பரத்தைமை, பின், அவன்தானே நினைந்து வருந்துதற்கும் இடமாத லுடைய தென்பது, "கிழவோன் இறந்தது நினைஇ யாங்கட், கலங்கலு முரியன்" (பொ. 172) என ஆசிரியர் கூறுமாற்றால் விளங்குகின்றது.

கண்டோர் நன்குமதித்தற் குரிய பெருமைப்பண்பும் பெருஞ்செயலு முடையாய் என்பாள், பெரும என்றும், எனவே, பெருமைக்கு மாறான இவ்வொழுக்கம் அலரும் எள்ளற்பாடும் பயந்து, கண்டோர் நகுமாறு செய்கின்றது என்பாள், நகாரோ பெரும நிற் கண்டிசினோர் என்றும் கூறினாள். சிறுவர் செயல் இளமைபற்றியும், இச் செயல் எள்ளல் பற்றியும் நகைக்கப்படுதலின், நகாரோ என எதிர்மறை வாய்பாட்டாற் கூறினாள்.

இவ்வாறு, தலைவன்பால் தோன்றிய செயல்பற்றிக் கழறிக் கூறினாளாயினும், தலைவி, அவனது கூட்டம்பற்றிப் பிறந்த வேட்கைமிகுதியால், மயங்கிக் கூறுதலின், அமைவதாயிற்று; "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப, கவவொடு மயங்கிய காலையான" (பொ. 173) என ஆசிரியர் கூறியவாறு காண்க. "சிறுவரின் இனைய செய்தி" என்றது அழிவில்கூட்டத் தவன் பிரிவாற்றாமை; "நகாரோ பெருமநிற் கண்டிசினோர்" என்றது புறஞ்சொல் மாணாக் கிளவி. ஏனை மெய்ப்பாடு: பெருமிதம். பயன் : வாயில்நேர்தல்.

மறியில் யாணர் மலிகே ழூரநின் சிறுவரின் இனைய செய்தி என்றும் பாடமுண்டு. தடுத்தற் கியலாத புதுவருவாயினையுடைய ஊரனே, நின் சிறுவரைப் போல இனைய செய்தி என்பது பொருளாம். என் சிறுவனை நோக்கி, "எம் போலக் கையாறுடையவர் இல்லல்லாற் செல்லல்" எனச் சிறைத்தவழியும், அவன், அதனைக் கைந்நீவிக், "குன்ற விறுவரைக் கோண்மா இவர்ந்தாங்குத் தந்தை வியன்மார்பிற்" பாய்ந்து என்பால் நில்லா தொழுகியதுபோல, நீயும்,

புறத்தொழுகுதல் வேண்டா வெனச் சூள் முதலியவற்றாற் சிறைப்பினும், சிறைப்படாது ஒழுகுகின்றனை என்று தலைவி கூறியவாறும். செய்தியை என்றபாடம் செய்திகளை யுடையாய் என்றவாறு. (ரு)

86. வெண்டலைக் குருகின் மென்பறை விளிக்குரல்
நீள்வய னண்ணி யிமிழு மூர
எம்மிவ ணல்குத லரிது
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே.

"புதல்வன் கூறிய மாற்றம் தலைமகட்குப் பாங்காயினர் கூறக் கேட்டான்" என்பது அறிந்த பரத்தை, அதற்குப் புலந்து தலைமகற்குச் சொல்லியது.

ப. ரை:—குருகின்பார்ப்பு அழைக்குங் குரல் வயல்நண்ணி யிமிழும் ஊர என்றது, நின் புதல்வன் கூறிவிடுத்தல் நீ கேட்டமைச் *சேரியெல்லாம் அறிந்தது, நின்னுண் மறைத்தல் அரிதென்பதாம். பார்ப்பினம் மெல்லிதாகப் பறத்தல்பற்றி மென்பறை யென்று ஆகுபெயராற் கூறியதெனக் கொள்க.

பு. ரை:—வெள்ளிய தலையினையுடைய குருகினத்தின் பார்ப்புக்க (குஞ்சுக) ளது அழைப்புக்குரல் நீண்ட வயலினை யடைந் தொலிக்கும் ஊரனே, இனி, நீ எம்மை அருளுதல் முடியாதாகையால், நின் மனையை யடைந்து, அங்கு, நின் மனையாட்டியுடன் கூடி யின்புறுக எ. று.

---

* அவ்வர் நிலத்துமக்கள் தமக்குரிய இடமும் பொருளும் உடையராய் வாழ்ந்த விடம் ஊர் எனவும், அவர் ஆதரவுபெற்று வாழ்வோர் அவ்வூரைச் சேர உறைந்த விடம் சேரி எனவும் வரும் பொருண்மை காணமாட்டாதார், "சேரி என்பது வடசொல்" எனத் திரியக் கொள்வர்.

வெண்டலைக் குருகு, கம்புட்கோழியுமாம். பறை, சிறகு. "வெண்பறை நாரை" (குறுந். 166) என வருதல் காண்க. ஈண்டு, இஃது, அடையடுத்த ஆகுபெயராய்ப் பார்ப்பினத்தின் மேலதாயிற்று. இவண், பரத்தையடனை. தன் ஆயத்தை யுளப்படுத்தி எம் என்றும், தலைவியையும், புதல்வனையும் உளப்படுத்தி நும் என்றும் உரைத்தாள். மடந்தை, மகப்பேற்றுக்குரிய பருவத்தை யுடைய பெண். தலைப்பெய்தல், ஒருசொல்; தலைக்கூடல், தலைப்பிரிதல் என்றாற் போல.

தலைவன் இனித் தன் மனையகம் போந்து தன்னை அருகுவது அரிது எனப் பரத்தை மொழிந்ததற் கேற்ப ஏது உள்ளுறுத் துரைத்தமையின், வாரா நல்குதல் அரிது என்பது கூறப்பட்டது. புதல்வனைக் கண்டவழி, அவன் மெய்தீண்டி உடற்கின்பமும், சொற்கேட்டுச் செவிக்கின்பமும், தளர்நடை கண்டு கட்கின்பமும் இடையறாது பெறுதலின், தன்னை நயந்து வருதல் கூடாதென்பாள், பரத்தை, எம் இவண் நல்குதல் அரிது என்றாள். நல்குதல் எனவே, தான் அவனை யின்றியமையாமை பெறவைத்தாளாம். மனைக்குரியளாய தலைமகள், புதல்வனைப் பயந்து பொலிகின்றாள் என்பதுபட நும்மனை மடந்தையொடு என்றும், மனையடைந்தவழி, பெறுதற்கரிய புதல்வற்பெற்றால் நின்னையும் நின் குடியையும் விளக்கமுறுத்தும் தலைவியைப் புதல்வன் தாய் எனப் புல்லி மகிழ்க என்பாள், தலைப்பெய்தீமே என்றும் கூறினாள். இதனாற் பரத்தைபால் பொறாமை தோன்றிற்று. மடந்தை யென்றது, புதல்வற்பெற்றால் முதுமை யுடையாள் என ஓராற்றால் தலைவியை இகழ்ந்தவாறுமாம்.

குருகின் மென்பறை செய்த விளிக்குரல் நீர்வயல் நண்ணி இமிழ்கின்றதெனவே, நின் புதல்வன் சொல்லி விட்ட மாற்றம் இச் சேரியிலுள்ளார் யாவரும் அறியப்பட்டதென்றாளாம்; ஆகவே, அப் புதல்வனை யுள்ளி, நீ, நின் வளமனை செல்லுதல் ஒருதலை என்பதாம். வயல் நண்ணி இமிழ்

கின்ற தென்றதனால், அதனை இல்லை யென மறைத்தலும் கூடாது என்றவாறும். மெய்ப்பாடு : வெகுளி. பயன் : வாயில்மறுத்தல்.

இது, "புல்லுதல் மயக்கும்" (பொ. 151) என்ற சூத்திரத்து, "இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக்கண்ணும்" என் புழி நிகழும் பரத்தையர் கூற்றுவகையுள் அடங்கும். இல்லோர் என்ற பன்மையால், வன்புறை வாயிலாகிய புதல்வனும் தலைவியும் கொண்டு, புதல்வன் கூற்றைத் தன் புலவிக்கு ஏதுவாக்கியும், மடந்தையெனத் தலைவியை இகழ்ந்தும் கூறினமை கொள்க.

எம்மிவண் நல்குத லறிதும் என்றும் பாடமுண்டு. மகன் விடு மாற்றம் கேட்டொழுகும் நினக்கு அவன்பாலும், அவன் தாய்பாலும் அன்பு செல்வதன்றி, எம்பால் செல்லாமை இனிது விளங்குகின்றதென்பதுபட அறிதும் என்றாள் என்க. எனவே, "நல்குதல் அறிதும்" என்பது குறிப்புமொழி. (௬)

87. பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்
யாண ரூர நின் மனையோள்
யாரையும் புலக்கு மெம்மைமற் றெவனோ.

தலைமகள் தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பத் தலைமகனோடு புலந்து சொல்லியது.

ப. ரை:—கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும் ஊர என்றது, யாங்கள் பழித்தே மென்று அவட்கு இனியசொற் கூறி, அவள் எங்களைப் பழித்துக் கூறுஞ் சொற்களை நினக்கு இனியவாகப் பெறுவாய் எ. று.

ப்: ரை:—பகன்றைப் பூவாற் றொடுக்கப்பட்ட கண்ணியைச் சூடிப், பலஆனிரைகளையுடைய ஆயர்கள், கரும்பைக் குறுந்தடியாகக் கொண்டு மாவின்கனிகளை யுதிர்க்கும் புது வருவாயினையுடைய வூரனே, நின் மனைவி யாவரையும் புலந்துகூறும் இயல்பினளாகலின், எம்மைப் புலத்தற்கு என்னை?

பகன்றை, சிவதைப்பூண்டு. கிலுகிலுப்பைச்செடியன்று என ஆசிரியர் நச்சினார்க்கினியரும் (குறிஞ்சி. 88), பெருங்கையால் என ஆசிரியர் அடியார்க்கு நல்லாரும் (சிலப். 13: 157) கூறுவர். இது நீண்ட இலையும், வெண்மையான பூவும் உடையது. இதன் பூவும் வடிவில் வள்ளம் போன்றிருத்தலின், இப்பூவிற்கு வெள்ளிய பாண்டிலை உவமங் கூறுப. இப் பூவிற்கு மணம் கிடையாது. இது மருத நிலத்திற் குரியது. "வெள்ளிதழ்ப் பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்" (ஐங். 456); "பாண்டி லொப்பிற் பகன்றை மலரும், கடும்பனி யற்சிரம்" (நற். 86); "பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோல், பால்பெய் வள்ளம் சால்கை பற்றி" (அகம். 219); "பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ, இன்கடுங் கள்ளின் மணமில கமழும்" (குறுந். 330) என்பன முதலாகச் சான்றோர் கூறுமாறு கண்டுகொள்க. குணில், குறுந்தடி; "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்" (சிலப். 17. பாட்டு 1) என்புழிப் போல. இஃது அக்துறைப் பாட்டாகலின், இதன்கண் முல்லைநிலத்துக் குரிய கோவலர் செய்தி கூறப்பட்டது; "அவ்வம் மக்களும் விலங்கு மன்றிப், பிறவவண் வரினும் திறவதின் நாடித், தத்த மியலின் மரபொடு முடியின், அத் திறந் தானே துறையெனப் படுமே" (பொ. 521) எனவரும் தொல்காப்பியத்திற்கு ஆசிரியர் பேராசிரியர் கூறும் உரை காண்க.

புலத்தலின்றி, மங்கலவகையால் தலைவி எதிரேற்றுக் கோடற்குரிய "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை" (பொ. 172) மகளிரையும், அவள் புலக்கும் பான்

மையள் என்பாள், "நின் மனையோள் யாரையும் புலக்கும்" என்றாள். எனவே, அவள் எம்மைப் புலத்தல் சொல்லாமலே விளங்கும் என்றற்குப் பரத்தை எம்மைமற் றேவனோ என்றாள்.

கரும்பின் துண்டத்தைக் குறுந்தடியாகக் கொண்டு கோவலர் மாவின் தீங்கனியை யுதிர்ப்பர் என்றது, யாம் கூறும் சொற்பகுதிகளைத் தலைவியைப் பழித்துக் கூறியனவாக அவட்குக் கூறி, அவளது புலவிதீர்த்துக் கூட்டம் பெற்று மகிழ்வாய் என்றவாறாம். புலவி தீர்க்குமிடத்து, தலைவிக்குத் தலைமகன், இன்சொற் கூறலும், அவள் பரத்தையைப் பழித்துக் கூறுவனவற்றை ஏற்று, அப் புலவி தீரத் தருவன செய்தலும் உண்மையின், "யாங்கள் பழித்தே மென்று, அவட்கு இனிய சொற்களைக் கூறி, அவள் எங்களைப் பழித்துக் கூறும் சொற்களை நினக்கு இனியவாகப் பெறுவாய்" எனப் பழையவுரை கூறுவதாயிற்று. மெய்ப்பாடும் பயனு மவை.

இது "புல்லுதல்மயக்கும்" என்னும் சூத்திரத்து (பொ. 151) "இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக்கண்" பரத்தை நிகழ்த்தும் கூற்றுவகையாகும். (எ)

88. வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்
தண்டுறை யூரனை யெவ்வை யெம்வயின்
வருதல் வேண்டுது மென்ப (து)
ஒல்லேம் போல்யா மதுவேண் டுதுமே.

தலைமகனை நயப்பித்துக்கொள்கையில் விருப்பில்லாதாள்போல அவ்வாறு கோடலையே விரும்புவாள், அது தனக்கு முடியாதெனத் தலைமகள் புறனுரைத்தா ளெனக் கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினார்க்குச் சொல்லியது.

ப. ரை :—இவ்வாறு என்னைக் கூறுகை தவிராளாயின், அதனை முடியச் செய்துவிடுகின்றேன் என்பதாம். வள்ளிய

துறைகளின்கண்ணே, எல்லாரும் கொள்ளும்வண்ணம், நயந்து பூக்கின்ற மலர்களையுடைய பொய்கையூரன் என்றது, மகளி ரெல்லார்க்கும் பொதுப்பட்டிருப்பான் எ. று.

பு. ரை :—வண்டுகள் உறையும், யாவரும் விரும்புகின்ற, வளவிய மலர்ப் பொய்கையின் தண்ணிய துறையினையுடைய வூரனை யாம் எம்மிடமே வருதலை வேண்டுகின்றேம் என்று எவ்வை சொல்லுவதனைப் புறத்தே விரும்பாதேம் போலக் காட்டி அகத்தே அதனை விரும்பியொழுகுகின்றேம் எ. று.

வண்டுகள், வண்டினம்; சங்குமாம். வண்டுறை வள மலர்ப் பொய்கை, நயவரும் வளமலர்ப் பொய்கை என இயையும். வண்டுறை யென்பதற்கு வள்ளிய துறை யென வும், நயவரும் வளமலர் என்பதற்கு எல்லாரும் கொள்ளும் வண்ணம் நயந்து பூக்கின்ற வளவிய மலர் என்றும் உள் ளுறுத்த கருத்துக் கேற்பப் பழையவுரைகாரர் கூறுகின்றனர். எவ்வை, எம் தங்கை; நம் தங்கை, நுவ்வை யெனவும், தம் தங்கை, தவ்வை யெனவும் வருதல்போல; "நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென், றன்னை கூறினள்" (நற். 172) எனவும், "நின் தவ்வை யாவோர் தாரையும் வீரையும்" (மணி. 10: 51–2) எனவும் சான்றோர் வழங்குமாறு காண்க. "எவ்வைக் கெவன்பெரி தளிக்கும்" (ஐங். 89) என்பதற்கும் இதுவே கூறிக்கொள்க. "ஒல்லேம்போல்" என்றது உள் ளும் புறமும் ஒவ்வாமையுணர நின்றது; "மெல்லிய வினிய கூறலின் யானவ், தொல்லேன் போல வுரையா டுவலே" (நற். 134) எனப் பிற சான்றோரும் இப்பொருண்மை தோன்ற உரைக்குமா றறிக. பிரிநிலை யேகாரந் விகாரத் தால் தொக்கது. பிறவெல்லாம் எச்சவகையாற் பெய்துரைக் கப்பட்டன.

தலைவன் தன்பாலே வருதல் வேண்டுமெனப் பரத்தை மிக வேண்டி நின்றாளாயினும், தலைவி கூற்றினை உடன்

படாதாள்போல ஒழுகுவதற் குரிய ஏதுவினை உள்ளுறைக்கண் கூறிவிட்டமையின், எவ்வை எம்வயின் வருதல் வேண்டுதும் என்பது ஒல்லேம் என வாளாது மொழிந்தாள். கருத்துவகையால் உடன்பாடுண்மையின் தலைவியை எவ்வை யென்றும், அவ்வுடன்படாமையும் பிறர்க்குத் தோற்றுவித்தற்கே யென்பது எய்த, ஒல்லேம்போல் என்றும் கூறினு ளாயிற்று.

தலைவி கூற்றைத் தான் உடன்படாதாள்போல ஒழுகுதலாவது, தலைவன் யாவர்மாட்டும் புணர்வுபிரிவுகளால் இன்பமும் இடும்பையும் நிகழ்த்துதலின், தலைவி எம்மைப் புலத்தல் கூடாது; அவள் கொழுநனே அவட்கு வருத்த மெய்துவிக்கின்றான் என்றாற்போல்வன கூறுதல். "வானம் வேண்டா வறனில் வாழ்க்கை" (186) என்னும் அகப்பாட்டினுள், "ஊரனொடு, டெழுந்த கௌவையோ பெரிதே, நட்பே, கொழுங்கோல் வேழத்துப் புணைதுணையாகப் புனலாடு கேண்மை யனைத்தே" எனவும், "அவனே,........... தண்ணறுஞ் சாந்தங் கமழும் தோள்மணந், தின்னும் பிறள்வயி னானே" எனவும், இவற்றை யறியாது "மனையோள், எம்மொடு புலக்கும் என்ப" எனவும், "உரிதினின், யாம்தன் பகையே மல்லேம், சேர்ந்தோர் திருநுதல் பசப்ப நீங்கும், கொழுநனே சாலுந்தன் னுடனுறை பகையே" எனவும் பரத்தை, தலைவனது நட்பினைப் பழித்து, அவன் தன்பாலே வருதலை நயவாதாள் போல, அவனைப் "பகை" யெனக் கூறியது போல்வன எனக் கொள்க.

இப்போழ்து, புறத்தே உடன்பாடின்மையும், அகத்தே உடன்பாடும் கொண்டு ஒழுகத்துணிந்த பரத்தை, தலைவி கூறியது தன் மாட்டாமை கூறித் தன்னை அவள் பழிப்பது போறலின், யாம் அது வேண்டுதுமே என்றாள். செய்குதுமென்னாது, வேண்டுதும் என்றதனால், "அவள் (தலைவி) இவ்வாறு கூறுவதைத் தவிராளாயின், யான் பலரு மறியத் தலைவன் எம்பாலே வரத் தகுவனவற்றைச் செய்துவிடத்

துணிந்தேன்" என்றாளாம். அஃதாவது, யான் தலைவனைக் கொண்டுகைவலிப்பல் எனவும், அவன் என்வயின் வருமாறு செய்யேனாயின் இன்னளாவேன் எனவும் பிறவும் கூறித் தருக்குதல். "மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத், தண்டுறை யூரன்எம் சேரி வந்தென........ஆறுது கழறுப என்ப அவன்பெண்டிர்........சிறைபறைந் துரைஇச் செங் குணக் கொழுகும், அந்தண் காவிரிபோலக் கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே" எனவும், "துறைகே ழூர னொடு, ஆவதாக, இனிநா னுண்டோ, வருகதில் அம்ம எம் சேரிசேர, வரிவே யுண்கண்அவன் பெண்டிர் காணத், தாரும் தானையும் பற்றி........தோள்கந்தாகக் கூந்தலிற் பிணித்து அவன் மார்பு கடிகொள்ளே னாயின் ஆர்வுற் று இரந்தோர்க் கீயா திட்டுவோன் பொருள்போற், பரந்து வெளிப்படாதாகி, வருந்துகதில்ல யாய் ஓம்பிய நலனே" (அகம். 76, 276) எனவும் வருவன பரத்தையின் துணிபுரை வகையினை யுணர்த்துவனவாம்.

"எல்லாரும் கொள்ளும்வண்ணம் நயந்து பூக்கின்ற மலர்களையுடைய பொய்கையூரன்" என்றது, தலைவியும் யாமுமாகிய மகளிர் பலரும் விரும்பி நுகரும்வண்ணம் நயந்து போந்து இன்பம் நல்குவான் என்றவாறும். ஆகவே, தலை வன் மகளிர்பலர்க்கும் பொதுப்பட வொழுகுகின்றான் என் பது பெறப்படும். இவ்வாறு கூறியொழுகிய தன்னைத் தலைவி புறனுரைத்தாள் எனப் பொறாது பரத்தை நெடுமொழி நிகழ்த்தும் உள்ளத்தளாய்த் தலைவியின் பாங்காயினார்க்குச் சொல்லுகின்றா ளாகலின், "எம்வயின்" என்றும் "யாம்" என்றும் பன்மைவாய்பாட்டாற் கூறினாள். இது "புல்லு தல்மயக்கும்" (பொ. 151) என்ற சூத்திரத்து, "எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்" என்புழிப் "பிறவும்" என்பதனால் கொள்ளப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன் தலைவியை இகழ்தல்.

வளர்மலர் என்றும் பாடமுண்டு; மற்று, வளர்தற் றொழில் மலருக்காதல், பொய்கைக்காதல் இயையாமையின், அது பாடமன்மை யறிக. (அ)

89. அம்ம வாழி பாண வெவ்வைக்(கு)
எவன்பெரி தளிக்கு மென்ப பழனத்து
வண்டுதா தாதுமூரன்
பெண்டெனா விரும்பின் றவடன் பண்பே.

தலைமகன் தலைமகளைப்பற்றி யொழுகாநின்ற னென்பது கேட்ட காதற்பரத்தை, அவன் பாணனுக்குச் சொல்லுவாளாய் அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

ப. ரை:— *அவன் ஆங்ஙு ஒழுகுகின்றது அவள் பண்புடைமை யல்லது வேறு காரணம் இல்லை யென இகழ்ந்து கூறியவாறும்.*

பு. ரை:—*பாண, இதனைக் கேள்: பழனங்களில் மலர்ந்துள்ள பூக்களில் வண்டு தேனையுண்ணும் ஊரன், எம் தங்கையாகிய தலைமகளைப் பெரிதும் தலையளித்தொழுகுகின்றா னென அவட்குப் பாங்காயினர் சொல்லுகின்றதென்னை? அவளைத் தனக்குப் பெண்டெனக் கருதி அவன் விரும்பி யொழுகுவது அவளது பண்புடைமையே யொழிய வேறில்லை; இதனை அவர்கள் அறிந்திலர்போலும் எ. று.*

*பெரிதளிக்கும் என்பது பாங்காயினர் கூற்றைக் கொண்டு கூறியது. எவன் என்பது "அறியாப் பொருள் வயிற் செறியத் தோன்றும்" வினாவின் கிளவி; ஈண்டு, இஃது அவர்கள் கூற்றை மறுக்கும் குறிப்புணர நின்றது. கூறுவோர் அவராகலின், அவட்குப் பாங்காயினர் என்பது வருவிக்கப்பட்டது; ஏனைய எச்சவகையாற் பெறப்பட்டன. விரும்பின்று, காலங்காட்டுந் தொழிற்பெயர். காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. பிற நலங்களை மறுத்து,*

பண்பினையே வற்புறுத்துதலின், ஏகாரம் தேற்றம். வாழி அசைநிலை.

தலைவன் பரத்தையர்க்கும் தலையளி செய்தொழுகுதலை, உள்ளுறையாற் குறிக்கின்றாளாகலின், அதனைக் கொள்ளாது உரைத்த தலைவியின் பாங்காயினர் கூற்றை மறுத்தற்கு, எவ்வைக்கு எவன் பெரிதளிக்கும் என்ப என்றும், அவனது ஒழுக்கத்தின்கண் பரத்தையாற் செய்யப்படும் தலையளியினும், தலைவியாற் செய்யப்படுவது சிறிது பெரிதாய்த் தோன்றின், அதற்குக் காரணம் இஃதென்பாள், ஊரன் பெண்டென விரும்பின்று அவள்தன் பண்பே என்றும் சொன்னாள். தலைவன்பாற் பரத்தைமை தோன்றினும், அதுபற்றி அவனை வெறாது, புறைபுறம் தெளிந்து, அவன்பால் அன்பு தொக நிற்றல், ஈண்டுப் பண்பாவது என அறிக; "தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார், இகழினும் கேள்வரை யேத்தி யிறைஞ்சுவார்" (பரி. 20 : 88-9) என்றும், "மாய மகிழ்நன் பரத்தைமை, நோவேன் தோழி கடனமக் கெனவே" (கலி. 75) என்றும் சான்றோர் உரைக்குமாறு காண்க.

பழனக்களிற் பூத்திருக்கும் மலரிற் றேனை வண்டு உண்டு மகிழும் என்றதனால், தலைவன் பரத்தையிற் பிரிந்து இன்பநுகர்தலைப் புலப்படுத்தாளாயிற்று. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: பாங்காயினரை மறுத்தல்.

வேண்டென விரும்பின்று என்ற பாடத்துக்குத் தலைவன் மறாது வேண்டுக என வாயில்விடுத்து விரும்பி யொழுகுவது என உரைக்க. அவன் பரத்தைமையாற் புலந்து வேறுபட்டாளே, அது நீக்கி ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுதலாற் காமம் சிறத்தலின், அது செய்வதும் தகுமென வறிக. "அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப், புலந்தாரைப் புல்லா விடல்" (குறள். 1303) என நம் வள்ளுவப்பெருந்தகையார் அறிவுறுத்துமாறு காண்க. (கூ)

90. மகிழ்நன் மாண்குணம் வண்டுகோண் டனகோல்
வண்டின் மாண்குண மகிழ்நன்கோண்
[டான்கோல்
அன்ன தாகலு மறியாள்
எம்மொடு புலக்குமவன் புதல்வன் ருயே

தலைமகன் தன் மனைக்கட் செல்லாமல் தான் விலக்குகின்ருளாகத் தலைமகள் கூறினுள் என்பது கேட்ட காதற்பரத்தை, தலைமகன் கேட்குமாற்ருல், அவட்குப் பாங்காயினுர் கேட்பச் சோல்லியது.

பு. ரை :—மகிழ்நனுடைய மாண்புற்ற குணங்களை வண்டுகள் அடைந்தனவோ? அன்றி, அவற்றின் மாண்குணங்களை அவன் அடைந்தனனே? செயலொற்றுமையால் வேறுபடுத் தறியக்கூடாமையின், அச்செயல் அவற்கு இயல்பாகலும், அதனுல் அவனை விலக்குத லாகாமையும் அறியாளாய், அவன் புதல்வற்குத் தாயாகிய தலைவி, யாம் அவனைத் தன்மனைக் கேகாவண்ணம் விலக்குகின்றே மென எம்மோடு புலக்கின்ருள்; இஃதோர் அறியாமை இருந்தவாறு எ. று.

மகிழ்நன் குணமாண்பு, நலம் புதியராய மகளிரையே கூடியொழுகுதல். வண்டின் மாண்குணம், எல்லாப் பூவினும் சென்று தாதுண்டல். ஏற்புடைய சொற்கள் எச்சவகையால் வருவித்துக் கொள்ளப்பட்டன. அச்செயல்பற்றி அவனைப் பிறர் விலக்கலாகாமையும் எய்துவித்தலின், ஆகலும் என்புழி உம்மை எச்சப் பொருளதாம். அறியாள், முற்றெச்சம்; புலக்குமென்னும் வினை முதல் வினை கொண்டது.

நலம் புதியளாய்ச் சிறக்கும் தன்பால் பிரிவின்றிக் கூடியிருந்து இன்ப நுகர்ச்சி எய்தும் தலைவன் செயல், தேனுடைப் புதுமலரைத் தேர்ந்து தேனுண்ணும் வண்டின் செயலை

நிகர்த்தலின், மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண்டன கொல் என்றாள். எனவே, பரத்தை தன் நலத்தைக் குறிப்பாற் சிறப்பித்துக் கூறினளாயிற்று. தாதுண்ணும் வேட்கையால், புதுப்பூ வென்றுதல், பழம்பூவென்றுதல் நோக்காது எல்லாப் பூவினும் சென்று வண்டினம் ஊதுதல்போல, நலம் புதியளாய என்னைக் கூடலேயன்றி, முதியளாய தலைவியையும் கூடுகின்றான் என்பாள், வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான்கொல் என்றாள். எனவே, தன் இளமையும், தலைவியின் முதுமையும் கூறினளாயிற்று. வண்டினம் எல்லாப்பூவினும் ஊதும் என்பதனை, "தாதுண் வேட்கையிற் போதுதெரிந் தூதா வண்டோ ரன்ன வவன் தண்டாக் காட்சி" (நற். 25) என வருமாற்றா னுணர்க.

புதுநலம் கெழுமிய மகளிரையே நாடி இன்பநுகர்ச்சியெய்தும் தலைவன் குணம், எல்லாப் பூவினும் ஒப்ப வூதும் வண்டிற் கின்மையின், வண்டு கொண் டனகொல் என்றும், வண்டினம்போலத் தலைவன் இளையரையும் முதியரையும் ஒப்பக் கூடுதலின், அஃ தவற்கு இயல்பன்று என்பதுபட, மகிழ்நன் கொண்டான்கொல் என்றும் கூறினள்; "புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவன்" (பொ. 147) என ஆசிரியர் தொல்காப்பியனாரும், "ஊரன் புதுவோர் மேவலன்" (ஐங் 17) என இந்நூலாசிரியரும் கூறியவாற்றால், தலைவன் புதுநலமகளிரையே நாடுமாறு அறிக. "அவனே, நெடுநீர்ப் பொய்கை நடுநா ளெய்தித், தண்கமழ் புதுமல ரூதும், வண்டெ னமொழிப மகனென் னாரே" (நற். 290) எனவரும் ஆசிரியர் மருதனிளநாகனார் பாட்டும் இக் கருத்துக்கட்கு உபகாரமாதல் காண்க.

இக் கூறியவாற்றால், புதுநலமுடைய மகளிரைக் கூடி நெடிதிருத்தல் தலைவற்கு இயல்பாகலின், அதனைத் தலைவியறிந்திலள் என்பாள், அன்னதாகலும் அறியாள் என்றாள். இளமைப்பருவங் கழியுங்காறும், அச் செயல் அவற்கு

விலக்கப்படாமையும் அறிந்திலள் என்பாள், அதனை உம்மையால் எய்துவித்தாள். "பின்முறை யாக்கிய" (பொ. 172) என்ற சூத்திரத்துக் "கிழவோன் இறந்தது நினைஇ யாங்கட், கலங்கலு முரியன் என்மனார் புலவர்" என்னும் பகுதியில், கலங்கலும் என்புழி உம்மை "எதிர்மறையாகலான் (பரத்தைமைநீங்கி) மீளாமையும் உரித்தாயிற்று; என்னை, இளமைப்பருவம் கழியாத காலத்து அக்காதல் மீளாதாகலின்" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைப்பது காண்க.

"மகிழ்நன் மாண்குணம்," "வண்டின் மாண்குணம்" என்புழி மாண்புகள் முறையே புகழ்ச்சியும், இகழ்ச்சியும் குறித்துநின்றன.

தலைவி, மகிழ்நன் குணச்சிறப்பும், விலக்கலாகாமையும் நோக்காது, அவனை யாம் விலக்குகின்றேம் என எம்மொடு வறிதே புலக்கின்றாள் என்பாள், எம்மோடு புலக்கும் அவன் புதல்வன்தாயே என்றாள். மகப்பயந்து மேனி முதிர்ந்து நலம் முதியளாயினள் என்பாள் தலைவியைப் புதல்வன்தாய் என்றாள். "புதல்வன்தா யென........எம் முதுமை யெள்ளல்" (அகம். 6) என ஆசிரிர் பரணர், புதல்வன்தாய் என்பது புலத்தற்குரிய சொல்லென விளக்கியவாறு அறிக. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவியை இகழ்தல். (ய)

## 10. எருமைப்பத்து.

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தினும், எருமை யாகிய கருப்பொருளே சிறந்தெடுத்து மொழியப்படுதலின், இஃது இப் பெயரினைப் பெறுவதாயிற்று.

எருமையினம் உலகெங்கும் பரவி யிருக்கின்ற தெனினும், நாடுதோறும், அவ்வந் நிலத்துத் தட்பவெப்ப நிலைகட் கேற்ப, அவற்றின் உடலமைப்பும் கோடுகளின் வளர்ச்சியும் அமைந்திருக்கின்றன. நாம் வாழும் உலகில் சிறந்துவிளங் கும் நகரங்கள்யாவும், பண்டைக்காலத்தில் இவ் வெருமை யினங்களின் உழைப்புச்சிறப்பால் வளம்பெற்றன என்பர். பிற துணைக் கருவிகளை ஆக்கிக்கொள்ளும் அறிவுவன்மை மக்கட்குத் தோன்றுதற்குமுன், ஊர்திகளாகவும், உழவுத் துணையாகவும் உதவிய பழம்பெருமை எருமையதே.

ஐரோப்பாவில் இப்போழ்து வாழும் எருமையினம் பலவும், பல நூற்றாண்டுகட்கு முன்பே ஆசியநாட்டிலிருந்து சென்றவற்றின் வழித்தோன்றல்களே யாகும் என்பர். மேனாடுகளில் எருமையினமும், குதிரையினமும் தோன்றி மக்கட்கு வேண்டிய உதவியினைப் புரியத் தொடங்குதற்கு முன், ஆனேறும் ஆனிரையுமே ஆற்றிவந்தன. பின்னர், எருமையினம் போந்து அவற்றின் நிலையில் நின்று உழுதல், வண்டியிழுத்தல், சுமைகொண்டுசேறல் முதலிய செயல்களைச் செவ்வே செய்துபோந்தன என்பர்.

உயிர்நூல் அறிஞர், இவ்வெருமையினம் பலவும் பண் டையில் நம் நாட்டிற்றான் தோன்றின என்று கூறுப. அமெ ரிக்கநாட்டினர் கூறும் எருமையினம் (Bison), உண்மை எருமை யினமாகா. ஏனை மேனாட்டெருமைகள் நம்நாட்டவற் றின் வழித்தோன்றல் என்பது முன்னரே கூறப்பட்டது. அவையும் உழவுமுதலியவற்றைச் செய்தல்போல, பால்,

வெண்ணெய், இறைச்சி, தோல் முதலியவற்றையும் உதவுகின்றன.

இவை உடலுழைப்பால் களைப்பு மிக்கவழி, சேற்று நீரிற் படிந்துகிடத்தல் இயல்பு. இதனை யறிந்தே நம் நாட்டுப் பண்டைச்சான்றோர், "தடமருப் பெருமைப் பிறழ்சுவ விருப்போத்து, மடநடை நாரைப் பல்லினம் இரிய, நெடுநீர்த் தண்கயம் துடும்எனப் பாய்ந்து, நாட்டொழில் வருத்தம் வீடச் சேட்சினை, இருள்புனை மருதின் இன்னிழல் வதியும்" (நற். 330) எனவும், "வளமிகு முன்பின் அண்ணல் லேஎறு, பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி, மடக்கண் ணெருமை மாணகு தழீஇப், படப்பை நண்ணிப் பழனத் தல்கும்" (அகம். 146) எனவும் கூறுவாராயினர். வெயிலவிர் வெப்பம் மிக்க நம்நாட்டில் எருமைக்கு இவ்வியல்பு ஒத்ததாயினும், குளிர்மிக்க மேனாடுகளில் இது வேண்டாவன்றே! அந்நாட்டினும் காணப்பெறுதலைக் காண்போர், இஃது இவற்றின் முதன்மை இனத்தின் பழைய செய்கைத்தொடர்பு எனக் கருதுகின்றனர். §

ஆசியநாட்டில், இந்தியா, பர்மா, மலேயா முதலிய பகுதிகளில் வாழும் எருமையினம் ஒரே இயல்பும் பண்பும் உடையவாய் இருக்கின்றன. ஆப்பிரிக்கநாட்டுக் காங்கோ எருமையும், சுதான (Sudan) எருமையும், மேலை

---

* "Europe has buffaloes but not true natives; they are descendants of stock imported centuries ago from Asia. It ploughs, harrows, draws loads, carries burdens on its back, affords milk, butter, cheese, meat, and leather, all in turn"—*Ibid.*

§ For all its long ages of civilisation, the buffalo of Europe, like its cousins in the East, remembers by instinct its wild ways, and loves a mud bath when tired and the lush vegetation of marsh land—*Ibid.*

ஆப்பிரிக்கா எருமையும் நிறத்திலும் வேறுபட்டிருக்கின்றன. இவற்றுட் காங்கோ செம்மைநிறமும், சுதானம் சாணநிறமும் (Brown colour) மேலேயாப்பிரிக்காநாட்டவை மிக்க செம்மையும் பிறவும் கலந்த நிறமும் பெற்றுள்ளன. நம் நாட்டவை கருந்தாளும், செங்கண்ணும், வலிய கோடும், மெய்வன்மையும் பெற்றிருக்கின்றன. இவற்றை நம் தமிழாசிரியன்மார், சிறப்புற விதந்து கூறியுள்ளனர். "கருந்தாளெருமை" என இந்நூலுள்ளும், "கழுநீர் மேய்ந்த கருந்தாளெருமை" என நற்றிணையினும் (260) கூறப்படும். "நெறிமருப் பெருமை நீல விரும்போத்து," "கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்று," "சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்," எனவும், இவைபோல்வன பிறவும் மேற்கூறியவற்றை வலியுறுத்துவனவாகும்.

எருமையினத்துள் மக்கட்பயிற்சியில் வாராத காட்டெருமைகள், பயிற்சியில் வந்துள்ள ஏனையவற்றினும் மிக்க வன்மையுடையவாம். பயிற்சிபெற்ற எருமைக்கோடுகளையே, "இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை," "மள்ளரன்ன தடங்கோட் டெருமை" எனச் சிறப்பித்தும், மெய்வன்மையை, "கருங்கோட்டெருமை கயிறுபரிந் தசைஇ", "செங்கட் காரான், ஊர்மடி கங்குலின் நோன்றளை பரிந்து, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி" என எடுத்துமொழிபவெனின், காட்டெருமைகளின் வன்மைமிகுதி சொல்லவேண்டாவாயிற்று. காட்டெருமைக்கடாவொன்று மூன்று அரிமாக்களோடு போர்செய்யக் கண்டதாகக் கண்டோர் கூறியிருக்கின்றனராம். விலங்கு வேட்டையிற் கைதேர்ந்தவர்கள், அரிமாவின் ஆற்றலினும், வெகுண்டுபாயும் எருமைக்கடாவின் ஆற்றலே பெரிதும் அஞ்சத் தகுவதெனக் கட்டுரைக்கின்றனர்.*

---

* The courage of these beasts is superb, and one fine bull has been seen to do battle with three lions. Experienced hunters declare that the charge of a furious buffalo bull is more to be feared than that of the lion—*Ibid.*

சென்ற சில ஆண்டுகட்கு முன் டில்லிநகரத்தின் அருகில் நிகழ்ந்த புகைவண்டி விபத்திற்கும் ஓர் எருமையே காரணம் என்று கூறப்பட்டது.

எருமைகள் பெரும்பாலும் இரவுப்போதில் இரைமேய்தலும், பகற்போதில் ஓய்ந்திருப்பதும் இயற்கையாம். அவ்விராக்காலங்களில், அரிமாக்கள் உலவத்தொடங்கியதும், இவை அவ்வியல்பை மாற்றி, பகற்போதில் மேய்வதும் இரவில் ஓய்வுகோடலும் செய்வனவாயின.* பண்டைப் பயிற்சிவாசனையாற்றான், இப்போதும், சில எருமைகள் இராக்காலங்களில் கயிறு பரிந்துசென்று மேயல் ஆர்கின்றதும், இரவில் மேய்ந்து பகற்போதில் நீர்நிலைகளிற் படிந்து துஞ்செய் திப்பதன்றனபோலும். "பனிமலர்ப் பொய்கைப் பகல் செல் மறுகி மடக்கண் எருமை மாஅத்து தழீஇப், படப்பை நண்ணிப் பழனத் தல்கும்" என ஆசிரியர் உவர்க் கண்ணூர்ப் புல்லங்கீரனூர் உரைப்பது காண்க.

இனி, எருமையின் ஆணினை, கடா, போத்து, ஏறு எனவும், பெண்ணெருமையினை, நாகு, பெடை எனவும் சான்றோர் வழங்குப. "மடக்கண் எருமை மாஅத்து தழீஇ" (அகம். 146) எனவும், "எருமைப்பெடை" (கலி. 114) எனவும் வருதல் காண்க. பிறவெல்லாம் பயின்ற வழக்கினவாம். இவற்றுள் ஆண்எருமை உழவு, சுமைதாங்கிச் சேறல் முதலியவற்றைச் செய்யும். பெண்ணெருமை பாலும் நெய்யும் தயிரும் வழங்கும்.

எருமைப்பாலைக் கோடற்பொருட்டு, அதன் கன்றினை மனையகத்தே தூணிற் கட்டிவைப்பர். தன் கன்றினை அரிதின்

---

Generally they feed by night and rest by day; but it is asserted that in places much haunted by night-roaming lions, buffaloes have changed their habits and feed by day when lions are not abroad—a very remarkable fact—*Ibid.*

நீங்கி மேயற்கேகும் எருமை, ஆங்குத் தன் காதற் கன்றினை உள்ளியுள்ளிக் கனைக்கும்; அதுபோது அதன் மடி சுரந்து பால் தானே சொரியும். ஊர்க்குறுமாக்கள் (சிறுவர்கள்) விடியற்காலத்தே எருமையினை மேய்த்தற்கு ஓட்டிச் செல்வர். செல்வோர், அவற்றின் முதுகிலேறி யமர்ந்து செல்வர். இதனை ஆசிரியர் பூதன்றேவனார் என்பார், "மன்ற வெருமை மலர்தலைக் காரான், இன்றீம் பாற்பயன் கொண்மார் கன்றுவிட், டூர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும் பெரும்புலர் விடியல்" (நற். 80) என்றனர்.* மேலேறிய சிறுவர்களையும், அவர்களைச் சுமந்தேகும் எருமைகளையும் கண்ட மதுரை மருதனிளநாகனார் என்னும் நல்லிசைப்புலவர், எருமை துறுகல் போலவும், சிறுவர்கள் அதன்மேல் இருக்கும் மந்தி போலவும் உவமித்து, "திரிமருப் பெருமை, மயிர்க்கவின் கொண்ட மாத்தோ லிரும்புறம், சிறு தொழில் மகாஅர் ஏறிச் சேஎர்க்குத், துறுகல் மந்தியின் தோன்றுமூரன்" (அகம். 206) என நகைச்சுவை பயப்பக் கூறினர்.

கடாக்களை உழுதற்கும் சுமைதாங்கற்கும் பயன்கொள்வோர் அவற்றிற்கு வைக்கோலை உணவாகத் தருவர். "உழுத, நோன்பகடு அழிதின் றாங்கு" (புறம். 125) என வருதல் காண்க.

"அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய, பண்டச் சாகாட் டாழ்ச் சொல்லிய, வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும், பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ" (புறம். 90) என வருவதனால் எருமைக்கடா வண்டி யிழுத்தற்குப் பயன்படுமாறு அறியப்படும். இன்றும், நாட்டுப்புறங்களில் எருமைக்கடாக்கட்குக் கழுத்தில் மணிகட்டி, வண்டியிற் பூட்டித் தொழில்செய்வித்தல் கண்கூடு. மணிகட்டும் இச்செயல் பண்டும் இருந்த தென்பது, "திரிமருப் பெருமை

---

* எனவே, இரவில் மேயும் இயல்புநோக்கி, விடியற்போது தேர்ந்து கொள்ளப்பட்டது போலும்.

யிருணிற மையான், வருமிட றியாத்த பகுவாய்த் தெண்மணி, புலம்புகொள் யாமத்து இயங்குதொ றிசைக்கும்" (279) என வரும் குறுந்தொகைப் பாட்டாலும் அறியப்படுகிறது. தொழில் முடிந்தவழி, இவற்றைக் கழனிகளில் மேயவிட்டு, நீர்நிலைகளிற் கிடப்பித்தல் பண்டும் இன்றும் உள்ள செயல். மென்புலத்தை உழுத உழவர், எருமைகளை வன்புலத்து மேயவிடுவர் எனப் புறப்பாட்டு (395) ஒன்று கூறுகின்றது.

91. நெறிமருப் பெருமை நீல விரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே

குறைவேண்டிப் பின்னின்று வந்த தலைமகற்குத் தோழி, "இவள் இளையள், விளைவிலள்" எனச் சேட்படுத்தது.*

ப. ரை:— நாற்றம் கொள்ளப்படாத கரும்பின் பூவாற் செய்யப் பட்ட நெடிய மாலையை யுடையள் என்பதனாற் பேதை என்றவாறு அறிக. எருமைப்போத்து வெறிமலர்ப் பொய்கை யாம்பல் மயக்கும் ஊர் என்றது, நல்ல தன்மையை

---

*சேட்படுத்தல் என்பது சேட்படை யெனவும் வழங்கும். அஃதாவது, தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னினுய கூட்டங் கூட்டலுறும் தோழி, தலைமகளது பெருமையும், தனது முயற்சி யருமையும் தோன்றுதல் காரணமாகவும், இத்துணை யருமையுடையாள் இனி நமக்கு எய்துதற் கருமையுடையள் என இதுவே புணர்ச்சியாக நீட்டியாது வரைந்துகோடல் காரணமாகவும் தலைமகனுக்கு இயைய மறுத்துக் கூறுநிற்றல் என்பர் ஆசிரியர், பேராசிரியர். "சேண் என்பது அகற்றல்; பட வென்பது நிகழ்தல்; நிறுத்த லென்பது தழீஇக்கோடல்: காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக்கோடல் என்றவாறு" என்பர் இறையனார் அகப்பொருள் உரைகாரர்.

யாராயாது கெடுக்கும் ஊராதலால், இனக்த ஈண்டு வருதல் பொருந்தா தென்பதாம். பழனவெதிர் என்பது கரும்பு.

பு. ரை:— முடங்கிய கொம்புகளையுடைய எருமையின் கரிய பெரிய ஆண், மணமுற்ற பூக்கள் நிறைந்த பொய்கைக் கண் உள்ள ஆம்பலைச் சிதைக்கும் கழனிகளை யுடைய வூர னுக்கு மகளாகிய இவள், பழனங்களிலுள்ள கரும்பின் பூவால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையினை யுடையளாவாள் காண் எ. று.

நெறி, முடக்கம்; "வாடிய நெறிகொள் வரிக்குடர்" (புறம். 160) என்பதன் உரைகாண்க. எருமையின் மருப்பு, ஓங்கிநில்லாது, மெய் முகங்களின் நெறியே முடங்கிவளர் தலின் நெறிமருப்பு எனப்பட்டது போலும். நீலம், கருமை; "திரிமருப் பெருமை யிருள்நிற மையான்" (குறுந். 279) என்ப வாகலின், நீலம் ஈண்டுக் கருமையாயிற்று. "போத் தும் கண்டியும் கடுவனும் பிறவும், யாத்த வான்பாற் பெயர வென்ப" (பொ. 557) என்றதனுல், எருமையின் ஆண் போத்து எனப்பட்டது. "அரிமல ராம்பல் மேய்ந்த நெறி மருப், பீர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து" (அகம். 316) எனப் பிறரும் கூறியவாறு காண்க. வெதிர் என்னும் வினைவேறுபடாப் பலபொரு ளொருசொல், பழனவெதிர் எனக் கிளக்கப்பட்டமையின், கரும்பின் மேலதாயிற்று. "வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல், நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்" (சொல். 54) என்பது தொல்காப் பியம். ஈண்டு, முதலிற் கூறும் சினையறி கிளவியாய்க் கரும் பின் பூவைச் சுட்டிற்று.

தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னினாகிய கூட்டம் கூட்டலுறுவிக்கும் தோழி, தலைவன் தெருண்டு நீட்டியாது வரைதல் வேண்டி, உள்ளுறையால் காப்புமிகுதியும் தலைவிய தருமையும் உணர்த்தி, வெளிப்படையால் அவளது இளமைப் பருவத்துப் பேதைமையினைக் குறித்துச் சேட்படுக்கின்று

ளாகலின் தலைவியை, பழன வேதிரின் கோடிப்பிணையலள் என்றாள். எனவே, சிறப்பில்லாத கரும்பின்பூவால் பிணையல் தொடுக்கும் இத்துணைப் பேதைமையுடையாள், நின் குறையைப் போக்குமாறு இல்லை என்றும், நீயே தெருண்டு நீட்டியாது வரைதல் வேண்டும் என்றும் தோழி கூறினாளாம். "நறுந்தண் தகரம் வகுள மிவற்றை, வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி எறிந்துழுது, செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு, நொந்தினைய வல்லளோ நோக்கு" (திணைமா. 150—24) எனப் பிறரும் கூறுதல் காண்க.

எருமைப்போத்து, பொய்கைக்கண் ஆம்பலின் நலங் கருதாது அதனைச் சிதைக்கும் என்றதனால், நின் வரவால் விளையும் நன்மையை யாராயாது, இவ்வூரவர் நினக்கு ஏதம் செய்வர் என்றவாறும். ஆகவே, இது தலைவிய தருமை குறிக்கு முகத்தாற் காப்புமிகுதி யுரைத்து வரைவுகடாவும் நோக்க முடைத்தாதல் அறிக. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவன் தெருண்டு வரைவானாவது.

பழநல் வேதிரின் என்ற பாடத்துக்குப் பழமையான நல்ல கரும்பின்பூ, என்க. எனினும், இது பலபொருட்குரிய பொதுமை நீங்கிக் கரும்பிற்கே யுரிய சிறப்புப் பொருண்மை விளங்கநில்லாமையின் சிறிய பாடமாதலின்மையறிக. (க)

92. கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே.

"நினக்கு வரைந்து தருதற்குக் குறை நின் தமர் அங்கு வந்து கூறுமையே," யெனத் தோழி கூறினளாக, தலைமகள் முகநோக்கி இவள் குறிப்பினாற் கூறினா ளென்ப தறிந்த தலை

மகன், "வரைவுமாட்சிமைப்படின் நானே வருவல்" எனத் தலைமகட்குச் சொல்லியது.

ப. ரை:— எருமைப் புனிற்றுத் தன் குழவிக்கு ஊறுமுலை மடுக்கு மென்றது அவள்பெறநட்டு உற்றார்பக்கல் தான் பெறுவனவும் கூறியவாறு.

பு. ரை:— பெரிய கொம்பினையும் சிவந்த கண்ணினையும் ஈன்ற அணிமையினையு முடைய தாயெருமை, தன் அன்புடைய கன்றுக்குச் சுரக்கும் முலை தந்து பாலூட்டும், நின் தந்தையது ஊர்க்கு, ஒள்ளிய வளை யணிந்த மடந்தையாகிய நின்னை யாம் பெறுதல் கூடுமாயின், யானே வருவேன் எ.று.

கருமை, பெருமை; நிறப்பண்புமாம். எருமை சிவந்த கண்ணினை யுடைமை, "கருங்கோட்டுச் செங்கண் எருமை" (திணைமா. 150—137) என்பதனாலு மறிக. தன் கன்றின் நினைவு தன் உள்ளத்து எழுந்த துணையானே, ஒள்ளிய மடி சுரந்து பால் மிகச்சொரியும் வளம் சிறந்த தாகலின், எருமையின் மடியை, "ஊறுமுலை" யென விசேடித்தார். புனிற்று, முலை மடுக்கும் ஊர், நுந்தை நும்மூர் என இயையும். உரனுடைமை தோன்றக் கூறலின், வருதும் எனப் பன்மைவந்தது.

பல்லாற்றானும் சேட்படை முதலியவற்றால் அருமை செய்து அயர்க்கப்பட்டுத் தலைவியைப் பெறலருமை நினைந்து வருந்துமாறு தோன்ற, நின்னையாம் பெறினே என்றும், பெறுதல், வரைவுமாட்சிமைப் படுதலாதலின், அது நிகழ்ந்த விடத்துத் தன் தமர் வரவு தாழ்ப்பினும், தான் தாழாது வருவது விளங்க, நுந்தை நும்மூர் வருதும் என்றும் தலைமகன் கூறினான். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: வரைவு.

இனி, ஆசிரியர், பேராசிரியர், "கிழவோற் காயின் உரனொடு கிளக்கும், ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே"

(பொ. 302) என்புழி, இதனைக் காட்டி, "தாய் போன்று நம்மைத் தலையளிப்பல் எனத் தலைமகன் தலைமைதோன்ற உரனொடு கிளந்தவாறு காண்க" என்பர். பழையவுரைகாரர் "எருமைப்புனிற்றாத் தன் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும் என்றதனால், அவள்பொருட்டுத் தான் உற்றார்பக்கல் பெறு வனவும் கூறியவாறு" என்பர். இவ்விருவருள், பேராசிரி யர் கூறுவது, "வரைவுடன் படுதலும் ஆங்கதன் புறத்தும்" (பொ. இளம். 105) என்புழி வரைவுடன்பட்ட தலைவன் நிகழ்த்தும் கூற்றுவகையிலும், பழையவுரைகாரர் கூறுவது, "வரைதல் வேண்டித் தோழி செப்பிய, புரைதீர் கிளவி புல் லிய வெதிர்" வின்கண் தலைமகன் நிகழ்த்தும் கூற்றுவகை யினும் அடங்குமாறு காண்க.

அருங்கோட்டெருமை என்ற பாடத்துக்குப் பகை யினம் நெருங்குதற் கரிய கோட்டினையுடைய எருமை யென்க. (உ)

93. எருமைநல் லேற்றின மேய லருந்தெனப்
பசுமோ ரோடமோ டாம்ப லொல்லா
செய்த வினைய மன்ற பல்பொழிற்
றாதுண வெறுக்கைய வாகியிவள்
போதவிழ் முச்சி யூதும் வண்டே.

முயக்கம் பெற்றவழிப் பிறந்த வேறுநாற்றத்தால் பண்டை யளவன்றி வண்டுகள் மொய்த்தனவாக, "இதற்குக் காரண மென்?" என்று வினவிய செவிலித்தாய்க்குக் கூறுவாள் போன்று, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

ப.-ரை:— அன்னாய், பல பொழில்களிலும் மலர்ந்துள்ள பூக்களிற் றேனாகிய உணவை வெறுப்பவுண்டு, இவளது மலர்ந்த பூவணிந்த கூந்தலை மூசி முரலும் வண்டினம், எரு மையின் நல்ல ஏற்றினம் மேய்ந்துவிட்டதனால், பசிய செங்

கருங்காவியும் ஆம்பலும் பொருந்தாவாயின ; அவை தேன் ஈட்டுவதாகிய வினைமுற்றின, அதனால், இவ்வாறு மொய்ப்ப வாயின, காண் எ. று.

வெறுக்கையவாகி, முச்சி யூதும் வண்டு, ஏற்றினம் மேயல் அருந்தென, மோரோடமோடு ஆம்பல் ஒல்லா: அவை செய்த வினைய மன்ற என இயையும். போத்து முதலியன போல, ஏறு, ஏற்றை என்பனவும் "யாத்த ஆண்பாற் பெய ரென மொழிப" (பொ. 527) வாகலின், எருமையின் ஆண் ஏறெனப்பட்டது. உழுதொழிற்கும், பண்டி யிழுத்தற்கும் பயன்படும் சிறப்புடைமையின், "நல்லேற் றினம்" என்றார். ஆர்ந்தென என்பது அருந்தென என வந்தது. மேயல் ஆர்ந் தென்பது ஒரு சொல்லாய் மேய்ந்தெனும் பொருளதா யிற்று. செய்தெனவென்னும் வினையெச்சம் முடிக்குஞ் சொல்லா னுணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத் தொழில் காரணம் என்பதுபட வரும் இயல்பிற்றாகலின், வண்டினம் ஒல்லாமைக்கு மேயலருந்தென வென்றது ஏது வாயிற்று. மோரோடம், செங்கருங்காலி. இதன்பூ மிக்க மணமுடையது; இப்பூவை ஏனை மல்லிகை முதலிய நறிய பூக்களோடு விரவிச் செப்பினுள் அடைத்துவைத்தலும் பண்டையோர் மரபு: "முதிரா வேனில் எதிரிய அதிரல், பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோரோடமொ (டு) உடனெறிந் தடைச்சிய செப்பு" (நற். 337) என ஆசிரியர் பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறியவாற்றால் இஃதுணரப் படுகிறது. இம் மோரோடம் மாரோடமெனக் குறிஞ்சிப்பாட் டிற் காணப்படுகிறது; "குல்லை பிடவம் சிறுமா ரோடம்" (78) என வருதல் காண்க. செய்த வினை, செய்து முடிக்கப்பெற்ற வினை ; எனவே, நிகழ்வில் அவ்வினையின்மை கூறியவாறாயிற்று. மன்ற, தெளிவுப் பொருட்டாய இடைச் சொல். பல்பொழில் என்பது வினைப்படு தொகுதி யன்மை யின், முற்றும்மை வாராதாயிற்று. போதவிழ் முச்சி யூதும் என்றதனால், அவிழ்ந்த போதிலுள்ள தேனையும் உண்ணாது வெறிதே ஊசி முரன்றமை பெற்றாம்.

பல பொழில்களுக்கும் சென்று, ஆங்கு மலர்ந்து தேன் நிரம்பி நிற்கும் பூத்தொறும் தேனை வெறிக்கவுண்டு, அவற்றை வெறுத்த வண்டினம், இவள் கூந்தலில் மொய்த்து முரலுகின்றன என்பாள், பல்பொழில் தாதுணை வெறுக்கைய வாகி இவள் போதவிழ் முச்சி யூதும் என்றாள். எனவே, பொழிற் பூக்களை வெறுத்தமையால் வண்டினம் மணங்கருதி இவள் போதவிழ் முச்சியினை நயந்தனவே யன்றிப் பிறிதில்லையெனச் செவிலிக்கு விடையிறுத்தவா றாயிற்று. அற்றேல், மோரோடமும், ஆம்பலும் இத்தகைய மணங்கமழுவன வுளவேயெனின், அவையும், எருமையின் ஏற்றினம் மேய்ந்து ஒழிந்தமையின் இலவாயின என்பாள், எருமை நல்லேற்றினம் மேயலருந்தேன, பகுமோரோடமோ டாம்பல் ஒல்லா என்றாள். மோரோடம் மகளிர்கூந்தலின் மணங்கமழும் என்பது, "நறு மோரோடமோ டுடனெறிந் தடைச்சிய, செப்பிடந் தன்ன நாற்றம் தொக்குடன், அணிதிறங் கொண்ட மணிமருளைம்பால், தளர்நறுங் கதுப்பு" (நற். 337) எனவரும் நற்றிணைப் பாட்டாலும், ஆம்பலின் மணமும் அத்தகையதே என்பது, "ஆம்பல்நாறும் தேம்பொதி நறுவிரை" * (சிலப். 4 : 73)

---

* "அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை, ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத், தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தல்" எனவரும் இதற்கு, அரும்பதவுரைகாரர், "அன்னமாகிய மென்னடையினையும், ஆம்பல் நாறும் நறுவிரையையும், தாமரையாகிய செவ்வாயையும், அறலாகிய கூந்தலையு முடைய பொய்கையாகிய பெண்" என்றார். எனவே, இதன்கண் கூறிய நடை, விரை, வாய், கூந்தல் என்ற இவற்றிற்கு முறையே அன்னமும், ஆம்பலும், தாமரையும், அறலும் உவமைகளாக நின்றனவாம். இனி ஆசிரியர் அடியார்க்குநல்லார், தேம்பொதி நறுவிரை ஆம்பல் நாறும் தாமரை யென இயைத்துப் பொருள்கொள்வர்; "இனித் தேம்பொதி நறுவிரைத் தாமரையாகிய ஆம்பல் நாறும் செவ்வாய் எனினுமமையும்" என உரைவிகற்பமும் கூறுவர். எனினும், இவ்வைங்குறுநூற்றுப் பாட்டின் கருத்தைநோக்கின், அரும்பதவுரைகாரர் கூறுவதே உண்மையுரையாதல் விளங்குகிறது. இஃது அறிஞர் ஆராய்ச்சிக் குரியதொன்று.

எனவரும் இளங்கோவடிகளின் பேருரையாலும் இனிதுணரப்படும்.

எஞ்ஞான்றும் தேன்நாடி யீட்டலே இடையறாத வினையாகவுடைய வண்டினம், அஃதொழிந்து வாளா மூரலுமாறில்லையே யென எழும் வினாவிற்கு விடை கூறுவாள், அவை அவ் வினையை முற்ற முடித்துவிட்டன என்றற்கு, செய்த வினைய மன்ற என்றாள். "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" (குறுந். 2) என்றதனால், வண்டினம் தேனாடும் வினையினையுடைய வென்பதும், முற்றாத வினை, செய்த வினை யெனப்படாமையின், வினைமுற்றியவாறும் அறிந்துகொள்க.

இதனாற்பயன், சிறைப்புறத்து நின்ற தலைமகன், எருமையின் ஏற்றினம் மேய்ந்தமையால், வண்டினம் மோரோடமும் ஆம்பலும் ஒல்லாவாயின என்றது, தன்னோடு கூடியதனால் தலைமகள்பால் உற்ற வேறுபாட்டினை அவள்தமர் உணர்ந்து இற்செறித்தமையும், அவை, தாதுண வெறுக்கையவாகி, இவள் போதவிழ் முச்சி யூதும் என்றது, இவளது வேறுபாட்டினைச் சூழ்ந்து அயலா ரெடுத்த அலர் நினைந்து வரைய முயலாது, தான் (தலைவன்) களவே விரும்பியொழுகுவதும் சுட்டிநின்றமை தெரிந்து வரைவானாவது. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: செவிலி ஐயம்தீர்தலும், தோழி குறிப்பால் வரைவுகடாதலுமாம்.

எருமைநல் லேற்ன மேய லருந்தென என்ற பாடத்துக்கு, ஏற்றினம் ஏறினம் என வந்ததாக உரைத்துக் கொள்க. போதவிழ் மூச்சூய் ஊதும் வண்டு என்பது பாடமாயின், போது அவிழ்ந்து நெகிழ்ந்து பதனழிய வூதும் வண்டு என்று உரைத்துக்கொளக. ஊய்தல், பதனழிதல். (௩)

94. மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன துணையொடு வதியும்

நிழன்முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்
கவின்பெறு சுடர்நுதல் தந்தை யூரே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீள்கின்றான் சொல்லியது.

ப. ரை :—ஏர் நலைமை துணையொடு வதியு மென்றது வரைந் தெய்தியவழித் தலைமகளோடு தான் ஒழுகும் இன்பவொழுக்கத் தினை நினைந்து கூறியவாறு. கழனித் தாமரை மலரும் என்றது, அவ்விடத்துத் தன்னைக் கண்டு மகிழ்வார் முகமலர்ச்சி கூறிய வாறும்.

பு. ரை :—அழகுபெற்ற ஒளிவீசும் நெற்றியினையுடையாட்குத் தந்தையினது, கழனிக்கண் தாமரை மலரும் ஊர், வீரர் போன்ற பெரிய கொம்பினையுடைய எருமை, அவர்தம் மகளிர் போன்ற துணையாகிய பெண்ணெருமையோடு தங்கும் நிழல் சூழ்ந்த குளத்தருகேயுள்ள பழனத் திடத்த தாகும். எ. று.

எருமைக்கு வீரர் உவமையாதல், "கார்ச்சே ணிகந்த கரைமருங்கி னீர்ச்சேர்ந், தெருமை யெழிலே றெறிபவர் சூடிச், செருமிகு மள்ளரிற் செம்மாக்கும்" (கார். 40 : 31) என்றும், "ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து........ மூதூர்ப், போர்செறி மள்ளரிற் புகுதரு மூரன்" (அகம். 316) என்றும் சான்றோர் கூறுமாற்றால் தெளியப்படும். ஆண்எருமைக்கு மள்ளரைக் கூறினமையின், அவற்றின் துணைக்கு அவர்தம் மகளிரை உவமைகூறினர். முதிர்தல், சூழ்தல்; "பார்முதிர் பனிக்கடல்" (முருகு. 45) என்றாற் போல. தடங்கோடு, உரிச்சொல்முடிபு. பழனம், ஊரவர்க்குப் பொதுவாகிய நிலம் என்ப.

தனக்குச் சிறந்தாளாகிய தலைமகளைத் தலைமகன் நினைக்குந்தோறும், அவளது திருநுதல், அவன் நெஞ்சிடைத் தோன்றி, அழகும் ஒளியும் திகழ நின்று, தன்னை யவன் கண்ணிற் காண்புழியினும் மிக்கு விளங்குதலின், கவின்பெறு சுடர்நுதல் எனச் சொல்லி யின்புற்றான். வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தான் ஒருவன், வினைமுடியாமையின் பாசறைக்கண் இருந்து, தான் குறித்த பருவவரவு கண்டு ஆற்றாது தன் தலைவியை நினைந்தானாக, அவன் உள்ளத்தும் அவளது நுதல் தோன்றுதலின், அஃது, "இலங்கு நிலவின் இளம்பிறை போல..........கவின்பெறு சுடர்நுதல்" (ஐங். 443) என்று அவனால் சிறப்பிக்கப்பட்டவாறறிக. இது, "பண்பிற் பெயர்ப் பினும்" (பொ. 103) என்ற சூத்திரத்து "ஆற்றிடை யுறு தலும்" என்றதனை இரட்டுறமொழிதலால், "வரை விடை வைத்துப் பிரிந்தான் ஆற்றிடை வருத்தமுற்றுக் கூறுவன வும்" கொள்ளப்படும் என்று கொண்டு, அமைத்துக்கொள் ளப்படும். அதனான், வரைவிடைவைத்துப் போகின்றான் கூறு வனவும், மீள்கின்றான் கூறுவனவும் என்ற இரண்டனுள், இது, வரைந் தெய்தியவழித் தலைமகளோடு தான் ஒழுகும் இன்ப வொழுக்கத்தையும், வரைவின்கண், காண்போர் மகிழுமாற் றையும் உள்ளுறுத்துக் கூறுதலின், மீள்கின்றான் கூற்றாயிற்று.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிபவன், அது முற்றுதவழி, அதனானும் பயனை நினைந்து தன்னுள் மகிழ்தல் ஆள்வினை மிக்க அவன் தலைமைக்குணத்துக் கிழுக்காதலின், அவ்வாறன்றி, அது முற்றியதும், அதனை லெய்துதும் பய னும் உடனெய்திபது போறலின், தன்னுள் மகிழ்ந்து, தான் பெறவிருக்கும் இன்பவொழுக்கத்தினை நினைந்து உவகையுறு வான், மள்ள ரன்ன தடங்கோட் டெருமை, மகளி ரன்ன துணையோடு வதியும் என்று வியந்தான். நிழல்முதிர் இலஞ் சிப் பழனத்தது என்றது, தலைவி மனையின் அருளும் பொரு ளும் சிறப்பித்தவாறு.

இதுகாறும், பிறர் அறிவுறுதல் அஞ்சி மறைந்து ஒழுகியது போலாது, கண்டோர் மகிழ்ந்து முகமலர்ச்சி செய்து, மாறு ஒழுகுவது நினைந்து உள்ளம் பூரிக்கின்றான் என்பது எய்தக் கழனித் தாமரை மலரும் என்றான். தலைவிக்கு ஊர் தன்னூரே யாதலின், அவள் வாழும் ஊரை, அவட்கு அயன்மை தோன்ற, தந்தையூர் என்றானும். இனித் தன் வரைவு எதிர்கொண்டு மகட்கொடை நேரும் உரிமையுடையவன் அவனாகலின், தந்தை யூர் என்றான் என்றுமாம். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல்.

திறங்கோடு என்ற பாடத்துக்கு மள்ளர் போலத் தொழிற் கூறுபாட்டினையுடைய கோடு என்க. தொழிற் கூறுபாடு, கொலைவகை.

இவை நான்கும் மருதத்துக் களவு.

95. கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லி னுண்மே யலாரும்
புனன்மலி யூரன் பகலும்
படர்மலி யருநோய் செய்தன னெமக்கே.

உண்டிக்காலத்து மனைக்கண் வருதலும் சுருங்கிப் பரத்தையிடத்தனாய்த் தலைமகன் ஒழுகியவழி, அவற்கு வாயிலாய் வந்தார்க்குத் தலைமகள் சொல்லியது.

ப. ரை:— எருமை கயிற்றைப் பரிந்துபோய் நாண்மேயலாக மேய்ந்தது, விலக்குவாரின்றி அடங்காது புறத்தொழுக்கம் விரும்புவரன் எ று.

டு. ரை :—பெரிய கொம்புகளையுடைய எருமைகள் இரவில் தாம் கட்டப்பெற்றிருக்கும் கயிற்றை யறுத்துக்கொண்டு சென்று, நெடிய கதிர்களையுடைய நெல்லினை நாளுணவாக வுண்ணும் நீர் நிறைந்த வயல் சூழ்ந்த வூரன், பகற்காலத்தும்

படர்மலி யருநோயினை எமக்குச் செய்தொழுகுகின்றான் அவன் பொருட்டு வாயில் வேண்டுவ தென்னை எ. று.

பரிதல், அறுத்துக்கோடல்; "சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான், ஊர்மடி கங்குலின் நோன்றளை பரிந்து, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி" (அகம். 46) எனச் சான்றோர் தெரிக்குமாறு காண்க. நாண்மேயல் விடியற்காலத்திற் பெறும் மேய்ச்சல்; நாளிரை, நாளுணவு என்பன போல. "இருவெதி ரீன்ற வேற்றிலைக் கொழுமுளை, சூன்முதிர் மடப்பிடி நாண்மேய லாரும்" (நற். 116) எனப் பெரியோர் வழங்குமா றறிக. பரத்தைமையால் இரவுப் போதில் வாராமையே யன்றி, உண்டிக்காலமாகிய பகற்போதிலும் தலைவனது வாராமை உணர்த்திநிற்றலின், உம்மை இறந்தது தழீஇயிற்று. முற்றுதல், சூழ்தல். படர்மலி யருநோய், பலகாலும் நினைப்பெழுதலால் உளதாகும் பொறுத்தற்கரிய நோய்; இது சான்றோர் உரைகளில் "நன்னுதற் பசந்த படர்மலி யருநோய்" (நற். 322) எனவும், "படர்மலி யெவ்வமொடு மாதிரந் துழைஇ" (அகம். 189) எனவும் வருதல் காண்க.

தோழி முதலிய அகம்புகு மரபின் வாயில்கள் விலக்கவும் அடங்காது புறத்தொழுக்கமே விரும்பித் தலைமகன் இரவிற் பிரிந்தொழுகியதனால், படர்மிகுந்து தான் வருந்தியிருந்ததனை உள்ளுறையாற் குறித்தவள், "இரவுக்காலத்து அவன் வாராமையால் எழுந்த வருத்தத்தை, உண்டிகோடற்குப் பகற்காலத்து வருதலால் ஆற்றியிருந்தேன்; இனி அதுவும் ஒழிந்தமையால் ஆற்றேனாயினேன்" என்பாள், பகலும் படர்மலி யருநோய் செய்தனன் என இனைந்து கூறினாள். வாராமையாகிய வினை அவன்பால் நிகழ்ந்ததாயினும், அதன் பயனாய் விளையும் துன்பம், இரவும் பகலும் முறுகிப் பெருகிப் பொறுத்தற்கரிய துன்பத்தைப் பயப்பதாயிற் றென்றற்கு, படர்மலி யருநோய் என்றும், அதுதானும் அவன் வந்தவழி அருகுதலும், வாராவழிப் பெருகுதலும் செய்தலின், அந்

நோய்முதல் அவனே என்பாள், செய்தனன் என அவன் வினையாகவும் கூறினாள். வாராவழி, அவன் தனக்குச் செய்த தலையளி நினைவில் எழுந்து வருத்துவதோடு, பரத்தை முதலாயினார்க்குச் செய்தலால் பொறாமை தோற்றி மிக்க நோயினை விளைவிப்பத் தான் ஆற்றாளாவது கண்டு, தோழி முதலாயினாரும் ஆற்றாது மிகவருந்துகின்றமையின், தான் ஆற்றாமை மீதூர்ந்தமை தோன்றத் தலைவி, எமக்கே என எடுத்துமொழிந்தாள்.

இரவில், எருமை, கயிற்றைப் பரிந்து போய் நெல்லின் நாண்மேய லாரும் என்றதனால், தலைவன் இரவுப்போதில் வாராது, விலக்குவார் சொல்லும் கொள்ளாது, புறத்தொழுகியது கூறியவாறாயிற்று. நெடுங்கதிர் நெல் என விசேடித்தது, பரத்தையின் நலத்தைப் புகழ்வது போலப் பழித்தவாறு. பரத்தையின் நலத்தை நாண்மேய லென்றமையின், அந் நலத்தின் புதுமை சுட்டினாளாம். ஆகவே, இவ்வாறு யாவர் விலக்கினையும் கைகடந்து சென்று புதுநல மகளிரைக் கூடியுறைபவன், எம்மை நினைந்து வருமாறு இல்லை யாகலின் அவன்பொருட்டு நீவிர் வாயில் வேண்டுவ தென்னை யென மறுத்தவாறு. இஃது அழிவில் கூட்டத் தவன் பிரிவாற்றாமை. ஏனை மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல். (ரு)

96. அணிநடை யெருமை யாடிய வள்ளல்
மணிநிற நெய்த லாம்பலொடு கலிக்கும்
கழனி யூரன் மகளிவள்
பழன வூரன் பாயலின் றுணையே.

பரத்தையர் பலரோடும் ஒழுகுதல்கண்டு பொறாதிருந்த தலைமகள், தலைமகன் மனைக்கட் புகுந்துழி, உடன்படுதல் கண்ட வாயில்கள் தம்முள்ளே சொல்லியது.

ப. ரை:— எருமை உழுதுழக்கிய அள்ளற்கண்ணே நெய்தலும் ஆம்பலும் கலித்தும் என்றது, தலைமகற்கு வேண்டுவன புரிகின்ற இல்வாழ்க்கைக்கண்ணே தாம் பெறுகின்ற சிறப்புக் கூறியவாறு.

பு. ரை:—அழகிய நடையினையுடைய எருமை உழக்கிய சேற்றின்கண், நீலமணியின் நிறத்தினையுடைய நெய்தலும் ஆம்பலும் தழைக்கும் கழனிகளையுடைய ஊரனுக்கு மகளாகிய இவள், பழனங்களையுடைய ஊரனாகிய தலைமகற்குப் பாயல் இன்துணைவி யாயினாள் எ. று.

"வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகடு" (புறம். 90) எனச் சான்றோர் சிறப்பிக்கும் அழகு உடைமையின் "அணிநடை யெருமை" யென்றார். அழகு, ஈண்டுப் பெருமிதம். எருமை யுழக்கிய வயல் சேறுற்று உழுததுபோல வளம்பெறுதலின், நெய்தலும் ஆம்பலும் தழைப்பவாயின வென வுணர்க. நெய்தல் நீலமணிபோல்வ தென்பது, "சுரும்புண மலர்ந்த பெருந்தண் நெய்தல் மணியேர் மாணலம்" (அகம். 290) என வருதலானும் துணியப்படும். ஊரன்மகள் என்பது "அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகை" யாதலின், நான்கனுருபு விரித்துரைக்கப்பட்டது. ஏனை யிடங்களினும் இதனை உரைத்துக்கொள்க. பாயல் இன்துணை, கூட்டத்திற் கினியதுணை, "பாய லின்றுணை யாகிய பணைத்தோள், தோகை மாட்சிய மடந்தை" (ஐங். 293) எனப் பிறாண்டும் வருமாறு காண்க. பாயல், உறக்கமுமாம்; "பன்னாளும் பாயல்பெறேஎன் படர்கூர்ந்து" (கலி. 37) என்றாற்போல.

பரத்தையர் பலருடன் கூடி யொழுகும் பான்மையன் என்றற்குப் பழனவூரன் என்றும், அவ் வொழுக்கத்தாற் பொறாது வேறுபட்டிருந்தாள், அவன் வருதலும் புலத்தலின்றிக் கற்புக்கடம் பூண்டமைந்தமையின், பாயல் இன்றுணை என்றும் கூறினர்.

தாம் வாழும் அள்ளற்கட் புகுந்து, தம்மை மயக்கி யுழக்கிய எருமைக்கு, தாமே களித்துப் பயன்படும் நெய்தலும் ஆம்பலும் உள்ள கழனியூரன் மகள் என்றது, தலைவன் புறத்தொழுக்கத்தால், தன்னைக் கலக்கி நுதல் பசந்து மேனி வேறுபாடு எய்துவித்தானாகவும், தலைவி அவன் புக்கவழி எதிரேற்று வழிபாடு புரிந்த கற்புநலத்திற்கு ஏதுவாகி நின்றது. இது, "கற்புங் காமமும்" (பொ. 150) என்புழிக் கூறப்படும் கிழத்தி மாண்புகளுள் நற்பாலொழுக்கம்.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியார், "இது கற்புக் கூறியது" என்றும், இவ்வாறு வாயில்கள் தம்முட் கூறியது, "வாயி லுசாவே தம்முளு முரிய" (பொ. 512) என்பதனு லமையு மென்றும் கூறுவர். இனிப் பழையவுரைகாரர், எருமையின் செய்தியால், ஆம்பலும் நெய்தலும் தழைக்கு மென்றது, வாயில் பெறும் சிறப்புக்கூறித்து நின்றது என்பர். மெய்ப்பாடு: வியப்பு. பயன்: தம்முள் மகிழ்தல்.

அணிநிற வெருமை என்ற பாடத்துக்கு அழகிய நிறம் உடைய எருமை யென்று பொருள்கூறிக் கொள்க. (சு)

97. பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தா ளெருமைக் கன்று வெரூஉம்
பொய்கை யூரன் மகளிவள்
பொய்கைப் பூவி னறுந்தண் ணியளே.

புறத்தொழுக்கம் இன்றியேயிருக்கவும், உளதென்று புலந்த தலைமகளைப் புலவி நீக்கிய தலைமகன், புணர்ச்சியது இறுதிக்கண் தன்னுள்ளே சொல்லியது.

ப. ரை:—தாயினுடைய பகன்றைமலர் மிடைந்த கோட்டைக் கன்று வெரூஉம் என்றது, தன் தோளி லணிந்த மாலையைப் பிறிதொன்றற் கணிந்த மாலை யெனக் கருதினாள் என்பதாம்,

பு. ரை :—பகன்றையின் வெள்ளிய மலர்மிடைந்த கரிய தாள்களையுடைய தாயெருமையின் கோட்டைக் கண்டு, அதன் கன்று அஞ்சும் பொய்கையூரனுக்கு மகளாகிய இவள், பொய்கைக்கண் மலர்ந்த நறிய பூக்களினும் குளிர்ச்சியுடையளாய் உளள் எ. று.

வான்மலர், வாலியமலர்; "வான்சுதை வண்ணம் கொளல்" (குறள். 714) என்றாற்போல. மிடைதல், நெருங்கக்கூடுதல். எருமை பகன்றை மிடைந்த கோட்டவாய் வருமென்பதனை, "எருமைச் சுவல்படு முதுபோத்து........குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப், போர்செறி மள்ளரிற் புகுதரும்" (அகம். 316) என்பதனாலும், அது கருந்தாளதென்பது காட்சியளவையானேயன்றி, "கழுநீர் மேய்ந்த கருந்தா ளெருமை" (நற். 260) எனவரும் சான்றோர் உரையாலும் உணரப்படும். ஐந்தாவது உறழ்வின்கண் வந்தது. தட்பத்தை உணர்ந்து மகிழ்ந்து கூறலின், ஏகாரம் தேற்றம். கன்று வெரூஉம் ஊரன், பொய்கையூரன் என வியையும்.

தனபாற புறத்தொழுக்கம் இன்றாகவும், உளதெனக் கருதிப் புலந்த தலைவியைத், தெளியத் தருவன கூறிக் கூடினனாகலின், அதனைப் பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக் கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம் என உள்ளுறுத்துரைத்தான். வெயில் தெறும் வெம்பகற்போதின்கண், பொய்கைநீர் புறத்தே சிறுவெம்மையும், அகத்தே தட்பமும் உடையதாதல் போலத் தான் புறத்தொழுகிய காலத்துத் தலைவி, புறத்தே வெகுண்டாள்போலவும், அகத்தே அன்பு மிக்கும் ஒழுகற்பாலள் என்பான், பொய்கையூரன் மகள் என்றும், அஃதில்வழி, என்ஞான்றும் தட்பங் குன்றாத பொய்கைப்பூப்போல் தண்ணியளாதற் குரியாள், அதனினும் மிக்க தட்ப முடையளாயினாள் என்பான், பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே என்றும் கூறினான்.

பொய்கை யென்றது குடிமைச்சிறப்பினைச் சுட்டியதாயின், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தொழுகும்

சால்புடைமை விளக்கியதாகக் கொள்க. இவ்வாறு தலைவி யைத் தலைவன் புகழ்தல் வேட்கைமிகுதியால் நிகழ்தலின் அமையும் என்பர்; "நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதி யின், புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே" (பொ. 228) என்ப.

தாயெருமையின் கோட்டிற் கிடந்த பகன்றைமலரைக் கண்டு, அதன் கன்று வேறுபட நினைந்து வெருவியது போல, தன் தோளிற் கிடந்த மாலையைப் புறத்தே பிறர் அணிந்த தெனப் பிறழ வுணர்ந்து புலக்கின்றாள் என்றாளும். இஃது உள்ளுறை வகை யைந்தனுள் நகையின் பாற்படும். மெய்ப் பாடு: உவகை. பயன்: மகிழ்தல்.

98. தண்புன லாடுந் தடங்கோட் டெருமை
திண்பிணி யம்பியிற் றோன்று மூர
ஒண்டொடி மடமக ளிவளினு
நுந்தையும் யாயுங் கடியரோ நின்னே.

புறத்தொழுக்கம் உளதாகிய துணையானே புலந்து வாயில் நேராத தலைமகள் கொடுமை தலைமகன் கூறக் கேட்ட தோழி அவற்குச் சொல்லியது.

ப. ரை:—இவளினும் நுந்தையும் யாயும் கடியரோ என் றது, நின்னிடத்துக் குற்ற முளதாகியவழிக் கழறுங்கால் இவளி னும் கடியரோ நுந்தையும் யாயும் என்றவாறு; அவரினும் கடு மையாற் கூறுதற் குரியாள் இவள் என்பதாம். நீராடும் எருமை பலரும் ஏறுதற்குரிய அம்பி போலத் தோன்றுமென்றது, பலர்க் கும் உரியையாவை யெனப் புலந்தாள் என்பதாம்.

பு. ரை:— குளிர்ந்த நீரின்கண் ஆடும் பெரிய கொம்பினை யுடைய எருமை, திண்ணிதாய்ப் பிணிக்கப்பட்ட அம்பி போலத் தோன்றும் ஊரனே, நின்பாற் குற்றமுளதாய விடத்து, அதுபற்றி நின்னைக் கடியுங்கால், நின் தந்தையும்

தாயும் ஒள்ளிய தொடியும், மடப்பமு முடைய இவளினும் கடுமை யுடையராவரோ, கூறுக எ. று.

திண்பிணி யம்பி, அசைவின்றித் திண்ணிதாய்ப் பிணிக்கப்பட்ட அம்பி. அம்பி, தோணி. நீரலையால் அசைதலின் நீக்குதற்குத் திண்ணிதாய்ப் பிணித்தல் வேண்டுதலின், "திண்பிணி யம்பி" என்றார். எருமைக்கு அம்பி உவமையாதல், "மரையேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி யூர்வான்போற் றோன்று மவன்" (கலி. 104) என்பதனாலு மறியப்படும். இவளினும் என்புழி உறழ்ச்சி, தந்தைதாயரினும் மிக்குற்ற சிறப்பினையுடையாள் என்பது தோன்ற நின்றது. அச் சிறப்பு, தந்தைதாய் என்ற இருவர் கடனும் தான் ஒருத்தியே ஆற்றுதல். குணநாடி மகிழ்தலினும் குற்றநாடிக் கடிந்து தூய்மைசெய்தலில் சிறந்தமையின், தந்தையை முற்கூறினர். "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" (புறம். 312) என ஆசிரியர் பொன்முடியார் கூறுமாறுகாண்க. நின் னென்புழி இரண்டாவது தொக்கது; "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகா விறுதி யான" (சொல். 105) என ஆசிரியர் கூறியவாறு அறிக.

வாயில்பெற வேண்டிப் பல்லாற்றானும் இரந்துபின்னின்ற தலைமகற்குத் தலைவி அது நேராமையின், அவன் வருந்தி அவளது கொடுமைகூறக் கேட்ட தோழி, நின்பால் தவறுளதாயவழி, அதுபற்றி நின்னைக் கழறிக் கூறும் உரிமையுடைய நின் பெற்றோரினும், இவள் மிக்க உரிமையுடையள் என்பாள், இவளினும் நுந்தையும் யாயும் கடியரோ நின்னே என்றாள். "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கும்" உரித்தென்றதனால், வாழ்க்கைத்துணையாம் நல்வினையபால், தான் இல்லிருந்து செய்யும் பேரறம் மாட்சியெய்துவது குறித்து, கடிவன கடிதலும் அவட்கு அறமென்றவாறாயிற்று. பெற்றோர், நின்பால் தமக்குள்ள மகன்மை யுரிமையால் தகுவன கூறிக் கழறுமிடத்து, நின்

மனத்து அச்சமும் அவலமும் பிறத்தல் போலாது, இவள் கழறிக் கூறுந் தோறும் நின்மனத்துப் பேரின்பம் சுரந்து மிகுதலின், * உரிமை இவட்கு மிகவுளதாயிற்று; அதனால் கடுமை மிகுவதாயிற்றாகலின், நீ இவள் கொடுமைகூறுதல் என்னை என்றாளாம். இனி, பிறப்புத்தோறும் இடையறாது தொடரும் பெருங்கிழமை யுடைமையால், இவளது உரிமை பெரிதென்றுரைப்பினுமாம்.

நீராடும் எருமை பலரு மேறுதற்குரிய அம்பிபோலத் தோன்று மூரனுகையால், நீ மகளிர் பலர்க்கும் உரியனுயினை; அது கண்டு பெற்றோரினும் உரிமை மிகவுடைமையால் தலைவி கழறினாக, நீ கொடுமை கூறல் கூடா தெனத் தோழி மறுத்தவாறு.

இது, "பெறற்கரும் பெரும்பொருள்" (பொ. 150) என்ற சூத்திரத்து, "பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்" தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவி கேட்டு வாயில் நேர்வாளாவது. (அ)

99. பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்
பூக்கஞ் ஊரன் மகளிவள்
நோய்க்குமருந் தாகிய பணைத்தோ ளோளே.

---

* காதலர் கூட்டத்துக் கழற்றுரை நிகழின், இன்பம் சுரக்கும் என்ற இயல்பினை லார்டு பைரன் (Lord Byron) என்பார்,

"They smile so when one's right and when one's wrong,
They smile still more and there intervene
Pressure of hands, perhaps even a chaste kiss;"
—*Don Juan*. Can. II.

என்று கூறியிருத்தல் காண்க.

தோழி முதலாயினார் தலைமகன் கொடுமைகூறி விலக்கவும், தலைமகள் வாயில் நேர்ந்துழி, அவன் உவந்து சொல்லியது.

ப. ரை:—*முயிறு மூசு குடம்பையை நெற்கதிரோடு எருமை மயக்கு மென்றது, யான் செய்த கொடுமையையும், அவர்கள் தன்மேற் காதலித்துக் கூறியவற்றையும் சிதைத்து என்பக்கலே நின்றாள் என்பதாம்.*

பு. ரை:— *பழனங்களிலுள்ள பாகல் இலையில் முயிறுகள் கூடுசமைத்து முட்டையிட்டு நெருங்கி யுறைகின்ற அக் கூடுகளைக் கழனிக்கண் மேயும் எருமைகள் நெற்கதிர்களோடு சேரச் சிதைக்கும், பூக்கள் நிறைந்த, ஊரனுக்கு மகளாகிய இவள், யான் உற்ற நோய் தீர்தற்குரிய மருந்தாகிய பருத்த தோள்களை யுடையளாயினாள் எ. று.*

*பாகல், பாகற்கொடி. "பாகல் பலா வென்று உரைப்பாரு முளர்"* (16) *எனப்* புறநானூற்றுரைகாரர் *கூறுவர். "பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை, கழனி நாரை யுறைத்தலிற் செந்நெல், விரவுவெள் ளரிசியிற் றூஉ மூரன்"* (நற். 180) *என்புழிப் பலா வென்றே உரைகூறப்பட்டது.* இனிப் *பாகற்பழத்தை, ஆசிரியர்* மருதனிளநாகனார் "*பலவுக் காய்ப் புறத்த பசும்பழப் பாகல்*" (அகம். 255) *என்றனர். ஈண்டுக் காட்டிய நற்றிணைப்பாட்டினுள் முயிற்றுக் குடம்பை செந்நெல் அரிசிபோலத் தாவும் என்றமையின்,* இப் *பாட்டிற் கதிர் என்றது நெற்கதிரையே என உணர்வித்தது.*

*தோழி முதலிய வாயில்கள், தன் கொடுமையினை யெடுத்து, அவள்பாலுள்ள காதலால் மொழிந்து விலக்கவும், தனக்கு வாயில்நேர்ந்து* இன்பமெய்துவித்ததனை *உள்ளுறையாற் கூறினானாகலின், அவ் வின்பப்பேறு குறித்து வாயில் வேண்டுங்கால் எய்திய நோயினைத் தான் நீங்கியது நினைந்து மகிழ்ந்து கூறுவான், தலைவன்,* நோய்க்கு மருந்தாகிய பணைத்

தோளாள் என்றான். இவர்கள் விலக்குதலால் விலங்கி வாயில் நேராள் கொல்லோ என்று எய்திய வருத்தம், அவள் அது நேர்தலும், தோளொடு கூடி நீங்கினு னாகலின், நோய்க்கு மருந்தாகிய பணைத்தோள் என விசேடித்தான். இவள் எனச் சுட்டியது, வாயில்கள் கூறிய கொடுமையினையும், தலைவனது இன்றியமையாமையினையும் தூக்கி, பின்னதன் பெருமை யுணர்ந்து வாயில்நேர்ந்த சிறப்புணரநின்றது. பிரிவின்கண் தம்மையே நினைப்பித்து வருத்தமெய்துவித்து, புணர்வின்கண் தம் செறிவால், அவ்வருத்தம் போக்கி இன்ப மிகுவித்து, நோய் செய்த தாமே, மருந்தாய்ப் பயன்படும் பெருமை குறித்து, தலைவி தோளைப் பணைத் தோள் எனப் பாராட்டினான்; "பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து" (குறள். 1102) எனத் திருவள்ளுவனார் சிறக்கக் கிளந்தவாறு அறிக.

எருமை முயிறு மூசு குடம்பையினையும் நெற்கதிரையும் சிதைக்கும் என்றதனால், இவள், தனக்கு வாயில்கள் கூறிய விலக்குரையினையும், என் கொடுமைகளையும் சிதைத்து என்பாற் செறிவாளாயினாள் என்றானும். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல்.

பழனப் பாகர் என்றும் பாடம் உண்டு. அதனாற் சீரிய பொருட் பேறின்மை யறிந்து கொள்க. (கூ)

100. புனலாடு மகளி ரிட்ட வொள்ளிழை
மணலாடு சிமையத் தெருமை கிளைக்கும்
யாண ரூரன் மகளிவள்
பாணர் நரம்பினு மின்கிளவியளே.

வாயில் நேர்தற் பொருட்டு முகம்புகுவான் வேண்டி இயற்பழித்துழித் தலைமகள் இயற்பட மொழிந்த திறம் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. ரை :—மகளிரது மறைந்த இழையை எருமை கிளைக்கு மூரன் மகளென்றது, இப்போது வாயில் நேர்தலேயன்றிக் களவுக்காலத்து நீ செய்த நன்மை மறைந்தனவும் எடுத்துக் கூறினா ளென்பதாம்.

பு. ரை :—புனலின்கண் ஆடிய மகளிர் களைந்து வைத்த இழைகள் மணற்கண் மறைந்தவற்றை, அம்மணற்குன்றின் மேனின்று எருமைகள் தம் கோட்டினாலும் குளம்பினாலும் கிளைத்து வெளிப்படுக்கும் புதுவருவாயினையுடைய வூரன் மகளாகிய இவள், பாணரது யாழ் நரம்பின் இசையினும் இனிய சொற்களையுடையளாவாள் எ. று.

புனலாடு மகளிர், தாம் நீராடத் தொடங்குமுன், தமது இழைகளுட் சிலவற்றைக் கழற்றி வைத்துவிட்டு, விளையாடுவது இயல்பாகலின், புனலாடு மகளிர் இட்ட இழையினைக் கூறினார். காற்று வீசுதலால், அவ்விழைகள் மணற்றுகளிற் புதைந்து மறைந்து மேடாதல் தோன்ற, மணலாடு சிமையம் கூறப்பட்டது. மணலாடு சிமையம், மணலால் உண்டாகும் மேடு. சேற்றிற் படிந்து கிடந்து அயர்வு போக்கி மதர்த்து வரும் எருமையினம் மணன்மேடுகளைக் கோடுகளாலும், குளம்புகளாலும் குத்தித் துழாவுதல் இக்காலத்தும் காணப்படுவதோர் காட்சியே. இச்செய்கைகளால் மணற்றுகள்களில் மறைந்த ஒள்ளிழை வெளிப்படுதலால், இதனை, எருமை ஒள்ளிழைகளைக் கிளைக்கும் என்றார். நரம்பு, ஆகுபெயர். கிளவி, சொல்.

தலைமகன் புறத்தொழுகிப் போந்தான் வாயில்வேண்டிவிடுத்தவழி, அவற்கு வாயில் நேர்விக்கும் கருத்தால், தோழி அது நேர்தலை விரும்பாதாள்போலத் தலைவனை இயற்பழிப்ப, அது பொறாத தலைவி இயற்பட மொழிந்த திறம் கூறுவாள், பாணர் நரம்பினும் இன்கிளவியளே என்றாள். எனவே, பாணர் யாழிற் றம் தலைவன் புகழ்பாடுதல்போல, இவள் நினது இயலை எடுத்து இனிமையுறக் கூறினாள் என்றாளாம்.

நரம்பின் இன்கிளவியள் என்னாது, நரம்பினும் என்றதனால், பாணர் நரம்புக்கு அவர் இயக்கிக் கூறுவனவேயன்றி, களவுக் காலத்து இன்பச்செய்திகூறலும், நிகழ்காலத்து வேண்டா தென விலக்கி வேண்டுவன கூறலும், அன்புதொக நிற்றலும் இன்மையும், அவை யாவும் தலைவிபால் உண்மையும் வேறு படுத்து உரைத்தாளாம். இது, "பெறற்கரும் பெரும் பொருள்" (பொ. 150) என்ற சூத்திரத்து, "அடங்கா வொழுக்கத் தவன்வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்" தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். தோழி இயற்பட மொழிந்தது, ஓராற்றால், அடங்கா வொழுக்கத் தவன்வயின் அழிந்த தலைவியை அடங்கக் காட்டுதற் பொருட்டு என அறிக.

நீராடு மகளிர் இட்ட ஒள்ளிழை மணற்றுகளால் மறைந்து கிடந்தவற்றை எருமை கிளைக்கும் என்றதனால், களவுக்காலத்து நீ செய்த நன்மைகள் மறைப்புண்டிருந்த வற்றை எடுத்து மொழிந்தாள் என்றாளாம். மெய்ப்பாடும் பயனும் மவை. (௰)

இதுகாறும் உரைகூறிப் போந்த மருதப்பாட்டுக்கள் நூறும் வேட்கைப்பத்து முதல் எருமைப்பத்து ஈறாகப் பத்துப்பத்துக்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. எனினும், இவற்றின் வைப்புமுறை நன்கு புலப்பட்டிலது. இந் நூறு பாட்டுக்களையும் வகுத்துத் தொகுத்த ஆசிரியப் பெருமக்களும் இதுபற்றி ஒன்றும் குறித்திலர். ஒவ்வொரு பத்தும் வகுத்துத் தொகுத்துப் பெயர் குறிக்கப்பெற்ற முறைமட்டில் ஒருவாறு புலனாகிறது. வேழப்பத்து(2), கள்வன்பத்து(3), எருமைப்பத்து(10) என்ற மூன்றும் மருதத்துக் குரிய கருப்பொருள்பற்றியும், வேட்கைப்பத்து(1), புலவிப்பத்து(5), புலவிவிராயபத்து (9), புனலாட்டுப்பத்து (8) என்ற நான்கும் உரிப்பொருளும், அதன் சார்புடையது மான பொருள் பற்றியும், தோழிகூற்றுப்பத்து (6) கிழத்திகூற்றுப்பத்து (7) என்ற இரண்டும் கூற்று நிகழ்த்துவோர் என்னும் இயல்

பற்றியும், தோழிக்குரைத்தபத்து (4) என்ப தோன்றும் கேட்போர் என்னும் இயல்பற்றியும் வகுக்கப்பெற்றிருக் கின்றன. இக் குறிப்பும் ஆங்காங்குக் காட்டப்பெற்றிருக் கின்றன. கருவும் உரியுமாகிய பொருள்நெறியால் வகுக்கப் படாதன, கூற்றுவகையாலும், அந்நெறியாலும் அடங்காதன் கேட்போர்வகையாலும் வகுத்துத் தொகுக்கப்பெற்றிருக் கின்றன என்பது இதுகாறும் கூறிய உரைகளால் இனிது விளங்குகின்றது.

முதலாவது

ஆசிரியர் ஓரம்போகியார் பாடிய மருதம் முற்றிற்று.

---

திருவத்திபுரம் ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸில் பதிக்கப்பட்டது.

Copy of the permission granted
by the P.D.B. N.Arcot. Vellore

L. Dis. No. 11948. Cl. 38 dated 11-12-1938

Publication of books [illegible]

Permission. Sanctioned petition from
A.S. Doraiswamy Pillai, Tamil Pandit,
B. H. S. Polur. Read also the endorsement
of the Hmaster and the D.E.O. thereon

---

Permission to publish the books [illegible]
[illegible] and a series of Tamil
Grammar books entitled New Method
Tamil grammar & composition books
granted to the teacher provided he
retains no interest in the sale of
books except receiving only a definite
~~lump~~ lump sum as remuneration
from the publisher and sells outright
the copyright of the books leaving
no reversionary, residuary or other
interest to any friend or relation.
The proposed work should not
also interfere with the legitimate
duties of the teacher.

(Sd) P. Doraiswamy [illegible]